

கவின்கலைகளில்

# சித்திரக் கலை

க. பொ. த (சாதாரண) தரம்
தரம் 7-11







ஆசிரியர்
**ஞா. ஞானதயாளன்**
ஆசிரியர் கல்விவள ஆலோசகர் (சித்திரம்)
வவுனியா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Class No: 741
Acc No 302

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவின்கலைகளில்

# சித்திரக்கலை

## க. பொ. த (சாதாரண) தரம்
## தரம் 7 - 11

Class No: 741
Acc No 302.
Arasady Public Library
Municipal Council
Batticaloa.

ஆசிரியர்
ஞா. ஞானதயாளன்
ஆசிரியர் கல்விவள ஆலோசகர் (சித்திரம்)
வவுனியா

வெளியீடு
தென்றல் பப்ளிக்கேஷன்
கொழும்பு - 06.
T.P ; 2360239, 0722-875625.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "கவின்கலைகளில் சித்திரக்கலை" |
| வகை | : | சித்திரம் |
| ஆசிரியர் | : | ஞா. ஞானதயாளன்<br>ஆசிரியர் கல்விவள ஆலோசகர் (சித்திரம்)<br>வவுனியா. |
| பதிப்புரிமை | : | தென்றல் பப்ளிக்கேஷன்,<br>கொழும்பு - 06 |
| நூல் அச்சுக் கோர்ப்பு | : | மாணவர் மறுதோன்றி மையம்,<br>சென்னை - 600 001.<br>T. P. 25382513 |
| வெளியீடு | : | தென்றல் பப்ளிக்கேஷன்,<br>135, கனல் பாங் வீதி,<br>கொழும்பு - 06.<br>01-2360239, 0722-875625 |
| கணனி ஆக்கம் | : | SDS Computer Services,<br>43, Off Hampden Lane,<br>Colombo - 06.<br>Tel : 075-518812 |
| அட்டை வடிவமைப்பு | : | **New Print Process**<br>**Chennai - 600 005**<br>**T. P. 28550287** |

**ISBN** : 955 - 8621 - 56 - 0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

பாடவிதானத்தில் கவின் கலைகளில் ஒன்றான சித்திரப் பாடம் இலங்கையில் எல்லாப் பிரதேசத்திலுமுள்ள பாடசாலைகளிலும் ஆர்வத்துடன் கற்பிக்கப்படுகின்றது. ஆனால் சித்திர பாடத்தில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறையாலும் இதற்கான நூல்கள் அரிதாகக் காணப்படுவதாலும் க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்களின் சித்தியடையும் வீதம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

இக் குறையை நிவர்த்தி செய்ய அனுபவமும் ஆற்றலும் மிக்க ஆசிரிய ஆலோசகரும் (சித்திரம்) தொலைக்கல்வி போதனாசிரியரும், க. பொ. த (சாதாரண) தரம் பிரதம பரீட்சகருமான திரு. ஞா. ஞானதயாளன் தன் அனுபவங்களை மையமாக வைத்து தரம் 7 தொடக்கம் 11 வரை சித்திரப் பாடம் கற்கும் மாணவர்களுக்கும் இப்பாடத்தை கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் வழிகாட்டியாக **“கவின்கலைகளில் சித்திரம்”** என்னும் இந்நூலை ஆக்கியுள்ளார். பாடவிதானத்திற்கு அமையப் படவிளக்கங்கள் மூலம் பாடப் பொருள் விளக்கப்பட்டுள்ளது. எனவே இந்நூலை மாணவ சமுதாயம் பெற்று நல்ல பயனடைய வேண்டுவதோடு அவரது முயற்சி வரவேற்கத்தக்க செயற்பாடாதலால் அவரைப் பாராட்டுவதோடு எனது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இ. விசாகலிங்கம்.**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வவுனியா தெற்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

கவின் கலைக் கல்விகளான சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்களில் ஒரு பாடத்தை மாணவன் தனது இடைநிலைக் கல்வியில் கற்பது மிகமிக அவசியமாகும். இவற்றைக் கற்பதன் மூலம் நயத்தல், ஆக்கல் கருத்து வெளிப்படுதல் ஆகிய திறன்களை விருத்தி செய்வதுடன் எதனையும் விமரிசனக் கண்கொண்டு பார்த்து சரியான மதிப்பீடு செய்தல், சமூகத்துக்கு ஏற்ப வாழ்தல் ஆகிய மனப்பாங்குகளை அடையலாம். இவ்விதத்தில் மட்டுமல்லாது சித்திரப் பாடமானது ஏனைய பாடங்களுக்கும் உதவுகரம் நீட்டும் பாடமாக உள்ளது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இப் பாடத்திற்கு போதியளவு ஆசிரியர்களும் உசாத்துணை நூல்களும் எம் மாவட்டத்தில் இல்லை என்பது மிகவும் மனவருத்தத்துக்குரிய விடயமாகும். வவுனியா மாவட்டத்தில் சித்திரப்பாடத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மிக மிகக் குறைவு இதன் விளைவு க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில் எம் மாவட்ட மாணவர்களில் அனேகமானோர் இப் பாடத்தில் சித்தியடையாமல் இருப்பதைக் கடந்தகாலப் பெறுபேறுகளின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இக் குறையை நிவர்த்தி செய்ய திரு. ஞா. ஞானதயாளனின் முயற்சியே இப் புத்தகமாக உருப்பெற்றுள்ளது. சித்திரப் பாடம் படிக்கும் ஒவ்வொரு மாணவனும் இந் நூலைக் கற்பதால் சிறந்த பலனை அடையலாம் என்பது என் நம்பிக்கை. எனவே இந் நூலைக் கற்பதால் மாணவ சமுதாயம் நல்ல பயன் அடைய வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**திருமதி. வெ. ற. அ. ஒஸ்வெல்ட்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்.**
**கல்வித்திணைக்களம்,**
**வவுனியா.**

# மதிப்புரை

**"கவின் கலைகளில் சித்திரம்"** என்னும் இந்நூல் சித்திரபாட ஆசிரிய ஆலோசகரான திரு. ஞா. ஞானதயாளன் அவர்களால் வெளியீடு செய்யும் இவ் வேளையில் இந்நூலாசிரியரின் முயற்சியை பாராட்டுகின்றேன்.

சித்திரம் ஒரு முக்கியமான அழகியல் பாடமாகக் கருதப்படுகின்றது. சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மிகக் குறைவாக உள்ள இக்காலத்தில் ஆண்டு 6 தொடக்கம் 11 வரை சித்திரத்தை கற்கின்ற மாணவர்களுக்கும், கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் துணை நூலாகக் கொள்ள முடியும்.

கல்வி அமைச்சின் பாடவிதானத்தையொட்டி எழுதப்பட்ட இந்நூல் க. பொ. த. (சா/ த) பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு பெரிதும் நன்மை பயக்குமென எண்ணுகின்றேன்.

**திரு. பொ. சின்னத்துரை விரிவுரையாளர் (சித்திரம்)**
**கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இலங்கையிலுள்ள பாடசாலைகளிற் சங்கீதம், சித்திரம் முதலிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்ற போதிலும் அவை தொடர்பான நூல்கள் தமிழ் மொழியிற் தட்டுப்பாடாக இருப்பது பெரும் குறைபாடாக இருந்து வந்துள்ளது. இக் குறைபாட்டினை உணர்ந்து மாணவர்களது நலன் கருதி தி. ஞா. ஞானதயாளன் ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்) அவர்கள் எழுதியுள்ள கவின் கலைகளில் சித்திரம் என்ற இந்நூல் மிகவும் போற்றுதற்குரிய தொன்றாகும்.

நம்மவரிற் பலர் சித்திரம், சங்கீதம் முதலிய பாடங்களிற் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்ததும் தாம் பெற்ற அறிவினை நூல் வடிவில் ஆக்கித்தந்து நமது எதிர் காலச் சந்ததிக்கு உதவி செய்யத் தவறியுள்ளனர். இந்நிலையில் மொழிப்பற்றுடனும், நாட்டுப்பற்றுடனும் இந்நூல் வெளியிடப்படுவது கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கைக்கு கி. மு. 3ம் நூற்றாண்டிற் பௌத்த சமயம் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்த கட்டிட சிற்ப ஓவியக் கலைகள் இலங்கையிலும் பரவலாயிற்று. இந்தியாவில் குப்தர் காலத்து அஜந்தா ஓவியங்களும், பாக் ஓவியங்களும் பிரசித்தி பெற்றவை. அஜந்தா ஓவியங்களுக்கு அடுத்த படியாகச் சிறப்புப் பெறுபவை இலங்கையில் உள்ள சிகிரிய ஓவியங்களே ஆகும்.

தென்னிந்தியாவில் தமிழர்களிடையே பௌத்த சமயம் பரவிய வேளையில் **"மணிமேகலை"** என்ற காப்பியம் தோன்றியதையும் இந்நூலில் பௌத்த சமய மண்டபங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருப்பதையும் கோவலனின் தந்தை மாசாத்துவான் தவம் செய்து கொண்டிருந்த தவக் கலையில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. என்பதையும் நாம் நன்கு அறிய முடிகின்றது. இத்தகைய ஓவியங்கள் இலங்கையிற் துட்டகைமுனு கட்டிய றுவான்வெலிசாயா தாது கோபத்திலும், லோகாமாபாயா மண்டபத்திலும் காணப்பட்டன என்பதை மகாவம்சம் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

பொலநறுவையில் சோழர்கள் ஆட்சி செய்தபோது சோழர்கள் கட்டிய கட்டிடங்களில் சோழர்களது சிற்ப ஓவியங்கள் இடம் பெற்றிருந்தன, இத்தகைய சிற்ப ஓவியங்களை இன்றும் இந்து ஆலயங்களிற் காணலாம். பல்லவ சோழர் காலச் சிற்ப ஓவியக்கலைகள் அத்தொழிலைச் செய்யும் சமூகத்தவர்களாகப் பேணப்பட்டு வரப்படுகின்றதேயல்லாமல் அக்கலைகள் ஒரு நிறுவன அமைப்பாக அல்லது கல்வி நிலையம் என்ற அடிப்படையிற் பேணிப்பாதுகாக்கப்படாமை ஒரு குறைபாடாக இருந்து வருகின்றது. இதனை உணர்ந்த அறிஞர்கள் சிலர் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் இராமநாதன் இசைக்கல்லூரி போல சிற்பம் ஓவியம் என்பனவகளுக்கும் ஒரு கல்லூரி திறக்கப்பட வேண்டும் என்றும் அது யாழ் பல்கலைக்கழகத்தின் வளாகமாக இருக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் முன் வைத்துள்ளனர். அத்தகைய வளாகம் ஒன்று அமைக்கப்பட்ட பின்னரே தமிழர்களது கலைகள் பேணிப்பாதுகாக்கப்படும் என்பது உறுதி.

தமிழ் மொழிப்பாடசாலைகளில் சித்திரப்பாடத்திற்குத் தகுந்த நூல்கள் இல்லாமையையும் ஏனைய மொழிப்பாடசாலைகளில் பல நூல்கள் இப்பாடத்திற்கு இருப்பதையும் கண்டு வேதனையுற்ற நிலையில் திரு. ஞா. ஞானதயாளன் அவர்களை அணுகி **"அனுபவமும், ஆற்றலும் உள்ள நீங்கள் ஏன் ஒரு நூலை எழுதி வெளியிட முடியாது"** என நான் வேண்டிக் கொண்ட போது அவர் அதற்கு இணங்கி ஒரு நூலை விரைவில் எழுதித் தருவதாகக் கூறினார். அதன் விளைவு தான் இந்நூல் என்பதைக் கூறுவதில் பெருமைப்படுகின்றேன்.

சிங்கள மொழியிலும் வல்லவரான திரு. ஞா. ஞானதயாளன் பல வருடங்களாகச் சித்திரப் பாடத்தை பாடசாலையிற் கற்பித்துச் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெறச் செய்துள்ளார். க. பொ. த. (சா./ த) தரப் பரீட்சை, க. பொ. த. (உ/ த) பரீட்சை விடைத்தாள்களை, மதிப்பிடும் வேலைகளிலும் பல வருடங்களாக ஈடுபட்டு நல்ல அனுபவத்தையும் பெற்றுள்ளார். பயிலுனர் ஆசிரியர்களுக்குப் போதனாசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றும் இவர் அனுபவங்காரணமாக பாடசாலைகளில் இப் பாடத்திற்கு ஒரு நூல் இருப்பது அவசியம் என்பதையும் நன்கு உணர்ந்துள்ளார்.

இந்நூலுக்கு ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் ஆதரவு கொடுப்பார்கள் என்று அதன் மூலம் ஞா. ஞானதயாளன் அவர்களை மேலும் பல நூல்களை எழுதத் தூண்டுவார்கள். இந்நூலாசிரியரின் பணி தொடர என் நல்வாழ்த்துக்கள்.

**ஆ. பொன்னையா**
**(உதவிக் கல்விப் பணிப்பாளர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

ஓவியக்கலை சம்பந்தமாக எமது மாவட்டத்தில் வெளிவரும் இந்நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். கவின்கலைகளில் ஒன்றான சித்திரப் பாடத்திற்கு ஒரு நூல் இல்லையே என்ற பெருங்குறை இதன் மூலம் சிறிது தணிக்கப்படுகின்றது. எம் நாடும் இவ்வழிக் கலைஞர்களை ஊக்குவிப்பதை இம் மாவட்டத்தில் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையும், சுவர்ச்சித்திரங்களும் எடுத்துக் காட்டுகின்றன. இந் நிகழ்விலும் இந்த நூலாசிரியர் திரு. ஞா. ஞானதயாளன் அவர்கள் அளித்த பங்கு முதன்மை பெற்றது நாம் யாவரும் அறிந்ததே. இது போன்ற பல அனுபவங்களைத் தன்னகத்துடைத்தான இந் நூலாசிரியரின் பங்களிப்பு சித்திரக் கலையைப் பொறுத்தவரை பொறுப்பு வாய்ந்ததும், போற்றப்படக் கூடியதுமான ஒன்றாகும்.

மனிதன் தன் உள்ளக்கிடக்கைகளை அணுஅணுவாகப் பிரதிபலிக்கக் கூடியதும் அதைக் காலாகாலமாகப் பார்த்து இரசிக்கக் கூடியதுமான கலைகளில் சிறந்தது சித்திரம். ஒரு சில பென்சில் கீறல்களும், வர்ணக்கலவைகளும் பல கதைகளைப் பேசுகின்றன. ஆரம்பத்தில் பென்சில், பேனாவினால் படிக்கும் சிறு பிள்ளை ஒரு சில கோடுகளைக் கீறி விட்டு அதைப் பார்த்துக் கை கொட்டிச் சிரிக்கின்றது. சிறியோர் முதல் பெரியோர் ஈறாகக் கையாளக் கூடியதும், இரசிக்கக் கூடியதுமான இக் கலை சம்பந்தமான புத்தகம் வெளி வருவது வரவேற்கப்படக் கூடிய ஒன்றாகும்.

இப் புத்தகமானது எமது நாட்டுடன் நிற்காது பல நாட்டுக் கதைகளையும், பழம் பெரும் பெருமைகளையும், மரபு வழி முறைகளையும் கண்டுணர வழி செய்வது சிறப்பான விடயமாகும்.

இதை வாசிக்கும் பொழுது பற்பல இடங்களுக்குச் செல்ல வேண்டும், ஓவியக்கலையில் வடிக்கப்பட்டுள்ள இயற்கையின் இரகசியங்களை மனதில் மறைந்து கிடக்கும் மனித தத்துவங்களை நேரில் பார்த்து களித்திட வேண்டும். எனும் உணர்வும் எமக்கு ஏற்படாமல் இல்லை.

மொத்தமாக பாடநூல் என்ற இலக்கைத் தன்னகத்தே கொண்டாலும் வேறு பல நோக்கங்களுடன் வெளிவரும் இச் சிறு மலரினால் பலர் நன்மையடையட்டும். இது போன்ற பல மலர் வெளிவர வேண்டுமென்று எந்த ஓவியத்துக்கும் அகப்படாது அனைத்தையும் கடந்த கடவுளின் ஆசியை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**வணக்கம்.**

அருட்செல்வி, ம. ம. மருத்தீன்
அதிபர்
இறம்பைக்குளம், ம. ம. வித்தியாலயம்,
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

**"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும்** நா பழக்கம்**"** என்ற முன்னோர் கூற்று **"கவின் கலைகளில் சித்திரக்கலை"** என்ற நூலினை வெளியீடு செய்ய விரும்பியபோது எனது நினைவுக்கு வந்தது. சித்திரம் ஒரு கவின்கலை. இக்கலையானது மனித மனத்தை ஒன்றித்துப் பாலித்து விடுகின்றது. இக் கலைக்கு ஆளாகாத மானிடனே இல்லை எனலாம். எனவேதான் இக்கலையை அரசர்கள் கூட வியந்தேத்திப் போற்றினர்; பொறித்தனர்.

அவ்வகையில் வவுனியாப் பிரதேச கல்விவள ஆலோசகரும் (சித்திரம்) இப்பாடம் தொடர்பான பல்வேறு அனுபவங்களையும், ஆற்றலையும் ஒருங்கே பெற்றுள்ளவருமான **ஆசிரியர் திரு. ஞா. ஞானதயாளன்** அவர்களால் பல்வேறு தரவுகளினூடாகப் பெறப்பட்ட வளங்களையும், ஆக்கங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட **"கவின்கலைகளில் சித்திரக்கலை"** என்ற நூலினை வெளியீடு செய்வதில் எமது நிறுவனம் மிக்க மகிழ்ச்சியடைகின்றது.

சித்திரக்கலையின் மூலமாகப் பெறும் மன ஒருமைப்பாட்டினை **"கல்லைக் கண்டால் நாயைக் காணேன், நாயைக் கண்டால் கல்லைக் காணேன்"** என்ற கூற்று மிக்கு நிரூபித்து நிற்கிறது. குறித்த உருவத்தில் மனதைப் பறிகொடுக்கும்போது அவ் உருவத்தை மனத்தில் காண்கிறோமே ஒழிய, அதன் மூலப்பொருள் எது என்ற எண்ணத்துக்கே உள்ளம் இடம் கொடுக்காது அவ் உருவில் நாம் லயித்து விடுகின்றோம். இவ் வகையான மனதை ஒருமுகப்படுத்தும் பாடமான **"சித்திரம்"** சிறுவயதில் இருந்து தள்ளாடும் வயது வந்தவர்களையும் கவர்ந்து விடுகிறது. அழும் குழந்தை கூடக் கண்ணைக் கவரும் படத்தைக் கண்டதும் அழுகையை நிறுத்தி அதனை இரசிக்கிறது; சிரிக்கிறது, பேசுகிறது என்றால் **"சித்திரத்தின்"** உயர்வுதான் சொல்லுதற்கரியது.

எனவேதான் அரசு கல்விக்கான கலைத் திட்டத்தில் சித்திரம் ஆரம்பக்கல்வி முதல் அறிமுகப்படுத்தப் படுகிறது. படம் மூலம் பாடம் கற்பிக்கப்படுகிறது. அவ்வகையில் **தரம் 6 - 11** ஆம் தரங்களுக்கு மட்டுமன்றி, ஆசிரியர் கல்விக்கான பயிற்சி ஆசிரியர்களுக்கும், ஏனைய சித்திரப்பாடம் தொடர்பான கல்வித் தேவைகளுக்கும் பொருத்தமாக இந்நூலை ஆக்கியிருப்பதாக இந் நூலாசிரியர் விதந்துரைத்துள்ளார்.

எனவே க. பொ. த **(சாதாரண)** தர மாணவர்களுக்கு இந்நூல் விசேட சித்திபெறுவதற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இன்று **"சித்திரப் பாடம்"** தொடர்பான நூலொன்றின் தேவை அதிகரித்துக் காணப்படுகிறது. அதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் எமது கல்விசார் நூல்களை வெளியீடு செய்யும் **"தென்றல் பப்ளிக்கேஷன்"** ஆகிய எமது நிறுவனம் இந்நூலாசிரியரின் **"கவின்கலைகளில் சித்திரக் கலை"** என்ற நூலினை வெளியீடு செய்வதில் பெருமிதமடைகிறது. இந்நூலாசிரியர் இது போன்ற பல நூல்களை ஆக்கம் செய்து சமூகத்துக்கு உதவவேண்டுமென வாழ்த்தி, அவரது நற்பணி தொடர அவருக்குத் தளர்வறியா மனம் தரவேண்டும் என இறைவனை இறைஞ்சுகிறேன்.

**இ. க. சிவஞானசுந்தரம், M.A**
**பிரதம வளவாளர்,**
**தென்றல் பப்ளிக்கேஷன்,**
**கொழும்பு - 06.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சித்திரக் கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கும் சித்திரப் பாடத்தைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் தமிழ்மொழி மூலம் முழுமையான வழிகாட்டல் நூல்கள் இல்லாத காரணத்தால் ஓவியம் வரைவதில் திறன் பெற்ற பல மாணவர்கள் க. பொ. த. (சா.த) பரீட்சையில் சித்திரக் கலை பகுதி ஒன்றில் பின் அடைவைக் கண்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் யாழ்ப்பாண தேசியக் கல்வியற்கல்லூரியிலும் சித்திரக்கலை விசேடத்துறையாக ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஆகவே இத்துறைக்கு க. பொ. த. (உயர்/ தரம்) பரீட்சையில் சித்திரப் பாடத்தை ஒரு பாடமாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் தெரிவு செய்யப் படுகின்றனர். இதன் காரணமாக தற்போது பல மாணவர்கள் க. பொ. த (உ/த) பரீட்சையில் சித்திரப் பாடத்தை ஒரு பாடமாக எடுப்பதால் அம்மாணவர்களுக்கும் இந்நூல் பயன்படும் விதத்தில் சற்று விரிவாக எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் புதிய பாடத்திட்டத்திற்கு அமைந்த திருத்திய இரண்டாம் பதிப்பாகும். இந்நூலின் வெளியீட்டினை ஆசிரியர்களும், மாணவர்களும் மனமார வரவேற்பார்கள் என நம்புகின்றேன்.

**ஞா. ஞானதயாளன்.**
**ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்),**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**வவுனியா தெற்கு.**
**T. P. No : 024-20544.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கவின்கலைகளில் சித்திரக்கலை"

# உள்ளடக்கம்


1. வர்ணச்சக்கரம் .................... 5
    வர்ணங்களின் கருத்து .................... 5
    வர்ணங்களின் வேறு பெயர்கள் .................... 5
    வர்ண ஊடகங்கள் .................... 5
2. ஒளியும் நிழலும் .................... 7
3. அச்சுப் பதித்தல் .................... 8
4. தூரதரிசனம் .................... 9
5. பரவுருவச் சித்திரம் .................... 10
6. அலஙகார மாதிரி வடிவங்கள் .................... 12
7. கொலாஜ் சித்திரம் (ஒட்டுச் சித்திரம்) .................... 20
8. மொசாச் முறை .................... 20
9. ஆரம்பகாலச் சித்திரக்கலை .................... 20
10. அலங்கார வகைகள் .................... 22
11. இலங்கையின் கட்டிடக்கலை .................... 38
12. இலங்கையின் சிற்ப வளர்ச்சி .................... 40
13. தாதுகோபுரத்தின் வடிவங்கள். .................... 44
14. தாதுகோபுரத்தின் வாயிற்படி மாதிரிவடிவம். .................... 45
15. அநுராதபுரக்காலச் சந்திரவட்டக்கல் .................... 45
16. பொலநறுவைக்கால சந்திரவட்டக்கல் .................... 46
17. கண்டிக்கால சந்திரவட்டக்கல் .................... 46
18. காவற்சிலை (அநுராதபுரக்காலம்) .................... 47
19. காவற்சிலை (பொலநறுவைக்காலம்) .................... 48
20. சிற்பத்தூண்கள் (போதிகை) .................... 48
21. இலங்கையில் உள்ள புராதன சுவர் ஓவியங்கள் .................... 49
22. அநுராதரபுரக்கால ஓவியங்கள். .................... 50
    1. சிதுல்பவ்வ .................... 50
    2. கரம்பகல .................... 50
    3. வெஸ்ஸகிரிய .................... 50
    4. கோனாகொல்ல .................... 51
    5. கொட்டியாகல குகை .................... 51




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கொட்டகல்கந்த குகை ........ 51
7. ஹிந்தகல ........ 51
8. மிகிந்தலை ........ 52
9. ருவன்வெலிசாய ........ 52
10. மகியங்கனை ........ 53
23. சிகிரியாச் சுவர் ஓவியங்கள் ........ 54
24. பொலநறுவைக்கால ஓவியங்கள் ........ 57
திவங்க ஆலயம் ........ 57
25. கல்விகாரை ஓவியங்கள் ........ 60
26. இலங்காதிலக சிற்பக்கூடம் ........ 61
27. திம்புலாகல கற்குகை சுவர் ஓவியங்கள் ........ 62
28. கண்டியுகத்தின் சித்திரங்கள் ........ 64
29. தெகல்தொருவை ........ 67
30. தம்புல்ல குகை ஓவியங்கள் ........ 69
31. தலதாமாளிகை ஓவியங்கள் ........ 71
32. பமரகல விகாரைச் சித்திரம் ........ 72
33. முல்கிரிகலை விகாரை ........ 72
34. கடலதெனிய விகாரை ஓவியம் ........ 73
35. அமரர் ஏ. ஜீ. சீ. எஸ். அமரசேகர ........ 74
36. அமரர் எம். சார்லிஸ் ........ 75
37. ஜோர்ஜ் கீற் ........ 77
38. ஜே. டீ. ர. பெரேரா ........ 78
39. எல். டீ. பீ. மஞ்சுரி ........ 79
40. டபிள்யூ. ஜே. ஜீ. பீலீன் ........ 79
41. ஜஸ்டின் தரணியகல ........ 79
42. டேவிட் பேண்டர் ........ 80
43. ரிசட் கப்ரியேல் ........ 81
44. தற்காலச் சிலைகள் ........ 82
அ. திஸ்ஸரணசிங்க ........ 82
ஆ. ஹென்றி தர்மசேன ........ 82
45. மறுமலர்ச்சிக்காலம் ........ 82
45.1 ஐரோப்பியர் வரலாறு ........ 83
அ. ஆதிகால குகை ஓவியங்கள் ........ 84
ஆ. லாஸ்கோ குகை பிரான்ஸ் ........ 84



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. எகிப்திய கலை ........................................ 85
அ. எகிப்திய சிற்பம் ........................................ 86
ஆ. எகிப்திய ஓவியங்கள் ........................................ 87
17. கிரேக்க கலை ........................................ 87
18. உலகப் பிரசித்தி பெற்ற ஓவியர்கள் ........................................ 88
அ. கயற்றோலின் கலைப்படைப்பு ........................................ 89
ஆ. ரப்பாயேல் சென்சியோ ........................................ 90
இ. மைக்கல் அஞ்சலோ ........................................ 90
ஈ. இலியனாடோ டாவின்சி ........................................ 93
உ. ரபாயல் ........................................ 94
ஊ. போல் ஸெஸான் ........................................ 95
எ. வின்சன் வான்கோ ........................................ 96
ஏ. போல் கொகன் ........................................ 96
ஐ. பாப்லோ பிக்காசோ ........................................ 97
49. ஐரோப்பிய கலைக் காலங்களில் குகைச் சித்திரங்களில்
காணப்படும் குகைகள் ........................................ 99
50. சாஞ்சி தாதுகோபுரம் ........................................ 99
அ. சாஞ்சி செதுக்கல் வேலைப்பாடுகள் ........................................ 99
ஆ. சாஞ்சியில் உள்ள வாயிற் தோரண செதுக்கல்கள் ........................................ 100
51. குகை விகாரைகள் ........................................ 103
52. ஹரப்பா, மொகஞ்சதாரோ கலைப் படைப்புகள் ........................................ 103
53. சாரநாத் புத்தர்சிலை ........................................ 105
54. அஜந்தா ஓவியம் ........................................ 106
55. எல்லோரா குகை ஓவியம் ........................................ 109
56. பார்க் குகை ஓவியம் ........................................ 110
57. தாஜ்மகால் ........................................ 111
58. சங்கமித்தை வெள்ளரசு கொண்டுவரும் காட்சி ........................................ 112
59. அலங்காரச் சித்திரம் ........................................ 113
60. சுயாதீனமான ரேகைச் சித்திரமும் வரைதலும் ........................................ 115
60. களனி விகாரையின் ஓவியங்கள் ........................................ 119
61. கோதமி விகாரையின் ஓவியங்கள் ........................................ 124
62. கண்டி திருத்துவக் கல்லூரி ஆலயத்தின் ஓவியங்கள் ........................................ 125
63. பொரல்ல சகல அர்ச்சிஸ்ரர் ஆலயத்தின் ஓவியங்கள் ........................................ 126
64. நவீன ஓவியக் கலையின் நிகழ்வுகள் ........................................ 126




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. கம்பளைக் கால மரச் செதுக்கல்கள் ........ 127
அ. அம்பெக்கே மரச் செதுக்கல்கள் ........ 130
66. அவுக்கன புத்தர் சிலை ........ 132
67. தொலுவில புத்தர் சிலை ........ 133
68. சமாதி புத்தர் சிலை ........ 133
69. கந்தக சைத்திய (அநுராதபுரம்) ........ 134
70. மகரதோரணம் ........ 134
71. கல்விகாரை பொலநறுவை ........ 134
72. கொரவக்கல் (கைபிடிக்கல்) ........ 135
73. பொலநறுவைக்காலம் ........ 136
அ. திவங்க புத்தர்சிலை ........ 136
ஆ. சிவன்கோவில் ........ 137
74. புத்தரின் முத்திரைகள் ........ 137
75. இந்துமத திருக்கோயிலின் கருப்பக் கிரக அமைப்பு ........ 138
76. இந்து ஆலயக் கோபுரம் ........ 138
அ. திருக்கேதீஸ்வரம் ........ 139
ஆ. நல்லூர் கந்தசுவாமி கோவில் ........ 139
இ. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ........ 139
ஈ. திருக்கோணேஸ்வரம் ........ 140
உ. நயினை நாகபூஷணி அம்மன் கோவில் ........ 140
ஊ. கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரம். ........ 140
77. நடராஜர் வடிவம் ........ 141
78. கிராமியக் கைத்தொழில் ........ 141
அ. முகமூடி செய்தல் ........ 141
ஆ. மட்பாண்டம் ........ 141
இ. துணியில் பட்றிக் ........ 141
ஈ. அரக்கு வேலை ........ 142
79. இலங்கை ஓவியர்கள் ........ 142
அ. சோலியஸ் மென்டிஸ் ........ 142
ஆ. எஸ். பி. சாள்ஸ் ........ 143
இ. கலாயோகி ஆனந்தகுமாரசாமி ........ 143
80. கடந்த காலப் பரீட்சை வினாவிடைகள் ........ 144
(1996, 1997, 1998, 1999, 2000, 2001, 2002 க. பொ. த (சாதாரண) தரம். 145-182



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. வர்ணச்சக்கரம்




சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய மூன்று வர்ணங்களும் மூல வர்ணங்களாகும். இவ் வர்ணங்களை தூய வர்ணம், ஆரம்ப வர்ணம், பிரதான வர்ணம் எனவும் அழைக்கலாம். இம் மூன்று வர்ணங்களும் தாமாகவே தமக்கென ஒரு நிறத்தை கொண்டவையாகும். சிவப்பு வர்ணத்துடன் மஞ்சள் வர்ணம் சேர்க்கப்படும் போது செம்மங்சள் நிறமும் மஞ்சள் நிறத்துடன் நீல நிறம் சேர்க்கப்படும் போது பச்சை நிறமும், நீல நிறத்துடன் சிவப்பு நிறம் சேர்க்கப்படும் போது ஊதா நிறமும் உண்டாகின்றது. இப்படி இரு நிறங்கள் சேர்த்து எடுக்கும் போது உண்டாகும் நிறத்தை துணை வர்ணம் என்றும் கலப்பு வர்ணம் என்றும் கூறலாம்.

வர்ணச் சக்கரத்தில காட்டியவாறு சிவப்பு வர்ணத்திற்கு எதிரே பச்சை வர்ணமும், மஞ்சள் நிறத்துக்கு எதிரே ஊதா நிறமும், நில நிறத்துக்கு எதிரே செம்மஞ்சள் நிறமும் அமைந்துள்ளதைக் காணலாம். இவற்றின் மூலம் எதிர் வர்ணங்களை இலகுவாக அறிந்து கொள்ள முடியும்.

சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் சிவப்பு, ஊதா ஆகிய வர்ணங்கள் பிரகாசமான வர்ணங்கள் எனவே இவ் வர்ணகளை வெப்ப வர்ணங்கள் அல்லது சூடான வர்ணங்கள் எனக் கூறலாம். இவ் வர்ணங்கள் பிரகாசமானதாக இருப்பதால் இவற்றை முன் செல்லும் தன்மையுடைய வர்ணம் எனக் கூறலாம். பச்சை, நீலம், நீலஊதா போன்ற வர்ணங்கள் குளிர் வர்ணங்க்ள் எனப்படும். இவ் வர்ணங்கள் பின்னோக்கிச் செல்லும் தன்மையடையது.

குளிர் வர்ணங்களுக்குப் பக்கத்தில் வெப்ப வர்ணங்களைத் தீட்டும் போது வெப்ப வர்ணங்கள் உயர்ந்த ஒளி உடையதாக தோற்றமளிக்கும். இதனால் தான் வெப்ப வர்ணங்களை முன் செல்லும் வர்ணங்கள் எனவும் குளிர் வர்ணங்களை பின் செல்லும் வர்ணங்கள் எனவும் கூறுகின்றோம். இதன் காரணமாகத்தான் ஓவியர்கள் ஓவியங்கள் வரையும் போது பின்னணியாக பின் செல்லும் வர்ணங்களைப் பயன் படுத்துகின்றனர். சில சந்தர்ப்பங்களில் இடத்துக்கு ஏற்ற பொருத்தமான வர்ணங்களைப் பயன் படுத்தலாம்.

ஒரு வர்ணத்தை கடினமாகவும், மென்மையாகவும் தீட்டுவதால் வர்ணப்பலம் ஏற்படுகின்றது. ஒரு வர்ணத்தை கடினமாக்குவதற்கு அவ் வர்ணத்துடன் சிறிதளவு கறுப்பு நிறத்தைச் சேர்த்தல் வேண்டும். இதே போல ஒரு வர்ணத்தை மெல்லிய நிறம் ஆக்குவதற்கு அவ் வர்ணத்துடன் வெள்ளை நிறத்தை சேர்த்தல் வேண்டும். கறுப்பு வெள்ளை ஆகிய இரண்டும் பொது வர்ணங்களாகும்.

இலங்கையில் உள்ள முற்காலத்து ஓவியர்கள் வர்ணங்களை இயற்கையான தாவரங்கள் கனிகள் வேர்கள் போன்றவற்றில் இருந்து பெற்றுக் கொண்டார்கள். கண்டிய கால ஓவியர்கள் சிவப்பு வர்ணத்தை சாது லிங்கத்தில் இருந்தும், மஞ்சள் வர்ணத்தை கொக்கட்டுவ என்னும் மரத்தின் பாலில் இருந்தும், நீல நிறத்தை அவ்றி என்னும் மரத்தில் இருந்தும், கறுப்பு வர்ணத்தை தீச்சுடரில் இருந்தும், வெள்ளை வர்ணத்தை நிலத்திலிருந்து இயற்கையாக பெறப்பட்ட மகுளு என்னும் வெள்ளை நிறக் களியில் இருந்து பெற்றுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ணங்களின் கருத்து

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிவப்பு | - | அபாயம், கோபம் | கறுப்பு | - | துக்கம். |
| வெள்ளை | - | சமாதானம், துக்கம், தூய்மை | செம்மஞ்சள் | - | சுறுசுறுப்பு, பிரகாசம், ஆயத்தம். |
| சாம்பல் | - | இருண்ட தன்மை. | நீலம் | - | அன்பு, இரக்கம். |
| பச்சை | - | குளிர்மை, அபாயமின்மை. | | | |

## வர்ணங்களின் வேறு பெயர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அல்ற்ராமரின் | - | நீல ஊதா. | சியானின் ப்ளூ | - | கரு நீலம் |
| செருளியன் ப்ளூ | - | வெளிர் நீலம். | கோபல் ப்ளூ | - | நடுத்தர நீலம். |
| இந்தியன் றெட் | - | கரும் சிவப்பு. | பூமையின் | - | சிவப்பு. |
| சைனிஸ் வெமிலியன் | - | இளம் சிவப்பு. | றோஜியன்னர் | - | மெல்லிய செம்மஞ்சள். |
| ஹாட்மியம் ஒறைஞ்ச் | - | வெளிச்சம் தரும் செம்மஞ்சள். | குரோம், காட்மியம் பிரிம் றோஸ் | - | மஞ்சள். |
| வெனெற்றியன் கிறே | - | கருமண். | ப்ளுக் கிறே | - | சாம்பல். |
| வைலெற் | - | ஊதா. | சியன்னா | - | கருமை கலந்த இளம் ஊதா. |
| நியூற்றல் பேப்பிள் | - | இளம் ஊதா. | கிறீன் கிறே | - | பச்சை கலந்த சாம்பல். |
| விரிடியன், எமறெல்ட் | - | பச்சை | பிறவுண், பேன்ட் சியானா | - | கபிலம். |
| சிபியா | - | கறுப்புக் கபிலம். | ப்ளுக் கிறே | - | நீலச் சாம்பல். |
| அகுவா | - | நீலப்பச்சை. | | | |

**வர்ண ஊடகங்கள்.**

1. நீர் வர்ணம்
2. எண்ணெய் வர்ணம்
3. தூள் வர்ணம்
4. கிரையோன் வர்ணம்.
5. பென்சில் வர்ணம்.

ஓவியக் கலையில் வர்ணங்களின் பங்கு பிரதானமானது வர்ணங்களின் தன்மைக்கு ஏற்பவும். வர்ணத்தை பயன்படுத்துபவரின் நுட்பத்திலும். ஓவியத்தின் உயர்தரத்தை காணமுடியும்.


திரு. சேர். ஐசக் நியுட்டன் முதன் முதலில் வர்ணங்களைப் பற்றி ஆராய்ந்துள்ளார். சூரிய ஒளியில் உள்ள 7 வர்ணங்களே உலகில் உள்ள எல்லாப் பொருட்களிலும் பல்வேறு அளவுகளில் பிரதிபலிக்கின்றன. வானவில்லில் சூரியனின் வர்ணங்களை தெளிவாகக் காணமுடியும். வானவில்லில் காணப்படும் வர்ணங்களாவன.

சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், நீலம், ஊதா, கருநீலம், பச்சை ஆகும்.

சூரிய ஒளியில் ஒரு கண்ணாடி பிரிசந்தை (Glass Prism) பிடித்தீர்களானால் அதிலிருந்து வரும் ஒளிக்கற்றை வானவில்லின் ஏழுநிறங்களைக் காட்டும் இதை நிறமாலை (SPECTRM) என்கிறார்கள். இந்த எல்லா நிறங்களும் வெள்ளை நிற ஒளியில் இருந்துதான் தோன்றுகின்றன (Vibgyor) என்றாள் வயலெட், இன்டிகோ, நீலம், பச்சை, மஞ்சள், ஒரெஞ், சிவப்பு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## 2. ஒளியும் நிழலும்


பொருள்களைப் பார்த்து வெறும் கோடுகளால் மட்டும் வரைவது என்பது சாதாரணமே. பொருள்கள் ஒன்றுக்கொன்று இயற்கையாக பொருள் திணிவோடும் (MASS) மாறுபட்ட நிழல் வித்தியாசத்தோடும் வரைவதே சிறந்தது. ஷேடிங் கொடுப்பதன மூலம் தான் நாம் வரையும் படங்களில் பொருட்களின் உயரம் ஆழம் (கன பரிமாணம்) இவற்றின் உண்மையான வடிவத்தைக் காணமுடியும்.

இயற்கையாக உங்கள் படங்கள் தோற்றமளிக்க வேண்டுமானால் வெளிச்சம் (LIGHT) அதிக வெளிச்சம் (HIGH LIGHT) இலேசான நிறம் (HALF TONE) நிழல் (SHADE) நிழலீடு (CAST SHADOW) பிரதிபலிக்கும் வெளிச்சம் (REFLECTED LIGHT) இவைகளைப் பற்றிய உண்மைகளை விரிவாகக் தெரிந்து அதன்படி அமைக்க வேண்டும்.

நீங்கள் எந்தப் பொருளை அல்லது உருவத்தை வரைகிறீர்களோ அந்தப் பொருளுக்கு வெளிச்சம் ஏதாவது ஒருபக்கத்திலிருந்து வரவேண்டும். அதாவது பொருளின் முன்னே இருந்து வெளிச்சம் வருவது போலவும் பொருளின் பின்னால் இருந்து வெளிச்சம் வருவது போலவும் இடப்பக்கம், வலப்பக்கம் இருந்து வெளிச்சம் வருவது போலவும் பொருளின் ஒரு பக்கமாக சாய்வாக வெளிச்சம் வருவது போலவும் வரையலாம். இடது புறமிருந்து வெளிச்சம் வருவது போல இருப்பது நல்லது அப்போது தான் பொருள்களில் ஏற்படும் வெளிச்சம் நிழல் நிழலீடுகளை நன்கு அறிய இயலும்.



ஒளியும் நிழலும்



பென்சிலால் ஷேடிங் கொடுத்துள்ளதை கவனியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோலியஸ் மென்டிஸ்



சோலியஸ் மென்டிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பென்சில் ஷேடிங்

பென்சில் மூலம் ஷேடிங் கொடுப்பதாக இருந்தால் BB, 2B, 3B, 4B ஆகிய பென்சில்களைப் பயன்படுத்தலாம். ஆனால் ஷேடிங் கொடுக்க ஒரே வகையான பென்சிலை மட்டும் பயன்படுத்த வேண்டும். ஷேடிங் கொடுக்கும் போது 45° சாய்வில் பிடித்து வரைவது நல்லது. பென்சில் முனையை கூராக தீட்டாமல் மொட்டையாக வைத்திருக்க வேண்டும்.

## 3. அச்சுப்பதித்தல்

ஒரு பிரதியை பல பிரதிகளாக எடுப்பதற்கு அச்சு மையை உபயோகித்துச் செய்யும் சித்திரம் அச்சுப்பதித்தல் எனப்படும். அச்சுப்பதித்தல் பல முறைகளில் அமைத்துக் கொள்ளலாம். அச்சுப் பதிக்கும் முறை முதல் முதலில் சீன மக்களால் அறிமுகப் படுத்தப் பட்டதென கூறப்படுகிறது. பல வகையான அச்சு முறைகள் காணப்படுகின்றது

1. லித்தோ கிறபிக்
2. மொனோ கிறபிக்
3. லைனோ கிறபிக்
4. ஸ்ரெனிசில் கிறபிக்

### மொனோ கிறபிக் என்பது :-

தனிப் பிரதியை மட்டும் பெற்றுக் கொள்ளும் முறையாகும். மொனோ அச்சுப் பதிபபதற்கு பல வகையான ஊடகங்கள் தேவைப் படுகின்றது. கண்ணாடி, அச்சு மை, ஈர்க்கு, கடதாசி, உருளை என்பனவாகும். இவற்றின் மூலம் அச்சுப் பிரதியை எடுப்பதற்கு கண்ணாடியின் மேல் அச்சு மையைப் பூசி பூசிய மைக்கு மேல் ஈர்க்கினால் தேவையான உருவம் வரைந்து அதற்கு மேல் கடதாசியை வைத்து உருளையால் மெதுவாக அமர்த்தி எடுக்க வேண்டும்.

பாடசாலைகளிலும் இலகுவான முறையில் இவற்றைச் செய்யலாம். மேலும் இலைகள் (கொய்யா இலை, பலா இலை, தேமா இலை, உருளைக் கிழங்கு, வெண்டிக்காய், சாக்குத்துண்டு, வாழைத்தண்டு, சேம்புத்தண்டு என்பன கொண்டு நீர் வர்ணத்தைப் பயன்படுத்தி சிறந்த அலங்கார வடிவங்களை அமைத்துக் கொள்ளலாம்.

### லித்தோ கிறபிக் :-

ஒரே நேரத்தில் பல வர்ணங்களைப் பயன்படுத்தி அச்சுப்பதிக்கும் முறையாகும். ஒவ்வொரு நிறத்திற்கும் தனித்தனியே பதிகுற்றிகள் (Bock) தயாரித்துக் கொள்ளவேண்டும். அழகிய வர்ணப்படங்கள் இம்முறையில் அச்சுப் பதிக்கப் படுகின்றன.

### லைனோ கிறபிக் :-

லினோ அட்டைகளில் விரும்பிய உருவங்களை வரைந்து அவ்வுருவங்களில் தேவையான பகுதிகளை வைத்துக் கொண்டு தவிர்க்க வேண்டிய பகுதிகளை வெட்டி அகற்றிவிட்டு எமக்குத் தேவையான பகுதிக்கு மை தடவிக் கடதாசியில் அழுத்தும் போது பிரதி பெறப்படும். இம் முறையில் தனி வர்ணத்தில் பல பிரதிகளைப் பெறலாம். ஆனால் வர்ணச் சம நிலை பேணப்படல் வேண்டும்.

### ஸ்ரென்சில் கிறபிக் :-

ஸ்ரென்சில் தாளிலோ அல்லது கடதாசி அட்டையிலோ தேவையான உருவங்களையோ எழுத்துக்களையோ வரைந்து அதை வெட்டி அகற்ற வேண்டும். பின்பு அதனை தாளின் மீது வைத்து மை பூசி அழுத்தும் போது பிரதி பெறப்படும். ஒரு வர்ணத்தில் பல பிரதிகள் பெறலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. தூர தரிசனம்

கீழ் குறிக்கப்பட்டுள்ள வடிவங்களைப் பாருங்கள் பல்வேறு பார்வையில் அவை வரையப்பட்டிருக்கின்றன. எமது பாடத்திட்டத்தில் பொருட்கூட்டம் பார்த்து வரைதல் மிக முக்கிய பகுதியாக உள்ளது. எனவே மாணவர்கள் அவற்றை பல்வேறு பார்வையில் அல்லது பல்வேறு கோணங்களில் பார்த்து வரைதல் அவசியம். இயற்கை காட்சிகளை வரையும் போதும் தூரதரிசனம், நேர் பார்வை, பக்கப்பார்வை என்பன கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

தூரப் பார்வை, தூர நோக்கு, தூர தரிசனம் என்பன ஒரே கருத்துடைய சொற்களாகும். வெளியுலகில் காணும் பொருட்களை உற்று நோக்கினால் அவற்றின் அமைப்பு புலப்படும். அத்துடன் நீளமான கட்டடத்தில் உட் பகுதி, கடை வீதி, புகை வண்டித் தொடர், வீதி ஓரங்களில் சம அளவுக்கொன்றாக நாட்டப் பெற்ற விளக்குத் தூண்கள், மனித ஊர்வலம் போன்ற காட்சிகளைப் பார்க்கும் போது முன் பகுதி பெரிதாகவும், பின் பகுதி சிறிதாகவும் காட்சியளிப்பதைக் காணலாம். அப் பொருட்கள் ஒரே அளவாக இருந்த போதிலும் எமது கண்ணின் அமைப்பால் அவை தூரச் செல்லச் செல்ல சிறிதாகத் தோன்றுகின்றன. நாம் சித்திரம் வரையும் போது தூர தரிசனத்தை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் பல்வேறு கோணங்களில் இருந்து பார்க்கும் போது அவற்றின் வெவ்வேறு வடிவங்களின் தோற்றம் தெரியும் எமக்குத் தெரியும் தோற்றத்திற்கு ஏற்ப வரைதல் வேண்டும்.





## அளவீடுகள்


நாம் காணும் பொருட்கள் ஒவ்வொன்றிற்கும் நீளம், அகலம், உயரம் போன்ற அளவுகள் இருப்பது போல எம்மால் வரையப்படும் படங்களுக்கும் அளவுகள் இருக்கின்றன. ஓவியங்களின் அளவுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று இருபரிமாணம், மற்றையது முப்பரிமாணம். இருபரிமாணச் சித்திரங்களில் நீளம், அகலம் இரண்டும் காணப்படும். இச்சித்திரங்களில் ஒளி நிழல் காட்டாது. விறைப்புத் தன்மையுடையதாகக் காணப்படும். இவ் வகையான இரு பரிமாண ஓவியங்கள் கண்டிய காலத்திற்குரியது குழந்தைகளின் ஓவியங்களும் இரு பரிமாணம் உடையவை.

முப்பரிமாணம் எனப்படுவது நீளம், அகலம், உயரம் ஆகிய மூன்று அளவுகளை கொண்டுள்ளது. ஒளி நிழல் காட்டி வரையப்படும் ஓவியங்கள் முப்பரிமாணம் உடையவை. ஒளி நிழல் காட்டல் எனப்படுவது நாம் வரையும் ஓவியங்களில் ஒளி படுகின்ற பகுதியை பிரகாசமானதாக காட்ட வர்ணத்தை மெல்லிய வர்ணமாகவும் நிழல்படுகின்ற பகுதியை காட்ட வர்ணத்தை கொஞ்சம் கடினமாகவும் பயன்படுத்தப்படல் வேண்டும். அத்துடன் உருண்டையான பொருட்களிலும், உருளை வடிவப் பொருட்களிலும் திரட்சித் தன்மையை நாம் காண்கின்றோம். இத்தன்மையை சித்திரத்தில் வெளிக் காட்டுவதற்கு ஒளி நிழல் காட்டப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பரவுருவச் சித்திரம்



ஒரே வடிவங்களை அல்லது பல விதமான வடிவங்களை ஒரு ஒழுங்கு முறையில் மீண்டும் மீண்டும் வரையும் போது காணப்படும் அலங்காரமே பரவுருவ அலங்காரம் எனப்படும். கிரம முறை அலங்காரம் என்றும் சொல்லலாம்.

சீத்தைத் துணிகள் சேலைகள், கதவுத் திரைச் சீலைகள், படுக்கை விரிப்புகள், தளவிரிப்புகள் சுவருக்கு ஒட்டும் தாள்கள் என்பவற்றிற்கும் இம் முறை பயன்படுத்தப்படலாம்.

இச் சித்திர முறைக்கு பூக்கள், மிருகங்கள், பறவைகள், மனித உருக்கள், தமிழ், சிங்கள, ஆங்கில எழுத்துக்கள், பாரம் பரிய அலங்காரங்கள் போன்ற வடிவங்கள் பயன் படுத்தப்படலாம்.

### அலங்கார மாதிரி வடிவங்கள்

கீழ் வரையப்பட்டுள்ள வடிவங்கள் யாவும் அலங்கார மூல வடிவங்கள் என்று கூறலாம். அவ்வடிவங்கள் யாவும் புராதன பௌத்த விகாரைகளிலும், அரச மாளிகைகளிலும், இந்து ஆலயங்களின் சிற்ப வேலைப்பாடுகளிலும் காணலாம். இவ் வடிவங்கள் மரத்தினாலும், கருங்கற்களினாலும், உலோக வேலைப் பாடுகளிலம், கைவினைப் பொருட்களிலும் அமைத்துள்ளனர். இவ் வலங்காரங்களை பாரம் பரிய அலங்காரம் என்னும் கூறலாம்.

இன்றும் கூடபல விகாரைகளிலும், இந்து ஆலயங்களிலும், கைவினைப் பொருட்களிலும், பாய் வீட்டு அலங்காரப் பொருட்களிலும், பற்றிக் துணியிலும் அமைத்துள்ளதைக் காணலாம். சில விகாரைகளில் தீட்டப்பட்டுள்ளது.

இந்து ஆலயங்களில் பயன் படுத்தப்பட்டுள்ள தமிழ் அலங்கார வடிவங்கள்.

1. தாமரை இதழ் வடிவங்கள்
2. கூட்டுதலை
3. நாகபந்தம்
4. இலவங்கப் பூ
5. சங்கிலிப்பின்னல்
6. நீரலை
7. இலைக்கருக்கு
8. நாகமோடி
9. முத்துக்கரை
10. யாழி

### பௌத்த சிங்கள அலங்கார வடிவங்கள்

இவை பற்றிய விடயங்கள் ரூபாவளிய, மயமதம் சாரிபுத்திரய போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவ் அலங்கார வடிவங்களை திவ்விய (தெய்விக) சத்வ (பிராணிகள்) விருட்ஷ (தாவரங்கள்) நிர்ஜீவ (உயிரற்றவை) என நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. கற்பனை வடிவங்கள், உண்மையான வடிவங்கள் எனவும் வகைப்படுத்தலாம்.

**திவ்விய (தெய்விக) வில் அடங்குவன :-** சூரியன், சந்திரன், தர்மச்சக்கரம்.

**சத்வ (பிராணிகள்) வில் அடங்குவன :-** மகரம், சிங்கம், கஜசிங்கம், நரசிங்கம், யானை, எருது, குதிரை, யாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீருட்ஸ (தாவரங்களில்) அடங்குவன :- நாரிலதா, கத்திரிமலர், சினமலர், தாளம்பூ, சப்புமலர், மல்லிகை, பின்னறமல செங்கழுநீர், வியவெல, பலாபெத்தி

நிர்ஜீவ (உயிரற்றவை) :- அரும்பு, கல்பிந்து, சிப்புரு, நீரலை, காதணி (கர்ணிகா), தீச்சுடர் (கினிதல்ல)

## அலங்காரத்துடன் கூடிய சித்திரங்களின் வகைகள்

அலங்காரங்கள் என்பன அவை வரையப்பட்ட சந்தர்ப்பங்களின் படி எட்டுப்பிரிவுகளில் அவற்றைக் காட்ட முடியும்.

1. சுவர் சித்திரங்கள்.
2. பெத்திகட சித்திரங்கள் (துணிகளில் வரையப்பட்டவை)
3. கொடிகள் பதாகைகள்
4. பலியிடல் சித்திரங்கள்
5. மரவேலைப்பாட்டுச் சித்திரங்கள்
6. களிமண் பாத்திர சித்திரங்கள்
7. நூல் முகப்பு சித்திரங்கள்
8. திரைச் சீலைச் சித்திரங்கள்.

விகாரைகள், தேவாலயங்கள், வீட்டுச் சுவர்கள், சிவிலிங்கள் போன்றவற்றில் வரையப்பட்டவை சுவர்ச் சித்திரங்கள் எனவும் இம் முறையிலேயே துணிகளில் வயைப்பட்டவை. பெத்திகட சித்திரங்கள் எனவும் அழைக்கப்படும். அதிகமாக விகாரைகள், இந்து ஆலயங்களில் காணப்படும். அலங்காரச் சித்திரங்கள் கொண்ட கதவுத் திரைகள் அல்லது புத்தர் சிலைகள் தேவ உருவங்கள் என்பவற்றை மூடிக் காணப்படும் அலங்காரத் துணிகள் திரைச்சீலைகள் என அழைக்கப்படும் சில விகாரைகள் தேவாலயங்கள், இந்து ஆலயங்கள் என்பவற்றில் கூரையின் கீழ் சித்திரங்கள் வரையப்பட்ட துணிகள் தர்ம போதனைகளின் போது கையாளப்படும். முறைகள் ஜாதகக் கதைகள் என்பன வரையப்பட்ட சித்திரங்கள் கொண்ட துணிகள் என்பன பெத்திக்கட சித்திரங்கள் என அழைக்கப்படும்.

பழைய ஓலைச் சுவடிகளின் இரு பக்கங்களிலும் காணப்படும் பலகைகயிலும் சித்திர அலங்காரங்கள் காணப்படும். விகாரை இந்து ஆலயம் என்பவற்றின் உபகரணங்கள் புத்தகப் பெட்டிகள் கதவு நிலை, கதவு, யன்னல் என்பவற்றிலும் அலங்காரமான சித்திரங்கள் வரையப்பட்டிருக்கும். களிமண்ணால் செய்யப்பட்டு சுடப்பட்ட பானைகள் கலசங்கள், பூந்தாழிகள் போன்றவற்றிலும் சித்திரங்கள் அலங்காரங்கள் வரையப்பட்டுள்ளன. ஆதிகாலம் தொட்டு யாக வேள்விகளில் ஈடுபட்டோர் கிரகங்களின் நிலையைத் துணிகளில் வரைந்து வைத்திருந்தனர். இது யாக வேள்வியின் போது சம்பந்தப்பட்டோரின் முன்னர் காட்சிக்கு வைக்கப்படும். இவற்றின் மிக அலங்காரமான சித்திரங்கள் இடம் பெற்றுள்ளன.


பழைய சித்திரங்கள் கலைஞர்கள் சித்திரக் கலையை கற்க விரும்புவர்களுக்கு இக் கலையைக் கற்கத் தொடங்குமுகமாக சித்திரம் சம்பந்தமன சிறு பயிற்சியொன்று சுபவேளையில் வரைய விடப்படும். முதலில் வகதெக வரையப்படும். அதன் பின் துந்தங் பயிற்சி வழங்கப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. அலங்கார வடிவங்கள்

1 - 3 அரும்பு

1. 

2. 

3. 


4, 5, 6 குந்திரிகம்

4. 


5. 

6. 


அரும்புடன் சீப்பு



கல்பிந்துவ



சீப்பு




தனிச்சுளி



தனியிலை



ஈரிலை



நீரிலை




கல்பிந்துவ




## அலங்கார வடிவங்கள்

1, 2, 3 சவடி

1. 

4, 5, 6 சவடி

4. 




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


2.




5.



3.




6.









இரட்டைச் சுளி




வல் இரூவ



சவடி




கல்பிந்து




போபத (அரசிலை)




நீரலை



பத்துரு







பூவும் மொட்டும்




கிளி (கிரவ)



ஹம்சம்



சாரிய அன்னம்



அன்னப்பிணையல் (ஹம்சபூட்டுவ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகரம்



பாஹற் ஸ்தூபமகரம்





சிங்கப்பட்சி (செரபெந்தா)



நாபென்ன




நீரலை (தியரல)




லியவெல




சாலுபொரதமக்



போகொள சக மல




மல்லிகை (பிச்சமல)



காதணி (கர்ணிகா)



தீச்சுடர் (கினிதல்ல)




திரிங்கிதலை



சீனமலர்



கத்தரிமல (வகதெகவின்திரிபு)



சுவஸ்திகாமல



நாரிலதா




நாசித்தலை (கிபிகிமுகுண)



தாழம்பூ (வற்றஹெயமல)




சப்புமலர்



செங்கழுநீர் (மானெல்மல)




கடுப்புல்மலர்



அன்னாசிமலர்




கத்தரிமலர்




நாகமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வகதெக




பின்னறமலர்




வேலபொத்த




லியபொத்த



கேதுவடிவம்




பூவும் மொட்டும்




நெலும்பெத்தி




சிங்கம் (தேசியக்கொடியிலுள்ளது)



சிம்மம்



நரசிங்ஹ



கஜசிம்ஹ




சப்தநாரிபல்லக்கிய



நாரிலதாவெல

## தாமரை வடிவங்கள்



1.




2.



3.



4.




5.



6.




7.




8.



9.



10.




11.




12.




Class No: 741
Acc No 302
...ady Public Library
Municipal Council
Batticaloa
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1.




2.




3.




4.




5.



6.




7.




8.



9.




10.




11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கண்டிய கைத்தொழில் அலங்காரம்




கண்டிய அலங்காரச் சித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேல்பொத்த அலங்காரம்




அன்னாசிப்பூ அலங்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மரவேலை அலங்காரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலசம் :-



பூரண கலசம், புங்கலசம், கும்பம் என பல பெயரால் அழைக்கப்படுகிறது. கருங்கல்லை ஊடகமாக கொண்டுள்ளது. விரிந்த தாமரையின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. விகாரைகளின் நுழை வாயில்களுக்கு முன் அமைக்கப்பட்டிருக்கின்றது. கலசத்தின் மேற் பகுதி தாமரை வடிவத்தால் மூடிக் காணப்படுகின்றது. கலசத்தின் நடுப்பகுதியில் மூன்று வரிகள் காணப்படுகின்றது. அனுராதபுரத்திலுள்ள குட்டம் பொங்குன என்னும் நீர்த் தடாகத்திலும் சிறந்த புங்கலசம் காணப்படுகின்றது. இவற்றை அமைப்பதன் நோக்கம் நாட்டின் செல்வச் செழிப்பைக் குறிக்கின்றது.

நாரிலதா :-

நாரிலதா மலர் ஒரு செயற்கை மலர் என்று கூறலாம். ஒரு பெண்ணின் உருவம் வரையப்பட்டு கைகள் இரண்டிலும் சீன மலர் காணப்படுகின்றது. கொடி அலங்காரத்தால் அமைக்கப்பட்டுள்ள இவ் வடிவத்தை சீப்பு, சுவர் ஓவியம், மரச் செதுக்கு வேலைகளிலும் காணலாம்.

வெலிகிந்த சுதர்சராமய விகாரையின் சுவர் ஓவியமாகவும், கடலதெனிய விகாரையில் காணப்படும் புத்தர் வைக்கப்பட்டுள்ள அறையின் கதவுகளிலும், இலங்கா திலக விகாரையில் முன் கதவிலும் எம்பக்க தேவாலய மரச் செதுக்கல்களிலும், களனி நவீன விகாரையிலும் இம் மலர் சோலியஸ் மென்டிஸ் என்பவரால் வரையப்பட்டுள்ளது.

## 7. கொலாஜ் சித்திரம் (ஒட்டுச் சித்திரம்)

சித்திரப்படைப்புகளில் கொலஜ் சித்திரமும் முதன்மை பெறுகின்றது. இவற்றை அமைப்பதற்கு கழிவுப் பொருட்களாகிய உபயோகப்படாத கடதாசிகள், துணித்துண்டுகள், விதைகள், காய்ந்த இலைகள், கண்ணாடித்துண்டுகள், நூல்த் துண்டுகள், வாழைமடல், வைக்கோல், காய்ந்த புற்கள், பறவைகளின் இறக்கைகள் என்பன பயன் படுத்தப்படலாம். இவற்றைக் கொண்டு சிறந்த கலைப்படைப்புக்களை உருவாக்க முடியும். இக் கழிவுப் பொருட்களை ஒட்டுவதற்கு பசை பயன்படுத்தப்படல் வேண்டும்.

மாணவர்களும், குழந்தைகளும் மிக விருப்பத்துடன் இச் சித்திரத்தை ஆக்குவர். கலப்பு ஊடகமாக இக் கழிவுப் பொருட்களுடன் நீர் வர்ணம், கிறோய்ன் வர்ணம், என்பன பயன் படுத்தப்படும் போது ஓவியத்தின் சிறப்பு தெளிவாகத் தெரியும். புடைப்புச் சித்திரமாகவும், ஒட்டு முறையிலும் செய்யலாம்.

## 8. மொசாச் முறை

மொசாச் முறையில் பல ஓவியங்கள் பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் கிறிஸ்தவ ஆலயங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றது. உடைந்த பீங்கான் துண்டுகள், உடைந்த கண்ணடித் துண்டுகள், என்பனவற்றை சிறு சிறு துண்டுகளாக வெட்டி அல்லது உடைத்து ஒரு வகை பசையினால் ஒட்டி இச் சித்திரம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

## 9. ஆரம்பகாலச் சித்திரக்கலை

இலங்கையின் சித்திரக் கலையைப் பற்றி ஆராயும் போது ஆரம்ப காலத்தில் சித்திரக் கலையை கற்க விரும்புபவர், சித்திரக் கலைஞனின் வீட்டில் தங்கியிருந்து கலையைக் கற்பர். இக்கலையைக் கற்கத் தொடங்கும்முகமாக சித்திரம் சம்பந்தமான சிறு பயிற்சியொன்று சுபவேளையில் வரைய விடப்படும். முதலில் வகதெக வரையப்படும். இப்பயிற்சி பலகையொன்றின் மீது ஊசியொன்றினால் செய்யப்படும். இப்பயிற்சியின் பின்னர் "தூந்தாங்" என்னும் பயிற்சி வழங்கப்படும். அதன் பின்னர் மனித உருவங்கள் தேவ உருவங்கள் விலங்குருவங்கள் என்பன வரைவதற்கான பயிற்சிகள் வழங்கப்படும். பின்னர் சிற்பாசாரியாருடன் விகாரை நிர்மாணத் தொழிற் பயிற்சியில் ஈடுபடுவர். ஆசிரியரது பருமட்டான படத்திற்கு நிறந்தீட்டல், வர்ணக் கலவைத் தயாரித்தல் என்பவற்றை குறிப்பிட்ட காலத்திற்குச் செய்த பின் சித்திரங்கள் வரைவதற்கான வாய்ப்புக் கிடைக்கும். பயிற்சியின் திறன் வெளிப்படுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகாரையின் சுவரோவியங்கள் வரைவதன் மூலமாகும். தொடர்ந்து பயிற்றியாளன் விகாரையின் சித்திர ஆக்கத்தில் ஈடுபடும் முறையைக் கவனிப்போம். முதலில் பரம்பரை முறைகளைப் பின்பற்றி அலங்காரங்கள் அமைப்பு முறையானது குறிப்பிட்ட காலந் தொட்டு தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்து வந்ததை அறிகின்றோம். ஆதிகாலத்தில் வரையப்பட்ட அலங்காரங்கள் இன்றுவரை நன்நிலையில் காணப்படுகின்றன. இந்த அலங்கார இரேகையமைப்பு வர்ணந்தீட்டல், வர்ண அமைப்புக்கள் என்பன மாற்றமடையாது தொடர்ந்து கையாளப்பட்டு வருவதையும் காணலாம்.




வகதெக

சிங்களவரது சோடினை அலங்காரங்கள் உயர்ந்த கலைப்படைப்புக்களாக உள்ளதைக் குறிப்பிடலாம். இயற்கையானதொன்றை ஒரு குறியீடாக அலங்கார அமைப்பில் காட்டுவதற்குப் பயன்படுத்தினர். வகதெக அடிப்படையான அலங்காரங்களை வரைவது சிங்களவரது பிரதான அலங்காரப் பண்பாகும்.


வகதெக

சிங்கள சித்திரக் கலையின் அடிப்படைப் பயிற்சி இதுவாகும். இது இப்போது ஏற்கனவே வரையப்பட்டுள்ளதொன்றாக உள்ளது. சோடினை அலங்காரங்களின் அடிப்படையான வடிவம் கேத்திர கணித உபகரணங்களின் மூலம் வரையக்கூடிய இரேகைகளாகும். பழைய கலைஞர்கள் முதலில் பூச்சியமொன்றைக் குறித்து அதன் இடது பக்கத்திற்கு வளைவொன்றும் வரைந்து அவை இரண்டையும் தொடுப்பர்.



திரிங்கிதலய

இந்த அலங்காரம் மேற்படி அலங்காரத்தின் வளர்ச்சியினால் ஏற்பட்டதாகும். அக்கால சித்திர மாணவர்களால் இந்த அலங்காரம் சுதந்திர முறையில் வரைவதற்காக எல்லா பக்கமும் இரேகைகளை இடுவதற்கான பயிற்சியை பெறுவதற்கு பயன்படுத்தப்பட்டது சிங்கள அலங்காரங்களில் படிமுறைத் தொடர்புடைய சமான இரேகைகள் காணப்படுவதற்குக் காரணம் இப்பயிற்சியின் வளர்ச்சியே என எண்ணுவதற்கு வாய்ப்புண்டு. இவ்வலங்காரத்தில் பல்வேறு நீளங்களிலான பெரிய, சிறிய இரேகைகள் பெருந்தொகையான படிமுறைத் தொடர்புபட்டுள்ளது. மிகவும் பழைய காலத்து கல் செதுக்கல் வேலைப்பாடுகளில் காணப்படும் இவ்வலங்காரத்தின் வளர்ச்சியினால் ஏற்பட்டது.



இலைவடிவம்

லியபத்த

இது வகதெக அமைப்பின் அடிப்படையில் ஏற்பட்ட இலை போன்ற வடிவு பெறும் அமைப்பாகும். இலை வடிவமானது, சித்திரக்கலைக் கொள்கைப்படி இரேகையை முறையாக வரைவதன் மூலம் பெறப்படும் வடிவமாகும்.


பழைய காலத்தில் சித்திரக் கலையை கற்ற மாணவர்கள் பல்வேறு வடிவங்களில் லியபத்த வரைவதன் மூலம் தமது பயிற்சியை வளர்த்துக் கொண்டனர். திரிங்கிதலய வரைவதன் அடிப்படையான பயிற்சியாக லியபத் வரைவதில் போதிய அடிப்படையான பயிற்சியாக லியபத் மூலமான பல்வேறு திறன் காட்டப்படல் வேண்டும். லியபத் மூலமான பல்வேறு அலங்கார ஆக்கங்கள் என்பனவற்றின் மூலம் செதுக்கல்.



சுருக்கு முடிச்சு

உயிரற்றவை

கேத்திர கணித வடிவு கொண்ட உயிரற்ற உருக்களின் ஆக்கங்கள் கோடுகள் வட்டங்கள் கோணங்கள் பூச்சியம் புள்ளடி, ஸ்வஸ்திக உருவம் கல்பிந்துவ, கயிறுமுடிச்சு.



கல்பிந்துவ

**விஷேச வடிவமைப்புக்கள்:-**

இவ்வுலகில் காணக்கிடைக்காத மரங்கள விலங்குகள் என்பன இப்பிரிவில் சேரும். இவ்வுலகில் காணப்படும் விலங்குகளின் அங்கங்களை ஒத்தனவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டிருக்கும். பேரண்டப்பட்சி, மகாநரசிங்க உருவம் மனிதன் (வாமனன் குள்ளன் , நடனமகளிர், பெண்கள், விலங்கு, யானை, குதிரை, சிங்கம், எருது, கிளி, பாம்பு, முயல், மயில், அன்னம், மீன் இவற்றின் உண்மையான அமைப்புக்கள் அலங்காரத்தில் காட்டப்பட்டுள்ளன.

மேற்படி அலங்காரங்கள் காணப்படும் பல்வேறு 23 கோலங்களைச் சேரும் சிங்கள அலங்காரங்கள் காணப்படுகின்றன. வேலைப்பாடுகட்கு இடையில் லியபத் அலங்காரங்கள் உண்டு. கண்டிய கால கட்டத்தில் செதுக்கல் வேலைப்பாடுகள் யானைத்தந்தம் கற்செதுக்கல் வேலைப்பாடுகள் என்பனவற்றில் அதிகமாக லியபத் பாவிக்கப்பட்டு உள்ளது. நாம் இப்போது சிங்கள சம்பிரதாய முறைப்படி அலங்காரங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன எனக் கவனிப்போம்.

## 10. அலங்கார வகைகள்

இலங்கையின் பழைய சம்பிரதாயப்படி சிங்கள அலங்காரங்கள் அவற்றின் ஆக்கப் பண்புகளின்படி 5 பகுதிகளாகப் பிரிக்கப்படும். மத்திய காலக்கலைச் சிற்பங்கள் என்னும் சிங்கள சோடினை அலங்காரங்கள் பற்றிய புத்தகமொன்றை எழுதிய ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் அதில் சிங்கள அலங்காரங்களை நான்கு பகுதிகளாகப் பிரித்துக் காட்டினர் அவையாவன.

1. **தேவம் :-** சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மேகங்கள் என்பன கொண்ட அலங்காரம்
2. **விலங்கு :-** விலங்குகளைக் கொண்ட அலங்காரம்.
3. **தாவரம் :-** மரங்களைக் காட்டும் அலங்காரம்.
4. **சடத்தன்மை :-** சடத்தன்மைப் பொருட்களைக் கொண்ட உபகரணங்கள்.

ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இவ்வாறு பிரிக்கும் போது மேலும் பல உப பிரிவுகளைக் காட்டினார். சடத்தன்மையான பிரிவை கேத்திர கணித வடிவங்கள் 22 எனும் பிரிவில் சேர்த்துள்ளார். சில விமர்சகர்கள் இதனை ஐந்து பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். இதுவே மிகவும் உகந்ததெனக் கருதப்படுகின்றது.

1. **தேவர் :-** தேவர்களாகக் கணிக்கப்படும் உருவங்கள் சூரியன், சந்திரன், போன்ற குறியீடுகள்.
2. **விலங்குகள் :-** உயிருள்ளவை மனிதன் (வாமனம், குள்ளர், நடனமகளிர், பெண்கள்)
3. **மரங்கள் :-** மரங்கள் கொடிகள் போன்ற தாவரப் பகுதிகளில் இருந்து பெறப்படும் பகுதிகள் மூலம் ஆக்கப்பட்ட அலங்காரங்கள் பலாபெதி, லியவெல, லியபத், கொலவெல லியமலவெல, அரச மிலை, பினரமல, அன்னாசிப்பூ, நெலும்மல, சபுமல, வட்டெதாயமல், கடும்புல்மலர், நாரிலதா மலர், சலமல, கெகுல, பிச்சமல, பெரலிய

### 1.0 தாவரப் பகுதிகளைக் காட்டும் அலங்காரங்கள்.

தாவரப் பகுதிகளைக் காட்டும் அலங்காரங்களில் இலையானது பழைய சிங்கள நூல்களில் பல பெயர்களால் அழைக்கப்பட்டது. இலையானது பழைய சிங்கள அலங்காரங்களில் முக்கிய இடம் பெறும். எமது நாட்டு இலைகளின் வடிவம் ஆக்கப்பட்ட வகதெக உருவங்களைக் காட்டும் இலைகள் சில காணப்படுகின்றன. லியவெல் சல்மல போன்ற அலங்கார அமைப்புகளின் போது இலைகள் பாவிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| 1. கொலய | 2. கெடகொலய | 3. வகுடுகொலய | 4. (பரந்த இலை) விசிதிகொலய |
| 5. லியபத்கொலய | 6. (முப்பிரிவு கொண்ட இலை) திரிபத்கொலய | 7. கெதி கொலய | |


இலையை வரையும் போது அது வரைய வேண்டிய இடத்தில் காணப்படும் இடவசதியைப் பொறுத்து மாறுபடும் சில இலைகள் காம்புள்ளன. சில காம்பற்றன.

சிங்கள அலங்காரங்களில் அதிகமாகக் காணப்படும். அதிகாரம் பலாபெதி ஆகும். சித்திரங்களிலும் செதுக்கல் வேலைப்பாடுகளிலும் வரும் பலாபெதி அலங்காரங்கள் அதிகம் காணப்படுகின்றன. இவற்றை தாமரையிலைகளின் வடிவுடன் கூடிய சீலைக்கரை அலங்காரம் எனவும் சிலர் கூறுவர். தாமரையிதழ் வடிவுடன் கூடிய விஷேட சிங்கள முறையான செதுக்கல் வேலைப்பாடுகளும் காணப்படுகின்றன. தாமரைப் பூக்களின் அகலவிதழ் கொண்டவை, ஒடுங்கிய இதழ் கொண்டவை என இரு பிரிவுண்டு. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலேயே பலாபெதி அலங்காரம் வந்ததென்பர் எனினும் இதற்குச் சமனான வேறு இலை வடிவின் அடிப்படையில் பலாபெதி அலங்காரம் வந்ததெனக் கருதுவது மிகவும் பொருந்தும்.



பலாபெதி அலங்காரம்

சிங்கள சிற்பியானவன் பெரும்பாலும் சூழலின் மூலம் கிடைத்த அனுபவங்களின் வாயிலாகவே தனது ஆக்கங்களை செய்துள்ளான். இயற்கைச் சூழலில் காணப்படும் பொருட்களைச் சித்திரமாக வடித்த பின் அவை இயற்கையில் காணப்படுவதைப் போன்றே இருக்கும். அடிப்படையம்சத்தில் மாற்றங்கள் ஏதும் ஏற்படாது. இங்கு காட்டப்பட்டுள்ள பலாபெதி அலங்காரங்கள் அப்படிப்பட்டவையே.

எமது பழைய சித்திரக் கலைஞனும் இந்த பலாபெதி அலங்காரத்தை இயற்கை இலைகளை அவதானித்து அறிந்து பின் இது போன்ற ஆக்கங்களைச் செய்திருக்கலாம். என்பது தெளிவாகின்றது. பொதுவாக பலாபெதி அலங்கார ஆக்கப் பண்புகளில் இலையின் நான்கில் மூன்று பங்கு மட்டும் காட்டப்படும். பொதுவாக இலையொன்றையும் (பெரிய) சிறிய இலை ஒன்றையும் காட்டலும் அவ்விடத்தின் தன்மைக்கு ஏற்றவாறு சாய்வாக அமைக்கப்பட்டிருக்கும். வட்ட சதுர அமைப்புக்களில் பலாபெதி வரையப்பட்டு அல்லது செதுக்கப்பட்டு காணப்படும். விதத்தை அவதானிப்பதன் மூலம் இதனை விளங்கிக் கொள்ளலாம். இலைகள் கொடிகள் என்பன சேர்ந்த இலைக்கொடிகள் சிலவற்றைக் கவனிப்போம்.



**லியவெல**

இது தாவர அலங்கார அம்சத்தைச் சேர்ந்த சிக்கலான அலங்காரம் ஆகும். லியபத, லியபொத, வெல்பட, லீயபந்தனய போன்ற பல்வேறு பெயர்களால் இது அழைக்கப்படும். கொடிகள் இலைகள் போன்ற அம்சங்களைக் காட்டும் பழைய சம்பிரதாய ஆக்கங்கள் ஆகும். பழைய சிற்பியானவன் கொடிகள் இலைகள் என்பவற்றின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு ஆக்கியவையே இவையாகும். லியபத அலங்காரங்களில் பூக்கள் அல்லது மொட்டுக்கள் காணப்படுவதில்லை. சிங்கள சோடினைகளில் இலைகள் மாத்திரம் பாவிக்கப்பட்ட கொடி நாடா அலங்காரங்கள் மிக அரிதாகக் காணப்படும். மரச் செதுக்கல் வேலைப்பாடுகளிலும் களிமண் வேலைப்பாடுகளிலும் இத்தகையவற்றைக் காணலாம். மேலும் லாக்சா வேலைகளிலும் விகாரைச் சுவரோவியங்களிலும் இவற்றைக் காணலாம். அத்துடன் ஓலைச்சுவடிகளிலும் அரிதாக இவ்வலங்காரங்கள் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### லியகொல

இந்த அலங்காரமானது கொடியைப் போன்று இலைகளின் அமைப்பை இடுவதன் மூலம் பெறப்படும். இங்கு பாவிக்கப்படும். இலையானது வகதெக சித்திரத்தின் வளர்ச்சியால் பெறப்பட்ட அமைப்பாகும். சில இடங்களில் சுழியலங்காரத்துடன் இலையமைப்பு சேர்வதன் மூலம் ஏற்பட்டதாக அறியலாம்.


மேலும் சில கொடிகள் ஒன்றுக்கொன்று தொடர்பு பட்டு காணப்படுவதைப் போல இலைகளின் அமைப்பினால் காட்டப்படும். இவ்வாறான பல வடிவங்களைக் காட்டும் இடங்களில் இலையமைப்பானது அடுத்த இலையமைப்புடன் தொடர்புபடுத்துவதன் மூலம் அலங்காரம் ஆக்கப்படும்.

### லியகெடவெல

இது லியகொலவெல அலங்காரத்தின் ஒரு தன்மையாக கருதப்படும். இதில் இலை சம்பந்தப்படும் இடத்தில் முடிச்சும் கொடிகளில் காணப்படும் படிகளும் காணப்படும். அங்குரங்களில் பூக்கள் அல்லது மொட்டுக்கள் அமைக்கப்பட்டிருக்கும். இதுவும் வகதெக சித்திர அபிவிருத்தியினால் ஏற்பட்ட இலையலங்காரமாகும். கூடுதலாக அலங்காரங்களினுள் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் சீலைக்கரை அலங்காரங்களுக்கும் பயன்படும் இது தாவர அமைப்பலங்காரமாகும்.

### லியமல்வெல

இது பூக்கள் இலைகள் என்பவற்றைக் கொண்ட கொடியமைப்பைக் காட்டும் அலங்காரமாகும். பழைய சிங்களச் சித்திர கலைஞர்கள் சீனமல் கதுரிமல் என்பவற்றின் அமைப்பை ஒட்டி இதனை ஆக்கியுள்ளனர்.




### லியபெத்வெல

இதுவும் வகதெக அலங்காரத்தின் வளர்ச்சியால் ஏற்பட்டதே இது இரேகைகளையே அடிப்படையாகக் கொண்டது. இரேகைகளால் அலங்காரம் பெற்ற வகலியபத அலங்காரம் ஒரே பக்கமாக அல்லது மாறி மாறி சித்திரிக்கப்படுவதனால் இவ்வாக்கம் ஏற்படும். இதன் ஆரம்பப் பகுதி மறையுமாறு ஆக்கப்படும். கெகுலுமல் வடிவான இவ்வலங்காரத்தில் அவ்வமைப்பு நன்கு காட்டப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்டவற்றுடன் தொடர்பான வேறு சில அலங்காரங்களை நாம் இப்போது கவனிப்போம்.

### திவவெல

முழுக்க கேத்திரகணிதத் தொடர்புடைய அலங்காரமாகும். இந்த அலங்காரம் அமைக்க வேண்டிய தளப்பரப்பை வைர வடிவத்திற்கு பிரித்தல் வேண்டும். இரேகைகள் ஒன்றையொன்று வெட்டிச் செல்லும் இடங்களில் இரேகைச் சுழிகள் இடுவதன் மூலம் இதனை ஆக்கலாம். இத்துடன் போபத்திகாவ பூச்சியம் என்பன சேர்ப்பதன் மூலம் மேலும் அலங்காரமாக்கலாம். இதில் காணப்படும் வைர வடிவம் நாக்கைப் போல தோன்றுவதனால் இப்பெயர் ஏற்பட்டது.



### வெலபட

இவ்வலங்காரம் கொடியொன்று பரந்து செல்லும் முறையைக் காட்டும் இலைகள், காம்புகள் என்பன அரிதாகவே காட்டப்பட்டிருக்கும். கொடியிலை அமைப்பை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. விளிம்பலங்காரம், முழுப்பரப்பும் மூடத்தக்கதாக வரைதல் போன்றவற்றின் செதுக்கல் வேலைப்பாடுகளில் அதிகமாகக் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**களஸ்தங்கய**

இது தாவர அலங்கார வகுப்பைச் சேர்ந்ததொரு அலங்காரமாகும். வெலபொட, வெலபொத அலங்காரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டது. இங்கு புன்களஸ்வடிவ வடிவம் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுக் காணப்படுவதனால் இப்பெயர் பெற்றுள்ளதெனக் கருதலாம். சில வேளையில் மணவறைகளில் சித்திரிக்கப்படும் புன்களஸ் தென்னங்குருத்து அலங்காரங்கள் என்பனவும் இது போன்று காணப்படும். இவ்வலங்காரங்கள் அதிகமாக காணப்படினும் எல்லாம் ஒரே மாதிரியானவை. கலசத்தின் மீது பூக்கொத்து ஒன்று வைத்த மாதிரி அல்லது தென்னம் பாளை விரிந்து காணப்படுவது போல இருக்கும்.

**வெலதங்கய**


சுருள் வில்லைப் போல பற்றிக் காணப்படும் பூக்கொடியாகும். இதன் தொடக்கமும் வெல்பொடவாகும். ஒன்றுக்கொன்று பின்னிக் காணப்படும். பூக்கள், காய்கள், இலைகள் என்பன முழுப் பரப்பும் மூடி வரைவதற்கு உதவும் சித்தரமாகும். பித்தளை களிமண் பாத்திரங்களிலும் இவ்வலங்காரம் காணப்படும்.

இலைகள், கொடிகள் என்பவற்றுடன் தொடர்புடைய அலங்காரங்களைப் பற்றி கற்ற நாம் அடுத்ததாக நம் நாட்டுப் பூக்களுடன் தொடர்பான அலங்காரங்களை பற்றிக் கற்போம்.

சிங்கள சித்திர அலங்காரங்களில் பல பூ வகைகளும் இடம் பெற்று உள்ளன. அவை நம் நாட்டு மரம் கொடிகளில் காணப்படும். பூக்களை ஒத்த அலங்காரங்கள், கற்பனை ஆக்கங்களாக ஆக்கப்படும் பூக்கள் என இரு வகைப்படும்.



வெடகெமல



பெரலியமல

நம் நாட்டு ஆக்கங்களில் காணப்படும் பூக்கள்.

- (தாமரைப்பூ) நெலும்மல
- பினரமல
- வெடகெமல
- அஹலமல
- பெரலிய மல
- (மல்லிகைப் பூ) பிச்சமல
- (சன்பகப் பூ) சபுமல்
- சலமல



சபுமல (சன்பகப்பூ)


கற்பனைப் பூ வகைகள் :

கதுரு மல

- கடும்புல் மலர்
- சீனமல
- கதுருமல
- ஸ்வஸ்திகப் பூ

## அலங்காரக் கலை


இயற்கையான பூவை அலங்காரத்தில் சித்தரிக்கும் போது பூவின் வடிவம் அல்லது அமைப்பு இயற்கையில் காணப்படுவதை போலவே அமையாது ஆக்கவம்சத்திற்கு ஏற்றவாறு காட்டப்பட்டுள்ளது. எனவே ஒரே பூ பல்வேறு வடிவங்களைக் காட்டும் அலங்காரமாகக் காணப்படும்.



அகத்திப்பூ
(கத்திரமல)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தாமரைப் பூ (நெல்லும் மல)


பழைய சித்திரங்கள் செதுக்கல் வேலைப்பாடுகள் என்பவற்றில் தாமரைப் பூ பிரதான இடம் பெறுகின்றது. தாமரைப் பூ புனித பொருளாகக் கருதப்படும் புத்தர் சிலை, தேவஉருவச் சிலை என்பவற்றின் ஆசனங்களாகத் தாமரைப்பூ, பூ வடிவம் காணப்படுகின்றது. மிகவும் சாதாரணமானதும், தொகுதிகளானதுமான, பெருந்தொகையான தாமரைப் பூக்கள் பழைய கவரோவியங்களில் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. இயற்கையான தாமரைப் பூவில் காணப்படும் கேத்திர கணித வடிவங்களைப் பல்வேறு முறைகளில் காட்டப்பட்ட தாமரைப் பூவலங்காரங்கள் பல பழைய செதுக்கல் வேலைப்பாடுகளில் உள்ளன. தாமரைப்பூ ஆக்கங்களில் நேர்கோடுகள், வளைகோடு, பூச்சியம் (பிந்துவ) புள்ளி (திற) போன்ற அலங்கார அம்சங்களும் இடம் பெற்றுள்ளன.




## பினரமல

இப்பூவானது நான்கு இதழ்கள் கொண்டது. சதுர அமைப்புடையது. பல்வேறு முறைகளில் வரையப்பட்ட இப்பூச் சித்திரங்கள் பழைய மாச் செதுக்கல் வேலைப்பாடுகள். கற்செதுக்கல் வேலைப்பாடுகள். உலோக வேலைப்பாடுகள் என்பவற்றில் காணப்படுகின்றது. இவற்றில் இதழ்களின் அமைப்பு பல்வேறு எல்லாவற்றிலும் ஒரே வடிவினதாகும். சிலவற்றின் இதழ்கள் சிறியதாய் இலைகளின் இடையே காணப்படும்.

பழங்காலத்து சித்திரக கலைஞானவன் பினர மரத்தின் பூவைக்கண்டு இதனை வரைய முற்பட்டான் என நம்பப்படுகின்றது. இம் மரமானது ஈரவலய மலைநாட்டில் அதிகமாக வளரும். இது புரட்டாதி மாதத்தில் மட்டுமே பூக்கும். இத்தாவரத்தின் இலை. பூ என்பவற்றின் சாயலை ஒத்ததாகவே இச்சித்திரம் ஆக்கப்படும். கண்டி, கம்பளை ஆகிய கால கட்டங்களில் மரத்தூண்களிலும் இவ்வலங்காரங் கொண்ட தூண்கள் காணப்பட்டன.





## அன்னாசிப்பூ

இது ஒரு சிறந்த சிங்கள அலங்காரமாகும். இதன் நடுப்பகுதி அன்னாசிக் காயொன்றின் வடிவினை ஒத்ததாகக் காணப்படுவதனால் இப்பெயரால் அழைக்கப்படுகின்றது என நம்புகின்றனர். சிங்கள சித்திரக் கலைஞானவன் அன்னாசிச் செடியொன்றை மாதிரியாக அவதானித்து இதனைச் செய்திருப்பான் என நம்புகின்றனர். பல்வேறு வகையிலமைந்த அன்னாசிப் பூவலங்காரங்கள் உள்ளன. இவை பித்தளை, வெள்ளி போன்ற பொருட்களை அலங்கரிக்கப் பயன்படும். மரச்செதுக்கல் முறைகள், களிமண் செதுக்கல் வேளைகள் என்பவற்றுக்கும் உதவும். இதில் அன்னாசியமைப்பு போன்று இலையெனவும், கற்பனை அலங்காரமெனவும் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் கூறுவார்.




## மல்லிகைப் பூ (பிச்சமல)

இது மிகவும் கலையம்சம் கொண்ட சாதாரண சோடனை அலங்காரம் ஆகும். மல்லிகை மொட்டுகள் இதில் விசேடமாகக் காணப்படும். இயற்கையம்சத்தை எடுத்துக் காட்டுவதாயுள்ளது. இவ்வலங்காரத்தைப் பற்றி அவதானித்துப் பாருங்கள் இது கூடுதலாக புத்தரது சிலைக்கு இரு மருங்கிலும், ஏட்டுச் சுவடிகளிலும் காணப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீனமல

## கடுகப்புல் மலர்

"பர்சது" என்னும் மரம் விண்ணுலகில் காணப்படும் ஒரு மரமென பௌத்த இலக்கியங்கள் கூறும். இவ்வலங்காரம் பழைய விகாரைச் சுவர்களில் காணப்படும். இது முழுக்க கற்பனைப் பண்புகளைக் காட்டும் பூவாகும். கடும்புல்மலர் என இலங்கையில் அழைக்கப்படும். பூ இரவில் மலரும். கீழ் நோக்கித் தொங்குவதைப் போல காணப்படும். இதன் விசேட தன்மை காரணமாக பழங்கால சித்திரக்கலைஞர் இவ்வம்சத்தை சித்திரமாக்கியிருக்கலாம்.



இது சிங்கள சித்திரக் கலையில் வகதெக அம்சத்தின் மூலம் ஆக்கப்பட்ட அலங்காரமாகும்.

## பிராணிகள் கற்பனை அலங்காரங்கள்

சிங்கள சோடனை அலங்காரங்களில் ......ப்படும் சிங்கம், எருது, குதிரை, கிளி என்பன பழைய கற்செதுக்கல் சித்திரங்களிலும் காணப்படும். இவை இயற்கையான அமைப்பிலும் கற்பனை அமைப்பிலும் அலங்காரங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

### யானை

சிங்கள சோடனை அலங்காரங்களில் அதிகமாகக் காணப்படும் ஒரு சோடனை அலங்காரமாகும். அனுராதபுரம், பொலனறுவை என்பவற்றில் காணப்படும். சந்திரவட்டக்கல்லிலும், ஸ்தூபிகளின் பாதத்திலும் இவை காணப்படும். யானையின் பக்கத்தோற்றமும், முன்தோற்றமும் கூடுதலாகத் காட்டப்பட்டுள்ளது. அனுராதபுரத்திலுள்ள கல்வெட்டுக்களில் யானையின் இயற்கையான அம்சம் காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவின் அசோகா மன்னனின் தூண்களிலும், சாஞ்சிதோரணத்திலும் பௌத்த இந்து கல்வெட்டுக்களிலும் யானை உரு கூடுதலாகக் காணப்படுகின்றது. பௌத்த சிற்பியானவன் இதனை திசைகளைக் காட்டவும் நிரந்தரத் தன்மையை காட்டவும் ஒரு குறியீடாகப் பாவித்துள்ளான். சந்திர வட்டக்கல்லில், பிறப்பு பற்றிய குறியீட்டைக் காட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

### சிங்கம்

பழைய கற்குகை செதுக்கல் வேலைப்பாடுகளிலும், சந்திர வட்டக்கல்லிலும் இது காட்டப்பட்டுள்ளது. பொலனறுவையில் காணப்படும் சந்திர வட்டக் கல்லில் இது மரணத்தின் தன்மையை எடுத்துக் காட்டுவதற்காக ஆக்கப்பட்டுள்ளது. அஞ்சாமை, பொறுமை என்பவற்றின் குறியீடாக ஆக்கப்பட்டுள்ளதாகவும் நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எருது

பழைய செதுக்கல் வேலைப்பாடுகளிலும், சுவரோவியங்களிலும் அதிகமாகக் காணப்படும். அநுராதபுரம், பொலநறுவை என்னும் இடங்களின் சந்திரவட்டக்கல்லில் புடைப்புச் சித்திரங்களாகக் காட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் ''ஜரா'' எனப்படும் பௌத்த குறியீட்டு அம்சம் காட்டப்பட்டு உள்ளதெனக் கருதப்படும். அசோக மன்னனின் தூண்களிலும் காட்டப்பட்டுள்ளது.

சில இடங்களில் போதிசத்துவரின் இளமைக் காலத்தைக் காட்டுவதற்கும் இவ்வுருவம் ஆக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. யானையுருவைப் போலவே இதுவும் கூடுதலாக, இயற்கையம்சத்திலேயே காட்டப்பட்டுள்ளது. கண்டிய காலகட்டத்தில் சித்திரக் கலைஞர்கள் யானையையும், எருதையும் தொடர்புபடுத்தி வரைந்துள்ளனர். சில பொலனறுவை சந்திர வட்டக் கல்லில் எருது வடிவம் நீக்கப்பட்டுள்ளது. இவ்வாறான இடங்களில் எருது உருவமான காவற்கல்லின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. இது திசைகளைக் காட்ட வைக்கப்பட்டது.

## குதிரை

இது அதிகமாகக் காணப்படாத விலங்கு உருவமாகும். அனுராதபுரம் பொலனறுவை என்னும் இடங்களில் சந்திர வட்டக் கல்லிலும் **''வியாதி''** என்னும் பௌத்த குறியீட்டைக் காட்டுவதற்காக காட்டப்பட்டுள்ளதென கருதப்படும். சந்திர வட்டக்கல்லில் இவ்வுருவம் இயற்கையம்சத்தில் காட்டப்பட்டுள்ளது.



கஜசிங்கம்



சிங்கம்

## சிங்கம்

சிங்கள இனத்தின் குறியீடாகவும் சிங்கம் உள்ளது. புத்தர் பெருமான் சாசயசிங்கள என்பதைக் காட்டவும் அவரது பாதங்களில் இவ்வுருவம் காணப்படும். அனுராதபுரக் காலந்தொட்டே இவ்வுருவம் வருகின்றது. அலங்காரத்தில் காணப்படும் சிங்க உருவம் கற்பனை அம்சம் கொண்டது. அதிகமான இடங்களில் இவ்வுரு கற்பனை அம்சத்துடனேயே காட்டப்பட்டுள்ளது. இதன் தலையை யானை தலையைப் போல ஆக்கினால் கஜசிங்கமெனவும் அழைக்கப்படும். அநுராதபுர காலகட்டத்தில், பக்கத் தோற்றத்திலும் முன் தோற்றத்திலும் இவை ஆக்கப்பட்டன. கண்டி, கம்பளை ஆகிய கால கட்டங்களில் மகர உருவிற்குப் பதிலாக அமைக்கப்பட்டது.

மலைநாட்டு பகுதியின் விகாரைகளில் மகரதோரணத்தின் உச்சியில் காணப்படும் முகம் சிங்க முகத்தினை பிரதிபலிக்கின்றது. இங்கு இடது பக்கத்தில் உள்ள உருவையும், சிங்க உருவையும் கவனித்துப் பாருங்கள். கண்டி தலதா மாளிகையின் சித்திரங்களில் ஒரு தலையும், இரு உடம்பும் கொண்ட சிங்க வடிவம் காணப்படுகிறது. இவற்றைச் சிங்களச் சிற்பிகள் அலங்காரத்திற்காக ஆக்கினார்.

ரூவாவலிய என்னும் நூலின் சொலாஸ் விதங்களிலான சிங்க உருக்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்களக் கலைஞர்கள் வரைந்துள்ளது **''சேகர சீங்கம்''** எனப்படுவதாகும். இதன் கண்கள் முயற் கண்களைப் போன்று காணப்படும். இது அச்சமூட்டும் தோற்றமும் மென்மையான உரோமமும், செம்மறியாட்டைப் போன்ற முதுகும், துணிவான போக்கும், நீண்ட வாலும் கொண்டதாகக் காட்டப்பட்டுள்ளது. உருவை அவதானியுங்கள்.


இதன் தன்மையை உயர்த்திக் காட்டுவதற்க்காகவே ராஜன் என சித்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறே நாகராஜன் எனவும் கூறப்பட்டுள்ளது. இதன் வடிவம் சிங்கள சோடனைகளில் குறியீட்டு அம்சங்களை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. சிங்க உருவம் சந்திர வட்டக் கல்லிலும் காட்டப்பட்டுள்ளது. பரணவித்தான அவர்களது கருத்துப்படி இவ்வுருவம் இறப்பைக் குறித்து நிற்கிறது என அறியலாம். இதனைக் காட்டுவதற்காக சந்திர வட்டக் கல்லின் உண்மையான உருவில் ஆக்கப்பட்டுள்ளன. அதிகமான புத்த சிலைக்கருகிலும், அமர்ந்த புத்த சிலையின் ஆசனங்களிலும் இவ்வுரு காணப்படும்.
இந்திய புத்த சிலைகளிலும் விஷேடமாக மதுரையின் புத்தர் சிலைகளிலும் இவ்வம்சம் காணப்படும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அன்னப்பறவை

இது தூய்மைக் குறியீட்டைக் காட்டும். இதுவும் சிங்களச் சிற்ப, ஓவியங்களில் அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது. அனுராதபுரம், பொலனறுவை ஆகியவற்றின் புராதன இடிபாடுகளிலும் காணப்படுகின்றன. சந்திர வட்டக் கல்லில் அன்னங்களின் வரிசையொன்று கட்டாயம் இடம்பெறும். இவற்றில் பழங்கால சிற்பிகளால் ஆக்கப்பட்ட அன்னங்களின் இயற்கை வடிவமே உள்ளது. இந்து மதத்தில் கதையம்சங்களுடனும், கூடுதலாக இலக்கியங்களில் பெண்களது நடைக்கு இதன் நடை உருவமாகக் கூறப்படும். ரூபாவலியவில் அன்னத்தைப் பற்றி பின்வருமாறு கூறப்படும். அன்னப்பறவை கதை போன்ற நகமும், குக்குட்ட வடிவ கண்களும், சிவந்த சொண்டும், மீன் போன்ற முகமும் கொண்டது என்பதாகும்.





சிங்கள சோடனை அலங்காரங்களில் உண்மையான வடிவில் அல்லாது ஆக்கப் பண்புகள் கொண்ட வடிவிலேயே இது காட்டப்பட்டுள்ளது. இதன் இறகுகள் அலங்காரங்களுடன் தொடர்புபட்டது. பித்தளை, மாவேலைப்பாடுகளில் அதிகம் காணப்படுகின்றது. தூய்மையின் குறியீடாக சந்திர வட்டக் கல்லில் இது இயற்கையம்சத்திலேயே காட்டப்பட்டுள்ளது. அதிகமான சிங்கள சித்திரங்களிலும், செதுக்கல் வேலைப்பாடுகளிலும், இது அன்னப்பறவைகள் நீண்ட கழுத்தினால் ஒன்றையொன்று பிணைத்து நிற்கும் தன்மையை காட்டப்பட்டுள்ளது. இதனை விட மூன்று, நான்கு, ஐந்து என அன்னப்பறவைகளை தொடர்புபடுத்திய இணைப்புக்கள், கண்டி தலதாமாளிகை, அம்பக்கே தேவாலயம் என்பனவற்றில் மிகவும் அலங்காரமான முறையில் காட்டப்பட்டுள்ளன. இங்கு காணப்படும் படத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

### செரபென்தியா

குருலு (குருவி) பட்சி எனவும் இது அழைக்கப்படும். இது அன்னப்பறவையைப் போன்ற உடலமைப்புடையது. இதன் தலையானது சிங்கத் தலை போன்றும் உடம்பு அன்னப்பறவையை ஒத்தது. சீரான இரேகை அமைப்புக் கொண்டு அலங்காரமாக ஆக்கப்பட்டுள்ளது. சிங்கத்தின் தாடைப்பகுதி உள்நோக்கி வளைந்து காணப்படும். இடது பக்கத்தில் காணப்படும் சிங்கப் பல்லை அவதானிப்பதன் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளலாம். விசேஷடமாக அலங்காரங்களைப் பற்றிக் கற்கும் நீங்கள் இவ்வுருவிற்கும் ஏனைய உருவங்கட்கும் இடையே காணப்படும் வித்தியாசத்தை அறிந்து கொள்ளுதல் முக்கியம். சிலர் செரபென்தியாவின் தலை மகரத் தலை என்றும் கூறுவர். எனினும் மகரத் தலையைப் போன்ற அளவு தாடை மேற்பகுதி வளைந்து காணப்படவில்லை.

செரபென்தியாவின் கழுத்தைச் சுற்றி பழைய கல்வெட்டுக்களும் சிங்கத்தின் கழுத்தைச் சுற்றிக் காணப்படுவதைப் போன்று பலாபெதி வடிவ அலங்காரம் காணப்படுகின்றது. தலையின் மீதுள்ள லியபத் அலங்காரம் உடம்பிலுள்ளதைப் போன்று கண்ணுக்கு மேலும் காட்டப்படல் வேறு பறவைகளில் காணப்படாத அம்சமாகும். கால் விரல்கள், இறகுகள் என்பன ஏனைய பட்சிகளைப் போன்றது.

### கிந்துரா



சிங்களச் சித்திரச் கலைஞர்களும், செதுக்கல் வேலைப்பாடுகளில் ஈடுபட்ட வர்களும், இதனை நன்கு ஆக்கியுள்ளனர். முண்டப்பகுதி மனிதனைப் போன்றும் ஆக்கப்பட்டது. பறவையினதைப் போன்று இறகுகளும் காணப்படும். கிந்துரா கடலிலும், இமாலயத்தில் வசிப்பதாக ஒரு கருத்து காணப்படுகின்றது. சிங்களச் சிற்பிகள் நியம வடிவ கிந்துரா உருவை வரைந்துள்ளனர். கிந்துராவின் இறகுகள் லியபத் அலங்காரத்தைப் போல காணப்படின் இது லியகிந்துரா எனவும் சொல்லப்படுகின்றது. ரூபாவலியில் (146 சுலோகத்தில்) கிந்துரா பற்றி பின்வருமாறு கூறப்படும். லியகிந்துராவின் தலையில் கூந்தலும், கழுத்தைச்சுற்றி பூமாலையும், மனித உடம்பும், மனித முகமும், உடம்பின் கீழ்ப்பகுதி பறவையின் உடலமைப்பையும் கொண்டது என்பதாகும். பார்ப்பதற்கு அழகிய முகமும் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரச்செதுக்கள் வேலைப்பாடுகள், பித்தளை வேலைப்பாடுகள், யானைத் தந்த வேலைப்பாடுகள், சித்திரங்களிலும் அதிகம் காணப்படும். பழைய மர வேலைப்பாடுகளில் கிந்துராவின் ஒரு கையில் வீணை போன்ற சங்கீத உபகரணமொன்று வழங்கப்பட்டுள்ளது. மற்ற கையில் "வியபத" வடிவில் அலங்காரப் பூவொன்று காணப்படும். வித்தியாசமான அம்சங்கள் கொண்ட உருவங்களில் மகர உருவம், சிங்களச் சிற்பியின் அபூர்வமான ஆக்கமாகும். இப்போது நாம் மகர உருவைப் பற்றிக் கவனிப்போம்.



### மகர உருவம்

சிங்கள சோடனை அலங்காரங்களில் அதிகமாக காணப்படும் அலங்காரமாகும். அனுராதபுர காலந்தொட்டு கல் அலங்காரங்களில் இடம் பெற்று வந்துள்ளது. பழைய புத்தர் சிலைகளின் மீது அமைக்கப்பட்ட தோரணத்திலும் மகர உருவம் காணப்படும். விசேஷடமாக தோரணத்தை அலங்காரப்படுத்த ஆதி காலந் தொட்டு இது பயன்பட்டு வந்தது. பொலனறுவை கல்விவிகாரை, கடலாதெனிய, லங்காதிலக ஆகிய விகாரைகளிலும் மகர தோரணத்து டனான புத்தரது உருவம் காணப்படும்.

மகரம் பன்னிரண்டு இராசிகளில் ஒன்று, பாரத்திலும் கொடிகளிலும் மகரஉருவம் குறியீடாகக் காணப்படும். பழங்காலத்து பெண்களது மாலைகளிலும் மகர உருவம் காணப்பட்டது. பழைய, யானைத் தந்தம், கொம்புகள், என்பவற்றின் அலங்காரங்களிலும் விசேஷமான உளிகள், கத்திகள் என்பன மூலம் மகர உருவம் ஆக்கப்பட்டது.


மகர உருவம் மனக்கண்ணுக்குத் தென்பட்டவாறு ஆக்கப்பட்டதே. இதைப் போன்ற உருவங்கள் இல்லை. பல்வேறு மிருகங்களின் உடலமைப்புக்களைச் சேர்த்ததன் மூலம் உருவாக்கப்பட்ட அமைப்பு ஆகும்.

இந்தியாவின் மகர உருவம் கிபி 200 ஆண்டளவில் "பாரூட்டு" செதுக்கல் வேலைப்பாடுகளிலும் காணப்படுகின்றது. இந்த மகர உருவம் சுருங்கிய நிலையில் காணப்படும். இதன் உடல் டொல்பின் மீனை ஒத்ததாயும் தலை முதலையை ஒத்தாயும் காணப்படும். சரீரம், வால் என்பன மீனைப் போன்றது. வால் மடிக்கட்டப்பட்டு உள்ளது. இதற்கு காதும், துடுப்புகளும் காணப்படுகின்றனது.

தோரணங்களின் மேல் இரு பக்கங்களிலும் மகர உருவம் ஆக்கப்பட்டிருக்கும் விசேஷமாக கண்டிய கால கட்டத்தில் வாயிற் கதவு புத்தரது சிலையின் மேற்பகுதி என்பவற்றின் ஒன்றை ஒன்று நோக்கிய வாறான மகர உருவங்கள். இருபக்கமுள்ள தூண்களில் ஆக்கப்பட்டு இருக்கும். இங்கு காணப்படும் மற்ற விபரங்களையும் கற்று மகர தோரணம் பற்றி நன்கு விளங்கி கொள்ளலாம்.

### மகர தோரணச் சித்திரங்கள்

சிங்கள சோடனை அலங்காரங்களில் மிகவும் உயர்தரமானது. இலங்கையில் மிகவும் பழைய கல்வெட்டுக்களிலும் இவை இடம் பெற்றுள்ளன. அனுராதபுரம் பொலனறுவை என்பவற்றிலும் இடைப்பட்ட கால கட்டத்தில் பஞ்ச தோரணங்கள் அலங்காரப்படுத்த "மகர" வடிவு உதவியுள்ளது. மகர உருவில் மகரக் கருத்துணர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்காக பல மிருகங்களின் உடல் அம்சங்கள் சேர்க்கப்பட்டன. இது இடைப்பட்ட கால கட்டத்தில் சமஸ்கிருத சுலோகமொன்றிலும் கூறப்பட்டுள்ளது.



### பேரண்டப்பட்சி (இருதலைப்பட்சி)

சிங்களப் பெண்களின், விசேஷமாக மலைநாட்டு சிங்களப் பெண்களின் கழுத்திலும் அணியும் பதக்க அலங்காரமாகும். மலையக இராசதானிக் காலத்தில் நடைபெற்ற விழாக்களில் அந்தந்த பகுதிகளைக் காட்டுவதற்கு பல்வேறு கொடிகள் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டன. கண்டி தலதா பெரகரா பற்றிய விளக்கத்தில் இது கூறப்பட்டுள்ளது. எனவே பேரண்டப்பட்சியும் இதைப் போன்றதொரு குறியீடாகும்.

அவுஸ்திரேலியா ரஷ்யா ஆசிய நாடுகளிலும் இது போன்ற வடிவங்கள் காணப்படினும் அவை பெரும்பாலும் கழுகு போன்ற அமைப்புடையன. நம்நாட்டு பேரண்டப்பட்சியின் வடிவம் அன்னத்தின் முன்பக்க வடிவை ஒத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரண்டப்பட்சியமைப்பில் சமச்சீரான வடிவமும், கேத்திர கணித வடிவமும் காணப்படும். ஒரு உடம்பில் இரண்டு கால்களும், இரண்டு சிறகுகளும், இரண்டு தலைகளும் உள்ளதாக இது அமைக்கப்பட்டுள்ளது. இரு தலைகளையும் தொடர்புபடுத்த "லியபத்" அலங்காரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு ஆபரணமாக சீராக தொங்கக் கூடியதாயும் அல்லது மோதிரமாக அணியக்கூடியதாயும் செய்யப்பட்டது. இறகுகள் கொண்ட பறவையொன்றின் உடலை இரண்டாய் பிளந்து விரித்து விட்டால் காணப்படும் அமைப்பை ஒத்தது. இங்கு காட்டப்பட்ட உருவின் மூலம் இதனை அவதானிக்கலாம்.



## நாரிலதா

மனக்கருத்தாக்கமாகக் காணப்படும். இவ்வுரு லியவெல், பெண்ணுருவம் என்பவற்றின் அலங்கார வடிவங்களைக் கொண்டு ஆக்கப்பட்டதொரு அலங்காரமாகும்.

சிங்கள அலங்காரங்களில் யானைத்தந்தம், பித்தளை என்பவற்றின் செதுக்கல் வேலைப்பாடுகள், சுவரோவியங்கள் ஆகியவற்றில் கூடுதலாகக் காணப்படும். இதில் பெண்ணொருத்தியின் மேலுடம்பு மலரலங்காரங்களும் காணப்படுவதுடன் இரு கைகளும், இருபக்கமுள்ள இரு பூக்கிளைகளைப் பிடித்த வண்ணம் காணப்படும். இது கூரையின் கீழ் மூலைகளின் அலங்காரத்திற்கும், கலையலங்காரத்திற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது. கண்டிய காலத்து சோடனை அலங்காலங்களில், மரச் செதுக்கல் வேலைப்பாடுகளிலும் "**நாரிலதா**" வடிவம் காணப்படுகின்றது. இது சிங்கள சோடனை அலங்காரக் கலைஞர்களது திறமையை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.



## பஞ்சநாரிகடய (பஞ்சநாரி கவசம்)

இந்த அலங்காரம் ஐந்து பெண்களுடைய உருவங்கங்களை ஒன்றாகச் சேர்த்து அமைப்பதன் மூலம் உருவாக்கப்படும். கலசமொன்றின் வெளிப்புற அமைப்பை ஒத்ததாக அதில் காணப்படும் பெண்களது வடிவங்கள் உள்ளது. தவிநாரிரதய, சப்தநாரி, பல்லக்கு, சப்தநாரி தொரண, அஷ்டநாரிரதய, நவநாரி குஞ்சரய என பெண் உருவங்களை அடிப்படையாகக் கொண்ட இச்சோடனை அலங்காரங்கள் காணப்படுகின்றன. ரூபாவலியில் காணப்படும். ஆக்கங்களான இவற்றின் மூலம் சிங்கள சோடனை அலங்காரக் கலைஞனின் திறமை நன்கு வெளிப்படுகின்றது.



நாரி உருவம் – நடனமாடும் பெண்

## விஷேட ஆக்கங்கள் நாரி உருவங்கள்

பழங்கால சிங்கள சித்திரக் கலைஞர்கள் பெண்ணுருவங்களையும் அலங்காரங்களில் பயன்படுத்தியுள்ளனர். பெண்களின் உடலமைப்பு அம்சங்கள் பெண்மைச் சுபாவங்கள் என்பன வெளிக்காட்டத்தக்கதாக இவ்வுருவங்களை சிங்கள சிற்பக் கலைஞர்கள் ஆக்கியுள்ளதைக் கூறலாம்.



## நாரிதேவி

பிரதானமாக நாரிதேவி உருவம் நாரிலதா உருவத்திற்குச் சமமானது. எனினும் இதில் கிரீடம் சூடப்பட்ட அமைப்பொன்று காணப்படும். சீனமல அல்லது லியபத மாதிரியில் அமைக்கப்பட்ட கொடியும் காணப்படும். இருபக்கமும் கைகளில் கொடிகளைப் பிடித்து இருக்குமாறு ஆக்கப்பட்டுள்ளது ஒரு பிரதான அம்சமாகும். இடுப்பின் கீழ்ப்பகுதியில் லியபத் அலங்காரங்கள் இடப்பட்டுள்ளன. கண்டிய கால கட்டத்தில் மரச்செதுக்கல் வேலைப்பாடுகளில் இவை அதிகம் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### கிந்துரா

கிந்துரா, சிந்துரி, கிந்துரிங்கள, இன்னரதேனுவ, இனன்னரா, சினுராங்கனான, லியகிந்துரா எனப் பல்வேறு பெயர்களால், சிங்களச் சித்திரக் கலைஞர்களும், சிற்பிகளும் இதனை மிக அலங்காரமான முறையில் வடிவமைத்துள்ளனர். இவ்வுருவம் மனிதனது உருவமும், அரைவாசி பட்சியொன்றின் உருவ அமைப்புடன் இறகுகள் என்பன கொண்டதாக ஆக்கப்பட்டுள்ளது.

நாக உருவங்கள் பற்றிய கருத்துக்கள், வழிபாடுகள் இந்தியாவைப் போல இலங்கையிலும் ஆதிகாலந் தொட்டே இருந்து வந்துள்ளன. இலங்கையின் அனுராதபுரக் காலத்தின் முதற்பகுதியில் ஏழு தலைகளையும் கொண்ட நாக உருவங்களும் பிற்காலத்தில் அரைவாசி மனித உருவங் கொண்ட நாக வடிவங்களும் கல்வெட்டுக்களில் காணப்பட்டன. சிங்களச் சிற்பிகள் சாதாரணமாக நாகமொன்றின் வடிவிலேயே இதனை அமைத்துள்ளனர். வீட்டுக் கட்டிடங்களின் பாதுகாவலனாகவும் நாக அமைப்பு காணப்படும்.

சதுரத் தூண்களின் எண்கோண அமைப்பைக் காட்டுவதற்காக **"நாக பந்தன"** என்னும் அமைப்பு காட்டப்பட்டுள்ளது. பழங்கால வீடுகளில் பல்வேறு உபகரணங்களிலும், பாய், துணிகள் பின்னல் வேலைப்பாடுகள் என்பவற்றிலும் நாக உருவ அலங்காரங்கள் காணப்படும். பித்தளை அலங்காரங்களில் நாகபூட்டுவ என்னும் அலங்காரம் காணப்படும். இரு நாகங்கள் ஒன்றையொன்று பின்னிக் கொள்ளும் **"நாக தங்கய"** என்னும் அலங்காரமும் உண்டு. பழைய மரச்செதுக்கல் வேலைப்பாடுகளில் **"நாகதல்ல"** நாகபொரதம் என்னும் அலங்காரங்களும் உண்டு. அதிகமான பித்தளைப் பொருட்களில் நாக உருவங்கள் உள்ளன.

சீப்பு (பனாவ) அலங்காரம்




### சடத்தன்மை அலங்காரங்கள்

பழங்கால சிங்கள சித்திக் கலைஞன் கேத்திர கணித முறைகள், சடப்பொருட்களின் வடிவங்கள் என்பவற்றைப் பின்பற்றி ஆக்கிய அலங்காரங்கள் நிறைய காணப்படுகின்றன. இவை சடத்தன்மை வாய்ந்த வடிவமைப்பினைக் காட்டும். இவ்வாறான அலங்காரங்கள் சாதாரண வடிவுடையன போன்று சிக்கலான வடிவமைப்புடையனவும் உண்டு. மிகவும் சாதாரணமாக வடிவமைப்பு கொண்டது பனாவ (சீப்பு) ஆகும். இப்போது நாம் இதனைப் பற்றிக் கவனிப்போம்.

மிகவும் இலகுவாகக் வரையக்கூடிய கேத்திரகணித வடிவ இரேகைகள் என்பன கொண்டு ஆக்கப்படும் பனாவ அலங்காரம், பழங்காலத்து மாட்டுக் கொம்புகள், யானைத்தந்தம் என்பன மூலம் செய்த சீப்பை ஒத்துக் காணப்பட்டதனால் இப்பெயர் பெற்றது. பழங்கால சித்திரக் கலைஞனானவன் இயற்கைப் பொருட்களைப் போலவே தான் பாவிக்கும் பொருட்களையும் சித்திரமாக்குவதில் சிறந்து விளங்கினான் என்பதை அறியலாம். பனாவ விசேஷமாக லாக்சா வேலைகளில் மிகவும் உதவியது. சில வேளையில் லாக்சா அலங்காரங்களின் இடையே இரு பனாவ அலங்காரங்களை வரைந்து இடையில் அரும்பு அலங்காரம் இடப்படும். மடபாத்திரங்களில் இது அதிகமாக இடம் பெற்றுள்ளது. இங்கு இதற்காக சிறிய அச்சொன்று பாவிக்கப்படும்.

### பத்துறு


இது மிகவும் இலகவாக வரையக் கூடியது. இது மூங்கில் இலையைப் போன்றது. பனாவ அலங்காரத்தின் வளர்ச்சிப் படி இதுவெனவும் கூறப்படுகின்றது. இரு நேர்கோடுகள் நுனியில்கூராக சேர்கின்ற விதத்தில் ஆக்கப்பட்டுள்ள இது இருசமபக்க முக்கோணி போன்றது. மட்பாண்ட வேலைகட்கும் வேலைப்பாடுகளிலும் காணப்படும். ஈட்டிபிடி சட்டிகள், கிண்ணங்கள் என்பவற்றிலும துணிகள, நார் நெய்தலின் போதும் இவ்வலங்காரங்கள் இடப்படும்.




பத்துறு வடிவம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கூட்டுமாறு











### பீகடய

பத்துறு அலங்காரத்தின் வளர்ச்சிப்படியாகும். நீளத்தில் குறைந்த பத்துறு அலங்காரம் போன்றது. லாக்சா போன்ற நகவேலைப்பாட்டு அலங்காரங்களில், பீகட அலங்காரத்துக்கு தனி பிந்துவ, அல்லது புள்ளிகள் இடுவதன் மூலம் மிகவும் அலங்காரம் பெறும். மர, பித்தளை வேலைப்பாடுகளில் இவ்வலங்காரம் பத்துறு முக்கோணம் என அழைக்கப்படும். இங்கு ஒரு பத்துறு அலங்காரத்திற்கு புள்ளிகள் அல்லது பிந்து இடப்படும்.

### இதல்பத்துறு

பத்துறு அலங்காரத்தில் இரேகைகளைக் கூடுதலாக இடுவதன் மூலம் இவ்வலங்காரம் ஆக்கப்பட்டுள்ளது. கூடுதலாக இந்த பத்துறு வகையின் அகலம் மூன்று அங்குலம் முதல் பத்து வரை காணப்படும் லாச்சா வேலைப்பாடுகளிலும் ஈட்டிப்பிடி போன்றவற்றிலும், லாக்சா அலங்காரங்களிலும் இலகுவாக ஆக்கப்படும்.

### பிந்து பத்துறு

பத்துறு அலங்காரத்தில் பிந்து அலங்காரத்தை இடுவதன் மூலம் பிந்து பத்துறுவாக்கப்படும். தனிபிந்து பத்துறு, பிந்து பத்துறு என்னும் பெயர்களில் அழைக்கப்படும். பெரும்பாலும் இதன் பத்துறுவே இதற்காக பயன்படும்.

### அரசமிலை பத்துறு

பத்துறு, அரசமிலை பத்துறு என்பவற்றைச் சேர்ப்பதன் மூலம் இந்த அலங்கார ஏற்படும். பத்துறு அலங்காரத்தின் நுனியில் அரசமிலை வடிவைச் சேர்ப்பதனா இந்த அலங்காரம் ஏற்படும். இது அதிகமாக விகாரைகளின் கரை அலங்காரமாகவு காணப்படும்.

### கினிதல்ல

நெருப்புச் சுடரைப் போன்று பத்துறு அலங்கார அமைப்பில் காணப்படு அடி முதல் நுனி வரை படிப்படியாகச் சிறிதாகச் செல்லும் தீச்சுடரின் வடிவை போல காணப்படும். புத்தபெருமானின் சிலையின் பின்பக்கம் காட்டப்பட்டுள் ரெஸ்வலல்ல, ரஸ்மிமாலாவ என்பன இவ்வலங்காரத்திலேயே ஆக்கப்பட்டுள்ளன.

### சுழிய


இவ்வலங்காரம் கொம்பு வடிவம் போன்ற வட்டம் ஒன்றின் மூலமான சிவிலிமி அலங்காரச் சித்திரமாகும். இந்த அலங்காரத்தை சில சிற்பிகள் கொம்புவ எ அழைப்பர். சுழியைத் தனித்தனியாக வேறு. வேறாக ஆக்கும் போது சுழி என பெயர்பெறும். சுழிக்கு இடையில் இரேகை அல்லது புள்ளிகள் வைக்கப்படும்.

### சுழிதெக (இரட்டைச் சுழி)

இரண்டு சுழியை இரு பக்கத்திற்கும் இடப்பட்டால் சுழிதெக எனப்படும். இந்த சுழியின் இரு பக்கத்திலும் கோடுகளும் இடப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுழிவெல்


கரையலங்காரமாக இரு சுழிகளையும் இரு பக்கமும் இட்டால் சுழிவெல் என அழைக்கப்படும். சிலவேளை இரு பக்கமும் வளை ரேகைகளையும், இரு பக்கமும் சுழிகளையிட்டு சுழிவெல அலங்காரம் அழைக்கப்படும். கூடுதலாக லாக்சா வேலைப்பாடுகளிலும், பொருட்களை அலங்காரம் செய்வதற்காக இது பாவிக்கப்படும்.

## கல்பிந்துவ




இதுவும் கேத்திர கணித அலங்காரங்களைச் சேர்ந்தது. இவ்வலங்காரம் வட்டம், சதுரம் என்பன சேர்வதன் மூலம் ஆக்கப்பட்ட சாதாரண அலங்காரமாகும். பெரும்பாலும் சிங்கள அலங்காரம் இரண்டைக் காட்ட வேண்டிய சந்தர்ப்பத்தில் இரண்டுக்கும் இடைவெளியைக் காட்ட சம்பிரதாயமாக இவ்வலங்காரம் பாவிக்கப்படும். பழங்கால கல்வெட்டுக்களிலும் சித்திரங்களிலும் காணப்படும் பழங்கால உலோகப் பொருட்களில் கல்பதிந்தலை (இரத்தினக் கற்கள், வைரம்) அடிப்படையாகக் கொண்டே இவ்வலங்காரம் ஆக்கப்பட்டது.

லாக்சா வேலைப்பாடுகளில் சதுரத்தை விடுத்து பிந்துவ (வட்டம்) மட்டும் இட்டனர். தனிபிந்துவ எனவும் இதற்குச் சமமானதொரு அலங்காரமுண்டு. முழுக்க கேத்திர கணித அடிப்படையைக் கொண்டே இவ்வலங்காரத்தை கணித உபகரணங்கள் மூலம் ஆக்கலாம்.




## வெல் இருவ

இதுவும் போபத் பத்துறு அலங்காரத்தின் படிமுறை வளர்ச்சியே. இதனைக் கலையலங்காரச் சித்திரமாகப் பாவிக்கலாம். இதில் முக்கியமாக இரு பக்கமும் அரசமிலை வடிவம் இடப்படும் லாக்சா வேலைப்பாடுகள், ஈட்டிப்பிடிகள் என்பவற்றுக்கு உதவும் அலங்காரம்



## தியரல்ல (நீர்அலை)

பழங்கால சிற்பியானவன் கண்டுபிடித்த மி... றப்பு வாய்ந்த அலங்காரமாகும். தியரல்ல காற்றினால் அசையும் அலைகளின் வடிவை கேத்திர கணித முறையான வடிவுடையது. பொதுவாக வளைகோடுகள், நேர்கோடுகள் மூலம் ஆக்கப்பட்டது. தியரல்ல ஒன்றுக்கொன்று சமனான "ரல்ல" கோண வடிவமாகக் காட்டப்படும். இது சாதாரண நீரின் அசைவைக் காட்ட காணப்பட்ட அலங்காரமாகக் காணப்படும். துணியலங்காரங்கள், பாய் அலங்காரங்கள், பத்தித் அலங்காரங்கள், மட்பாண்ட அலங்காரங்கள் என்பவற்றிலும் அதிகம் உள்ளன.




## தனிப்பட்ட லனுகெடய

இரேகைகளின் இலயபாவத்தில் இது முக்கிய இடம்பெறும் கயிறொன்று பின்னிக் காணப்படும் முறையில் இவ்வலங்காரம் ஆக்கப்பட்டிருக்கும். இதனை "**தெபடலனு**" எனவும் அழைப்பர். இதன் தொடக்கம் "லனுகடய" எனக் கூறப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### ஹவடி பொட

ஹவடிய என்னும் அலங்காரத்தின் வளர்ச்சிப் படியாகும். இதன் விஷேட அம்சமாக **"ஹவடி மோதிரம்"** தொடர்புபடும் இடத்தில் நான்கு பெட்டிகள் கொண்ட அலங்காரம் ஆக்கப்பட்டு பூவொன்றை வரைவதாகும். இது இரேகைச் சித்திரங்களாக பயன்படும்.

### ஹவடி தங்கய




இது ஹவடிகளை, ஒன்றுக்கொன்று பின்னலிடும் அலங்காரமாகும். **"ஹவடி தங்கய"** இடைவெளியில் புள்ளி அல்லது வட்டம் இட்டு அலங்காரப்படுத்தப்படும். இரேகை அலங்காரங்களாக உலோகப் பொருட்கள் மட்பாண்ட பொருட்கள் என்பவற்றில் இது காட்டப்பட்டுள்ளது.

### திவவெல


கேத்திர கணித அமைப்புடையன. வரைய வேண்டிய பரப்பில் வைர வடிவ அலங்காரங்கள் இடப்படும். இரேகைகள் ஒன்றையொன்று வெட்டிச் செல்லும் இடங்களில் இரேகைச்சுழி இடுவதன் மூலம் வடிவமைக்கப்படும். இதனுடன் போபத் டிக்காவ, பிந்துசுழிய சேர்ப்பதன் மூலம் மேலும் அலங்காரமாக்கலாம். இங்கு வைர வடிவம் நாக்கைப் போல உள்ளதனால் "திவவெல" என பெயர் பெற்றதாகக் கூறுவர்.

### தாரகாஹவடி




ஹவடிய என்னும் பொருளின் அமைப்புடைய இவ்வலங்காரத்தில் மோதிர வளையங்கள் தொடுமிடத்தில் சிறிய எட்டு பூவிதழ் அமைப்புக்கள் இடப்படுவதனால் இது நட்சத்திர வடிவைப் பெறும். இதனாலேயே இப்பெயர் பெற்றதென்பர்.

### தனிபடலனு (தனியிழை)



இது குறுங்கோடுகளால் ஆக்கப்பட்ட கேத்திரகணித வடிவ அலங்காரம் ஆகும். முக்கோணத்துள் சிறு இரேகைகள் இடல் இதன் அடிப்படை அம்சமாகும். லாக்சா செதுக்கல் வேலைப்பாடுகளில் இதனை தொரணகெந்த என அழைப்பர். இவ்வலங்காரத்தில் கூடுதலான குறுக்கு இரேகைகள் மிகவும் சிறியதான அமைப்பில் இடப்படும். லாக்சா நிர்மாணங்களின் போது நக அலங்காரங்கள் லாக்சா நார்களினால் செய்யும் அலங்காரங்கள் என்பவற்றில் இவ்வலங்காரம் அதிகமாகக் காணப்படும். தோரண அமைப்பில் ஆக்கப்படுவதனால் இப்பெயர் வந்ததென்பர். இதனைப் பழங்காலத்து மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டோர் "சிம்புல்தத்வன்னம்" என்று அழைத்தனர். சாம்ரைப்பிடி மட்பாத்திர அலங்காரம என்பவற்றிற்கு இவ்வலங்காரம் உதவும். இதனை ஒரு கரையலங்கார மாகவும் பாவிக்கலாம்.


### தெபொடலனுவ (ஈரிழை)




குறுகிய நேர் இரேகைகளை குறுக்காகவும் நெடுக்காகவும் இடுவதனால் இவ்வலங்காரம் ஏற்படும். இதுவும் ஒரு கலையலங்காரம் ஆகும். தும்பர பாய், துணிகள் லாக்சா அலங்காரங்கள் என்பவற்றிலும், மட்பாத்திரங்களில் அச்சுக்கள் மூலமும் இவ்வலங்காரம் இடப்படும். சாதாரண அமைப்புடைய அலங்காரங்களை அவதானித்தோம். இப்போது இப்பிரிவைச் சேர்ந்த சிக்கலான அமைப்பு உடைய அலங்காரங்களைக் கவனிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முந்துதல் தம்பதெனிய விகாரை














அலங்காரப் பாவனை

## முத்துதெல்

இதனை ஒரு கரையலங்காரமாகவும் முழுப் பரப்பையும் மூடி வரையும் அலங்காரமாகவும் பாவிக்கலாம். கரையலங்காரத்தில் மாலையொன்றைத் தொங்க விடும் விதத்தில் ஆக்கப்படும். முழுப் பரப்பையும் மூடி வரையம் போது "பினரமல" முறையான அலங்காரத்தில் வரையப்படும். மிகவும் பழைய அலங்காரமான இது அனுராதபுரத்து கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

## நாகபத் புருவ

இந்த அலங்காரம் நாகத்தின் படம், பலாபெதி என்பன கொண்டு ஆக்கப்படும். பலாபெதி அமைப்பு சற்று சாய்வானதாகக் காணப்படும். நடுவில் நாகபடம் காணப்படும் விதத்தில் ஒவ்வொரு நாகத்தினதும் கழுத்தைச் சற்றி மற்றது இருப்பதைப் போன்று காட்டப்பட்டுள்ளது.

## மல சக கொல (பூவும் இலையும்)

இலை, பூ, மொட்டு என்பன கொண்ட இவ்வலங்காரம் சீலின் பரப்பில் வரையப்படும் சித்திரமாகும். சீலின் ஓரங்களில் சுவரிலும், தூண்களிலும் இவ்வலங்காரம் தொங்கும் அமைப்பில் இவ்வலங்காரம் இடம் பெறும்.

## குந்திரிகம்

இது முழுக்க கேத்திர கணித அமைப்புடையது. கல்பிந்துவ அலங்காரத்தின் வளர்ச்சியே இது என்பர். இது மரவேலைப்பாடுகளின் கரைகளில் காணப்படும். தும்பரை பாய்களில் காணப்படும். இது நெய்தலுக்கு சுலபமானது. வைர வடிவம். அல்லது சதுர வடிவங் கொண்டது. நேர் இரேகைகளை மட்டும் இடுதல் விஷேட பண்பாகும். நெய்யும் போது நார்களின் வடிவமும் இதற்கு உதவும். உளிச்செதுக்கல் வேலைப்பாடுகளில் இலகுவானது.

## ஹவடிய

இது கேத்திர கணித சம்பந்தமுடையது. பழங்காலத்தில் ஆண், பெண் இருபாலாரும் பாவித்த "ஹவடிய" என்னும் ஆபரணத்தின் சாயலை ஒத்தது. ஒன்றையொன்று தொடுத்து நிற்கும் வட்டங்கள் காணப்படுதல் விஷேட அம்சமாகும். சீலின் சித்திர அலங்காரமாகவும் உலோக மட்பாண்ட வேலைக்காகவும் உகந்தது.

## சலுபட சாலு பொறதம்

இவ்வலங்காரம் கேத்திர கணித வடிவங்களைக் அடிப்படையாகக் கொண்ட கலப்பு அலங்காரமாகும். விஷேடமாக துணி நெய்தலில் பயன்படும் "மலகொல" அலங்காரத்தைப் போன்றது. இப்போது அந்தந்த அலங்காரங்கள் எவ்வகையான தொழில்கட்கு ஏற்றதென தொடர்ந்து கற்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யானைத் தந்த அலங்காரம், கொம்பு அலங்காரம்

சித்திர அலங்காரங்களில் காணப்படும் எல்லா அலங்காரங்களையும் இவற்றுக்குப் பாவிக்கலாம். விஷேடமாக வகதெக, லியவெல, பலாபெதி, துன்திரிக்கன், லியபத, நாரிலதா, நாரிதேவி, மஹர, செரபென்தி, கிளி அலங்காரம் என்பன புடைப்புக்களில் இரேகையை உட்செலுத்திக் காட்டும் பண்பால் மேலும் அலங்காரம் பெறும். யானைத் தந்த அலங்காரத்தின் உளி கொண்டு தோண்ட வேண்டியுள்ளதால் இரேகைகட்கு முதலிடங் கொடுத்தான். விஷேடமாக வாள் கத்தி என்பவற்றின் பின் அலங்காரம் மகர, செரலபென்தி, சிங்கம் என்னும் அலங்காரங்கள் இடப்படும். வட்டச் செயற்பாடுகள் கொண்ட அலங்காரங்கள் சிறந்தன.


## உலோக வேலை அலங்காரங்கள்

உலோக அலங்கார வேலைப்பாடுகளில் பலமுறைகள் கையாளப்படும். தகட்டு வேலைகள், வார்ப்பு வேலைகளின் போது அச்செடுப்பதில் உருக்கு, பித்தளை என்வற்றுக்கு உபயோகமாகும் அலங்காரங்கள், மட்பாண்டங்களில் உபயோகமாகும் அலங்காரங்களே. கொலய, மலரும் மொட்டும் அரசிலை, சுழி பனாவ, என்பவற்றைக் குறிப்பிடலாம். தகட்டு வேலைகளில் தொடர்ச்சியான இரேகையமைப்பை சுருக்கமாக்கி அலங்காரங்கள் ஆக்குவர். பித்தளைப் பாத்திரங்களில் இவ்வாறான அலங்காரங்கள் உள்ளன. அவை பின்வருமாறு பதுறு, கினிதெல்ல, நெலும்பெத்த லியவெல், மலவெல், நெலும்மல, லியபத, என்பன தகடுகளில் தோற்றுவிக்கும் அலங்காரமாக நெலும்மல, பிரைமல, சிங்கம், அன்னப்பட்சி செரம்பெந்தி என்பவற்றின் கற்பனை அலங்காரங்களும், லியவெல லியபத்வெல், அன்னாசிப்பூ சீனமலர் என்பன போன்ற அலங்காரங்களும் ஆகும்.



### மட்பாண்ட வேலைகட்கான அலங்காரங்கள்

இலங்கையில் பழங்காலப் பொருட்களில் மிகவும் அழகிய அலங்காரங்களைக் காணலாம். இந்த அலங்காரம் கூடுதலாக பாத்திரத்தில் பூசப்பட்ட களிக்கூழின் மீது ஆக்கப்படும் ஊசி மூலம் இவ்வலங்காரங்கள் ஆக்கப்படும். முத்திரை அச்சுக்களும் பாவிக்கப்படும். மல, நெலும், அரசிலை, கொலய, கொலவெல், லியவெல, மல்வெல், பத்துறு, தோடுவ, கதிரி, பிந்துவ, பனாவ, கர்னிகா, தியரல்ல, தங்கரலனுகெட, குன்திரக்கம், அரும்பு, தனிபொட, ஹவடி என்னும் அலங்காரங்கள் மட்பாண்ட வேலைகட்கு உகந்தது. அக்காலத்தில் மட்பாண்டங்களில் பொதுவான அலங்காரம் செய்யப்பட்டாலும கூட ஊசி மூலம் கிண்டி செய்யும் இரேகை அலங்காரத்தையே கையாண்டனர். சுதந்திர போக்குடன் கையசைத:தும் அலங்காரங்கள் மட்பாண்டங்களில் இடம் பெற்றதுடன் சிறு அச்சின் மூலமும் பதுறு, பனாவ, பிந்துவ, கதிர, போன்ற கேத்திர கணித வடிவங்களும் அலங்காரமாக இடம் பெற்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாக்சா வேலைகட்கான அலங்காரங்கள்

லாக்சா அலங்காரங்களில் முதலில் பொருளின் மீது கடும் நிறம் ஒன்று பூசப்படும். பின் அதில் அலங்காரம் இடப்படும். இதனை நகவேலைப்பாட்டு (நியதபொதவட) அலங்காரமென்பர். வெலிபொத, களஸ, சங்கய, ஆதர தொண்டுவ, பிந்துவ, கல்பிந்துவ, கொலவெல, பலாபெதி, லனுகெட, திக்பதுறு, பதுறு, இதல்பதுறு, அரசமிலை, சுழிவெல, சுழி, ஹவடிய என்னும் அலங்காரங்கள் இதற்கு உகந்தன. ஊகத்திற்கு ஏற்ற அலங்காரத்தை அக்காலச் சிங்களச் சிற்பிகள் பாவித்தனர். விசேஷமாக இரேகை அமைப்புடைய அலங்காரங்களே பாவிக்கப்பட்டன.

மரச்செதுக்கல் வேலைப்பாடுகளுக்கான அலங்காரங்கள். பலகைகள். மரத்தூண்கள் என்பவற்றில் அலங்காரமிடல் மூன்று வகைப்படும்.

1. வீட்டு நிர்மாணங்களுக்கானவை.
   தூண், கதவு நிலை, கதவு, பராளை
2. வீட்டுத் தளபாடங்கள்
   கட்டில், அலுமாரி, மேசைகள், நாற்காலிகள் போன்றன.
3. வீட்டு அலங்காரம்
   செதுக்கல் வேலைப்பாடுகள்

பலகைகளில் செய்யப்பட்டுள்ள செதுக்கல் வேலைப்பாடுகள் அந்தந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஆக்கப்பட்டுள்ளது. சம்பிரதாய முறைகளும் இதில் காணப்படும். வீட்டு நிர்மாணத்திற்கு விஷேடமாகத் தூண்களில் பேகட அலங்காரத்திற்காக "பினர பூ" நாகபந்தனம், தளவேலைப்பாடுகளில் துந்திரிக்கன் அலங்காரம் என்பன இடலும் கூரையின் விளிம்பு ஓரத்தில் அரசமிலை. (போபத்) அல்லது அரசமிலை பத்துறு (போபத் பத்தூறு) அலங்காரம் இடப்படுதல் சம்பிரதாயமாகக் காணப்படும் பண்பாகும்.

பலகை வேலைப்பாடுகளில் முக்கியமாகக் கருதும் கதவுநிலை, அலங்காரத்திற்காக வியவெல, பலாபெதி, நெலும்பெதி, பினரமல, துந்திரிக்கன், கல்பிந்துவ, மகர, செரபெந்தி என்பன பாவிக்கப்படும். கதவின் அலங்காரத்திற்காக வியவெல, நாரிலதாவெல, நாரிரூப இர, ஹந்த அலங்காரங்கள் பாவிக்கப்படும்.

வீட்டுத் தளபாடங்களுக்கு கிணிதல்ல, லனுகெட, தியரல்ல, போன்றவை உதவும். விஷேடமாக நாரிலதாவெல, கற்பனை மிருக உருவங்கள் என்பனவும் உபயோகிக்கப்படும் நாரிலதாவெல, கற்பனை உருவங்கள் என்பனவே அதிகம் இடப்படும்.

# 11. இலங்கையின் கட்டிடக்கலை

பௌத்த மதம் இங்கு கொண்டு வரப்படுவதற்கு முன்னர் இங்கே இருந்தது. கட்டிடங்களின் இடிபாடுகள் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை. பண்டு காபய மன்னன் கட்டிடங்கள் அமைத்து நகரை அலங்கரித்தான் என்று மகாவமிசத்திற் கூறப்பட்டுள்ளதாயினும். கி.பி. 3ம் நூற்றாண்டின் பின்னர் அமைக்கப்பட்ட கட்டடங்களின் இடிபாடுகள் மாத்திரமே இது வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அனேகமான கட்டடடங்கள் சமய தேவைகளுக்கான அல்லது பிக்குகளின் பிரயோகத்துக்கான அமைக்கப்பட்டனவாகும் அத்துடன் பௌத்த மதத்துடன் இணைந்ததாகும். ஆரம்பத்தில் பிக்குகள் குகைகளிலும், ஆரணியங்களிலும் வசித்து வந்தனராயினும் காலப்போக்கில் அரசர்களுடைய ஆதரவைக் கொண்டு அமைக்கப்பட்டு அர்ப்பணிக்கப்பட்ட விகாரைகளில் வசிப்பதற்கு ஆரம்பித்தனர் இரண்டாம் உபதிஸ்ஸ மன்னன் பிக்குகளுக்கென வசிப்பிடம், அன்னசாலை, ஸ்நானத்தடாகம் ஆகியவற்றை மகா விகாரையிற் கட்டுவித்தான் என்று கூறப்படுகிறது. அதன் பின்னர் ஆயிரக்கணக்கான பிக்குகள் வசிக்கக் கூடியதாக லோவா மஹாபாய என்ற ஒன்பது மாடி மாளிகையைத் துட்ட கைமுனு கட்டுவித்தான்.

கட்டிடக்கலையானது, இக் காலத்திலே இரு அம்சங்களிலே வளர்ச்சி பெற்றது. வழிபாட்டுக்குரிய தாகபைகள், போதிமனைகள், சிலைக் கூடங்கள் ஆகியவற்றை அமைக்கும் முறை ஒன்று. குருமாருக்குரிய விகாரை இல்லங்களையும், சமய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய கட்டடங்களையும் அமைக்கும் முறை மற்றது போயமனை, சிலைக்கூடம், வைத்தியசாலை, ஸ்நானத் தடாகம், மலசலகூடம் ஆகியன இரண்டாவது வகையிலடங்கும் சில கட்டடங்களாகும். தாக வையைத் தழுவி, நான்கு திசைகளிலும் முகப்பு வைத்து கட்டப்பட்ட வாயில் மண்டபங்களைப் போன்றதாக நுளை வாயில்களை அமைக்கும் முறை மற்றுமொரு விசேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சமாகும். மகாதூபி அல்லது றுவன்வலிசாய, மிரிசவெட்டி தாகப, அபயகிரி தூபி, ஜேதவன தூபி ஆகிய பெரிய தூபிகள் அமைக்கப்பட்டன. மகாதூபியும், மிரிசவெட்டி தாகபவும் துட்டகைமுனு வினாற் கட்டுவிக்கப்பட்டன. வலகம்பாவினால் அபயகிரி தாகபவும், மகா சேனனால் ஜேதவன தாகபவும் கட்டுவிக்கப்பட்டன. இவற்றுடன் தலைநகருக்கு வெளியே இருந்த பிரதேசங்களிலும் பெரிய தாகபங்கள் இக் காலப் பகுதியிற் கட்டப்பட்டன களனி திஸ்ஸ மஹாராம, தீக்க வாபி, சேரு விலை, சோமவதி, மயியங்கணை ஆகியன தலைநகருக்குத் தூரத்தில் அமைக்கப்பட்ட பெரிய தாகபக்களுக்கு உதாரணங்களாகும். இன்னும் சிறிய தூபிகளைச் சுற்றி வட்டத் தாதுமனைகளும் அமைக்கப்பட்டன சைத்தியங்களைச் சுற்றி ஆரம்ப காலத்திலே மரத் தூண்களையும் பின்னர் கற்றூண்களையும் மூன்று வரிசையில் நாட்டி அவற்றுக்கு மேல் பக்க மரங்களைப் பொருத்தி முக்கோணவடிவக் கூரைகள் அமைக்கப்பட்டிருந்தன.

என்பதற்கு **ஆதாரங்கள் கிடைத்துள்ளன. தாகபயின் சிகரத்துக்கு மேலே கூரையின் கூம்புருவான உச்சி** இருந்தது. இரு "களிமண்டல" என்று சிங்களத்திற் குறிப்பிடப்படும். கூம்புருவான இந்த உச்சியிலிருந்து தாகபயைச் சுற்றிக் **கை மரங்களைப் பொருத்தி** அவற்றுக்கு மேலே கூரை அமைக்கப்பட்டது. அனுராதபுரத்திலுள்ள **தூபாராம, லங்காராம** ஆகியவற்றிலும் **மதிரிகிரிய, பொலன்னறுவை** ஆகிய இடங்களிலும் இது போன்ற **வட்டத் தாது மனைகளின் சிதைவுகள் காணப்படுகின்றன.**


அனுராதபுர காலத்துக்கு பிற்பட்ட காலங்களுக்குரிய பல **அரண்மனைகளின் சிதைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.** அனுராதபுரத்து உள் நகரிலுள்ள **மகா விஜயபாகு மன்னனுடைய மாளிகையும்** இன்றைய **பண்டுவஸ் நுவர (பழைய பராக்கிரமபுரம்)** என்னும் இடத்திற் காணப்படும். **முதலாவது பராக்கிரபாகு மன்னனுடைய மாளிகையும் பராக்கிரமபாகு, நிஸ்ஸங்க மல்லன்** ஆகியோரால் பொலன்னறுவையில் அமைக்கப்பட்ட **அரண்மனைகளும்** எமது புராதன **கட்டடக்கலையின் சிறப்பினை எடுத்துக் காட்டும் கட்டிடங்களாகும்.**

பிக்குணி சங்கமித்தையுடன் இங்கு வந்த கூட்டத்தினருள் செதுக்கற் கலைஞரும் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. அசோகமன்னனுடைய ஞாபகத் தூபிகளின் நான்கு திசைகளையும் குறிப்பனவாகச் சொல்லப்படும். சிங்கம், யானை, குதிரை, விருஷபம், ஆகிய மிருகங்களின் உருவங்களை இலங்கையின் செதுக்கற்கலையின் ஆரம்பத்திலிருந்தே காணக்கூடியதாக இருக்கின்றது. ஆயினும் சாஞ்சி, அமராவதி ஆகிய இடங்களிற் காணப்படும் செதுக்கல் வேலைப்பாடுகளிலுள்ள தாவரங்கள், பூங்கொடிகள், மிருகங்கள் ஆகியவற்றின் உருவங்கள் இலங்கையின் சிற்ப செதுக்கற் படைப்புகளுக்கு வழிகாட்டி ஊக்குவித்தனவெனலாம்.

மிகிந்தலை கண்ட தாகபயின் நுளை வாசலில் இப்படியான சிங்கம், யானை, குதிரை, விருஷப உருவங்களும் கற்பனை பூங்கொடி, கற்பனை விருட்சம் பூரணகும்பம் ஆகிய படைப்புக்களும் காணப்படுகின்றன. ஆயினும் காலப்போக்கில் இந்தச் சிற்ப, செதுக்கற்கலை இலங்கைக்குரிய தனிச்சிறப்புடன் வளர்ந்து வரலாயிற்று. காவற்சிலை, கொறவக்கல் ஆகிய சிற்பச் செதுக்க ஆக்கங்கள் அனுராதபுர காலத்தில் விரிவான வளர்ச்சியடைந்தன. இசுறு முனிக் காதலர் சோடி எனக் கூறப்படும் பிரபல கலைச்சிறப்பு வாய்ந்த சிறிய வேலையும் இப்படியான தனிச் சிறப்பும் பொருந்திய இலங்கைக் கலை நுட்பத்தினை எடுத்துக் காட்டும் அழகிய ஒரு படைப்பாகும். மேலும் இசுறு முனிக் கல்லிற் செதுக்கப்பட்டுள்ள குதிரைத் தலையும், மனித உருவமே சிறந்த ஒரு கலைப்படைப்பாகக் கருதப்படுகின்றது. கி.பி. முதலாம் நூற்றாண்டளவிலிருந்து கருங்கல்லிற் புத்தர் சிலைகளைச் செதுக்கும் வழக்கம் இலங்கை முழுவதும் பரவியது. இங்கனம் அவுக்கணை, றஸ்சேறுவை, புதுறுவகலை ஆகியன போன்ற மிகப்பெரிய நிற்கும் சிலைகளும் அனுராதபுரச் சமாதிச்சிலையும் தொழுவிலைச் சிலையும் பொலனறுவைக் கல்விகாரையிற் காணப்படுவது போன்ற உறங்கும் சிலையும் புத்தபிரானுடைய அன்பு, அறிவாற்றல் போன்ற பண்புகளைச் சித்திரிக்கும் வகையில் செதுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோலியஸ் மென்டிஸ்



சோலியஸ் மென்டிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. இலங்கையின் சிற்ப வளர்ச்சி

இலங்கையில் சிற்ப வளர்ச்சி இந்திய நாட்டின் சிற்ப வளர்ச்சியோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இரு நாடுகளும் ஒரே வகையான சில கலைநுட்பங்களை வளர்த்து வந்துள்ளனர். **இந்தியாவில் காணப்படும் சிற்பங்கள், ஓவியங்கள் அனைத்தும் சமயத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுவது போல இலங்கையிலும் உள்ள சிற்பங்கள், ஓவியங்கள் சமயத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இலங்கையில் உள்ள சிற்பங்களும், ஓவியங்களும் பௌத்த மதத்தையும், இந்து மதத்தையும் தழுவியதாகக் காணப்படுகின்றன.**

இலங்கையில் உபயோகிக்கப்பட்ட சிற்ப நூல்கள் **"மயமதம்"**, **"ரூபாவளி"** ஆகிய இரு நூல்களும் என கலாயோகி **ஆனந்தக் குமாரசாமி** அவர்கள் கூறுகின்றார்கள். இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் பல சிற்ப முறைகள் தோன்றி வளர்ச்சியடைந்துள்ளதைக் காணலாம்.

அச்சிற்ப முறைகளில் முக்கியமானவை **மௌரிய சிற்பம், காந்தார சிற்பம், ஆந்திர சிற்பம் குப்த சிற்பம், பல்லவ சிற்பம், சோழ, பாண்டிய சிற்பம், விஜயநகர சிற்பம் அமராவதி சிற்பம்** என்பனவாகும். இலங்கையில் உள்ள சிற்பங்கள் யாவும் மேலே கூறப்பட்டுள்ள சிற்ப முறைகளோடு நெருங்கிய தொடர்புடையதாக காணப்படுகின்றது. இலங்கையின் **சிற்ப வளர்ச்சிக்** காலத்தை நான்காக பிரிக்கலாம்.

1. **அநுராதபுரக் காலம் :-** **தேவநம்பிய தீசன்** காலம் தொட்டு ஒன்பதாம் நூற்றாண்டு வரை
2. **பொலநறுவைக் காலம் :-** பத்தாம் நூற்றாண்டு தொடக்கம் பதிநாலாம் நூறாண்டு வரை.
3. **கண்டிக் காலம் :-** பதினைந்தாம் நூற்றாண்டு தொடக்கம் பதினேளாம் நூற்றாண்டு வரை.
4. **கொழும்புக் காலம் :-** பதினெட்டாம் நூற்றாண்டு தொடக்கம் இன்று வரை.

அனுராதபுர காலத்தில் மௌரிய, ஆந்திரா, குப்த பல்லவ சிற்ப முறைகள் இலங்கையில் பரவின. கண்டிக் காலத்தில் விஜயநகர சிற்ப முறைகள் பரவின. கொழும்பு காலத்தில் தென்னிந்திய சிற்பு முறைகள் பரவின.

இலங்கையின் பெரும்பாலும் காணப்படும் சிற்பங்கள் **புத்த பெருமானுடையதாகக்** காணப்படுகின்றது இலங்கையின் கலைகளின் ஆரம்பமும் வளர்ச்சியும் நிறைந்த காலம் **அனுராதபுரக்காலம்** என்று கூறலாம். **பௌத்த மதத்தின் வருகையால் மக்களின் பழக்க வழக்கங்களில் வளர்ச்சி காணப்பட்டன.** அத்துடன் **சிந்திக்கும் திறன் ஏற்பட்டது** எனவே மிக உயர்ந்த படைப்புக்கள் நிர்மாணிக்கும் ஆற்றல் விருத்தியடைந்தது இப்படைப்புக்கள் அனைத்தும் **பௌத்த மதத்தை தழுவியதாகக் காணப்படுகின்றது.** அவர்களின் படைப்புக்களின் மிக உயர்ந்த படைப்புக்களாக **வட்டதாகே, வாகல் கடங்கள், சந்திர வட்டக்கல் காவற் சிலைகள், புத்தரின் சிலைகள், சுவர் ஓவியங்கள், சிற்பங்கள், கட்டட அமைப்புக்கள்** என்பனவாகும். **அனுராதபுர காலத்தில்** மரங்களினாலும், களிமண்ணினாலும் செய்யப்பட்ட கட்டிடங்கள் அழிந்து போய்விட்டன. இருந்தும் **கருங்கல்லினால்** செய்யப்பட்ட **கட்டிடங்கள், விகாரைகள், சிற்பங்கள்** இன்னும் அழியாமல் காணப்படுகின்றன. **அனுராதபுரத்தில் காணப்படும். அட்டமஸ்தானம்** என அழைக்கப்படும் **எட்டு தாகபங்களும் (விகாரைகளும்) சிறப்புப் பெற்று விளங்குகின்றது.**

**அவ் எட்டு விகாரைகளும் பின்வருமாறு**

| | | | |
|---|---|---|---|
| (1) | ஸ்ரீமா போதி விருட்சக் கோவில் | (2) | றூவன் வெலிசாய |
| (3) | தூபராம தாது கோபம் | (4) | இலங்காராம தாது கோபம் |
| (5) | ஜேதவன தாகபம் | (6) | ஈசுரு முனிய விகாரை |
| (7) | அபயகிரி தாகபம் | (8) | மிறிஸ்வதி தாகபம். |

**ஸ்ரீமாபோதி விருட்சக் கோவில்:-**

இக்கோவில் அனுராதபுரத்தில் **மகமேக நந்தவனத்தில்** அமைக்கப்பட்டுள்ளது. **இந்தியாவிலிருந்து சங்கமித்தையினால் கொண்டுவரப்பட்ட வெள்ளரசுக்கிளை இங்கு நடப்பட்டு பௌத்த மக்களின் வழிபாட்டு தலமாக விளங்குகின்றது.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் விருட்சத்தைச் சுற்றி சுவர் கட்டப்பட்டுள்ளது இச் சுவர் **14ம் நூற்றாண்டில் மூன்றாம் இராஜசிங்கனாற் கட்டுவிக்கப்பட்டதென்பர்.** படிகளின் இரு மருங்கிலும் உள்ள **நாகராச சிலைகளும்** முன்னுள்ள **சந்திர வட்டக்கல்லும்** பாதுகாத்தலை செய்யும் என்னும் நோக்கத்துடன் வைக்கப்பட்டது என்பது ஐதிகம். இங்குள்ள **நாகராச சிலை ஏழு தலையுடையதாய்** இருப்பதை அவதானிக்கலாம்.

மேற்படி கோவிலை வலம் வரும் போது **மகிந்தனிடமிருந்து தேவநம்பிய தீசன் வெள்ளரசுக் கிளையைப் பெறுவது போன்ற படங்கள் வெண் சுதையில் ஆக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டு மிக அழகாக காட்சியளிப்பதைக் காணலாம்.**

**றுவன் வெலிசாய:-**




றூவான் வெலிசாய தாதுகோபம்

இத் தாது கோபம் அனுராதபுரத்தில் அமைந்துள்ளத. இத் தாதுகோபத்தைத் துட்டகைமுனு (கி.பி. 167 – 131) கட்டுவித்தான் என்று கூறப்படுகின்றது. அப்பொழுது அதன் உயரம் 300 அடி.

**றூவன் வெலிசாயாவை மகாதூபம் என்று அழைப்பதுண்டு.** இத் தாது கோபம் நீர்க்குமிழ் வடிவத்தில் அமைந்தள்ளது. மேற்படி தாகபத்தைத் தாங்கி நிற்கும் பாவனையில் **கொத்தப்பட்ட யானைகளடங்கிய சுவரைக்** காணலாம். இவை மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

இத் தாகபத்தின் ஒரு புறத்தில் **விக்கிரக அறை உண்டு.** அங்கு சுவர்களில் **ஜாதகக் கதைகள் வரையப்பட்டுள்ளது.** விசேஷமாக **துட்டகைமுனு, எல்லாளன் யுத்தம் ஓவியமாக தீட்டப்பட்டிருப்பதை** காணலாம்.

இத்தாகபத்தின் அருகில் அழகான சிலை உண்டு அது **துட்டகைமுனுவின் சிலை** என்று சிலரும் **போதிசத்துவ கடவுளின் சிலை** என்று சிலரும் கூறுவர். இச் சிலை **சுதையால்** ஆனவை.



தூபாராமை தாகபை, **அனுராதபுரம்**

தூபராம தாகபம்:-

இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது தாது கோபம் இதுவாகும். இத் தாது கோபம் ஆரம்பத்தில் நெற்குவியல் வடிவாகமாக இருந்தது. அது காலக்கிரமத்தில் பழுதடைந்து பின் புனருத்தாரணஞ் செய்யப்பட்ட பொழுது மணிவடிவத்தில் அமைத்தனர். இத் தாகபத்தை சுற்றிக் கற்றூண்கள் பல வரிசையாக அமைக்கப்பட்டுள்ளது இத் தாகபத்தை தேவநம்பிய தீசன் கட்டுவித்தான்.


**இலங்காராம தாது கோபம்:-**

இத் தாகபம் வலகம்பாகுவினாற் கட்டுவிக்கப்பட்டதெனக் கூறப்படுகின்றது ஆனால் அதற்குச் சரித்திர சான்றுகள் காணப்படவில்லை. இத் தாகபத்தை முதலாம் பராக்கிரம பாகுவினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இது அனுராதபுரத்திலுள்ள நாட்டுப் பிரதானமான தாகபங்களுள் ஒன்றாகும். இது வட்ட வடிவமாய் அமைந்துள்ள வட்டதாகவே எனப்படும். வகையை சார்ந்த தாகபமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜேதவன தாகபம்:-**


சேதவனராமா தாதுகோபம்

இத் தாகபம் மின்னேரியாக் குளம் கட்டிய மகாசேனனால் (கிபி 274 – 302) கட்டுவிக்கப்பட்டது. இலங்கையிலுள்ள தாகபங்கள் எல்லாவற்றிலும் மிகவும் பெரியது. இதன் உயரம் 400 அடியாகும். இத் தாகபம் மூன்று விதமான புத்த கொள்கைகளுக்கு மூலபீடமாக விளங்கியது. இங்குள்ள சிற்ப வேலைகளுட் சில சாஞ்சியிலுள்ள தாதுகோபத்தின் சிற்ப முறையை ஒத்திருப்பதை காணலாம்.

**ஈசுருமுனி விகாரை:-**

ஈசுருமுனி விகாரை தேவநம்பியதீசனால் கட்டுவிக்கப்பட்டது. இது தீசவாவிக்குளத்திற்கு அருகாமையில் உண்டு. இவ் விகாரையினுள் வலது புறஞ் சரிந்த நிலையில் அரிதுயில் கொள்ளும் புத்த பெருமானியன் திருவுருவம் வர்ணம் தீட்டப்பட்டு மிகவும் கவர்ச்சி கரம் உள்ளதாய் விளங்குகின்றது. சுவர்களில் பெருமையை விளக்கும் சித்திரங்களும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு புத்த சமயம் வந்த வரலாற்றை விளக்கும் வர்ணம் தீட்டப்பட்ட அழகிய ஓவியங்களும், சிற்பக் சிலைகளும் உள்ளன. இங்கு காணப்படும் கைபிடி வரிசையில் யானையின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது.


இவ் விகாரையின் பக்கத்தே ஒரு தடாகம் உண்டு. ஒரு பக்கம் விகாரையுடன் பொருத்தப்பட்ட பெரிய கற்பாறை இருக்கின்றது. இக் கற்பாறையில் ஒரு பெரிய பிளவுண்டு. இப் பிளவின் இரு மருங்கிலும் யானைகளின் உருவங்கள் (கொத்துச் சித்திரங்கள்) மிக அழகுடன் அமைக்கப்பட்டுள்ளன.


இத் தடாகத்திற்கு எதிர்ப்புறமாய் உள்ள சுவரிலே ஒரு அரசு புருஷன் கம்பீரமான முறையில் இருப்பது போலவும், அப் புருஷன் வலது தோளுக்கு மேல் குதிரையின் தலைப்பகுதி செதுக்கப்பட்டிருக்கின்றது. இச் சிற்பத்தின் உட்பொருள் இன்னும் உள்ளபடி அறிந்து கொள்ளப்படவில்லை. இச் சிற்ப முறை கிபி 7ம் நூற்றாண்டில் இருந்த பல்லவ முறையை ஒத்திருப்பதாக கூறப்படுகின்றது.

இவற்றை விட **"காதலர் நிலை"** எனக் கூறப்படும் ஒரு சிலையும் உண்டு அதில் ஒரு புருஷனின் முகம் மென்மையானதாய் இல்லாது இருந்த போதும் அச் சிற்பம் கலை நுட்பம் நிறைந்ததென்றும் அது ஆறாம் நூற்றாண்டு சிற்ப முறையை தழுவி இருக்கின்றது என்றும் ஆராச்சியாளர் கூறுகின்றனர்.

இச் சிற்பம் ஈசுரு முனி விகாரைக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இன்னும் பல சிற்பங்கள் காணப்படுகின்றது. அரச குடும்பம், மாயாதேவியின கனவு என்புனவும் இங்கு காணப்படுகின்றது. இச் சிற்பங்கள் குப்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது.


தம்பதிகள் (காதலர் சிற்பம்)



யானைச் சித்திரங்கள்


மனித வடிவமும் குதிரைத் தலையும்
(போர் வீரனும் குதிரைத் தலையும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### அபயகிரி தாகபம்:-



அபயகிரி தாகபம் வலகம்பாகு என்னும் அரசனாற் கட்டுவிக்கப்பட்டது. அதன் உயரம் 350 அடி வேற்று நாட்டு புத்த பிக்குகள் சிலர் இத் தாகபம் இப் பெயருக்கு இணங்மாக அடைக்கலம் புகுந்தவர்களுக்கு அபயம் அளிக்கும் மலை போன்ற தாகபம் எனப் புகழ் மாலை சூட்டியுள்ளனர்.

அக் காலத்திலே அநுராதபுரத்து வீதிகளெல்லாம் சிறப்பாக அபயகிரி தாகபத்தை சூழ்ந்துள்ள வீதிகள் எல்லாம் யாத்திரிகர்களாலும், பூக்களாலும், வாசனத்திரவியங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்ததெனச் சீன யாத்திகள் பலவாறு புகழ்துரைத்துள்ளார்கள்.

### பிறிஸ்வதி தாகபம்:-




இத் தாகபத்தை துட்டகைமுனு கி.பி. 158ல் கட்டுவித்தான். இதன் மேற்கூம்பு போன்ற பகுதி பழுதடைந்த நிலையில் தான் இருக்கின்றது. இத் தாகபத்தை சுற்றிச் சிறு தூண்கள் காணப்படுகின்றன. அவை அக் காலத்தில் அங்கு வசித்த புத்த பிக்குகளின் வாகஸ்தலங்களில் எஞ்சியுள்ள பகுதிகள் என்று கருதப்படுகின்றது. இத் தாகபத்தை சுற்றி அழகிய சோலையுண்டு இப்போதுள்ள தாகபத்தின் உயரம் 52 அடி. 7 அங்குலம் ஆகும்.

## தாது கோபுரத்தின் அமைப்பு

தாது கோபம் மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது.

1. அடித்தளம்
2. அண்டம்
3. தூபி என்பனவாகும்.




அடித்தளத்துடன் முதலாம் வீதி அமைக்கப்பட்டுள்ளது. அவற்றை உள் வீதி என்றும் அழைப்பர்.

இவ்வீதியை சுற்றி சுவர் அமைக்கப் பட்டுள்ளது. இச் சுவரை வேதிகை என அழைப்பர்.

அண்டப் பகுதியை அடுத்து பேசாவளலு என மலர் வைத்து வணங்குவதற்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. அண்டம் பல வடிவங்களில் அமைத்துள்ளனர். மணி வடிவம் தானியக் குவியல் வடிவம், குடத்தின் வடிவம், நீர்க்குமிழ் வடிவம் என பல வடித்தில் காணலாம். அண்டத்தின் உட்பகுதி செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. அதன் மேல் சுண்ணாம்பு பூசப்பட்டுள்ளது இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அண்டத்தின் மேல் தூபி அமைக்கப்படும். தூபி ஐந்து அங்கங்களைக் கொண்டுள்ளது. இவ் அண்டத்தின் மேலுள்ள பகுதி ஹதரஸ் கொட்டுவ என அழைக்கப்படும் ஹதரஸ் கொட்டுவ என்பது சதுரக் கோட்டம் எனப்படும். சதுரக் கோட்டத்தின் மேல் தேவதா கொட்டுவ எனப்படும். அதன் மேலுள்ள பகுதி கோட்டம் எனப்படும். கோட்டத்தின் மேல் சத்த அல்லது கொத்கரல்ல அமைக்கப்படும் அதன் மேல் சிகரம் அமைக்கப்படும். சிகரத்தை **"கறல்ல"** என்றும் அழைப்பர். கோட்டப் பகுதி தொடக்கம் சிகரம் வரையுள்ள பகுதி உருளை வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

தாது கோபத்தின் அடிப்பாகத்திலுள்ள சுற்று விதியில் நான்கு வாசற்படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மரத்தினாற் செய்யப்பட்ட அலங்காரத் தோரணங்கள் இருந்ததாக கருதப்படுகின்றது. இவை கலை வனப்பு வாய்ந்தவை நான்கு திக்குகளிலும் நான்கு வாகல் கடங்கள் அமைக்கப்பட்டு வந்தன அனுராதபுரத்திலுள்ள மிரிசு வெதி தாது கோபத்திலும், கந்தக சைத்திய தாது கோபத்திலும் மிகப் பழமை வாய்ந்த வாகல் கடங்கள் காணப்படுகின்றன. அத்துடன் சந்திர வட்டக்கல், காவற் சிலை, துவாரபாலகர்கள், புங்கலசம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளது.

தளத்தின் உயரத்திற்கு தக்கவாறு படிகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு படியிலும் குட்டையான நகைச்சுவை பொருந்திய மனித வடிவங்கள் அல்லது மிருகங்கள், செதுக்கப்பட்டிருக்கும். சந்திர வட்டக்கல்லின் இரு பக்கங்களிலும் துவாரக பாலகர்கள் அல்லது பூரண கும்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும். படிகளில் இரு மருங்கிலும் கைப்பிடித்தேறுவதற்கு வசதியாக யாளி, யானை முதலிய மிருகங்களின் தலைகளையுடைய சித்திரக் கைப்பிடி வரிசைகள் அமைக்கப்படும்.

தாதுகோப வீதியில் அல்லது அண்மையில் புத்த தாதும் அவரின் சீடர்களதும் திருவடிவங்கள் வைக்கபட்ட விகாரைகளை பிலிமகே என அழைப்பர்.

## 13. தாது கோபுரத்தின் வடிவங்கள்




தானியக்குவியல் வடிவம் நீர்க்குமிழ் வடிவம் நெல்லிக்கனி வடிவம் மணி வடிவம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நீர்க்குமிழ் வடிவம் ரன்கொத்த விகாரை | - | (புலாகாரா) | - | பொலநறுவை, கிரிவிகாரை, |
| | | | (அனுராதபுரத்தின்) | - | றுவன் வெலிசாயவிகாரை |
| 2. | மணி வடிவம் | - | (கண்டாகாரா) | - | தூபராமதாது கோபம் |
| 3. | தானியக்குவியல் வடிவம் | - | (தாண்ணியகார) | - | களனி விகாரை |
| 4. | நெல்லிக்கனி வடிவம் | - | (அம்லாகாரா) | - | இந்தியாவிலுள்ள மருவிந்த |
| 5. | தாமரை வடிவம் | - | (பத்மாகார) | - | இந்தியாவிலுள்ள மருவித்த. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. தாதுகோபத்தின் வாயிற்படி மாதிரியொன்று



வாசல்கடை ஒன்றின் கற்பனைமுறை நிலைத்தோற்றம்

## 15. அனுராதபுரக் காலச் சந்திர வட்டக்கல்




அனுராதபுரக் காலத்திற்குரிய பல சந்திரவட்டக்கல் அனுராத புரத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன. அனுராதபுரக்காலத்தில் அமைக்கப்பட்ட சந்திரவட்டக்கல் குப்த மரபில் அமைக்கப்பட்டுள்ளது. நடுவில் அரைத்தாமரை வடிவத்தையும் அடுத்த வரிசையில் கொடி அலங்காரமும் அடுத்த வரிசையில் சொண்டினால் தாமரை மொட்டுக்கள் மூன்றைக் கவ்விக் கொண்டுள்ள அன்னங்களைக் கொண்ட அலங்காரமும், அடுத்த வரிசையில் யானை, குதிரை, சிங்கம், எருது ஆகிய மிருகங்கள் ஒன்றையொன்று துரத்துவது போலவும் இறுதி வரிசையில் தீச்சுடரும் காணப்படுகின்றது.

அனுராதபுக்கால சந்திரவட்டக்கல் ஏனைய கால சந்திரவட்டக் கல்லை விட மிக நேர்த்தியானவை அனுராதபுரத்தில் ராணி மாளிகையில் காணப்படும் சந்திரவட்டக்கல் மிகச் சிறந்தனவாகக் காணப்படுகின்றது. அனுராதபுரத்தில் ஸ்ரீமாபோதி விகாரை, றுவன்வெலிசாய, அபயகிரி ஆகிய விகாரைகளிலும் தலதாமாளிகை, பிசோமாளிகை ஆகிய இடங்களிலும் சந்திரவட்டக்கல்லில் கலை நுட்பம் சிறப்பாகக் காணப்படவில்லை. ஆனால் இராணி மாளிகையில் காணப்படும் சந்திரவட்டக்கல் கலைநுட்பம் பொருந்தியதாகவும் உயிர்த்துடிப்புள்ளதாகவும் நேர்த்தியானதாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. பொலநறுவைக்காலச் சந்திரவட்டக்கல்




பொலநறுவைக்காலச் சந்திரவட்டக்கல் அனுராதபுரக் காலச் சந்திரவட்டக் கல்லைவிட செதுக்கல்களில் சற்று வேறுபட்டதாகக் காணப்பட்ட போதிலும் தோற்றத்திலும், வடிவத்திலும் அனுராதபுரக்கால சந்திரவட்டக்கல்லுக்கு பெருமளவு சமனானது. ஆனால் பொலநறுவைக்கால சந்திரவட்டக்கல்லில் நடுவே அரைத்தாமரையும் அடுத்து கொடியலங்காரமும், அடுத்து 12 குதிரைகளைக் கொண்ட தனி வரிசையும் அடுத்து 14 யானைகள் கொண்ட தனி வரிசையும் அடுத்து 30 அன்னப்பட்சிகள் கொண்ட அலங்காரமும் இறுதியில் தீச்சுடரும் செதுக்கப்பட்டுள்ளன. எருது செதுக்கப்படவில்லை காரணம் சோழர்களின் ஆட்சி பொலநறுவையில் ஏற்பட்டதால் இந்து மதம் செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்து மதத்தவர்களின் புனித சின்னமாக எருது கருதப்படுவதால் வாசற்படிகளில் அவற்றை அமைப்பது பொருத்தமற்றதாகக் கருதப்பட்டது. சில இடங்களில் காணப்படும் சந்திரவட்டக் கல்லில் சிங்கத்தின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. பொலநறுவையில் காணப்படும் சந்திரவட்டக் கல்லின் மத்திய பகுதி அதன் ஏனைய பகுதிகளை விட சற்று உயரம் கூடியது.

அனுராதபுரக் கால சந்திரவட்டக்கற்களின் வரிசையில் இருந்த தீச்சுவாலை அலங்காரம் பொலநறுவைக்கால சந்திரவட்டக் கற்களில் உள் வரிசைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அலங்கார செதுக்கல்களுடன் கூடிய சில சந்திர வட்டக்கற்களில் உள் வரிசைக்கு பயன் படுத்தப்பட்டுள்ளது. அலங்கார செதுக்கல்களுடன் கூடிய சில சந்திரவட்டக்கற்கள் பொலநறுவைக்கால வேலைப்பாடுகளில் காணலாம். அவை பொலநறுவை வட்டதாகேயின் சந்திரவட்டக்கல் ஹாட்டதாகேயின் சந்திரவட்டக்கல் என்பனவாகும். பொலநறுவை வட்டதாகேயிலுள்ள சந்திரவட்டக்கல்லின் உருவங்களில் இடநெருக்கடி குறைவாகவே உள்ளது. இங்கு தீச்சுடர் வட்டத்தோடு உள்ள பகுதியில் அன்னப்பட்சி பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வரிசையில் இருப்பது ஒரு விலங்குருவமாகும். இங்குள்ள விலங்குகள் இடப்புறத்திலிருந்து வலப் பகுதிக்கு பயணம் செய்வதையும் காணலாம்.

பொலநறுவையின் அட்டதாகேயின் சந்திரவட்டக்கல்லின் வடிவம் அரைவட்டத்திலும் அதிகமானது. விலங்குருவங்களை நெருக்கமாக அமைத்துள்ளனர். யானை குதிரை சிங்கம் போன்ற உருவங்களும் மத்திய பகுதியில் சூலகம் அற்ற ஒரு தாமரை மட்டுமே உள்ளது. பொலநறுவையின் கிரிவிகாரையின் வடக்கு வாயிலில் உள்ள சந்திரவட்டக்கலின் செதுக்கல் எளிமையானவை.

## 17. கண்டியகாலச் சந்திரவட்டக்கல்




கண்டியகாலச் சந்திரவட்டக்கல், அனுராதபுரக் காலச் சந்திரவட்டக்கல், பொலநறுவைக்காலச் சந்திரவட்டக்கல் ஆகியவற்றில் இருந்து சற்று வேறுபட்டது. வடிவத்தில் சற்று முக்கோணவடிவம் உடையது சந்திரவட்டக் கல்லைச் சுற்றியுள்ள செதுக்கலின் உச்சியில் ஆரம்பமாகி இரு பக்கங்களிலும் அது முடிவுறும். சந்திரவட்டக்கல்லின் மத்தியிலுள்ள வட்டத்தின் இரு பக்கங்களிலும் இரு வட்டங்கள் சில சந்திரவட்டக் கற்களில் காணலாம்.

சந்திரவட்டக்கல் செதுக்கல்கள் யாவும் சோளக்கதிர் கொடித் தொடர் தாமரை இதழ்கள் என்பவற்றைக் கொண்டிருந்தாலும் கண்டி தலதா மாளிகையிலும் களனி விகாரையிலும் தவிர ஏனைய இடங் களிலுள்ள சந்திர வட்டக்கற்களில் விலங்குருவங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. சில சந்திரவட்டக்கற்களில் பயன்படுத்தப்பட்ட செதுக்கல்கள் கரடுமுரடானவை. கண்டிக்கால செதுக்கற் சிற்பிகள் சுதந்திரமாக தமது விருப்பப்படி புதியதோர் வடிவத்தில் சந்திரவட்டக்கற்களை செதுக்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டி தலதாமாளிகையில்
காணப்படும் சந்திரவட்டக்கல்

கண்டி தலதாமாளிகையின் வாசற் படியிலும், விஷ்ணு ஆலயத்தின் வாசற் படியிலும் காணப்படுகின்றது. இக் கல்லில் காணப்படும் அலங்காரங்களாவன லியவல (கொடியலங்காரம்), லியபத, பலா பெத்தி (தாமரை), மகரத்தின் முகம் என்பன மிகச் சிறந்த முறையில் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கண்டி தெகல் தொறுவ விகாரையின் சந்திர வட்டக்கல் மிகச் சிறந்ததாகக் காணப்படுகின்றது.



## 18. காவற்சிலை (அனுராபுரக்காலம்)

ஆரம்பகாலத்தில் விகாரைகளின் வாசல்களின் அரச மாளிகைகளின் வாசல்களிலும், இந்து ஆலய வாசல்களிலும் அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட காவற் சிலைகள் எவ்வித சிற்ப வேலைப்பாடுகளுமின்றிக் காணப்பட்டது அதற்குப் பின் கி. பி. 2ம் நூற்றாண்டில் புங்கலசம் அமைக்கப்பட்ட காவற்சிலை கதிர் காமத்திலுள்ள கிரி விகாரையிலும், வெல்கம விகாரையிலும், அனுராதபுரத்திலுள்ள தொல் பொருட்காட்சி சாலையிலும் காணப்படு கின்றன. அதன் பின் காவற் சிலைகளில் பைரவ உருவங்கள் (குள்ள மினிதர்கள்) அமைக்கப் பட்டிருக்கின்றது.

அனுராத புரத்திலுள்ள அபயகிரி விகாரையின் நுழை வாயிலில் அமைக்கப்பட்டிருக்கும் காவற்சிலை பைரவ உருவத்தால் மட்டும் அமைக்கபட்டிருக்கின்றது. அதன் பின்னால் பெரிய நாகத்தின் உருவம் காணப்படுகின்றது.

குளக்கட்டுகளிலும், நீர்த்தடாகங்களிலும் காவற்சிலை அமைக்கப்பட்டுள்ளது. அனுராதபுத்திலுள்ள குட்டம்பொக்குன தடாகத்திலும் பாம்பின் உருவத்தைக் கொண்ட காவற்சிலை காணப்படுகின்றது

ஆரியர் இங்கைக்கு வந்த பொழுது இங்கிருந்த நாகர் குலத்தைச் சேர்ந்தவர்களை காவலர்களாக வைத்தனர். பிறந்தகாலத்தில் அவர்களின் அடையாளங்களாக நாகத்தின் உருவம் காவற்சிலைகளில் அமைக்கப்பட்டது. அனுராதபுரத்தில் குட்டம் பொக்குண என்னும் இடத்தில் ஏழுதலை நாகத்தின் படத்துடன் காவற்சிலை காணப்படுகிறது. இறுதியாக மேற் கூறப்பட்ட வடிவங்கள் அனைத்தும் ஒருங்கே அமைக்கப்பட்ட காவற் சிலைகள் அனுராதபுரத்திலும், பொலநறுவையிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. அனுராதபுரத்தில் காணப்படும் இரத்தின பிரசாத என்னும் காவற்சிலை சிறந்து காணப்படுகின்றது. அத்துடன் தூபாராம விகாரைக்குச் செல்லும் நுழை வாயிலில் இரு காவற்சிலை சிறந்து காணப்படுகின்றது. ஸ்ரீமா போதி விகாரைக்குச் செல்லும் நுழை வாயிலிலும் சிறந்த இரு காவற்சிலைகள் காணப்படுகின்றன. அனுராதபுரக் காலத்து காவற் சிலைகள் மிக அழுத்தமாகச் செதுக்கபட்டிருக்கின்றது. அத்துடன் ஆடை, ஆபரணங்கள் அணியப்பட்டு இடது கையில் கலசமும், வலது கையில் தென்னம் பாளையும் தாங்கிய வண்ணம் அமைக்கப்பட்டிருக்கின்றது. தலையில் ஏழு தலை நாகத்தின் படமும், காலின் ஒரு பக்கத்தில் பைரவ உருவம் (குள்ள மனிதன்) செதுக்கபட்டுள்ளது. அனுராதபுரத்திலுள்ள இரத்தின பிரசாத காவற்சிலை மிகச் சிறந்த காவற் சிலையாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 11. காவற்சிலை (பொலநறுவைக்காலம்)


பொலநறுவைக் காலத்தில் அமைக்கபட்ட காவற்சிலைகள் வட்டதாகே, இலங்காதிலக, கிரிவிகாரை போன்ற விகாரைகளின் நுழை வாயில்களில் காணப்படுகின்றது. அனுராதபுரக் காலத்திலும் பார்க்க பொலநறுவைக் காலத்து காவற் சிலைகளில் அணிகலன்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. காவற் சிலைகளை அமைப்பதற்கு கருங்கல்லை ஊடாகமாகப் பயன் படுத்தியுள்ளனர். கண்டிய கால காவற் சிலைகளில் புங்கலசம் வாமண உருவம் காணபப்டவில்லை.

## 20. சிற்பத்தூண்கள் (போதிகை)

சிற்பத்தூண்கள் தாது கோபங்களின் சுற்று வீதிகளிலும் அறவோர் பள்ளிகளிலும் காணப்படும். நாற்சதுரத் தூண்கள், உருளை வடிவான தூண்கள் காணப்படுகின்றது. இவை அனைத்தும் கருங்கல்லினால் ஆக்கப்பட்டுள்ளன. இத் தூண்களின் போதிகைகளில் மிருக வரிசை அல்லது பூ இதழ் (தாமரை) வரிசைகள் காணப்படுகின்றது. இத் தூண்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.



சிற்பத்தூண்கள் (கல்)



சிற்பத்தூண்கள் (போதிகை)
பொலநறுவை

1. சிற்பத்தூண்கள்
2. சிற்பம் அற்ற தூண்கள்.

சிற்பமற்ற தூண்கள் நாற்சதுர தூண்களாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அழுத்தமற்றதாகக் காணப்படுகின்றது. இத் தூண்கள் சுவரின் உட்பகுதியில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அனுராதபுரக் காலத்திலும், பொலநறுவைக்காலத்திலும் சிற்பம் செதுக்காத பல தூண்கள் காணப்படுகின்றது.

சிற்பங்கள் செதுக்கப்பட்ட தூண்கள் வட்டதா மனை (வட்டதாகே) என அழைக்கப்படும். தூண்களுக்கு இச் சிற்பத் தூண்கள் பயன் படுத்தப்பட்டுள்ளது. மற்றும் மண்டபங்களின் விறாந்தைகளிலும் இச் சிற்பத் தூண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இத் தூண்களின் தலைப்பக்கம் சிற்பங்களால் செதுக்கப்பட்டுள்ளது. இத் தலைப்பக்கத்தில் தாமரைப் பூ, கொடி அலங்காரம், பலா பெத்தி போன்ற வடிவங்கள் செதுக்கப்பட்டு அதன் மத்தியில் வாமன உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளது. எண்கோண வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ள சிற்பத்தூண்கள் றுவன் வெலிசாய, தூபாராம, லங்காராம, மெதிரிகிரிய போன்ற விகாரைகளில் காணப்படுகின்றது.

பொலநறுவைக் காலத்திற்குரிய சிற்பத் தூண்களில் நிசங்கலதா மண்டபத்தில் காணப்படும் தூண்கள் நேராகக் காணப்படவில்லை. சற்று வளைந்த நிலையில் காணப்படுகிறது. தாமரைத் தண்டு போல் காணப்படும் இத் தூண்களில் இடையிடையே தாமரை இலைகள் செதுக்கப்பட்டிருக்கின்றது. இவ் வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ள தூண்கள் இலங்கையில் வேறெங்கும் காணப்படவில்லை.

கண்டிய காலத்தில் கருங்கற் தூண்கள் காணப்படவில்லை. மரத்தினால் செதுக்கப்பட்ட தூண்கள் காணப்படுகின்றது. அவ்விற்கு சான்றாக கம்பளை எம்பக்க தேவாலய தூண்கள், கண்டி மகுல் மடுவ தூண்கள் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. இலங்கையில் காணப்படும் புராதன சுவர் ஓவியங்கள்.

**அனுராதபுரக் காலம் :-**

அனுராதபுரக் காலத்தில் அனுராதபுரத்தை இராசதானியாகக் கொண்டு அரசாண்ட அரசர்கள் விகாரைகள் அரச மாளிகைகள் என்பவற்றை அமைத்து அவ் விகாரைகளிலும், மாளிகைகளிலும் பல ஓவியங்களை வரைவித்தார்கள்.

பௌத்த சமயத்தின் வருகையின் பின்னர் கலை வளர்ச்சியடைந்து காணப்பட்டது. பௌத்த சமயத்தின் வருகை ஓவியக்கலைக்குப் புத்தொளிகிடைத்ததெனக் கூறமுடியும். கி. பி. 3ம் நூற்றாண்டில் இரண்டாம் பாதிஸ்ஸ அரசன் காலத்திலிருந்து சித்திரத்தின் வரலாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆனால், அக் காலத்திற்குரிய ஓவியங்கள் ஒன்றும் இன்று காணப்படவில்லை அக் காலத்திற்குரிய லோவாமாபாய என்னும் விகாரைக்கு வரைபடம் ஒரு புத்த பிக்குவினால் வரையப்பட்டுள்ளது. அப் படத்தை ஓவியமாகத் தீட்டிக் கொடுத்தாரென மகா வம்சத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் காணப்படும் சிறந்த ஓவியங்கள் என்று கூறும் போது. மகிந்தனின் வருகைக்கு முன் இருந்து குகை ஓவியங்கள், அனுராதபுரக்கால, பொலநறுவைக்கால, கண்டிக்கால ஓவியங்கள் என வகைப்படுத்தலாம். இவ் ஓவியங்கள் அனைத்தும் அதிகமாக சமயத்தோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

மகிந்தனின் வருகைக்கு முன் இருந்த குகை ஓவியங்கள் அக்காலத்தில் குகைகளில் வாழ்ந்த மனிதர்கள் வரைந்த ஓவியங்களாகும் அவ்ஓவியங்கள் விலங்கு ஓவியங்களாகும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள அவ்வாறான ஓவியங்கள் காணப்படும் சில குகைகள்.

1. தந்திரிமலைக் குகை.
2. பிசில் கொட குகை.
3. இராஜ கல் கந்த குகை
4. கதுருக் குள குகை

**தந்திரிமலைக் குகை :-**

அனுராதபுர மாவட்டத்தில்லுள்ள தந்திரிமலைக்குகையில் கோடுகள் மூலம் அமைக்கப்பட்ட விலங்குகளின் உருவப்படக் குறிப்புகளாகும். சில விலங்குகளின் உருவப்படங்கள். நிறம் திட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இவ் விலங்குக் குறிப்புக்களில் சிவப்புக் கருப்புப் புள்ளிகளுள்ள புலியின் உருவமும் மனித உருவங்களில் அம்பு வில்லுடனுள்ள வேட்டைக் காரனின் உருவமும் காணப்படுகின்றன. அத்துடன் பசு, மயில், உடும்பு போன்றவற்றின் உருவப்படங்களும் உள்ளன.

இது போன்ற உருவங்களுள்ள மற்றுமொரு குகை. பிசில் கொட குகையாகும் இங்குள்ள உருவங்களில் ஆண்,பெண், உருவங்களும் முதலை மற்றும் பல்வேறு விலங்குகளின் உருவங்களும். அக்கால மக்கள் தேன் சேகரித்த வடிவினைக்காட்டும். உருவப்படங்களும் காணப்படுகின்றன.

**இராஜ கல் கந்த குகை.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் இராஜ கல் கந்த குகையில். முன், விலங்கு உருவங்களே காணப்படுகின்றன. ஆனால் இங்குள்ள ஓவியங்கள் தெளிவாகக் காணப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும். கதுருக்குளகுகையில் காணப்படும் உருவங்கள் பெரிதாக வரையப்பட்டுள்ளது. விலங்கு உருவங்கள் தட்டையாக நிறம் தீட்டப்பட்டு புள்ளிகள் இடப்பட்டுள்ளன. யானை, மாடு, மான் போன்ற மிருகங்களின் உருவங்கள் இனம் காணக் கூடியதாகவுள்ளது. விலங்குகளின் மேல் ஏறிச் செல்லும் மனிதர்களைக் காட்டும் உருவங்களும் வரையப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. அனுராதபுரக்கால ஓவியங்கள்

1500 ஆண்டுகளுக்கு மேற்கட்ட நீண்டகால எல்லையைக் கொண்ட அனுராதபுரக் காலம் இலங்கையின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். அனுராதபுரத்தை. இராசதானியாகக் கொண்டு பல அரசர்கள் பல இடங்களில் ஓவியங்களை வரைவித்துள்ளனர்.

அனுராதபுக்காலத்திற்குரிய கீழ் குறிக்கப்பட்டுள்ள இடங்களிலும். ஓவியங்கள் காணப்படுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சிதுல் பவ்வ | 2. | கரம்பகல | 3. | வெஸ்ஸ சிரிய |
| 4. | கோண கொல்ல | 5. | கொடியாகல | 6. | கொட்ட கல் கந்த |
| 7. | ஹிந்தகல | 8. | மிகிந்தலை | 9. | ருவன் வெலிசாய |
| 10. | மகியங்கனைத் தாது கற்சிகரம். | 11. | சீகிரியா | | |

1. **சிதுல் பவ்வ :-** திசமகாராம என்னும் இடத்திலுருந்து 15மைமில் தொலைவில் வனாந்திரத்தின் மத்தியில் இவ் விகாரை அமைந்துள்ளது. இங்கு காணப்படும் குகையில் பல ஓவியங்கள் காணப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் அவை தற்போது காணப்பட வில்லை. ஒரு சில உருவங்கள் தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றன. புத்தர் சிலை என்று எண்ணக்கூடிய ஒரு பக்கமாக. காவியுடையணிந்த இரு உருவங்களை ஓரளவு இனங்கான முடியும். ஒரு மானின் உருவமும் வீட்டு நிர்மாணத்திட்டப் படமும் இடைக்கிடை பார்வைக்குத் தென்படுகின்றன . இவை அனுராதபுரக் கால இருதிப் பகுதியில் செய்யப்பட்டிருக்கலாம் என்று நம்பப் படுகின்றன.

2. **கரம்பகல:-** அம்பலாத் தோட்டைக்கு அண்மையில் ரிதியகம என்னும் இடத்திலிருந்து அரைமைமில் தொலைவில் கரம்பகல குகை விகாரையில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்ததாக கூறப்பட்ட போதிலும். தற்போது ஓவியங்கள் காணப்பட வில்லை. போதிசத்துவரின் தலை பகுதியொன்றும். அப்சரா பெண் உருவம் ஒன்றும் மஞ்சிரி அவர்களால் பிரதிபண்ணப் பட்டதாக கூறப்படுகின்றது. இவ் ஓவியங்கள் கி.மு. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்றது. இவ் ஓவியம் கி.மு.5-7 நூற்றாண்டை உடையது என சேனக பண்டாரநாயக குறிப்பிடுகின்றார்.

3. **வெஸ்ஸ கிரிய :-**




வெஸ்ஸ கிரிய ஓவியங்கள்:- இது அநுராதபுரக் குகை விகாரையில் மிகவும் பழமைவாய்ததாகும் மகிந்த தேரர் உட்பட ஆரம்ப பௌத்த பிக்குகளுக்காக அமைக்கப்பட்ட குகை விகாரையாகக் கருதப்படு கின்றது இங்கு பல ஓவியங்கள் இருந்ததாக சான்றுகள் கிடைத்தாலும் தற்போது எஞ்சியுள்ள இரு ஓவியங்களை மட்டும் காணக்கூடியதாக உள்ளது. அமர்ந்திருக்கம் பெண்ணின் உருவத்தை பார்க்கும்போது மிகவும் மகிழ்சியான தோற்றத்தையுடைய அவள் தலைக் கிரீடத்தையும் நகைகளையும் அணிந்துள்ளாள். தலையில் பூவும் சூடியுள்ளால் மார்பு திறந்து காணப்படுகின்றது. இடைப் பகுதி ஆடை ஆபரணங்களால் மறைக்கப்பட்டுள்ளது.

மற்ற உருவம் ஒரு ஆணின் உருவமாகும். வானில் இருப்பது போன்ற நிலையில் காணப்படுகிள்றது தலையில் கிரீடமும் நகைகளும் அணிந்திருக்கும் இவ் உருவம். ஒரு பகுதிமட்டும் காணப்படுகின்றது. இவ் ஓவியங்கள் கி.பி. 5-7 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப் பட்டவை என்று கூறப்படுகின்றது. இவ் ஓவியங்களை பார்க்கும்போது சீகிரிய ஓவியங்களின் சாயல் வர்ணம் என்பன தென்படுகிள்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோனா கொல்ல:-



அம்பாறை மாவட்டத்தில் கோனா கொல்ல என்ற இடத்தில் அமைந்துள்ள குகையில் பல ஓவியங்கள் இருந்ததாகக் கூறப்பட்ட போதும் இன்று எஞ்சியிருப்பது. சிறிய ஓவியப் பகுதியாகும் இங்கு வணங்கும் நிலையிலுள்ள பெண் உருவம் ஒன்றும் போதிசத்துவரின் உருவம் எனக் கருதக் கூடிய உருவமும் காணப்படுகின்றது. இவ் உருவம் கலைத் தன்மையுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உடம்பு சந்தத்திற்கு ஏற்ப வளைந் துள்ளது. தலையில் கிரீடம் பல் வேறு நகைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அவளின் மார்பு மறைக்கப்படவில்லை. இடைப் பகுதி மெல்லிய ஆடையாபரணங்களால் மறைக்கப்பட்டுள்ளது. போதிசத்துவரிள் உருவத்தின் இடது கையில் நீண்ட காம்புடைய ஒரு தாமரைப் பூ இருக்கின்றது. இவ் ஓவியங்கள் கி.பி. 5-7 ஆம் நூற்றாண்டு காலத்துக்குரியது.


கொட்டியாகல குகை:-

இங்கு ஒரு சில ஓவியங்கள் மட்டும் காணப்படுகின்றது. அரைவட்டத்தின் மத்தியில் யானைக் குட்டியொன்று வரையப்பட்டுள்ளது. வட்டத்தை சுற்றி வெளிப்பக்கமாக தாமரைப் பூக்கள் காணப்படுகின்றன. இவ் ஓவியம். கி.பி.5-7ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் செய்யப்பட்டதாக நம்பப்படுகின்றது.

கொட்டகல் கந்த குகை:-

சீகிரியாவுக்கும் தம்புள்ளைக்கும் அண்மையில் கண்டமை என்ற இடத்தில் கொட்டகல் கந்த குகை காணப்படுகின்றது. இங்கு ஒரு பெண்ணுருவம் மட்டுமே எஞ்சியுள்ளது. அவளின் தோற்றம் தேவதையை ஒத்ததாக அமைந்துள்ளது. அழகிய தலை கிரீடத்தையும் நகைகளையும் அணிந்துள்ளாள். வலக்கையை முழங்கையால் வளைந்து நீண்ட காம்புடைய பூவொன்றைப் பிடித்துள்ளாள் கால்களை பின்னி அமர்ந்திருக்கும் அவள் கம்பீரத்துடன் காணப்படுகின்றாள். இது "தாரா" தேவதை எனக்கருதப்படுகின்றது. இந்த ஓவியம் கி.பி.5-7 ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியது. என்று நம்பப்படுகின்றது.

ஹிந்தகல விகாரை :-



கண்டியிலிருந்து 6மைல் தொலைவியில் அழகாள குன்றின் மீது இவ் விகாரை அமைக்கப்பட்டுள்ளது. 6-7ஆம் நூற்றாண்டு களுக்குரியது. கல் வெட்டுகள் காணப்பட்ட போதிலும் இவ் விகாரையின் வரலாறு அக்கல் வெட்டில் காணப்படவில்லை. 1918 இல் இங்கு 12 ஓவியங்கள் வரை இருந்ததாக கூறப்படுகின்றது. ஆனாலும் ஒரு சில மட்டுமே இன்று எஞ்சிக் காணப்படுகின்றது.

இங்குள்ள புத்தர் வடிவங்கள் இருவகையாகக் காட்டப்பட்டுள்ளது. தியான நிலையில் காணப்படும். புத்தர் அமர்ந்திருக்கும் ஆசனம் அழகிய வேலைப்பாடுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஆசனத்தின் காலடியில். புத்தரை வணங்கும் தேவ உருவம் உள்ளது இந்த தேவ உருவத்தின் கீழ் தேவர்கூட்டம் ஒன்று உள்ளது. பெண் உருவத்துடன் கூடிய இன்னுமொரு தேவர் கூட்டம் காணப்படுகின்றது. அவர்களுக்கு மேல் மறைந்து கொண்டிருப்பது பறவை சோடியாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் இந்திரன் புத்தரை வணங்குவதற்காக இந்திரஜால குகைக்கு வருகைதந்த சந்தர்ப்பம் காட்டப்பட்டுள்ளது என்பது பரணவிதான என்பவரின் கருத்தாகும். கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் கருத்தாக இருப்பது தேவ லோகத்தைப் படைத்த கர்த்தா பூலோக மக்களுக்கு ஞான உரை வழங்கும் காட்சி என்பதாகும்.

புத்தரின் தலையைச் சுற்றி ஒளி வட்டம் காட்டப்பட்டுள்ளது. இங்குள்ள ஓவியங்கள் முப்பரிமான தோற்றம் கொண்டது சீகிரியா பாங்கைக் கொண்டது. சீகிரியா நிறச் சம்பிரதாயங்களை பயன் படுத்தியிருந்த போதிலும். மஞ்சள் வர்ணம் அதிகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது உயர்ந்த தரமான ஓவியமாக மதிப்பிடலாம். இவ் ஓவியங்கள் கி.பி.7 ம் நூற்றாண்டுக்குரியது. எனக் கருதப் படுகின்றது.

## மிகிந்தலை ஓவியம்:-



அனுராதபுரத்தில் மிகிந்தலை கண்டக தாது கோபுரத்துக்கு கிழக்கே இத்தாது கோபுரம் அமைந்துள்ளது. இங்கு தேவர் கூட்டம் காணப்படுகின்றது. பிரதான உருவத்தைச் சுற்றி ஒரு கோட்டினால் வட்டமொன்று அடையாளமிடப்பட்டுள்ளது. இரு இடங்களிலும் நடு உருவத்தின் மத்தியில் குறுக்காக கோடுகள் குறிக்கப்பட்டுள்ளன. இங்கு காணப்படும் தேவர்கள் அனைவரும் ஆண்களாக காட்டப்பட்டுள்ளது. இவர்கள் மேகத்திலிருந்து வெளிப்படுவது போன்று காட்சியளிக்கின்றார்கள். கைகளில் நீண்ட காம்புடைய தாமரை பூக்களை வைத்திருக்கின்றார்கள். வெள்ளை நிறப்பின்னணியில் சிவப்பும், கருப்பும் வர்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளது இவ் ஓவியங்கள் 9 ஆம் நூற்றாண்டை சேர்ந்தது எனக் கூறப்பட்ட போதிலும். ஓவியத்தின். சாயல் சீகிரியா ஓவியத்தினதும் பொலநறுவை கால ஓவியத்தினதும் இடைப்பட்டதாக கருதப்படுகிறது.

## ருவன் வெலிசாய ஓவியங்கள்:-



இவ் ஓவியங்கள் அனுராதபுரத்திலுள்ள ருவன் வெலிசாய கடைவாயிலில் கிடைக்கப் பெற்ற ஓவியங்கள் இங்கு கிடைக்கப் பெற்ற ஓவியங்களில் மனிதத்தலையுடன் கூடிய பறவையொன்று தாமரை இலையென கருதக்கூடிய ஒரு இலையின் மேல் அமர்ந்திருக்கின்றது. தனித் தண்டில் ஆரம்பித்து பின்னர் கொடி, பூ, இலை, கொழுந்து, இதழ் என்பவற்றை விரித்துக் கொண்டு சுழன்று சுழன்று செல்கின்றது. சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.



இங்கு இன்னுமொரு ஓவியம் கிடைத்துள்ளது. குள்ள மனித உருவம் காணப்படுகின்றது. இக்குள்ள மனிதன் தோள் மீது வைத்துள்ள கோலை கைகளால் பிடித்துள்ளான். தலையில் தலைப்பாகை உண்டு. கழுத்தில் இரு முத்து மாலைகள் காணப்படுகின்றன. பின்னால் ஒரு தூணில் குறிப்பு உண்டு இந்த ஓவியம் கி. பி. 8ம் நூற்றாண்டிற்கு உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகியங்கனை தாதுகர்ப்ப ஓவியங்கள் :-

ஊவா மாகாணத்திலுள்ள மகியங்கனை ஸ்தூபி பிரசித்தி பெற்றது புத்தரின் முதலாவது இலங்கை விஜயத்தின் போது இவ்விடத்திற்கும் வருகை தந்தார் என்பது பௌத்தர்களின் கருத்தாகும் இங்குள்ள ஓவியங்கள் கி. பி. 1ம் நூற்றாண்டை விடப்பழமை வாய்ந்தன என்பது பரணவிதான என்பவரின் கருத்தாகும். இத்தாதுகோபுரத்தில் இருந்து ஓவியம் வரையப்பட்டிருந்த சுவர் கலவைகள் படையாக விழுந்து காணப்பட்டது. இவற்றை ஒன்று சேர்த்துப் பார்த்ததன் மூலம் சில ஓவியங்கள் இனங்கானப்பட்டுள்ளது. இவ் ஓவியங்கள் தற்போது அனுராதபுரத்திலுள்ள நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளன.



இங்கு வேறு சில ஓவியங்களும் காணப்படுகின்றது. அவற்றுள் முத்தி நிலையை அடைதல் என்ற ஓவியத்தை பார்க்கும்போது புத்தர் சிலைக்கு பின்னால் அரசமரம் காணப்படுகின்றது. புத்தரின் தலையைச்சுற்றி ஒளிவட்டம் காணப்படுகின்றது. புத்த பெருமானின் இருபக்கங்களிலும் வெண்மையான நீண்டதாடியும் மீசையும் உடைய உயர்ந்த இரு உத்தமர்கள் காணப்படுகின்றனர். இவர்களை இரு பிராமணர்கள் எனவும் சில அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இங்கு காணப்படும் இன்னொரு ஓவியம் சிவனுடையது எனக் கருதப் படுகின்றது. தலையில் கிரீடம் அணிந்து நான்கு கைகளையும் திரிசூலத்தையும் கொண்டுள்ள இவ்வுருவம் திரிபங்க நிலையில் அமைந்துள்ளது.





இங்கு காணப்படும் இன்னொரு ஓவியம் விஷ்ணு தெய்வத்தின் உருவம் என கருதப்படுகின்னறது. நான்கு கைகளைக் கொண்டது. இரு கைகளால் பூச்சாடியொன்றை பிடித்துள்ளது. உயர்ந்த தலைக் கிரீடத்தையும் நகைகளையும் அணிந்துள்ளது.

காவியுடையணிந்து தலையின் உச்சியில் கைகளை வைத்துக் கொண்டு யாத்திரை செல்லும் இன்னும் சில உருவங்கள் உண்டு இவற்றிற்கு மேலாக வானில் இருக்கும் விதமாக ஒரு வட்டத்தினுள் இன்னுமொரு உருவம் காணப்படுகின்றது. அதன் கையில் ஒரு வாளும் கேடயமும் உண்டு. இவ் உருவத்தின் மார்பு திறந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. இவ் உருவம் யமன் எனக்கருதப்படுகின்றது.

மகியங்கனை ஓவியங்களின் பாங்கு நிறம், கோடுகள் வடிவமைப்பு என்பன பொளனறுவை ஓவியங்களுக்கு ஒத்ததாக காணப்பட்ட போதிலும் இவை 2ம் நூற்றாண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்டிருக்கலாம் என பல அறிஞர்கள் கூறுகின்றனர் பயன் படுத்தப்பட்ட வர்ணங்களாக சிவப்பு, மஞ்சள், கறுப்பு, கபிலம், வெள்ளை போன்ற வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதுவும் மகியங்கனை ஓவியமாகும் நான்கு கைகளைக் கொண்ட இவ் உருவத்தில் ஒரு கையில் தாமரை மொட்டு காணப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. சீகிரியாச் சுவர் ஓவியங்கள்

பிரசித்திபெற்ற சீகிரியாச் சித்திரம் காணப்படும் குகையோடு மேலும் சில குகைகள் அங்கு காணப்படுகின்றன. அவற்றுள் முக்கியமான 3 குகைகள் பின்வருமாரு,

1. இருக்கைக் குகை
2. நாகபடக் குகை
3. சித்திரக் கூடக் குகை

இருக்கைக் குகையில் அலங்காரத் தாவரங்கள் விரிவாக வரையப்பட்டுள்ளதோடு வேறு ஒரு இடத்தில் கடவுள் உருவம் என்று எண்ணக்கூடிய மனித உருவம்மொன்றின் பாதிப்பகுதி காணப்படுகின்றது.

நாகபடக் குகையில் எஞ்சியிருப்பது பாவுகை வடிவமைப்பு அலங்காரப் பகுதியாகும். அவை மனதைக் கவரும் அலங்கார நிர்மாணங்களாகும். இவை விளிம்பு அலங்கார அமைப்பில் காணப்படுகின்றன. அரும்பு பின்னர் பறவை, உருவம் என்பனவும் இதில் காணப்படுகின்றன கேத்திர கணித வடிவத்தில் வட்டவடிவம், நீள்சதுரவடிவம் என்பன பயன்படுத்தப் பட்டுள்ளள.

சீலைக்கலையலங்காரம் நிரலை ஓடுவது போன்று அமைந்திருக்கும் சித்திரக் கூடக் குகை காணப்படுவது படுத்த நிலையில் இருக்கும் புத்த உருவத்தின் ஒரு பகுதியாகும். இங்கு பௌத்த ஓவியத் தொகுதி ஒன்றும் இருந்ததாக சான்றுகள் கூறுகின்றன. இக்குகைகளின் ஓவியங்கள் சீகிரியாக் குகையின் பெண் ஓவியங்களுக்கு முன்பு வரையப்பட்டிருக்கலாம். என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

நிரந்தரமான கால நிர்ணயம் செய்யக் கூடிய அநுராதபுரக் கால ஓவியங்கள் சீகிரியாக் குன்றின் கல் வெட்டூலம் கிடைத்துள்ளன. கி.பி.5 ம் நூற்றாண்டுக்குரிய இவ்வோவியங்கள் 1ம் காசியப்பன் அரசனால் செய்விக்கப்பட்டிருக்களாம். எனக் கருதப்படுகின்றது மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள சீகிரியாக் குன்று 600 அடிவரை உயரமானது சிங்ககிரி என்ற பெயரால் அழைக்கப்பட்ட இக்குன்றின் உச்சிக்கு ஏறுவதற்கான படிக்கட்டுகள் சிங்கத்தின் வாயினுடாக அமைக்கப்பட்டிருந்தன. அழகிய சூழலில் தனியாக நிமிர்ந்து நிற்கும் சீகிரியாக் குன்று பார்வையாளரின் மனதைத் தன் வசப்படுத்த கூடியளவு அழகிய காட்சியாக இருக்கின்றது.

சீகிரியாக் குன்றின் கீழ்ப்பகுதியில் அழகிய பூங்காவொன்றின் புராதன இடிபாடுகள் காணப்படுகின்றன. மனதைக் கவரும் குளங்கள் அரச மாளிகைகள், நீர் கால்வாய்கள், மதில்கள் போன்றவற்றால் சூழப்பட்ட சீகிரியாவின். அன்று காணப்பட்ட சிறந்த நிலை எஞ்சியுள்ள தொல் பொருள்கள் மூலம் வெளிக்காட்டப்படுகின்றது. அவ்வாறே 1ம் காசியப்ப மன்னன் சீகிரியாவை குபேரனின் அரச மாளிகையைப் போன்று அலங்கரித்தான். என்று கூறும் மகாவம்ச நூலாசிரியரின் கூற்றும் இதன் மூலம் உறுதிப் படுத்தப்படுகின்றது.

சீகிரியா ஓவியங்கள் 500வரை இருந்ததாக சுவர்க் கவிகள் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது ஆனாலும் இன்று அங்கு எஞ்சியுள்ளத சீகிரியாக் குன்றின் மேற்குச் சாய்வின் கல்லடி வாரத்தினுள் உள்ள மேலுடற் பகுதியைக் கொண்ட 12 பெண்களின் உருவங்கள் மாத்திரமாகும். இவை தனியுருவங்களாகவும். சோடியுருவங்களாகவும் காணப்படுகின்றன எல்லாத்தனியுருவங்களும் தெளிவான நிறங்களைக் கொண்டிருக்கின்றன ஆனால் சோடியுருவங்களிலுள்ள இருவரின் ஒரு பெண்ணுருவம் இருண்ட நிறத்தால் காட்டப்பட்டுள்ளது. அண்மைக்காலம் வரை 21 உருவங்கள் இருந்ததாக கூறப்படுகின்றது.

இப்பெண்கள் சிலர் மலர் தட்டுக்களை வைத்திருக்கின்றார்கள். இன்னும் சிலர் மலர்களை அசைத்துக் கொண்டும் அல்லது மலர்களைத் தூவிக்கொண்டும் இருப்பது போன்று காணப்படுகின்றனர். தங்க நிறப் பெண்களில் சிலர் நெஞ்சை மென்மையான உடையால் அலங்கரித்துள்ள விதத்தைக் காட்டுகின்றார்கள். எல்லோரினதும் இடைப்பகுதி ஆடையலங்காரங்களால் மறைக்கப்பட்டுள்ளது. அதிலும் ஒரு சிறு பகுதியே காணக்கூடியதாக உள்ளது. மற்றப் பகுதிகள் முகில்களால் மூடப்பட்டுள்ளன.

எல்லாப் பெண்களும் பெறுமதியான தலைக் கிரீடங்களை அணிந்துள்ளனர். பல ஆபரணங்களையும் அணிந்து காணப்படும் இப்பெண்களின் கைகளில் கை முத்திரைகள் காணப்படுகின்றன. எல்லாப் பெண்களின் உருவங்களும் முகில்களினுள்ளிருந்து வெளிப்படுவதாகக் காட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கு காட்டப்பட்டுள்ள சோடி உருவத்தைப் பாருங்கள். நாம் இவ் உருவம் பற்றி ஆராய்வோம் இங்கு இரு பெண்கள் உள்ளனர். இருவரும் இரு நிறங்களால் காணப்படுகின்றனர் முன்னாலிலுள்ள பெண் பளபளப்பானவள்.

அவளின் வலது கையில் தாமரை அல்லது நீரோற்பவ மலர் காணப்படுகின்றது. அவள் இடது கையால் அதை அணைத்துக் கொண்டிருக்கிறாள். அவளது புருவம் பக்கச் சாய்வாகக் காட்சி தருகின்றது. நெஞ்சு மென்மையான கச்சையால் மறைக்கப்பட்டுள்ளது. பின் புறமாக இருப்பவள் வலது கையில் பூக்கள் நிரம்பிய பாத்திரத்தை ஏந்தியிருக்கிறாள். அவளது நெஞ்சு கச்சையால் மறைக்கப்பட்டுளளது. மார்புக் கச்சையும் காட்டப்பட்டுள்ளது. அவளின் நிறம் இருண்டதாகும். அவள் சற்று முன்புறமாகத் திரும்பி நிற்பது போன்று காட்டப்பட்டுள்ளாள்.

இருவரும் ஆபரணங்களை அணிந்துள்ளார்கள். தலையலங்காரங்கள் அழகானவை. தலையில் பூச்சூடியுள்ளார்கள். வளையல்களில் மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன. முன்பு அவதானித்ததைப் போன்று இந்த ஓவியத்தையும் நன்றாக அவதானியுங்கள்



சீகிரியா ஓவியங்கள் சம்பந்தமான அறிஞர்களின் சில கருத்துக்களைக் கவனிப்போம்.

பேராசிரியர் செனரத் பரணவித்தான என்பவர் தங்கநிறம் தீட்டப்பட் மின் பெண்கள் (மாயப்பெண்) என்றும் நீலப் பெண்களை முகிற் பெண்கள் என்றும் அறிமுகப்படுத்தியுள்ளார்.

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி என்பவர் இவற்றிலிருந்து தேவதைகள் வெளிக்காட்டப்ப படுவதாகக் குறிப்பிடுகின்றனர். இக்கருத்தை பென்ஜமின் ரோலன்ட், கொட்ரின்டன் போன்றவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

மாட்டின் விக்கிரமசிங்க என்பரின் கருத்து நீர் விளையாடும் பெண்கள் வெளிக்காட்டப்படுவது என்பதாகும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியப்ப மன்னரின் இரு புதல்விகளான போதி உப்பலவன்னா போன்றவர்களின் பல வேடங்கள் வெளிக்காட்டப் படுகின்றன என்பது அபய ஆரியசிங்க என்பரின் கருத்தாகும்.

ஏச் .ஸீ. பீ. பெல் என்பவரின் கருத்து அந்தப்புர அரச குமாரிகளும், தோழிகளும் பூக்கள் எடுத்துக் கொண்டு அருகிலுள்ள பிதுரங்கல விகாரைக்குச் செல்கின்றனர் என்பதாகும். மேலும் கருத்துத் தெரிவிக்கும் பெல். தங்க நிறப் பெண்களைத் தோழிகளாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அறிஞர்களின் கருத்துக்களோடு சாதாரண கவிஞர்கள் மூலமும் இது சம்பந்தமான கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

சிகிரியா ஓவியருக்கு வரைவதற்குக் கிடைத்தது கடினமானன கருங்கற் பின்னணியாகும். ஓவியம் வரைவதற்கு முன்பாக ஓவியர் கல்லின் மேற் பகுதியில் ஒரு வகைக் கலவையைப் பூசி வெண்மையாக்கிய பின்பு ஓவியம் வரையப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இவர் ஒரு வகைக் கலவைக்கு களி, மணல், சுண்ணாம்பு, தும்பு, தேன், முட்டை, பசை போன்றவற்றை உபயோகித்திருக்கலாம் என கருதப்படுகின்றது அக் கலவை உலரமுன்பாக ஓவியம் வரையப்பட்டது இவ்வாறு ஈரமான கலவையில் ஓவியம் வரையும் முறை **"ப்ரெஸ்கோ புவனோ"** (ஈரச்சுதை ஓவியம்) என்றும் அழைக்கப்படுகின்றது, சீகிரியா ஓவியங்களை நீங்கள் கவனமாக அவதானித்திருந்தால் சில ஓவியங்களில் நேர்க் கோடுகள் முன்பு வரையப்பட்டது போன்றே இருப்பதைக் காணமுடியும். அவை அவ்வாறிக்கும் போதே ஓவியங்கள் நிறந்தீட்டப்பட்டுள்ளன ஈரமான கலவையில் வரையப்பட்ட தனாலேயே இக் கோடுகளை அழிக்க முடியாதுள்ளது எனக் கருதலாம்.

சீகிரியா ஓவியங்களின் நிறங்களைப் பற்றி பார்க்கும் போது. கடும்சிவப்பு, கருமஞ்சள், பொன்மஞ்சள், பச்சை கபிலம், கருப்பு என்பனவாகும் பச்சை வர்ணம் மிகக் குறைவாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. நிறங்கள் யாவும் உள்நாட்டு மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது இதற்காக கனிப் பொருட்களின் வளங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. விளாம் பழப் பசை, முட்டை வெண்கரு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள நிறங்கள் இன்றுவரை மாற்றமூறாமல் இருப்பதை கொண்டு ஓவியரின் நிறத்தயாரிப்புத்திறமை தெளிவாகின்றது.

இங்கு வரையப்பட்டுள்ள பெண்களின் உருவங்களை நன்றாக அவதானிக்கும் போது பரிமாண அளவு எழில் என்பவற்றைக் காட்டும்போது ஓவியரின் நுட்பத் திறன்கள் வெளிப்படுகின்றது. ஓவியங்களின் முப்பரிமாணத்தைக் காட்டும்போது ஒளிநிழல் சிறந்த முறையில் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் கருத்துக்களையும் வெற்றிகரமாகக் காட்டப்பட்டுள்ளது.

மங்கையரின் கண்கள் கயல் விழிகள் போலவும் நீண்ட மூக்கு, பனைத்த மார்பு, நீள் விரல்கள் நுண்ணிய இடை ஆகியன ஓவியத்தின் சிறப்பையும் ஓவியரின் திறமையையும் வெளிப்படுத்துகின்றன.

சீகிரியா ஓவியங்களும் இந்தியாவிலுள்ள அஜந்தா ஓவியங்களும் சில அம்சங்களில் ஒத்திருந்தாலும் அஜந்தா ஓவியம் உலர்சுதை முறையில் வரையப்பட்டுள்ளது. சீரியா ஓவியம் ஈரச்சுதை முறையில் வரையப்பட்டுள்ளதாலும் உள்நாட்டுப் பண்புகள் பிரதிபலிக்கின்றபடியாலும் உலகப் பிரசித்திபெற்ற ஓவியமாக திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. பொலநறுவைக்கால ஓவியங்கள்

பொலநறுவைக் கால ஓவியங்களைப் பற்றி அறிவதற்கு மூலாதாரங்களாக சூளவம்சம், கல்வெட்டுக்கள் தொல்பொருள் ஆராய்ச்சிகள் உதவுகின்றன. சூளவம்சம் பொலநறுவைக்காலம் சம்பந்தமான மிக முக்கிய மூலாதாரமாகும். 1ம் விஜயபாகு 1ம் பராக்கிரமபாகு நிஸ்ஸங்க மன்னன் போன்ற அரசர்கள் தமது ஆட்சிக்காலத்தினுள் பூர்த்தி செய்த நிர்மாணங்கள் பற்றிய விரிவான விளக்கம் அதில் காணப்படுகின்றது. நிஸ்ஸங்க மன்னனால் பல கல்வெட்டுக்கள் செய்யப்பட்டுள்ளன. பொலநறுவைக் கல் விகாரையிலும் ஏழடுக்கு மண்டபத்தின் அருகிலும் காணப்படும் கல்வெட்டுப் புத்தகம் என்றழைக்கப்படும் கல்வெட்டு இக்காலம் பற்றிய மிக முக்கியமான விடயங்களைத் தருகின்றது. இலங்கையின் இரண்டாவது இராசதானி பொலநறுவையாகும்.

பொலநறுவைக் காலத்திற்குரிய ஓவியங்கள் காணப்படும் இடங்கள்.

1. திவங்க ஆலயம் (மூவம்ச சிற்பக்கூடம்)
2. கல்விகாரை
3. இலங்காதிலக சிற்பக்கூடம்
4. திம்புலாகல கற்குகை.

## திவங்க ஆயலம்

மூவம்ச சிற்பக்கூடம் பொலநறுவையின் புராதன இடிபாடுகளின் காணப்படும் உயர்ந்த வீடமைப்பு நிர்மாண நுட்பங்களை வெளிப்படுத்தும் சிற்பக் கூடமாகும். இது முதலாம் பராக்கிரமபாகு அரசனால் செய்யப்பட்டது என்று சூளவம்சம் கூறுகின்றது இக்கூடம் வெளிவாயில், அந்தராடம், கருப்பக்கிரகம் என மூன்று பிரதான பகுதிகளை கொண்டிருப்பதால் திவங்க என்ற பெயர் பெற்றுள்ளது. இப்பகுதிகள் ஓவியங்களினால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மூவம்ச சிற்பக்கூட ஓவியங்களை நிர்மாணிக்கும் போது, நம்பக்கூடிய விதமான சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. அதாவது கூடத்தினுட் பிரவேசிக்கும் போது இருபக்கங்களிலும் புத்தரின் முற்பிறப்பு சம்பந்தமான குறிப்பு களடங்கிய புராணக் கதைகள் காணப்படுகின்றன அடுத்துள்ள அந்தராடத்தில் புத்தர் உருவங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ள ஓவியங்கள் காணப்படுகின்றன.


அடுத்து அங்குள்ள ஜாதகக் கதைகளைப் பற்றி ஆராய்வோம். அங்கு காணப்படும் சில ஜாதகக் கதைகள் கீழே தரப்பட்டுள்ளன. முதலாவதாக உட்பிரவேசிக்கும்போது வலது பக்கச் சுவரில் காணப்படுபவை.

1. ஆசங்கவதி ஜாதகம்
2. சச ஜாதகம்
3. விதுற ஜாதகம்
4. கல்லபத்ம ஜாதகம்
5. மைத்திரி பல ஜாதகம்

இடது பக்கச் சுவரில் காணப்படும் ஜாதக கதைகள்

1. தேமிய ஜாதகம்
2. பெரிய சுதஸ்ஸன ஜாதகம்
3. உம்மங்க ஜாதகம்
4. மகாமாயக் கனவு
5. கால கோல கதை

தேமிய ஜாதகக் கதை ஓவியத்தை பார்க்கும் போது அதில் இரு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டி காணப்படுகின்றது. வண்டிச்சாரதி வண்டியருகில் இருக்கின்றான். அவன் கையில் மண்வெட்டியுண்டு அவன் வண்டியில் சாய்ந்திருக்கும் தேமிய குமாரனைப் புதைப்பதற்கு ஒரு குழியைத் தோண்டுகின்றான். வண்டிச்சாரதியின் முன்னால் மீண்டும் காட்டப்பட்டிருப்பது மாறுவேடம் பூண்ட தேமிய குமாரனாகும். தன்னை உயிருடன் புதைப்பதை விரும்பாத இளவரசன் புத்தரின் வேடம் பூண்டு நிற்பதை ஓவியர் சிறப்பாகக் காட்டியுள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஓவியத்தின் பின்னணியில் பெரிய மரங்களடங்கிய காட்டுப் பிரதேசம் வரையப்பட்டுள்ளது. ஒரு விதமான பாங்கில் அமைக்கப்பட்டுள்ளது அவை பிற்கால கண்டியுகத்தின் மரங்களை ஒத்தவையாக உள்ளன. பின்னணிக் காட்சி அழகானதாகவும் கருஞ்சிவப்புப் பின்னணியின் தேவையான போது நிறங்கள் கடுமையாக்கிக் காட்டப்பட்டுள்ளன.

இங்குள்ள புத்தர் உருவம் உயர்தரமான பண்புகளை காட்டுகின்றன. வண்டிச்சாரதி கடும் நிறத்தால் காட்டப்பட்டுள்ளது. அவனின் தலைமயிர்கள் உயரமான முறையில் வட்டமாகக் காட்டப்பட்டுள்ளன. தொடைகள் அரைவாசி மறையும் வண்ணம் சிறு துணியை அணிந்துள்ளான். இரு குதிரைகளும் மிக அழகான முறையில் அலங்கரித்துக் காட்டப்பட்டுள்ளது.

அடுத்ததாக கல்லபத்ம ஜாதகக் கதையை பார்க்கும் போது இதில் இடது புறத்தில் வீற்றிருக்கும் அரச உருவம் ஒன்றை ஒத்த உருவம் காணப்படுகின்றது. தலையாபரணம் கிரீடத்தை யொத்ததாக உள்ளது. இவ் உருவத்தின் அருகில் ஏதோ சொல்லும் பாவனையுடனுள்ள பெண் உருவம் உண்டு. அவளின் பின் புறம்பாக இன்னும் இரு உருவங்கள் வரையப்பட்டுள்ளன. ஒன்று பெண் உருவமாகும். அவளின் தோளின் மீது சுமந்தபடி கால்களை இழந்த காதலனின் உருவமாகும். இவ் உருவத்திற்குப் பின்னால் நீண்ட தாடி மீசையுள்ள வயோதிபரின் உருவம் வரையப்பட்டுள்ளது. அவன் தனது இரு கைகளாலும் ஏதோவொன்றைப் பெற்றுக் கொள்கின்றான். ஒரு கையால் அவனுக்கு பொருளைக் கொடுக்கும் பெண் உருவம் வரையப்பட்டுள்ளது. கீழே கூறப்பட்டுள்ள இரு ஓவியங்களும் முறையே ஒன்று இரண்டு எனக் காட்டப்பட்டுள்ளது.



1.



2.

இவ் இரு ஓவியங்களினதும் சித்திர இயல்புகளைப் பற்றி பார்க்கும் போது கடும் சிவப்பு நிறம் இதன் பின்னணியாக காட்டப்பட்டுள்ளது. முப்பரிமாணத் தோற்றத்தில் காணப்படும் இவ்வோவியங்கள் ஒவ்வொரு உருவத்திலும் வெளிக்கோடு காணப்படுகின்றது. இக்கோடுகள் சிவப்பு சார்ந்த செங்கபில நிறத்தால் அமைக்கப்பட்டுள்ளது. மனித உருவங்களில் சந்தம், எழில் என்பன சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. பெண் உருவ அமைப்பில் மெல்லிய இடை காட்டப்பட்டுள்ளது.

அடுத்து உட்கூடத்திலும் கர்ப்பகிருக வீட்டிலும் காணப்படும் பின்வரும் இரு ஓவியங்களைப் பற்றி ஆராய்வோம்.

1. தெய்வ அழைப்பு
2. புத்தர் சங்கிஸ்ஸபுரத்துக்கு வருகைதரல்.

முதலாவதாக தெய்வ அழைப்பு எனப்படும் அந்தராகூடத்தின் வலது பக்கச் சுவரிலுள்ள ஓவியம் பற்றி நோக்குவோம்.

இங்கு தேவர் கூட்டமொன்று காணப்படுகின்றது. சித்திரத்தின் மேற்பகுதி அதிகமாக அழிந்த நிலையில் காணப்படுகின்றது. கீழ்ப்பகுதியும் உடைந்து வெடித்த நிலையில் காணப்படுகின்றது. தேவர் கூட்டத்திற்கு மத்தியில் புத்தர் வீற்றிருக்கின்றார். சிலர் அவரை வணங்கிக் கொண்டிருக்கின்றனர். தேவர்கள் பல குழுக்களாகக் காட்டப்பட்டுள்ளது. ஓவியத்தின் மேற்பகுதியில் கோல்களைக் கையிலெடுத்த பரிவார உருவங்கள் காணப்படுகின்றன. கூம்பு வடிவமான தலைக்கிரீடங்களாலும் ஆபரணங்களாலும் அவர்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளார்கள். திறந்த நெஞ்சுடைய அவர்களின் இடைப்பகுதி அழகான துணியினால் மறைக்கப்பட்டுள்ளது இவர்கள் முகில்களிலிருந்து வெளிப்படுவது போன்று காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தத் தேவர் கூட்டத்துக்குக் கீழே அது போன்ற தலைக் கவசங்கள் அணிந்த நீள்வடிவமான ஒளிவட்டங்களைக் கொண்ட மற்றுமொரு தேவர்கூட்டம் இருக்கின்றது. இங்கு ஒரு ஓவியத்தில் விசேட தன்மையைக் காணலாம். இது நீல நிறத்தை சார்ந்த நரை நிறத்தால் பூசப்பட்டுள்ளது.

மேற் கூறப்பட்டுள்ள ஓவியங்களுக்கு அடுத்தாக இன்னுமொரு ஓவியம் காணப்படுகின்றது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தபெருமான் தவுஸிதா தேவலோகத்திலிருந்து சங்கிஸ்ஸ புரத்தில் இறக்கும் விதம் காட்டப்பட்டுள்ளது. இங்கு மூன்று ஏணிகள் காணப்படுகின்றன. மத்தியிலுள்ள ஏணி பெரியது அதில் புத்தபெருமான் இறங்குகின்றார். புத்தரின் உருவம் முப்பரிமாணத் தோற்றத்தில் காட்டப்பட்டுள்ளது. அவரின் வலது கை அபய முத்திரையில் காட்டப்பட்டுள்ளது.



இந்திரனும் பிரமணும் மற்ற ஏணிகளில் காட்டப்பட்டுள்ளார்கள். இந்திரன் நீண்ட பிடியுடைய குடையொன்றைப் புத்தபெருமானிடம் கொடுக்கின்றார். இந்திரனின் தலைக்கீரிடம் மிகவும் அழகானது. தலையைச் சுற்றி வட்ட வடிவமான ஒளி வட்டம் உண்டு. பிரமனின் கையில் பூவொன்று உண்டு அருகில் சில தேவ உருவங்கள் காணப்படுகின்றன.

இவற்றின் சித்திரக் கலைப் பண்புகளைப் பற்றி பார்க்கும் போது உருவ நிர்மாணிப்பும் கருத்து வெளிப்பாடும் உயர்தரமானதாகக் காணப்படுகின்றன. மஞ்சள் கலந்த சிவப்பு நிறம் அதிகமாக உபயோகிக்கப்பட்டுள்ளது.

அதில் கடும் நிறத்தால் இருள்காட்டப்பட்டுள்ளது. மஞ்சள் நிறத்தைக் கொண்டு உடல் வெளிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.



மேலும் பல ஓவியங்கள் திவங்க ஆலயத்தில் காணப்படு கின்றது. சச ஜாதக கதையில் இந்திரன் சந்திரனில் முயல் வரையும் காட்சி ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

மற்றுமொரு ஓவியமாக காதலர்கள் ஐக்கியத்தைக் காட்டும் ஓவியமும் காதலனின் பிரிவு என்னும் ஓவியத்தில் பெண் காதலனின் பிரிவாற்றாமையை நினைத்து மானுக்கு உணவூட்டும் காட்சி வரையப்பட்டுள்ளது. இங்கு மூன்று ஏணிகள் காணப்படுகின்றன. மத்தியிலுள்ள ஏணி பெரியது. அதில் புத்தபெருமான். இறங்குகின்றார். புத்தரின் உருவம் முப்பரிமாணத் தோற்றத்தில் காட்டப்பட்டுள்ளது. அவரின் வலது கை அபய முத்திரையில் காட்டப்பட்டுள்ளது.

## 25. கல்விகாரை ஓவியங்கள்



அங்கு நிலையான தனிக் கல்லைக் குடைந்து செய்யப்பட்டுள்ள குகை வித்தியாதாரக் குகை (மாயா ஜாலக் குகை) எனப்படுகின்றது. இங்கு சுவர் ஓவியங்களில் எஞ்சியிருப்பது குகையின் இரு பக்கங்களிலுமுள்ள நிரல்களிலாகும். ஆனாலும் குகைபூராகவும் ஓவியங்கள் காணப்பட்டதற்கான சான்றுகளாக இருப்பது சுவர் முழுவதும் உள்ள சீமெந்து கலவைப் பகுதியாகும்.

இப்போது எஞ்சி இருக்கும் 6 x 1 அடி அளவான ஓவிய நிரல் பற்றி கவனிப்போம்.

வித்தியாதாரக்குகை (மாயாஜாலக்குகை) யின் வலப்பக்கச் சுவரின் ஓவியமாகும். அதை நன்றாக அவதானியுங்கள் அதன் மேற்பகுதியில் நீண்ட தாடி மீசையுடைய சிறப்பாக வயோதிப ஆண் உருவம் உள்ளது. அவரின் நெற்றிப் பகுதி பரந்தது. மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசையும் காணப்படுகின்றது. கம்பீரமான தோற்றம் அவரின் வலது கையில் நீண்ட காப்புடைய பூவொன்று உள்ளது. மார்புப் பகுதி மறைக்கப்படாமலும் தலையாபரணமும் பூநூலும் அணிந்துள்ளார் இவ்வுருவம் முனிவர் என்றும் பிராமணனின் உருவம் என்றும் கூறுகின்றனர்.

இன்னுமொரு தேவ உருவம் உள்ளது உயர்ந்த தலைக் கிரீடத்தாலும் ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. தேவ உருவம் இளமையான தோற்றத்தைக் காட்டுகின்றது. தலையைச் சுற்றி வட்ட வடிவமான வெண்ணிறமான ஒளிவட்டம் உள்ளது. நெஞ்சுப்பகுதி மறைக்கப்படாமலும் இடைப்பகுதி ஆடை ஆபரணங்களால் மறைக்கப்பட்டும் காணப்படுகின்றது. இவ் உருவத்திற்குக்கீழ் இன்னும் சில தேவ உருவங்கள் காணப்படுகின்றன.

கல்விகாரையின் வித்தியாதாரக் குகையில் புத்தர்சிலை வஜிராசனத்தின் மேல் குடையின் கீழ் வீற்றிருக்கின்றார். இரு பக்கத்திலும் சாமரை வீசும் இருவர் காணப்படுகின்றனர். அவர்களுக்கருகில் இருபக்கத்திலும் நிற்கும் இரு உருவங்கள் உண்டு மேலே வட்டவடிவான தேவர் கூட்டம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. குகை முழுவதும் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கருத்து தெரிவிக்கும் பரணவிதான என்பவர் தேவ பிராமணன் புத்தரை வழிபடும் காட்சி இதில் காட்டப்படுவதாக கூறுகின்றார்.

வித்தியாதாரக்குகை ஓவியங்கள் திவங்க ஆலய ஓவியங்களின் அம்சங்கள் காணப்படுவதுடன் சம காலத்திற்குரியதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.



கல் விகாரையில் வித்தியாதாரக் குகையில் புத்தர் சிலைக்குப் பின்னால் சாமரை வீசும் இவ் உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

## 26. இலங்காதிலக சிற்பக்கூடம்

இங்கு காணப்படும் ஓவியங்கள் திவங்க ஆலய ஓவியங்களின் முறையில் வரையப்பட்டுள்ளது. தெற்குப்பக்க வாசற்பக்கம் மட்டும் ஒருசில ஓவியங்களின் கோடுகள் சமய சம்பந்தமானவையாக இல்லை. இவை ஒருவகை அலங்கார வடிவங்களாகக் காணப்படுகின்றது. இலை, பூக்களைக் கொண்டு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. இப்படிச் செய்யப்பட்ட அலங்கார வடிவங்கள் நான்கு காணப்படுகின்றது. இதில் கின்னரப் பெண் உருவமும் காணப்படுகின்றது. இதன் மேற்பகுதியில் மனித உருவமும் கீழ் பகுதியில் பறவை உருவங்களும் காணப்படுகின்றன.

இலங்காதிலக விகாரையில் சுவர் ஓவியங்களில் தேவ உருவங்கள். பிராமணனின் உருவங்கள் சில காணப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் அவை தற்போது காணப்படவில்லை.

மஞ்சள், சிவப்பு நீலம் ஆகிய வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கல்பிந்துவ, சீப்பு அலங்காரம் அரும்பு சவடி போன்ற அலங்காரங்களின் எச்சங்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. திம்புலாகல கற்குகை சுவர் ஓவியங்கள்

முதலாம் இலக்க குகையில் வலது பக்கச் சுவரில் மிகுதியாகவுள்ள ஓவியப் படையொன்று உண்டு புத்தர் தியானித்துக் கொண்டிருக்கும் காட்சி இதன் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றது. அவரின் பின்னால் அரைவட்ட அலங்கரிப்பொன்றுண்டு. ஒளி வட்டமும் காட்டப்பட்டுள்ளது.

புத்தர் உருவத்தின் இடது பக்கத்தில் வணங்கும் நிலையைக் காட்டும் மூன்று உருவங்கள் உள்ளன. இவற்றின் மார்புப்பகுதி மறைக்கப்படாமலுள்ளது இவ்வுருவங்கள் பிக்குகளின் உருவங்களாகக் கருதப்படுகின்றன. வலது பக்கத்திலும் மூன்று உருவங்கள் உள்ளன. ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இவ்வுருவங்கள் தேவ உருவங்கள் எனலாம்.

ஓவியத்திலுள்ள நிறங்கள் மங்கிக் காணப்படுகின்றன. என்றாலும் புத்தர் உருவத்தில் சிவப்பு நிறம் சார்ந்த பகுதிகளும் பின்னணியிலுள்ள பச்சை நிறமும் எஞ்சியுள்ளன. இது போன்ற இன்னுமொரு புத்தர் உருவம் இக்குகையில் காணப்படுகின்றன. இவை கி.பி 12ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. இங்குள்ள மற்றுமொரு ஓவியத்தில் அன்னப்பறவை அலங்கரிப்புக் காணப்படுகின்றது. இது மிகவும் அழகானது. சுவரின் மேற்பக்க மூலையில் வரையப்பட்டுள்ள இவ் ஓவியத்தின் நிறங்கள். மங்கிப் போ யிருப்பதுடன் வெளிக்கோடுமட்டும் எஞ்சி காணப்படுகின்றது.



இரண்டாம் இலக்க குகையில் யானையில் உருவம் காட்டப்பட்டுள்ளது.

அலங்கரிக்கப்பட்டுள்ள யானை தும்பிக்கையை உயர்த்தி வணங்குவது போன்ற காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. சிறந்த உடற் தோற்றமுடைய ஒரு இளவரசன் என்று கருதக்கூடிய ஒரு ஆண் உருவமும் காணப்படுகின்றது. அது தெளிவற்றது. அது யானையின் தும்பிக்கையை பிடித்துக் கொண்டிருக்கின்றது. வலது பக்கமாக ஒரு கூட்டம் காணப்படுகின்றது. இது வெஸ்ஸன்தர ஜாதகக் கதையைப் பிரதிபலிக்கின்றது என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

இதன் பின்புறமாக இக் குகையில் மற்றுமொரு ஓவியம் காணப்படுகின்றது. இதில் சீஸ ஜாதகக் கதை விளக்கப்படுகின்றது. சக்தேவன் என்னும் அரசன் முயலின் உருவத்தை சந்திரனில் வரையும் முறை காட்டப்பட்டுள்ளது. சக்தேவன் எனும் அரசனின் உருவம் மனதைக் கவரக்கூடியதாயுள்ளது. தலைக்கிரீடம் கூம்பு வடிவமானது. நகைகளை அணிந்துள்ள தோடு பூனூலும் காட்டப்பட்டுள்ளது.

ஐரோப்பிய சித்திர சிற்பக்கலையில் வீனஸ் உருவத்திற்கு உயர்ந்த தரம் கிடைக்கிறது. தென்னிந்திய பொலன்னறுவை உலோகச் சிற்பக்கலையில் "பார்வதித் தெய்வச்" சிலை விசேட இடத்தினைப் பெறுகின்றது.

உலோகப் பார்வதிச் சிலைகள் பல பொலன்னறுவையில் காணப்பட்டிருக்கின்றன. திருகோணமலைப் பிரதேசத்தில் காணப்பட்ட பார்வதி சிலை மிகவும் அழகு பொருந்தியது. உமையம்மை அல்லது பார்வதி தெய்வம் பற்றிய பல அழகான கதைகள் உண்டு. உமையம்மை பொன்னிரமான தாமரை மலரில் பிறந்தாள். ஹிமாலய மலைச்சாரலில் அரசரிடம் வளாந்தததால் அவள் மலையின் மகள் என்ற கருத்துடன் பார்வதி எனப் பெயர் சூட்டப்பட்டாள். நின்ற நிலையிலும் இருந்த நிலையிலுமான பார்வதி சிலைகள் உள்ளன. பொலன்னறுவை சிவ தெய்வத்தலம் இலக்கம் 2க்கு அருகில் கிடைத்த பார்வதி சிலை 'மாணிக்கம் ' முத்து என்பன பதிக்கப் பெற்று மணிமுடியும். மாணிக்க மாலைகளும் அணியப் பெற்றுக் காணப்படுகின்றது. இடக்கையை வளைத்து ஏதோ முத்திரையை வெளிப்படுத்துவதோடு வலக்கை கீழே தொங்க விடப்பட்டு மனங்கவர் அழகினை வெளிப்படுத்துகின்றது. இது காவிய மங்கையர்களின் இலட்சணங்களை வெளிப்படுத்துகிறது. முழுச்சீரமும் ஆபரணங்களக்கிடையே சீர அமைப்பு வெளிப்பாட்டுத் தெரியக்கூடிய விதமாக இருப்பதும் கண்களைப் பறிக்கின்ற கவர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலோகச் சிலைகளுள் மிக முக்கிய இடம் பெறும் சிவ பார்வதி சிலை சோடியாக ஆக்கப்பட்டிருக்கின்றது. சிவதெய்வத்தின் பத்தினி பார்வதித் தெய்வமாகும். கிரேக்க சிலைகளுள் அப்பலோவீனஸ் போல இந்திய உலோகச் சிலைகளுள் சிவன் பார்வதி சிலை ஆக்கப்பட்டிருக்கிறது. பிரசித்தி பெற்ற சித்திரக் கலைஞன் ஸ்டான்லி அபேசிங்க அவர்கள் கருத்துப்படி பாரத இலக்கியத்தின் பிரேமைச் சரிதம் சிவ பார்வதி ஆக்கங்களுடன் பெருமளவு தாக்கமடைந்துள்ளது. ஆண்மையும், பெண்மையின் எழிலும் அன்பும் சிலையாக்கப்பட வேண்டிருந்ததால் இந்தச் சோடிச் சிலைகள் மனதினைக் கவரும் வண்ணம் ஆக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் கொனாறக், பஜ்ஜீராவோ தெய்வத் தலங்களில் சிவ பார்வதி சோடிக் சிலைகள் ஆக்கப்பட்டுள்ளன. பொலன்னறுவையில் காணப்படும் உலோகச் சிலைகளில் காணப்படும் விசேடத்துவம் நாட்டிய அபிநயங்களுடன் கூடிய சந்தம் பெற்றிருப்பதாகும். சீரம் வளையுமளவுக்கு ஆபரணமணிந்திருப்பது மற்றொரு இலட்சணமாகும். கண்கள் திறந்த விதமாக உள்ளன. தெய்வ ரூபங்களின் பொதுத்தன்மை இது. சிற்ப அம்சங்களில் தென்னிந்திய உலோகச் சிலைகள் பொலன்னறுவை உலோகச் சிற்பங்களுக்குச் சமனானவையாகக் காணப்படுகின்றன.

## நடராஜர் சிலை



"சிவ வடிவம்" என அழைக்கப்படும். நடராஜ மூர்த்தி சைவ சமயத்தின் படி பிரபஞ்சத்தின் தன்மையை வெளிப்படுத்தும் சிறப்புமிகு ஆக்கமொன்றாகக் கருதப்படுகின்றது. ஆராய்ச்சிக் கருத்தின்படி சிவனது நடனத்தின் மூலம் பிரபஞ்சத்தின் இயக்கவலு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும் இச்சிலை மூலமாகப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய பஞ்ச கிருத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. சிவனுக்குக் கைகள் நான்கு, இடக்கையில் உடுக்கை, அது படைத்தலைக் காட்டுகின்றது. வலக்கையில் அக்கினி அது அழித்தலைக் குறிக்கின்றது. இடக்கையின் அபய முத்திரை காத்தலைக் குறிக்கின்றது. வலக்கையினால் காட்டப்படும் சின்முத்திரை அருளலைக் காட்டுகின்றது. இடக்காலினால் வாமன வடிவுடைய முயலகனை மிதிந்து நிற்கின்றார். அது மறைத்தலைக் குறிக்கின்றது. கழுத்தில் மாலை, பூணூல் தரித்திருக்கிறார். இடுப்பில் அரைஞாண், உத்தரீயம் நடனவேகத்தை வெளிப்படுத்துகின்றது. இந்த அபிநயங்களுடன் ஆபரணகளுடனும் அலங்கரிக்கப் பெற்று நெருப்பின் மத்தியில் சிவன் ஆடுகிறார். "திருவாசி" என அழைக்கப்படும் சோதிப்பிளம்பு, வட்டம் இயற்கையைப் பிரதி பலித்துக் காட்டுகிறது,

நடராஜ சிலை வெளிப்படுத்தும் அங்கங்களின் குறியீடுகள் 13 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தினித் தெய்வம் அல்லது தாராதேவி



பொலன்னறுவை உலோகச் சிற்பங்களுக்கிடையில் உயர்ந்த இடத்தைப் பெறும் மற்றொரு சிலை இது. திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களுக்கிடையில் கண்டெடுக்கப்பட்ட இந்த உலோகச் சிலை பத்தினித் தெய்வம் அல்லது தாராதேவி எனப் பெயர் பெற்றது. இந்தப் பெறுமதி மிகு சிலை பிரவுன்றிக் தேசாதிபதியவர்களால் பிரித்தானிய நூதனசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. அதன் மாதிரி உருவம் ஒன்று கொழும்பு நூதனசாலையில் காணப்படுகிறது. ஆபரணங்கள் அணிவிக்கப்பெறாத எளிமையான அம்சங்களுடன் கூடிய இந்தச் சிலை பெண் அழகின் உச்சமாகும். பத்தினித் தெய்வத்தினைப் பற்றிய புனை கதைகளும், குணக்கதைகளும் பாடல்களும் ஏராளம் உண்டு. அவற்றின் உதவியுடன் பத்தினித் தெய்வத்தின் சிலையை அமைக்க கலைஞர்கள் தூண்டப்பட்டார்கள் எனக் கூறலாம். இரு கைகளினாலும் காணப்படும் முத்திரைகள் பதிவிரதத்தினையும் பெண் குணாம்சங்களையும் வெளிப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. எளிமையான ஆடை, உடலுடன் ஒட்டிய விதமாக காட்டப்பட்டுள்ளதோடு சரீரத்தின் தோற்றம் இதனால் நன்கு வெளிக்காட்டப்பட்டிருக்கின்றது. மென்மை யழகும் எழிலும் வெளிப்படுகிறது.

### கல்லினாலும் சாந்தினாலும் ஆக்கப்பட்ட சிலை வடிவங்கள்

செங்கற்களாலும் பொலன்னறுவைச் சிற்பக் கலைஞர்கள் சிலைகள் ஆக்கினார்கள் என்பதனையும் இன்று உள்ள எச்சங்களும் சிதைவுகளும் வெளிப்படுத்துகின்றன. அன்று செங்கல் உபயோகித்து பல சிலைகள் செய்யப்பட்டன. என்பதில் ஐயப்பாடேதும் இல்லை. எதிரிகளின் தொல்லைகளாலும் காலப்போக்கினாலும் அவைகள் சிதைந்தழிந்திருக்கலாம். இப்பொழுது எஞ்சியுள்ள செங்கல் சிலைகளுக்கிடையில் திவங்க சிலை, மாடச் சிலைகள் பெருந்தொகைச் சிலைகளில் ஒரு பகுதியாகும். நாம் அவை பற்றியும் சற்று ஆராய்வோம்.

### திவங்க சிலைமாடச் சிற்பங்கள்

கி.பி 1153-1186க்கு இடையில் பராக்கிரமபாகு மன்னனால் திவங்க சிலைமாடம் செய்விக்கப்பட்டது. இப்பாரிய உயர்ந்த கட்டடத்தில் கர்ப்பக்கிரகத்தின் பின்புறச் சுவருடன் பொருந்தும் விதமாக முன்புறம் பார்த்தபடி இந்தச் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. முப்பரிமாண நிலையில் ஆக்கியிருப்பது சிறப்பம்சமாகும். இடுப்பின் கீழ் உள்ள பகுதி மட்டும் இப்போது எஞ்சியுள்ளது. சரீர அமைப்பின்படி அங்கி வரை உள்ளதெனக் கருத முடியம். லங்காதிலகமும், திவங்கச் சிலையும், செங்கல் உபயோகித்து ஆக்கப்பட்ட சிற்பத்துக்கு பெறுமதி மிகு உதாரணங்கள் இரண்டாகும்.

## 28. கண்டி யுகத்தின் சித்திரங்கள்

கண்டியுகமானது சம்பிரதாயமான ஓவியக்கலையின் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய காலமாகக் கருதப்படுகின்றது. கலை வரலாற்றில் கண்டி யுகம் எனக் கொள்ளப்படும் மலையக இராச்சியம் 16ம் நூற்றாண்டில் இருந்து 19ம் நூற்றாண்டு (1815) வரையான காலத்திற்குரியதாகும்.

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற நிலையினால் வலுவிழந்த உள்நாட்டுக்கலை கண்டியுகத்திலேயே எழுச்சி பெற்றது. மற்நெற்த யுகங்களை விடவும் முற்றிலும் வேறுபட்ட கலைத் தோற்றம் கண்டி யுகத்தில் தோன்றியது கலைகளின் முன்னேற்றத்திற்கு அரச அனுசரணையும் குறைவின்றிக் கிடைத்துள்ளது. கண்டிக் காலத்தின் சித்திரங்களுக்கு கருப்பொருளாக ஜாதக்கதை, புத்தரின் சரிதை, வரலாற்று சம்பவங்கள் என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி யுகத்தின் சித்திரங்கள் உள்ள பிரதான இடங்களான தம்புள்ளை, தெகல் தொருவை கிந்தகலை உட்பட ஏனைய இடங்களிலும் ஜாதகக் கதைகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. கண்டிக் காலத்தில் வரலாற்றுச்சம்பவங்களும் ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது.

கண்டியகால ஓவியங்கள் புத்த சரித்திரத்துடன் இணைந்த சம்பவங்களையும் ஜாதக கதைகளையும் இணைப்பதன் ஊடாக மக்களுக்கு சமய எண்ணக்கருவை ஏற்படுத்தவும் சமயத்தின்பால் மக்களின் மனதை ஈத்துக் கொள்ளவும் ஏற்ற விதத்தில் மிக இலகுவாக விளங்கிக் கொள்ளகூடியதாக ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

கண்டிய கால ஓவியங்களில் முப்பரிமாணத்தன்மை காணப்படவில்லை. காரணம் ஒளி நிழல் காட்டாது ஒரே நிறத்தை தட்டையாக வேறுபாடின்றி காட்டியிருப்பதாகும். மனிதர் மட்டுமன்றி மரம், கல் மிருகங்கள், கூட ஓவியத்துக்கு ஏற்ற வகையில் பொருத்தமான வடிவத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. கண்டியுகத்தின் அரச மரங்களின் தண்டு குறுகியதாகக் காட்டப்பட்டுள்ளது. சில இடங்களில் அரச இலையின் வடிவத்தில் முழுப்பரப்பும் சித்தரிக்கப்பட்டுள்ளது. சகல உருவங்களையும் ஒரே தளத்தில் காட்சியளிக்க செய்யுமாற் போல சித்தரித்திருக்கும் அதே வேளை தாவரங்கள், மனிதர் விலங்குகள் ஆகிய சகலவற்றையும் பெரும்பாலும் ஒரே உயர அளவீடுகளுடன் வரைந்துள்ளனர். மனித உருவங்களினதும் புத்தரின் உருவங்களிலும் கண்கள் முழுமையாக திறந்தபடி காட்டப்பட்டுள்ளது. மனித உருவங்கள் நன்கு உருண்டு திரண்ட அவயவங்களாக வரையப்பட்டுள்ளன. அகன்ற நெற்றியும் பருத்த உதடுகளையும் கொண்டுள்ளன. ஆண்களின் மேலுடம்பு வெறுமையாய் உள்ளது. உடம்பின் கீழ்ப் பகுதியை மூடியுள்ள துணியை கோடுகளில் காட்டப்படுவதுடன் பெண்களின் ஆடைகளை மலர்களால் அலங்கரிப்பதும் மரபாகும். தத்துரூபமான உயிர்த்துடிப்புள்ள எளிய ஆக்கத் தொழிற்பாட்டு வடிவமைப்புக்களை வெளிப்படுத்த முயன்றிருக்கின்றனர். தான் கேள்விப்பட்ட ஜாதகக் கதைகளுக்க ஏற்ற கருவை உரிய சூழலுக்கு ஏற்றதாக நிர்மாணிப்பதற்குக் கலைஞர் முயன்றிருக்கின்றனர்.

கண்டிய கால ஓவியன் தான் தனது ஓவியத்தை தீட்டும்போது சுயமாக் தொழிற்படாது ஆசிரிய பாரம் பரியத்திலிருந்து வழி வழிவந்த ஒழுங்கமைப்புக்கு ஏற்றபடியே தொழிற்பட்டிருக்கின்றான்.

கோடுகளினால் முழுமையாக்கப்பட்ட வரிப்படங்களை வர்ணங்களினால் நிரப்பிக் காட்டுவது வர்ண முழுமையாக்கம் என்று அழைக்கப்படுகின்றது. அவ்வாறு செய்வது பிற உருவங்களை வெளிப்படுத்திக் காட்டுவதற்காகவே மனித, புத்தருடைய உருவங்களை மஞ்சள் நிறத்திலும் மரஞ் செடி கொடிகள் நதிகள் என்பவற்றை இருண்ட பச்சை, நீலம், சாம்பல் போன்ற ஏற்ற நிறங்களிலும் நிறச்சீருடன் காணப்படுகின்றது.

கண்டியகால ஓவியங்கள் பின்னணி வர்ணமாக சிவப்பு வர்ணத்தை பயன்படுத்தியுள்ளனர் சிவப்பு வர்ணத்தினால் சித்திரத்திற்கு இயல்பாகவே ஒரு கவர்ச்சியும் சேர்ந்து கொள்கிறது. கண்டிய கால ஓவியர்கள் தாங்கள் வரைந்துள்ள ஓவியங்களில் இடைவெளிகளை நிரப்புவதற்கு நீலோற்பவம், செண்பகம், தாமரை போன்ற அலங்கார வடிவங்களை வரைந்துள்ளனர்.

சித்திரத்தில் வரும் கதா பாத்திரங்களை வர்ண முழுமையாக்கம் செய்யும் போது ஒரு மரபொழுங்கு பேணப்பட்டிருப்பது தெளிவாகிறது. உதாரணமாக புண்ணியம் நிறைந்த தேவ உருவங்களைச் சித்தரிக்கையில் வெண்ணிறமும் புத்த உருவங்களை அல்லது பிக்குகளைச் சித்தரிக்கையில் தெளிவான மஞ்சள் நிறமும் சாதாரண குடிமக்களைச் சித்தரிக்கையில் இருண்ட மஞ்சள் நிறமும் பாவம் செய்த அழுக்கான ஜன்மங்களுக்கு (இராட்ச, அசுர கெட்ட ஆவி) கறுப்பு நிறமும் உபயோகிக்கப்படுதல் மரபு இலட்சணமாகும். விஷ்ணு தேவர்கள், புத்தரின் பிரதான சீடர்களில் ஒருவரான மகா பொக்கல்லான ஆகியோரைச் சித்திரிக்கும் போது அவர்களை வரைந்திருக்கும் முறையில் நீல வர்ணம் தீட்டியும் சிவப்புப் பின்னணியிலுமாக அமைக்கப்பட்டுள்ளது.

மஞ்சள் நிற உருவங்கள் சிவப்பு வர்ணப் பின்னணியில் தெளிவாக விளங்கும்படி அமைக்கப்பட்டுள்ளன. மேகங்கள் நதிகள் போன்றன நீல நிறத்திலும் மரங்களை இருண்ட பச்சை நிறப் பின்னணியுடன் கறுப்புக் கோடுகளினால் இலை, பூ காய் என்பனவும் வெளிக்காட்டப்பட்டுள்ளன. மரத்தண்டுகளுக்கு சாம்பல் நிறம் பூசப்பட்டுள்ளது.

கண்டி யுகத்தின் சித்திர மரபானது கோட்டுக்கும் வர்ணத்திற்கும் சமமான இடத்தையே தந்துள்ளது. சிலவேளைகளில் கோட்டுக்கு அதிக இடம் கிடைத்துள்ளது. உதாரணத்திற்கு இப்படத்தை அவதானியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கண்டிக் கால ஓவியங்கள் தாமே தயாரித்த வர்ணங்களைப் பயன்படுத்தியுள்ளனர். வர்ணங்களை தயாரிப்பதற்கு தாவரங்களையும் கனிப்பொருட்களையும் உபயோகித்துள்ளனர். விகாரை ஓவியங்கள் வரையப்படும் முன்னர் வர்ணம் ஒரு மாதத்திற்கு முன்பே தயாரிக்கப்படுகின்றது. அரைத்த வர்ணத்தை நீரில் கலக்கி கல்லுரலில் இட்டு மிகவும துல்லியமாக அரைத்து மிக நீண்ட காலப் பாவனைக்குரிய முறையில் இவ் வர்ணத்தை விளாம் பிசினுக்கும் பதிலாக ஆளி வித்தெண்ணையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கண்டிக்கால ஓவியர்கள் வெள்ளை நிறத்தை பெறுவதற்கு ஒருவகை வெண் நிறக் களிமண்ணை அரைத்து பெற்றுக்கொண்டனர் மஞ்சள் நிறத்தை சிறு நெருஞ்சி (கொக்கட்டுவ) மரத்தின் பாவின் இருந்து பெற்றுக்கொண்டனர். சிவப்பு நிறத்தை சாதிலிங்கம் என்னும் பதார்த்தத்தில் இருந்து பெற்றுக் கொண்டனர். நீல நிறத்தை அவரை (அவ்றி) என்னும் தாவரத்தின் இலைகளில் சாற்றில் இருந்து பெற்றுக் கொண்டனர். இந்நிறம் கிடைப்பது அரிதாக இருந்தபடியால் மிகவும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பச்சை வர்ணத்தை நீலம், மஞ்சள் ஆகிய வர்ணங்களை கலப்பதன் மூலம் பெற்றுக் கொண்டனர். கறுப்பு நிறத்தை தீச்சுடரிலிருந்தும் பெற்றுக்கொண்டனர். ஒட்டும் தன்மையை ஏற்படுத்தவென பிசின் வகைகளை பயன்படுத்தினர். இதற்கென விளாப்பிசின் முந்திரிகைப் பிசின். ஆளிவித்தெண்ணெய் போன்றவற்றை உபயோகித்தனர்.

18ம் நூற்றாண்டிற்குரிய கண்டி யுகச் சித்தரங்கள் காணப்படும் இடங்கள்

| | |
|---|---|
| 1. தெகல் தொருவை | 2. தம்புள்ள குகைகள் |
| 3. தலதா மாளிகை | 4. கங்காராமை |
| 5. இலங்காதிலக | 6. சுடலதெனிய |
| 7. மெதவலை | 8. பூங்குரான்கெத்தை |
| 9. முல்கம்பொல | 10. சூரியகொடை |
| 11. பூந்தகலை | 12. அரத்தனை போன்ற இன்னும் பல இடங்களைக் கூறலாம். |

மேலதிகமாக ஏனைய பகுதிகளாகிய ரிதிவிகாரை களனி விகாரை, தலாவை, கொட்டகமை, கொகுந்தாவை, மாவெலை போன்ற இடங்களையும் குறிப்பிடலாம். தெற்கில் கரையோரப் பகுதிகளில் தொடர்பாய் உள்ள இடங்களாக முல்கிரிகலை, கரகம்பிட்டி, தொட்டகமுவை, தெல்வத்தை, கத்தளுவை, அம்பலாங்கொடை போன்ற இன்னும் பல இடங்களையும் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. தெகல் தொருவை

இவ்விகாரை கண்டியில் இருந்து 3 மைல்களுக்கு அப்பால் அமுனுகம என்னும் கிராமத்தில் கி. பி. 1786ல் கீர்த்திசிறி இராஜசிங்கன் என்னும் அரசனால் கட்டப்பட்டது. எனக் கூறப்படுகின்றது. இவ்விகாரை பெரிய கற்பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டிருக்கின்றது. 37 அடி நீளமும் 15 அடி அகலமும் 6 அடி 9 அங்குலமும் உயரம் கொண்ட இவ் விகாரை இரு நுழைவாயில்களைக் கொண்டுள்ளது. சயன நிலையில் பெரிய அளவிலான புத்தர் சிலை தனிக்கருங்கல்லினால் செதுக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் காணப்படும் புத்தர்சிலைகளிலும் பார்க்க இச்சிலை முக்கியத்துவம் பெறுகின்றது. அதற்குக் காரணம் புத்தர் சிலையின் பின்பக்கம் முழு உருவமும் கற்பாறையில் இருந்து வேறாக செதுக்கி எடுக்கப்பட்டுள்ளது.

அக்குகைக்குள் பல ஜாதகக் கதைகள் வரையப்பட்டுள்ளன. இவ் விகாரையை இராஜசிங்கமன்னன் அமைப்பித்ததாகக் கூறப்படுகிறது. இந்த மன்னனின் பின்னர் ஆட்சி செய்த இராசாதி இராஜசிங்கனின் காலத்தில் இதன் வேலைகள் பூர்த்தியடைந்தன. மண்டப நுழைவாயில் கூரையின் முகப்பில் மரத்தால் செய்த மகரதோரணம் ஒன்று உண்டு. கல்லின் மீது வெண்களிப்பூச்சினைத் தடவி அதன் மேலாக சித்தரிக்கப்பட்டுள்ள ஓவியங்கள் பிரபல்யம் வாய்ந்ததும் முக்கியமானதாகவும் கருதப்படுகின்றது. இங்குள்ள ஓவியங்கள் உடுநுவர தேவேந்திர மூலாச்சாரியாருடைய உதவியுடனும் கிரியால நய்தே அவர்களின் உதவியுடனும் தேவரசும்பொல

சில்வாட்ன உனான்சேயால் ஆக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஜாதகக்கதைகள் நான்கு இங்குள்ள ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. வெஸ்ஸந்தர ஜாதகக் கதை, சுந்தசோம ஜாதகக் கதை, சத்துபத்த ஜாதகக் கதையானது 26 பகுதிகளாக பிரித்து விபரமாக காட்டப்பட்டுள்ளது. வெஸ்ஸந்தரக் கதையில் வரும் மனித ஃபாவங்களைக் காண்பிக்கவும் தானம் செய்யப்பட்டவற்றை எடுத்துச் செல்லும் விதத்தைக் காட்டவும் கருத்து வெளிப்பாட்டுடன் வர்ணம் இடப்பட்டுள்ள நீல நிறம் மிக மகத்தான விதத்தில் உபயோகித்திருப்பது கலைத்திறமையுடன் கூடியது எனக் கொள்ளலாம். இவ் ஓவியங்களுக்கு தூரிகையைக் கையாண்ட விதம் மிகக் தேர்ச்சி பெற்ற ஒன்றென்பது தெளிவாகிறது. பூசைக்கான பொருட்களைக் கையேற்றுக் கொள்ளும் போது அவர்களின் சிரத்தை முன்னால் வளைத்து நிற்பதாகச் சித்தரித்திருப்பது ஆக்க பூர்வமானதாகும். வெஸ்ஸந்தர மன்னனின் முகத்தின் உணர்ச்சிகளைக் காட்டும் பார்வை பொருள் ஆசை கொண்டோரில் ஏற்படும் பரபரப்பைக் காட்டும் ஃபாவம் பெற்றோரின் முகத்தில் காணப்படும். மகிழ்ச்சி உணர்வும் இச் சித்திரங்களில் மிகவும் சிறப்பாக பிரதிபலிக்கப்பட்டுள்ளன. கண்டிக்கால வடிவமைப்பு முறைக்கேற்ப மலர்களைக் கொண்ட வடிவமைப்புக்களைப் பின்னணியாக இந்த ஓவியர் மிகத் திறமையாகக் கண்கவரும் விதத்தில் சித்தரித்திருப்பதது ஒரு சிறப்பான அம்சமாகும்.

வெஸ்ஸந்தர ஜாதகக் கதைகளைப் போலவே சுத்த சோம ஜாதகக் கதையும் இங்கு மிக முக்கியமாக விளங்குகிறது. சுத்தசோம ஜாதகக்கதை உப பகுதிகாளக பிரித்துக்காட்டப்பட்டுள்ளது. இங்கு மிக முக்கியமாக விளங்குகிறது. நாற்படைகள் (ரத, கஜ, தரக, பதாதி) வீழ்ச்சியுற்றமையை மிகச் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.

பிறிதொரு சுவரில் மகா சீலவ ஜாதகக் கதை வரையப்பட்டுள்ளது. இவ் ஓவியம் அழிந்த நிலையில் காணப்படுகின்றது. அரசருக்கும் அமைச்சர் ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட மனத்தாபத்திற்காக வேற்றுநாட்டு அரசன் கொடூரமாகத் துன்புறுத்தப்படுவது பின்னர் அந்நாட்டு அரசன் வெற்றியீட்டுவதான இக்கதை ஒரு சிறந்த படைப்பாகும். பிரதானமான நான்கு ஜாதகக் கதைகளும் அக்காலத்தில் ஆண்ட கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் வாழ்க்கைக்கு ஏதோ ஒரு சம்பந்தமுடையவையென மஞ்சு ஸ்ரீ என்னும் பிரசித்தி பெற்ற ஓவியர் ஊகம் தெரிவிக்கிறார் ஜாதகக் கதைகளுக்கு மேலதிகமாக புத்தரின் சரிதையுடன் தொடர்புடைய சம்பவங்கள் இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளன.


தெகல்தொறுவ விகாரையில் வரையப்பட்டுள்ள மாரனின் யுத்தம் கண்டியுகச் சித்திரங்களிடையே மிகவும் தலைசிறந்த ஓவியம் என்பது விமர்சகர்களின் கருத்தாகும். இதன் சிறப்பியல்பு என்னவெனில் மாரன் ஐந்து முகங்களைக் கொண்டவனாக காட்டப்பட்டிருப்பதாகும். அவனது தலை ஐந்து கிரீடங்களைத் தாங்கியிருக்கின்றது. மாரனின் கூட்டத்தினரின் கரங்கள் துப்பாக்கிகளை ஏந்திய வண்ணம் இருப்பது இன்னொரு சிறப்பியல்பு எனக்குறிப்பிடலாம். இச் சந்தர்ப்பத்தில் பயங்கொண்ட தெய்வங்கள் புத்தரை விட்டு ஓடிவிட்டதால் அவர் தனியானார். ஆனால் பூமாதேவி நிற்கின்றாள். அவளின் பக்தியையும் மாரனின் அருவருக்கத்தக்க செய்கையினையும் ஏற்றவாறு வர்ணங்களினால் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. இவைகளை மிகவும் சூட்சுமமாகச் சித்தரித்திருக்கும் விதம் அருமையானது. கடும் வர்ணங்கள் எண்ணங்களைத் தீவிரமாகக் காட்ட உபயோகிக்கப்பட்டுள்ளன. மாரனின் யுத்தத்திற்குப் பொருந்தும் வகையில் ஒப்பனைக்கோலம் ஒன்றும் பல்லின மலர்கள் இட்டிருப்பதும் சிறப்பம்சமாகும் இங்கு காணப்படும் மலர்களின் முக்கிய இடத்தை பெறுவது. பறசத்து மல் (பாரியாதமலர்) இம்மலர் தேவலோகத்தில் காணப்படும் மலர் எனக் கூறப்படுகிறது. இம் மலர் இவ்விகாரையில் மட்டும் காணப்படுவது சிறம்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பூமாதேவி





வெஸ்ஸந்தரா ஜாதகம்







வெஸ்ஸந்தரா ஜாதகம்



வெஸ்ஸந்தரா ஜாதகம் (வெள்ளையானை பரிசளித்தல்)



மாரயுத்தம்



சுத்தசோம ஜாதகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள சாய்நிலைச் சிலைக்கு மேலாக இருக்கும் மேற்காட்டில் தாமரை மலர்கள் பூவேலைப்பாடு என்பவற்றால் வரையப்பட்ட அலங்காரமான ஓவியங்கள் உண்டு. அத்துடன் 24 அவதாரங்கள் (கற்பனை) பூ அலங்காரச் சோடனையுடன் விஷ்ணு சமன் (சிவன்) தெய்வங்களுடன் வருகை தந்த தெய்வ உருவம் ஒன்றும் ஏழு வாரங்களைக் கழிந்த விதமும் அசுர கூட்டங்களைத் தோல்வியுறச் செய்த விதமும் மனம் கவரும் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. இந்த ஓவியங்களுக்கு இடையே இருக்கும். அரசமாளிகையினுள் ஒரு காட்சியில் அரசனதும் இராணியினதும் ஆடை வஸ்திரங்கள் மிகவும் துல்லியமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

கண்டி யுகத்தில் தோன்றிய சித்தரங்களுக்கிடையே சுவர்ஓவியம், துணிச்சித்திரம், ஓலைச்சுவடிகள், மேலுறைகள், பில்லிச்சித்திரம் மட்பாண்டங்கள் என்பனவும் முக்கிய இடத்தை பெற்றுள்ளன.

## 30. தம்புள்ள குகை ஓவியங்கள்

மாத்தளை மாவட்டத்திலுள்ள சரித்திரப் புகழ்வாய்ந்த குகை விகாரையைக் கருதலாம். இது தரை மட்டத்தில் இருந்து 500 அடியளவு உயர்ந்து காணப்படும். மலைக்குன்று ஒன்றின் மீது அமைக்கப்பட்டுள்ளது. இங்கு குகை விகாரைகள் ஐந்து உள்ளன. இவற்றில் மூன்று பழைமை வாய்ந்தவை வரலாற்றுத் தகவல்களின்படி முதலில் வலகம்பா மன்னனினால் தம்புள்ள குகைகள் அமைக்கப்பட்டன.

இலங்கையில் உள்ள மிகப்பெரிய குகை விகாரையாக தம்புள்ள குகையை கருதலாம்.

இக் குகை கோவில் (கி.மு. 89 – 76 ) வலகம்பாகு ஒழிந்திருந்த இடம் என்றும் இக்குகை கோவில் அதற்காகக் கட்டப்பட்டதென்றும் பின்பு நிசங்கமல்லன் திருத்திக்கட்டி ஒரு பொன் விக்கிரகத்தையும் அமைப்பித்தான் என்றும் அதனால் அக் குகைக்கோவில் பொன்மலைக் குகைக் கோவில் என்றும் அழைக்கப்பட்டதென்றும் கூறப்படுகின்றது மாத்தளையின் நீலகம பரம்பரயின் ஓவியர்களால் இங்கு சித்திரங்கள் தீட்டப்பட்டன என்றும் அவை அனேக மன்னர்களினால் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.

தம்புள்ளையின் பெரும் குகையில் உள்ள வரலாற்றுச் செய்திகளைப் போலவே போதிசத்துவ சம்பவங்களும் புத்தரின் சரிதைக்குத் தொடர்பான கதைகளும் உள்ளடங்கியுள்ள இவற்றிற்கு இடையில் மகிந்த தேரரின் இலங்கை வருகை விஜயனின் தரையிறக்கம். அனுராதபுர மிஹிந்தலையின் புதையலைக் காட்டும் சித்திரம் சங்கமித்தா பிக்குணி புனித வெள்ளரசுக் கிளையைக் கொண்டு வருகை துட்டகைமுனு – எல்லாள யுத்தம் போதிசத்வ சம்பவங்கள் ஏழு வாரங்கள் இசிபத்தனை வேலுவனாராமை ஜேகவனத்தில் வாழ்ந்த விதம் பரிநிர்வாணம் அடைய அசுரனை அழைத்தமை இறுதித்தானத்தை ஏற்று மல்ல அரசனுக்கு உபதேசம் செய்தமை, பரிநிர்வாணம் எய்தியமை புனித அஸ்தி பங்கிடப்பட்டமை என்பன சிறப்பான வகையில் சித்திரிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாகப் பக்கத்துக்குகை ஒன்றில் உள்ள தெய்வங்களுக்கு உபதேசம் செய்தல் என்பன முக்கிய விடயங்களாகும்.

இரண்டாவது குகையினுள் புத்த உருவ ஓவியங்கள் ஏராளமாகவுள்ளன. அதுபோலவே சயன நிலை, நின்ற நிலை இருப்பு நிலை சிலைகளும் காணப்படுகின்றன. தனிக்குகை ஒன்றில் 47 அடி நீளமுள்ள அரிதுயில் கொள்ளும் புத்தர் சிலை காணப்படுகின்றது. முதலாவது குகையில் பல புத்தர் சிலைகள் காணப்படுவதுடன் வலகம்பாகுவின் சிலையும் காணப்படுகின்றது. இங்கு புத்தபெருமானின் 63 பெரிய சிலைகளும் 180 சிறு சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு கண்ணப்பூச்சுடன் கூடிய மகர தோரணம் ஒன்று உண்டு. அதில் யானையின் துதிக்கைக்குப் பதிலாக சிங்கத்தின் வாய் ஒன்றை அமைந்திருப்பது ஒரு விசேடமான அம்சமாகும். தெகல் தொருவயைப் போன்று இங்கு அசுரரின் தோல்வியைக் காட்டும் சித்திரம் மிகச் சிறப்பானதாகும் இங்கு அரக்கர்களின் பயங்கரத் தோற்றத்தை தீவிரப்படுத்த பாம்பு, நாகம் போன்றவற்றை அரக்கரின் தலைக்குப் பொருத்திக் காட்டப்பட்டிருக்கிறது. இங்கு காணப்படும் இந்து மதக் கொடியில் சேவலின் உருவம் காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்தார்த்தர் வில்வித்தை பழகுதல்



கதிர்காமக்கடவுள்



புத்தரின் பல்வேறு தோற்றங்கள்




எல்லாளன் துட்டகைமுனு யுத்தம்



ஞானம் பெறுதல்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தம்புள்ள ஓவியங்கள் சிற்பங்கள்

## 31. தலதாமாளிகை ஓவியங்கள்





கீர்த்தி ஶ்ரீ இராஜ சிங்கனின் ஓவியம்

கண்டியிலுள்ள தல்தா மாளிகாவை கிபி 304-332 வரை ஆண்ட ஶ்ரீ வர்ணன் என்னும் அரசனாற் கட்டுவிக்கப்பட்டதென்பர் ஒருசாரார் ஆனால் மகாவம்சம் என்னும் நூல் கண்டியின் முதலாம் அரசனாகிய விமலதர்ம சூரியன் தந்ததாத்துவை வைத்துப் பூசிப்பதற்காக இரண்டுமாடிகளைக் கொண்ட தலதாமாளிகையை கட்டுவித்தான் என்றும் பின்னர் இரண்டாம் விமலதர்மசூரியன் அதை மூன்று மாடிகளுடையதாகப் புனருத்தாரணஞ் செய்வித்தான் என்றும் கூறப்படுகின்றது.


இப்போது காணப்படும் கர்ப்பக்கிரகம் கீர்த்தி ஶ்ரீ இராச சிங்கனாற் கட்டிவிக்கப்பட்டது. இப்போதுள்ள எண்கோணக் கட்டிடம் தலதாமாளிகாவும் கண்டி வாவியும் கடைசி கண்டி மன்னன் ஶ்ரீ விக்கிர இராசசிங்கனால் கட்டிவிக்கப்பட்டது. தலதாமாளிகையின நுளைவாயிலில் சந்திரவட்டக்கல் அமைக்கப்பட்டிருக்கின்றது. மாளிகாவிற்குள் ஏறும் போது எட்டுப்பேர் மலர் தாங்கி நிற்கும் காட்சி நவநாரி குஞ்சரம் அன்னச்சோடி கஜசிம்ஹ ஐவர் கொண்ட கண்டிய நடனம் போன்றவை வரையப்பட்டுள்ளன. சீலிங் பகுதியில் கொடி அலங்காரங்களும் தாமரை அலங்காரங்களும் காணப்படுகின்றது. இங்குள்ள தூண்கள் நாயக்கர் சிற்பமுறையில் அமைக்கப்பட்டவையாகும். வெளிப்புறவாசலின் இருபுறமும் யானையும் பாகனும் செதுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தர் சிலை தலதா மாளிகை தாய்லாந்து (சியம்) நாட்டின் அமைப்பு



நவநாரி குஞ்ஜரம்

## 32. பமரகல விகாரைச் சித்திரம்

பமரகல விகாரையில் காணப்படும் சுவர் ஓவியங்கள் கீர்த்தி சிறி இராஜசிங்கள் காலத்திற்குரியது. இக்குகை தெகல்தொறுவ குகையை விட சிறியது. தெகல்தொறுவ விகாரையின் ஓவியங்களைவிட சிறுவேறுபாடு காணப்படுகின்றது. மனித உருவங்களின் முகம் சதுர வடிவ அமைப்பில் காணப்படுகின்றது. தெகல்தொறுவையில் காணப்படும் தலை, கொண்டை அலங்காரம் போல் அல்லாது காணப்படுகின்றது. சுவர்களின் காணப்படும் சித்திரங்கள் தெளிவாக இல்லை. ஸஸ ஜாதகக் கதை, வெஸ்ஸந்தர ஜாதகக்கதை வரையப்பட்டுள்ளது. கால் அங்குளம் தடிப்பில் கலவை பூசப்பட்டுள்ளது. அக் கலவை மண் நிறத்துடன் மஞ்சள் நிறமும் சேர்க்கப்பட்டு அதன் மேல் துணி ஒன்று ஒட்டப்பட்டு படம் வரையப்பட்டுள்ளது. இம் முறை கண்டிக் காலத்தில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

விகாரையின் வாயிலில் மேல் பகுதியில் மகரதோரணம் வர்ணம் பூசப்பட்டு காணப்படுகின்றது. வாசலின் இடது பக்கம் சரப்பெண்டிய என்னும் பறவையின் உருவம் காணப்படுகின்றது.

## 33. முல்கிரிகலை விகாரை

முல்கிரிகலை விகாரை தாழ்நிலச் சித்திரங்களைக் கொண்ட பிரதானமாக விகாரையென "ஜாவலிய, போதிவம்ச என்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் அநுராதபுரக் காலத்தில் நிறுவப்பட்ட ஒரு விகாரை எனக் கூறலாம் இது குகை விகாரையாகும் விகாரை மனைகள் இரண்டு இங்கு உண்டு. இக் குகைகளில் சித்திரங்கள் கண்டி யுகத்திலேயே தீட்டப்பபெற்றுள்ளன." 24 அடி நீளமான புத்தர் சிலை கண்டிக் காலத்திற்குரிய மரபுகளைக் கொண்டுள்ளது. மலையக மரபுக்குரிய தாழ்நில இயல்புகளைக் கொண்ட சித்திரங்களை இங்கு காணலாம்.

முல்கிரிகலை விகாரையானது இங்கு வரையப்பட்ட சித்திரங்களாலேயே பிரசித்தியடைந்தது. ஜாதகக் கதைகளைப் போலவே நவகிரகக்கூட்டம் இராட்சத உருவங்கள். என்பவற்றில் இந்த விகாரை அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவற்றினிடையே தேளபக்த ஜாதகக் கதையும் வெஸ்ஸந்தர ஜாதகக் கதையும் மிக இரம்பியமான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. தேளபந்த ஜாதகக் கதையின் ஓவியம் ஒன்று ஏனைய ஓவியங்களை விட கலா விமரிசகரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்குக் காரணம் இசைக்கருவிகளை மீட்டும் பெண்களின் உருவம் அதில் அடங்கியிருப்பதாகும்.

இதனைப் பற்றி திரு.ஸீ.டீ.எஸ் குலதிலக கூறுகையில் முல்கிரிகலை விகாரையின் சுவர் ஓவியங்களில் ஒரு விசேடமான முக்கியத்துவம் உள்ளது. இசைக்கருவிகளை மீட்டும் குறிப்புக்களைக் கொண்ட சுவரோவியங்கள் பல இடங்களிலும் காணக்கூடியதாக இருக்கின்றன. ஆனால் முல்கிரிகலையில் இருக்கும் சுவரோவியங்களின் விசேட இயல்பு என்னவெனில் பறைகொட்டும் பெண்களையும் றபான் அடிக்கும் பெண்களையும் இசைக்கருவிகளைக் கையாள்வோராகக் காட்டியிருப்பதாகும் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலின் இசைக் கருவியின் ஆரம்பத் தோற்றத்தை போன்ற ஒரு இசைக்கருவியையும் இங்கு காணலாம். சிலர் இது இராவண அரசனால் உருவாக்கப்பட்டதெனக் கூறுகின்றனர். மலையக சித்திரமரபை விட வேறுபட்டான அமைப்பில் வரையப்பட்ட சித்திரமரபு ஒன்று தாழ் நிலப் பகுதிகளில் இருந்தமைக்கு இதனை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம் என சிறி குணசிங்க என்பவர் கூறுகிறார். ஐரோப்பிய மரபுகளுக்கு ஏற்ப இடப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். மலையக ஓவியங்களை விட இங்குள்ளவற்றில் மரம், இலை மனிதரின் உள்ள இயற்கையான வாழ்க்கை இயல்புகளைக் காணலாம். போத்துக்கேயர் உபயோகித்த பொருட் போன்றவற்றையும் இச் சித்திரங்கள் உள்ளடக்குயுள்ளன மலையக சித்திர மரபு அல்லது கண்டியுகச் சித்திரமரபு என அழைக்கப்படும் இந்த மரபானது முன்னொரு போதும் இருந்திருக்கவில்லை என்பதையும் இங்கு குறிப்பிடலாம்.

## 34. கடலதெனிய விகாரை ஓவியம்

கடலதெனிய விகாரை கண்டி நகரத்தில் இருந்தது 7 1/2 மைல் தொலைவிலுள்ள கடலதெனிய என்னும் கிராமத்தில் 14ம் நூற்றாண்டில் திக்கல என்னும் நீண்ட கற்பாறை மீது முழுவதும் கருங்கல்லினால் ஆன இலங்கையில் உள்ள ஒரே ஒரு விகாரையாகும் 4ம் புவனேகபாகு அரசனுடைய அனுசரணையுடன் முதலாம் தர்மகீர்த்தியாகிய பிரதமகுருவின் (பிக்குவின்) அறிவுறுத்தல்களுக்கு அமைய சேனாதிலங்கார தர்ம உபதேசங்களைக் கருப்பொருளாகக் கொண்டு பல வர்ணங்களாலும் ஓவியம் தீட்டப்பட்ட துணிகள் உபதேச மண்டபங்களிலும் மார்க்க உபந்நியாசம் புரிவதற்கென அமைக்கப்பட்ட மண்டபங்களிலும் திரைச்சீலைகளாக உபயோகிக்கப்பட்டன. எனக் கூறப்படுகின்றது. கண்டி நூதனசாலையில் இந்திரலோகத்து விதானம் என்று கூறத்தக்க துணிச்சித்திரம் ஒன்று உள்ளது. இது பொலநறுவைப் பாணிக்கு ஈடாக அமைந்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

ஹங்குராங் கெத்தலுக்கு அண்மையுள்ள ஆரத்தனை இராஜமகாவிகாரையில் அதி அற்புதமான சித்திரங்களைக் கொண்ட துணிச் சித்திரத் திரைச்சீலைகள் மூன்றினைக் காணலாம். இதிலுள்ள விசாலமான துணிச்சித்திரம் மத்தியில் மகர தோரணத்துடன் கூடிய புத்தஉருவமும் இரு புறங்களில் தேவர்களின் உருவமும் மகாதன்றொவும் வெஸ்ஸந்தர ஜாதகக் கதையும் கொண்டதாக உள்ளது. இத்துணிச்சித்திரங்களில் உள்ள விசேடம் என்னவெனில் கடதாசி ஒன்றில் பேனாகளைக் கொண்டு அவை வரையப்பட்டதாகும் அவ்வாறு வரைவதற்கு மிகவும் திறமையுடன் கூடிய சித்திர நுட்பம் வேண்டியிருப்பது போலவே பொறுமையும் இந்தக் கலைஞர்களிடம் இருந்திருக்க வேண்டும்.

இதற்கு மேலதிகமாக வஹகோட்டேயின் துடாவ இரஜமகா விகாரையின் புத்தரின் முதலாவது தர்ம உபதேசம் ஏழுவாரம் போன்றவற்றைக் காட்டும் துணிச் சித்திரங்கள் அனேகம் உண்டு. முதியங்கனை விகாரையிலும் ஹங்குராங்கெத்த தேவாலயத்திலும் துணிச்சித்திரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

துணிச்சித்திரங்களில் வரையப்பட்டுள்ளவையாவன

1. ஜாதகக் கதைகள்
2. புத்த சரிதையில் வரும் சம்பவங்கள்
3. தேவர்களின் உருவங்கள் யாகக் காட்சிகள் கிரகங்களின் உருவங்கள் என்பனவாகும்

துணிச் சித்திரங்கள் உபயோகித்த சந்தர்ப்பங்களாவன

1. யாகங்கள் ஓமங்களின் போது உபயோகிக்கப்பட்டன.
2. உபந்நியாச மண்டபங்களை அலங்கரிக்கவும்
3. சுவர்களில் தொங்க விடுவதற்கும்

இவற்றை விட கொடிச் சித்திரங்களாகவும் கண்டிககாலத்தில் வரையப்பட்டுள்ளன. மிக அலங்காரம் செய்யப்பட்ட கொடிகள் பதாதைகள் காணப்பட்டன. இவற்றை ஆலய உட்சவங்களின் போதும் அரசவைபவங்களின் போதும் இக் கொடிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35. அமரர். ஏ. ஜீ. சீ. எஸ். அமரசேகர

இவர் 1883ல் பிறந்தார் இவரின் தந்தையும் சிறந்த ஓவியராக திகழ்ந்தார் பாடசாலைக்கு செல்லுமுன் குழந்தைப்பருவத்தில் ஓவியங்கள் வரையும் ஆர்வம் இவருக்கு இயல்பாக இருந்தது. இவர் கடற்கரை மணலில் ஓவியம் வரைந்து விளையாடுவது இவரின் பொழுது போக்காக இருந்தது.

**பேயோட்டியின் மகள் (ஓவியம்)**



1. A.G.C.S அமர சேகரவால் வரையப்பட்டது.
2. 1939 ல் றோயல் எம்பீரியலில் காட்சிப்படுத்தப் பட்டது.
3. பேயோட்டியின் மகள் எனப் பெயர் கொண்டது.
4. ஓவியம் உயிர்த்துடிப்புள்ளது.
5. 176 x 165 சென்ரி மீற்றில் அளவுடையது.

பாடசாலைக்குச் சென்ற முதல் நாளில் பாடசாலையின் உபஅதிபரின் உருவத்தை நகைச்சுவை உருவமாக வரைந்தார் இதனால் பெற்றோரிடமும் தண்டனையைப் பெற்றார். முகத்துவாரத்திலுள்ள சென்தோமஸ் வித்தியாலயத்தில் உயர் கல்வியை கற்றார் அப்பொழுது **"டோமற்றி"** என்னும் ஆங்கில இதழுக்கு நகைச்சுவை (காட்டூன்) ஓவியங்களை வரைந்தார் 1903ம் ஆண்டு கலா சங்கத்தினால் நடாத்தப்பட்ட ஓவியக் கண்காட்சியில் இவருடைய ஓவியத்திற்கு முதலிடம் கிடைத்தது. இவர் தனது 19வது வயதில் வர்த்தக சித்திர முறையைக் கற்றுக்கொண்டார். அதன் பின் நில அளவை திணைக்களத்தில் படம்வரையும் உத்தியோகத்தனாக நியமனம் பெற்றார். இவருடன் திரு D.S. சேனநாயக அவர்களும் இத்திணைக்களத்தில் வேலை செய்தார். இருவரும் மாதம் ரூபா 15 வேதனமாகப் பெற்றனர் இவ்வேதனம் போதியதாக இல்லாதபடியால் இருவரும் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு திரு. D.S. சேனநாயக அவர்கள் அரசியலில் பிரவேசிக்க திரு. அமரசேகரா ஓவியத்துறையில் நுழைந்தார்.

1924ல் இங்கிலாந்தில் றோயல் அக்கடமியினால் நடாத்தப்பட்ட உலக ஓவியர்களில் ஓவியக்காட்சியிலும் பங்குபற்றினார் 1938ல் தனது மகனுடன் சேர்ந்து இங்கிலாந்தில் ஓவியக்கண்காட்சியை நடத்தினார். அவருடைய படைப்புகளாக காந்தி, நேரு, சாஸ்திரி அனகாரிகதர்மபால D.S. சேனநாயக திரு. பண்டாரநாயக, சேர். ஜோன், W. தஹநாயக, ஜே. ஆர் ஜயவர்தன, திரு. ஒலிவர், கோபல்லாவ, சி. டபிள்யூ. கன்னங்கரா ஆகியோரின் உருவங்கள் சிறப்புப் பெறுகின்றன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36. அமரர். எம். சார்லிஸ்

இவர் 1880ம் ஆண்டு அம்பலங்கொட என்னும் இடத்தில் பிறந்தார். இவர் பாளி, சமஸ்கிருதம், இலக்கியம் போன்ற விடயங்களை வெளிதா என்னும் இடத்தில் பௌத்த பிக்குவிடம் கற்றுக்கொண்டு 18 வயதில் கொழும்புக்கு வந்தார். இவருடைய காலத்தில் ஆங்கிலமும் ஆங்கில ஓவியங்களும் அனைவருடைய வீடுகளிலும் காணப்பட்டது. அவற்றைக்கண்ட சார்லிஸ் அவர்கள் எமது நாட்டின் கலை, கலாச்சாரம், சமயம் என்பனவற்றிற்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என எண்ணி சீவலி உருவம் போன்ற புத்தபிக்குகளின் ஓவியம், இராகுலன் பிச்சை ஏந்தும் காட்சி போன்ற ஓவியங்களை வரைந்து இவ் ஓவியங்களை ஜேர்மனிக்கு அனுப்பி அவ்ஓவியங்களை வர்ணப்பிரதிகளாகப் பெற்று மிகக்குறைந்த விலையில் அனைவரும் வாங்கக் கூடியதாகச் செய்தார் இதனால் பலவீடுகளிலும் பௌத்தவிகாரைகளிலும் நூல்நிலையங்களிலும் இவற்றைக் காணக்கூடியதாக உள்ளது.

இவருடைய கலைப்படைப்புகள் கொழும்பு அசோகா ராமய என்னும் விகாரையிலும் பொத்துபிட்டிய பூர்வாராம விகாரையிலும் இந்துருவ என்னுமிடத்திலுள்ள யாலேகம விகாரையிலும் த்ம்பிட்டபோமலு விகாரையிலும் காணப்படுகின்றது இவர் கீழைத்தேச கலைகளை கற்றிருந்தபோதும் மேலைத்தேச கலைகளில் நாட்டம் கொள்ளவில்லை.



மாயாதேவியின் கனவு

(எம். சார்லிஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறைவனை வழிபடுதல் தொடர்பானது (எம். சார்லிஸ்)



புத்தபெருமானின் பிறப்பு (எம். சார்லிஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37. ஜோர்ஜ் கீற்

1901 ஏப்ரல் 17ந் திகதி பறங்கிய சிங்களத் தம்பதிகளுக்குப் பிறந்த ஜோர்ஜ் கீட்டின் பெற்றோர் வைத்திய சட்டத் தொழில்கள் புரிந்தவர்களாவர். மத்திய உயர் வகுப்புக் குடும்பத்தில் பிறந்த கீற் கண்டி திரித்துவக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். தமது 10வது வயதில் யேசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட சம்பவத்தை சித்திரம் தீட்டிய ஜோர்ஜ் கீட் கல்லூரியில் சிறந்த சித்தரக் கலைஞருக்கான விருதினைப் பெற்றார்.

மல்வத்தை பீடத்தைச் சேர்ந்த பிக்குவான பின்னவல தீரானந்த தேரோ கீட்டின் சமய ஞானத்தையும் இலக்கிய அறிவையும் வளர்ப்பதற்கு உதவி செய்தார். பௌத்த சமயம், இந்து சயயம் பற்றிக் கற்ற கீட் இரவீந்திர நாத்தாகூரின் நூல்கள் மூலம் பெற்ற சிந்தனைகளில் அக்கறை காட்டினார். அவர் தம்மை அறிமுகப்படுத்தும்போது இவ்வாறு கூறினார். "**இந்துமத நோக்கு.** அழகியற்கலை எனது சிந்தனையில் அதிக செல்வாக்கு செலுத்தியற்குக் காரணம் இளவயது முதல் இந்து சிற்பக்கலை, இலக்கியம், வீரகாவியங்களைக் கற்றதனாலாகும். இந்திய இசையின் லயத்தினால் நான் அடிமைப்பட்டேன்", இந்திய இசையில் வரும் ராகம் தொடர்பான பல சித்தரங்களைக் கீட் படைத்தார். பொரளை கோதமி விகாரையில் இவரால் வரையப்பட்ட சித்திரங்களுள் சித்தார்த்தரின் பிறப்பு, மகாமாயா தேவியின் கனவு, யமனை வெற்றி கொள்ளல் போன்ற விசேட சித்திரங்களாகக் கொள்ளப்படுகிறது. இவை சித்திரக் கலையின் வரலாற்று ரீதியான சந்தர்ப்பங்களாக இருப்பதனாலாகும். கீட் தமது பாரம்பரிய சித்திரக் கலையை பிகாஸோவின் புதிய சித்திரப் பண்புகளுடன் சேர்த்துக் கொண்டார் கோதமி விகாரையிலுள்ள "**யமனை வெற்றி கொள்ளல்**" சித்திரம் பிகாஸோவின் குவர்னிகா சித்திரத்துடன் ஒப்பிடப்பட்டது. என்பதைக் காணலாம். இலங்கையின் கலாச்சாரப் பாரம்பரியத்தை ஆழமாகக் கற்ற கீட் பாரம்பரியக் கிராமங்களில் வாழ்ந்து கொண்டு அவ்வாழ்க்கையைச் சித்திரமாகப் படைத்தார். இந்து சிற்பக் கலையைக் கற்றல். மேலை நாட்டுக் சித்திரக்கலை, அதன் பாரம்பரியங்கள் பற்றிக் கற்றல் போன்றவற்றினால் வெளிப்பட்ட அவரின் சிறந்த பாங்கை மாற்றாமல் தொடர்ந்தார். 1927 முதல் தமது வாழ்க்கையை சித்திரக்கலைக்காக அர்ப்பணித்ததற்கு லயனல் லெண்டின் தூண்டுதலும் காரணமாக அமைந்தது கிருஷ்ணன் இராதை காதல் காட்சிகள் சித்தரிக்கும் ராகினி, விராகினி தளதா பெரகரா குயவன் வேலைத்தளம் போன்றவை இவரின் சிறந்த ஓவியங்களுட் சிலவாகும் இவரின் சித்திரங்களின் தடித்த கோடுகளைக் காணக்கூடியதாக உள்ளது.




1. ஜோர்ஜி கீற் அவர்களால் வரையப்பட்டது.
2. கண்டிப் பெண் எனும் பெயர் கொண்டது.
3. கன்வஸ்துணியில் வரையப்பட்டது.
4. 41 x 41 சென்றி மீற்றர் வரையப்பட்டது.
5. எண்ணெய் வர்ணத்தால் ஆக்கப்பட்டது.



1. குஜராத் பெண் எனும் ஓவியமிது
2. இதனை வரைந்தவர் ஜோர்ஜி கீற் ஆவார்.
3. எண்ணெய் வர்ணத்தால் ஆக்கப்பட்டது.
4. 30 x 30 செமீ அளவுடைய 'கனவஸ்' வரையப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











## 38. ஜே. டீ. ஏ. பெரேரா

சித்திரக் கலைஞரைப் போன்றே கலைத்துறையிலும் சிறந்து விளங்கிய கலைஞராகும். அரச நுண்கலைக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய இவர் 1897ல் கம்பஹாவில் பிறந்தார். சில காலம் தொழில் நுட்பக் கல்லூரியில் பணியாற்றிய பாட்லம் என்பவர் பெரேராவின் முதல் சித்தரக்கலை ஆசிரியராவார். அப்போது கல்வித் திணைக்களத்தில் சித்திரக்கலைப் பரிசோதகராகச் சேவை செய்த ஸ். எப். வின்ஸர் என்பவருடன் இணைந்து சித்திரக் கலைத்துறையில் சேவையாற்றினார். இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் இவர் 30 வருட காலமாக கலைப் பணிப்பாளராகக் சேவை ஆற்றினார்.

1946ல் சித்திரக்கலைத் தொடர்பாக அரசினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசில் பெற்று ஐரோப்பா சென்ற J.D.A. பெரேரா பின்வரும் இடங்களில் தமது சித்தரக் கண்காட்சிகளை நடாத்தியுள்ளார் (1) லீசெஸ்டர் கலாலயம் (2) இங்கிலாந்து கலை மன்றம் (3) அரச ஸ்கொட்ச் நிறுவனம் (பாரிஸ் செலோன்) உருவகச் சித்தரக் கலைக்கு (portrait Art) பெயர் பெற்ற திறமைசாலியான இவரது படைப்புக்கள் இன்றும் உள்நாட்டு, வெளி நாடுகளில் காட்சிப்படுத்தப்படுகின்றன. இங்கிலாந்தின் ரோயல் அகடமியில் உறுப்பினராகச் சேர்ந்த இவர் அரச கலைக் கல்லூரியை ஆரம்பித்து சித்திரம், நடனம், இசை போன்ற 3 துறைகளிலும் மகத்தான சேவையாற்றினார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்லூரி இன்று களனிப்பல்கலைக்கழகத்தின் அழகியற் கலைப்பிரிவு என அழைக்கப்படுகின்றது. இலங்கையின் கல்வித்துறையில் அழகியற் பாடங்கள் தொடர்பாக உயர்ந்த கல்வியறிவை பெற்றுக் கொடுக்கும் நிலையம் இதுவாகும். இதன்படி 3 அழகியற் பாடங்களுக்கும் இவரால் செய்யப்பட்ட சேவை நன்றியுணர்வுடன் இலங்கை கலை வரலாற்றில் புகுத்தப்படுவது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. எல். டீ. பீ. மஞ்சுசிரீ (1902 – 1982)

1902ல் அளுத்கமையில் பிறந்த இவர் இந்திய இலங்கைச் சித்திரக்கலையின் பால் அதிக ஆர்வம் காட்டினார். அதோடு சிறப்பாக அவற்றை வளர்த்தார். இதன் மூலம் அவர் சித்திரங்களை படைப்பதற்குப் பதிலாக பழைய ஓவியங்களைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தினார். மிகப் பழைமை வாய்ந்த சுவர் ஓவியங்களை பிரதியெடுத்து வைப்பதன் மூலம் இதை இலகுவாகச் செய்யலாம். என்பதை புரிந்து கொண்ட அவர் அதற்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

இது உள்நாட்டுக் கலைக்காக அவரால் செய்யப்பட்ட உயரிய பணியாகும். பொரளை கோதமி விகாரையில் ஜோர்ஜ்கீட் சுவர் ஓவியம் வரையும் போது அலங்காரச் சித்தரங்கள் வரைந்து மஞ்சுசிரீ கீட்டுக்கு உதவினார். உள்நாட்டு சித்திரங்களின் ஆக்க பூர்வமான தன்மையை மேற்கு நாடுகளுக்கு எடுத்துக் காட்டிய மஞ்சுசிரீ பிரசித்தி பெற்ற சர்வதேச "**மெக்ஸைஸே**" பரிசினையும் பெற்றுள்ளார்.

1932ல் சாந்தி நிகேதனத்தில் கல்வி கற்கச் சென்ற அவர் அங்கு நந்தலால் போஸின் தொடர்பினால் சித்திரக்கலையில் ஈடுபட்டார். திப்பராயா பாரம்பரிய சித்திரக்கலை முறைகள் பற்றிக் கற்ற மஞ்சுசிரீயின் தாராதேவி என்ற சித்திரம் கண்ணாடிச் செதுக்கலுக்குள்ளாக்கப்பட்டது.

## 40. டப்ளியூ. ஜே. ஜீ. பீலீன்

1907ல் கம்பளையில் பிறந்த இவர் கட்டடக்கலை சித்திரக்கலை போன்றவற்றை கற்றுள்ளார். பம்பாயிலுள்ள J.T. கலையகத்தில் இவற்றைக் கற்றார். 19ம் நூற்றாண்டில் பிரான்சு ஓவியர்களின் சித்திரங்கள் இவரின் சித்திரக் கலைப் படைப்புக்களின் செல்வாக்கு செலுத்தியது. எனவே மேற்குலக சித்திரக் கலைஞர்களான செஸான் ஹென்றி, ரூஸ் போன்றவர்களின் சித்திரங்களில் காணப்படும் கட்டையாக எளிய முறைகள் இவரின் சித்திரங்களிலும் காணப்படுகின்றன. பீலின் தமது சித்திரங்களில் நிலக் காட்சிகள் அசையாத பொருட்களின் தொகுப்பு போன்றவற்றைப் படைத்துள்ளார்..

நிலக்காட்சி ஓவியங்கள் வரைவதற்கு அதிக விருப்பம் காட்டிய இவர் குறிப்பிட்ட சில நிறங்களைப் பயன்படுத்தி சித்திரங்களைப் படைத்துள்ளார். நிறத்தாளை உபயோகித்து மேற்பரப்புத் தன்மையைக் கரடு முரடாகக் காட்டியும் படைக்கப்பட்ட அவரின் சித்திரங்களில் செஸானின் சித்திரங்களின் செல்வாக்கை காணலாம். பச்சை நிறத்தின் பல்வேறு பேதங்களைப் பயன்படுத்தி பூர்த்தி செய்யப்பட்ட "**அல்பீசியா மரம்**" எனும் சித்திரம் மூலம் அவரின் நிற உபயோகத்தைக் காணலாம். பிரதான சித்திரக்கலைப் பரிசோதகர் ஸீ. எப். வின்சருக்குப் பின்பு அப்பதவியில் இவர் அமர்த்தப்பட்டார். சிறுவர் சித்திரக்கலைக்கு இவர் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

## 41. ஜஸ்டின் தரணியகல

1903 ஜுலை 20ம் திகதி கொழும்பில் பிறந்த தரணியகல முதலியார் ஏ.சீ. ஜி. எஸ் அமரசேகரவின் சித்திரக் கலைப் பாடசாலையில் சித்திரம் வரையும் கலையை ஆரம்பித்தார். 1922ல் கேம்பிரிஜ் டிரின்டி வித்தியாலயத்தில் சேர்ந்த தரணியகல சட்டமானிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். ஒகஸ்டஸ் ஜோனின் தூண்டுதலால் பிரித்தானியாவில் பிரசித்த பீ. வின்சன் ஸ்டியர் என்போரின் கீழ் 1926 முதல் 1927 வரை ஜன்டின் சித்திரக் கலையைக் கற்றார். 1928ல் பாரிஸ் சென்ற அவர் 1929ல் இலங்கைக்கு வந்தார்.

மனித உருவங்களையும் பொருட்களையும் பார்த்து வரைவதும் மேற்பார்வையும் தரணியகலவின் சித்திரகலையின் அடிப்படையின் பயிற்சியின் பிரதிபலனாகக் காணப்பட்டது. அவர் தனது வாழ்நாள் முழுவதும் ஆக்கிய படைப்புக்களில் மனித உருவங்களையே தொனிப் பொருளாகக் கொண்டிருந்தார். ஆகவே சித்திரங்கள் சிங்கள கெடுடிக் கலையும் ஹென்றி மதீஸ், ஜோர்ஜ் பிராக், பப்லோ, பிக்காஸோ போன்ற கலைஞர்களின் தழுவல்களால் ஆன பாங்கு ஒன்று தரணியகலவின் சித்தரங்களில் காணப்படுகின்றது. அவருக்கே உரிய கோலமொன்றில் அவர் அதனை உருவாக்கியுள்ளார். அவரின் படைப்புக்களை ஆராயும்போது அவருக்கே உரிய பாங்கு காணப்பட்ட போதிலும் அது விரிவடைந்ததாகவோ காணப்படவில்லை அவரின் படைப்புக்கள் வெளிபாட்டுத்தன்மை கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரணியகல, பிக்காசோவின் கனவுருப் பாங்கையும் மனிஸ் உடைய உருவமொழிக்கும் அதிக விருப்பம் காட்டினார். அவ்வடிப்படையில் நோக்கும் போது ஜஸ்டின் தரணியகலவின் சித்திரங்களைப் புரிந்து கொள்ளமுடியும்.

இலங்கைச் சித்திரக் கலைஞன் ஒருவன் பெற்றுக் கொள்ளக்கூடிய பரிசான யுனெஸ்கோ பரிசை 1956ல் மீன் எனும் தன்னுடைய சித்திரத்துக்குப் பெற்றுக் கொண்ட தரணியகல அதனை 1949ல் படைத்தார். நிவ்யோர்க்கிரபிக் சங்கம் அதனை வர்ணத்தில் அச்சிட்டு உலகுக்கு பகிர்ந்தளித்துள்ளது.

தங்கமீனுடன் யுவதி எனும் தரணியகலவின் சித்திரம் கறு நிறமான பெண்பிளையொருத்தியின் காருணியத்தை வெளிப்படுத்துகிறது. யுவதியின் உருவ இயல்பும் கண்ணாடிக் குவளை யொன்றினுள் இருக்கும் மீனும் ஒரே நேரத்தில் பார்ப்போரின் கண்களில் சிக்கக் கூடியதான பொருத்தமான நிறச் சமநிலையொன்றை தரணியகல பயன்படுத்தியுள்ளார். நீரில் நீந்தும் மீனின் அசையும் தன்மையைக் காண்பது போல காட்டத்தூரிகையைப் பயன்படுத்தியுள்ளார். கறுப்பு நிறத்தை படைப்பின் நான்கு திசைகளிலும் மத்தியிலும் பயன்படுத்தி வர்ணச் சமநிலையை பேணி இருப்பதுடன் அது காட்சியின் தொகுப்புக்கு உதவியாகவும் அமைந்துள்ளது. வர்ணச் சேர்வையை தடிப்பாகத் தடவி மனித உடம்பின் இயல்பைக் காட்டுவதற்கு செறிகுழப்பு வர்ண ஊடகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. வெள்ளை நிறத்தில் அதிகளவில் பயன்படுத்தி பேதங்களை வெளிக்காட்டியதின் ஊடாக நிறச் சுவையை சித்திரத்தில் உயர்த்திக் காட்டியுள்ளார். யானைகள் சண்டையிடும் சித்திரமும் இவரின் சித்திரங்களின் முக்கியமானவை. கோடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பலவகையான அசைவை காட்டியுள்ளார்.



## 42. டேவிட் பேன்டர் (1900—1975)

இமாலய வனத்தில் **"அல்மோரா"** கிராமத்தில் 1900ல் பிறந்த டேவிட் பேன்டர் கண்டி திரித்துவக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி கற்றார். இங்கிலாந்தின் றோயல் அக்கடமியில் சித்திரக் கலை பற்றிப் பயின்றார். 1946ல் சர்வதேச சித்திரக் கண்காட்சியில் கீழைத்தேய சித்திரக் கலைஞர்களுள் உயர்ந்த கலைஞருக்குரிய விருதைப் பெற்றார். 1946ல் கால்செஸமன் என்னும் சித்திரக்கலைஞர் J.D.A. பெரேரா ஆகியோருடன் சேர்ந்து சித்திரக் கண்காட்சியை நடாத்தினார். இவர் மனித உடலை அவ்வாறே சித்திரமாக வரைவதில் ஆர்வம் காட்டினனர். எனினும் பாரம்பரிய கலைஞர்கள் பயன்படுத்திய கடும் நிறங்களில் இருந்து நீங்கிய பேன்டரின் சித்திரங்களில் நெகிழ்வான நிறங்கள் காணப்பட்டன. பல்வேறு நிறப் பேதங்களுடன் ஒரு பிரதேசத்தில் பயன்படுத்தும் இவர் அதன் மூலம் தனது படைப்புக்கு உயிர்ப்பை வழங்கியுள்ளார். ஊதா நிறத்தை மேற்பரப்பில் பரவச் செய்வதில் வெற்றி பெற்ற இவர் அதன் மூலம் நெகிழ்வுத்தன்மையை பேணியுள்ளார் மேலுடம்பு தொகுப்புச் சித்திரங்களில் ஆர்வம் காட்டினார். இலங்கையின் பௌத்த விகாரைகளில் நவீன சுவர் ஓவியக் கலை பரவிச் செல்லும் சந்தர்ப்பத்தில் நவீன சுவர் ஓவியங்கள் கிறீஸ்தவ தேவாலயங்களிலும் வரையும் பெருமையும் இவர் பெற்றார். இதற்கு உதாரணமாக கண்டி திரித்துவ தேவாலயத்தில் வரையப்பட்டுள்ள சித்திரங்களைக் கூறலாம். யேசுநாதருடன் தொடர்பான நிகழ்வுகளைக் காட்டும் போது இவர் அதற்காக இலங்கையரைச் சார்ந்த உடற்தன்மை தேசிய உடையணிகள் என்பவற்றைப் பயன்படுத்தி யேசுநாதர் பாத்திரத்தை இந்நாட்டு மக்களிடம் நெருங்கச் செய்வதில் முயற்சி எடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 43. ரிசட் கப்ரியேல் (1936 – 1978)


ரிசட் ஜோன் கப்ரியல் 1924 பெப்ரவரி 19ம் திகதி மாத்தறையில் பிறந்தார். கொழும்பு சென். பீட்டர்ஸ் வித்தியாலத்தில் கல்வி பயின்ற கப்ரியல் தமது கல்வியை முடித்துக் கொண்ட பின்னர் அமிவன் பீரிஸ் என்பவரின் கீழ் சித்திரக் கலையைக் கற்றார். பின்னர் ஹெரி பீரிஸின் செல்வாக்குக்கு உட்பட்டு கப்ரியல் 43வது குழுவின் உறுப்பினரானார். கிறீஸ்தவ சித்திரக் கலைக்கு மாபெரும் சேவையாற்றிய இலங்கைச் சித்திரக் கலைஞரான கப்ரியேல் கருதப்படுகின்றார். திம்பிரியஸ்ஸாய சென். தெரேசா வழிபாட்டுத் தலத்தில் உள்ள சுவரோவியம், அம்பிட்டிய தேசிய மையவாடியில் உள்ள மரச்சிற்பம். பம்பலப்பிட்டியில் இயேசு இல்லத்தில் உள்ள மரச்சிற்பம் ஆகியன கப்ரியேலின் ஆக்கங்களாகும்.

பாரம்பரிய மரபுகளின் மீதும் கொள்கைகள் மீதும் குறைந்த கவனம் செலுத்திய அவர் தனது சிற்பங்களில் படைத்த எளிமையான உருவங்களுக்கு யந்திர முறையான ஒழுங்கமைப்பை ஏற்பதின் மூலம் தனது பாங்கை அவர் ஏற்படுத்திக் கொண்டார். மேலும் மேற்கூறப்பட்ட அம்சங்களின் கலைமூலம் தாள பாவமொன்றையும் உருவாக்கிக் கொண்டார். நாளாந்த வாழ்க்கையின் செயற்பாடுகள் அவரின் சித்திரங்களுக்கு தொனிப்பொருளாக அமைந்தன.

மரவெட்டு (wood cut) ஊடகத்தின் மூலம் படைக்கப்படும் ஆக்கங்களை இலங்கையில் முதலில் கப்ரியல் அறிமுகம் செய்தார். அவரின் எந்தச் சித்திரத்தையும் அதன் வெளியீட்டுத்திறன் பாதுகாக்கப்பட்ட முறையில் மரவெட்டு ஆக பயன்படுத்திக் கொள்ள முடியும். கப்ரியலின் செறிகுழம்பு ஊடகச் சித்திரம மரவெட்டு ஆகிய ஊடகங்கள் இரண்டிலும் "தொகுப்பு" மிக எளிய முறையில் இருபரிமாணக் கோலத்தின் அடிப்படையில் பிரதானமாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.



1. ரிச்சர்ட் கபிரியேலால் வரையப்பட்டது.
2. தொழிலாளர்களின் கோலாட்டட நிகழ்வு
3. எண்ணை வர்ணம் பிரயோகிக்கப்பட்டது
4. 61 x 90 சென்ரி மீற்றர் அளவுடையது
5. "கன்வஸ்" வரையப்பட்டது



1. சிச்சர்ட் கபிலயோரால் ஆக்கப்பட்டது
2. இதன் ஊடகம் மரம் ஆகும்
3. 1966ல் ஆக்கப்பெற்றது
4. 8 அடி உயரமுடையது
5. கொழும்பு ஜெசிட் சார்பில் உள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 44. தற்காலச் சிலைகள்


தற்காலச் சிலையினையும் சில சிறபக் கலைஞர்களையும் இப்போது ஆராய்வோம். நிகழ்காலத்தின் சிற்பக் கலைஞர்களுக்கிடை முதல் தரமான சிற்பிகள் பலருண்டு. இக்கால சிற்பக் கலைஞர்களுள்:

1. திஸ்ஸ றணசிங்க
2. ஹென்றி தர்மசேன
3. டி. எஸ். றணசிங்க
4. பீ. கே. விஜேசேகர
5. பிரபாத் விஜேசேகர

என்போர் முக்கியமானவர்கள்.

## திஸ்ஸ றணசிங்க

சர்வதேசப் புகழ் பெற்ற இலங்கைச் சிற்பி என திஸ்ஸ றணசிங்க அவர்களைக் குறிப்பிட முடியும். சர்வதேசப் புகழ் பெற்ற ஏனைய சிற்பிகளுக்குப் சமமாக மதிக்கத்தக்கவர். இங்கிலாந்தின் செல்சியா சொசய்டி ஒவ் ஆட்ஸ் இலும் வேறு பிரசித்தி பெற்ற நிறுவனங்களிலும் சிற்பக் கலை பயின்றுள்ளார். இங்கிலாந்திலும் பிரான்சிலும் பிரசித்தி பெற்ற கலைக்காட்சிக் கூடங்களில் இவருடைய சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஐரோப்பிய நாடு களிலேயே இவருடைய ஆக்கங்கள் பிரசித்தி பெற்றுக் காணப்படுகின்றன. தத்ரூப வெளிப்பாட்டில் மட்டுமன்றி மறை பொருள் வெளிபாட்டிலும் மிகத் திறமை வாய்ந்த திஸ்ஸ றணசிங்க அவர்கள் அரச கலா நிறுவனத்தின் தலைவராகச் சேவை செய்துள்ளார்.



1. போதிசத்துவர் ஒருவர் விரத – தியான நிலையில் அமர்ந்திருக்கிறார்.
2. இச் சிற்பத்தை ஆக்கியவர் திஸ்ச ரணசிங்க ஆவா
3. றோயல் கல்லூரியில் இது அமையப்பெற்றுள்ளது.

கொழும்பு ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் அமைக்கப்பட்டுள்ள டி. எஸ். சேனாநாயக்க அவர்களின் உயர்ந்த ஆக்கமாகும். தேசத்தின் தந்தை எனக் கருதப்படும் பிரதமராக இருந்த டி. எஸ். சேனாநாயக்க அவர்களின் துணிச்சல், கம்பீரம், தூரதிருஷ்டி ஆற்றல், தேசத்தினை முன்னெடுத்துச் செல்லும் திறன் ஆகிய இலட்சணங்களை வெளிப்படுத்தும் விதமாக இச்சிலையை ஆக்கியுள்ளார். அகன்ற சமாந்தரப் புயங்கள், முன்னால் தூக்கி வைக்கப்பட்டபடி நிற்கும் பாதம் ஆகியவற்றின் மூலம் சிற்பியின் எண்ணம் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. விசேடமாக தலையினைச் சற்று உயர்த்தி முன்னே பார்த்து நிற்கும் தோற்றம் டி. எஸ். சேனாநாயக்க அவர்களின் தூரதரிசன ஆற்றலை வெளிக்காட்டி நிற்கின்றது. றோயல் கல்லூரியின் புதிய நாடக அரங்கச் சுவரில் இலங்கையின் நாட்டியக் கலையின் தோற்றத்தினையும், வளர்ச்சியையும் எடுத்துக் காட்டும் சிறு செதுக்க வேலைப்பாடும் திஸ்ஸ றணசிங்க அவர்களின் உயர் ஆக்கமாகும். வேறுபட்ட உடுத்தளத்தினைப் பயன்படுத்தி இந்த சிற்ப வேலைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவருடைய சிற்பக் கலைத்திறனை எடுத்தியம்பும் ஆக்கங்கள் இந்நாட்டிலும் பிறநாட்டுக் கலையகங்களிலும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

## ஹென்றி தர்மசேன

ஹென்றி தர்மசேன அவர்களும் தற்காலச் சிற்பியாவார். அத்தோடு அவர் சிறந்த சித்திரக் கலைஞருமாவார். நிறுவன ரீதியான கற்றலின்றி பாரம்பரிய நுட்ப முறைகளை பயன்படுத்திப் பல சித்திரங்களையும் சிற்பங்களையும் ஆக்கியுள்ளார்.

பண்டாரநாயக்கா மாநாட்டு மண்பத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள அவுக்கண புத்த சிலையின் மாதிரி யுருவம் ஹென்றி தர்மசேன அவர்களின் பாரிய சிலையாகும். "**கொங்கிரீட்டும்**" சீமெந்துச் சாந்தும் கொண்டு செய்து முடிக்கப்பட்டிருக்கும் இந்தச் சிலை உறுதியாக இருக்க வேண்டுமென்பதிலும் அக்கறை காண்பிக்கப்பட்டிருக்கிறது. அவுக்கண புத்தர் சிலையின் மாதிரி உருவான இதில் தாய்ச் சிலையின் சகல அம்சங்களையும் அதே விதமான அமைப்பதில் வெற்றி கண்ட அவரின் திறமை சிலையில் வெளிப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இப்பொழுது நிகழ்கால இளம் கலைஞர்கள் சிலரைப் பற்றி ஆராய்வோம். அரச கலா நிலையத்தின் சிற்பத்துறை ஆசிரியச் சிற்பியாக வேலை செய்த டி. எப் றணசிங்க, ஏ. கே.வீ .விஜேசேகர, திஸ்ஸ றணசிங்க, ராஜபக்ச ஆகியவர்கள் இக்கால சிற்பக்கலையின் வளர்ச்சிக்கு பெரும் சேவையாற்றியவர்கள் எனக் குறிப்பிடவேண்டும். மரச் சிற்பக் கலையை மேம்படுத்துவதற்கு ஸ்டான்லி அபேசிங்க அவர்களால் ஆற்றப்பட்டுள்ள சேவை மறக்க முடியாதது.

அரச கலைநிலையத்தில் சிற்பக் கலை கற்ற இளம் சிற்பக் கலைஞர்கள் பலர் அரச தனிப்பட்ட நிறுவனங்களில் தொழில் புரிந்து வருகிறார்கள். அவர்களுக்கிடையில் விமல், சுரேந்திர, பீ. ரத்நாயக்க, புஸ்நாயக்க, புஸ்பானந்த, வீரசிங்க, மகிந்த அபேசிங்க ஆகிய சிற்பிகள் சிறப்பான ஆக்கங்கள் பலவற்றைப் படைத்திருக்கிறார்கள்.

## 45. மறுமலர்ச்சிக் காலம்

15வது நூற்றாண்டின் முற்பகுதியில் இத்தாலியில் தலைநகரம் என அழைக்கப்பட்ட போலோரன்ஸ் நகரில் நடைபெற்ற பண்பாட்டு மலர்ச்சி மறுமலர்ச்சிக் காலம் என குறிப்பிடப்படுகிறது.

எத்தனையோ நூற்றாண்டுகளாக மறக்கவிடப்பட்டிருந்த கிரேக்க உரோம சிறப்பு வாய்ந்த கலை நிர்மாணங்களும் கட்டிடமும், கட்டிடகலைஞர்களுக்கு பெரும் எடுத்துக் காட்டாகியதுடன் சிற்பக் கலைஞர்களுக்கு சித்திரக் கலைஞர்களும் அக்கட்டடங்களுள் இருந்த சிற்பங்களையும் உன்னதமான சிலைகளையும் பயன்படுத்தி அது தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ள முனைந்தார்கள். ஆக்கங்களை ஏற்படுத்தும் போது கிரேக்க உரோம கலைப்படைப்புக்களை முன்மாதிரிகையாக வைத்துக் கொள்ள முனைந்ததனால் இக்காலம் "**மறுமலர்ச்சிக் காலம்**" அல்லது மீண்டும் பிறந்த காலம் எனக் குறிப்பிடுவதற்கு ஆராய்ச்சியாளர் முன் வந்தனர்.

15 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியாகும் போது இத்தாலி முழுவதும் பரவிய இம் மறுமலர்ச்சியின் 16ம் நூற்றாண்டில் ஆக்கப்பட்ட கலைப்படைப்புக்களில் நன்றாகக் காணமுடியும். '**பௌாரன்ஸ்**' நகரில் கலைத்துறையில் ஏற்பட்ட இம்மறுமலர்ச்சியின் தாக்கம் ஐரோப்பா முழுவதும் பரவுவதற்கும், கலைத்துறையில் பூரண மாற்றம் அடைவதற்கும் இக் காலத்தில் வழி ஏற்பட்டது. இம்மாற்றத்தில் சிறப்பான பெறுபேற்றை இன்றுவரை சித்திரம், சிற்பம், கட்டிடங்கள் போன்றவற்றின் மூலம் காணகூடியதாய் உள்ளது.

இத்தாலியின் சித்திரக் கலைஞரான '**ஜியாவோலை**' இம்மறுமலர்ச்சியின் மூல கர்த்தாவாக ஆராய்ச்சியாளர்கள் கணிக்கின்றனர். அவரின் முயற்சியின் காரணமாக இத்தாலியின் சித்திரக் கலைஞர்கள் இத்தாலியினதும் பயஸந்தியாவினதும் கலையில் இருந்தும் வேறுபட்டு இயற்கையான சித்திர ஆக்கத்திற்கு முனைந்தார்கள்.

எப்படியாயினும் இயற்கைக்கு இயைவாக சித்திரம் வளர்வதற்கு இருக்கும் ஆற்றல் விஷேஷமாக முன்னேற்றமடைந்த 1500ம் ஆண்டில் இருந்து 1527ல் ஆண்டுக்குள்ளான காலத்தினுள் மறுமலர்ச்சியினால் ஆசீர்வதிக்கப்பட்ட இத்தாலியக் கலைஞர்களுக்காகும் அவர்கள் சித்திரத்தின் பொருளுக்கான தலைப்பில் துணை இயல்புகளை கவனத்திற் கொள்ளாது நுணுக்கமானதும், பொருளுடையதுமான அமைப்பு முறையில் சித்திரம் வரைந்தார்கள்.

மறுமலர்ச்சிக் காலம் போன்று சித்திரக்கலை தொடர்பாக பொதுமக்கள் உற்சாகப்பட்ட வேறொரு காலப்பகுதி பற்றிக் கலை வரலாற்றில் குறிப்பிடப்படவில்லை. இன்றுவரை பொதுமக்கள் கௌரவத்திற்குப் பாத்திரமாகவுள்ள மைக்கல் ஏஞ்சலோ, லியனாடோடாவின்சி, றபாயல் சன்சியோ ஆகிய கலைஞர்கள் வெளிவந்தது இக்காலத்திலாகும். அவர்கள் ஒவ்வொரு விடயம் தொடர்பாக புகழப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17.** எகிப்தீய சிற்பம் (கருக்கல்) அபுசிம்பல் ஆலயத்தின் 65 அடி உயரமுள்ள ரொமேஸனின் சிலை.

**18.** எகிப்திய சிற்பம் (மரம்) ஹஸிரே

**19.** பைசான் மாடு

**20.** கிரேக்க சிற்பம் ஹர்மிஸ்சும் டயோனிசஸ்சும்

**21.** கிரேக்க சிற்பம் - **'பரிதிவட்டம் எறியும் வீரன்'** மிரன் என்னும் சிற்பியால் செதுக்கப்பட்டது.

**22.** கிரேக்க சிற்பம் - வீனஸ் சிலை இச்சிலையை பிரக்ட் டெலாஸ் என்னும் சிற்பி செதுக்கினார்.


**23.** வாமன உருவம் (இலங்கை)

**24.** மனிதத்தலையும் குதிரை உருவமும் கருங்கல் சிற்பம் (இசுறுமுனிய விகாரை) குப்தர் சிற்பமுறை

**25.** வாகல் கடத்தின் அமைப்பு: இலங்கை


(17 – 22 ஐரோப்பிய சிற்பங்கள்)

(23 – 25 இலங்கைச் சிற்பங்கள்)


17



18


19



20


21


22


23


24


25

## 45. ஐரோப்பிய வரலாறு

### ஆதிகால குகை ஓவியங்கள்

மனிதன் தன் கருத்தை வெளிப்படுத்துவதற்கு ஓவியத்தை ஊடகமாக பயன்படுத்தியுள்ளான் என்பது புலனாகின்றது. எனவே இக் கருத்து பல நூற்றாண்டுகளுக்கு முன் அதாவது வேடர் யுகத்திலிருந்தே வந்துள்ளது.

கி.மு. 40, 000 – 10, 000 வரையுள்ள காலத்தை "பலிலேலல்திய காலம் என (Palaeolithicage) அழைக்கலாம்' அக்காலத்தில் வாழ்ந்த மனிதனை கோமன்னன் மனிதன் என்று கூறலாம். இக்கால பகுதியில் வாழ்ந்த மனிதன் மிருகங்களை வேட்டையாடி வாழ்ந்தான் என பல வரலாற்று நூல்கள் கூறுகின்றன. ஆரம்பத்தில் வேட்டையாடுவதற்கு தேவையான ஆயுதங்களை யானைத்தந்தங்களினாலும், மிருகங்களின் கொம்பு, எலும்புகளினாலும் ஆக்கிக் கொண்டான். ஆரம்பத்தில் கைக்கோடரியை பாவித்த மனிதன் காலப்போக்கில் சிறந்த ஆயுதங்களை ஆக்கும் அளவுக்கு முன்னேறிவிட்டான். ஆதிகால மனிதன் தனக்கு தேவையான உணவு, உடை, உறையுள் என்பவற்றுடன் நின்றுவிடாது ஓய்வு நேரங்களில் தான் வாழ்ந்த குகைகளில் மிருகங்களின் உருவங்கள் வரைந்து அழகு படுத்தினான். இக்காலத்துக்குரிய மனிதன் தான் வாழ்ந்த குகைகளில் மிருகங்களின் உருவங்களைத் தவிர வேறு மனித உருவங்களோ இயற்கைக் காட்சிகளோ வரைய எத்தனிக்கவில்லை என்பது அவன் வாழ்ந்த குகைகளில் இருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது.

வட ஸ்பெயின் நாட்டில் **"அல்டமீரா"** என்னும் குகையில் மனித உருவங்களும் இயற்கை காட்சிகளும் வரையப்பட்டுள்ளது இக்குகையில் 40 அடி நீளத்திற்கு 25 மிருகங்களின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இங்கு வரையப்பட்டுள்ள மிருகங்களில் முதல் இடத்தை பெறுவது பைசான் என்னும் மாட்டின் உருவமாகும். இவ் உருவம் ஓடுதல், பாய்தல் போன்ற அமைப்பில் கோடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளது இக்குகையில் பசுவின் உருவமும் பனிமான் குதிரை காட்டுப்பன்றி போன்றவற்றின் உருவங்களும் வரையப்பட்டுள்ளது.

### லாஸ்கோ குகை பிரான்ஸ்

ஆதிகால குகை ஓவியங்களில் லாஸ்கோ குகை ஓவியங்களும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. 1940ம் ஆண்டு இக்குகை ஓவியங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இக்குகையிலும் குதிரை, ஆடுகள், பனிமான், பைசான் போன்ற மிருகங்களின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. அல்ராமீரா குகை ஓவியங்களிலும் பார்க்க காலத்தால் முற்பட்டவை ஓரினேசியன் என்பவரால் வரையப்பட்டது எனக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாஸ்கோ குகையில் அறுபது குதிரைகளின் உருவங்களும் இருபது ஆடுகளின் உருவங்களும் வரையப்பட்டுள்ளன 17அடி நீளமுள்ள ஆட்டின் உருவம் ஒன்றும் வரையப்பட்டுள்ளது. இவ் ஓவியங்கள் அனைத்தும் கறுப்பு நிற கோடுகளினால் வரையப்பட்டுள்ளது. இக்குகையில் 15 அடி நீளமுள்ள 6 ஆடுகளின் உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன.

இவ் ஓவியங்கள் (கி.மு. 25000 ஆண்டுகள் ஒரிக்னேசியன் காலத்துக்குரியவை என கருதப்படுகின்றது. வேறு சிலர் இவ் ஓவியங்களை மக்ரலீனியன் காலத்துக்குரியவை (கி.மு. 10,000) எனக் கூறுகின்றனர்.

பிரான்சில் காணப்படும் இன்னொரு குகை 'நியோ' குகையாகும் இக்குகையிலும் எருமை, மான், குதிரை பைசான் போன்ற மிருகங்களின் உருவங்கள் காணப்படுகின்றது. இங்கு கறுப்பு வர்ணம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இப் பிரதேசத்தில் காணப்படும் **'பேக்மர்ல'** என்னும் குகையில் எருமையால் சண்டையிடும் காட்சியும் குதிரைகளின் உருவங்களும் வரையப்பட்டுள்ளன. பலகோடுகள் சேர்வதன் மூலம கருத்தை தெளிவுபடுத்த முயன்றுள்ளான் ஓவியன்.

**'கோகுள்'** என்னும் குகையில் ஆண்குழந்தையை தூக்கிக்கொண்டு பல பெண்கள் நடனமாடும் காட்சி தீட்டப்பட்டுள்ளது.

இக்குகை ஓவியங்களுக்கு இருண்ட மஞ்சள் வர்ணம், சாம்பல் நிறம், கறுப்பு நிறம் சாதாரண சிவப்பு வர்ணம் பயன் படுத்தப்பட்டுள்ளது. இவ்வர்ணங்கள் தயாரிக்கப்பட்டு மிருகங்களின் எண்ணைக்களுடன் கலக்கப்பட்டு பயன்படுத்தியுள்ளான். தூரிகைகளுக்கு மிருக உரோமங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வர்ணங்கள் கலப்பதற்கு பெரிய துவாரம் உள்ள விதைகளை பயன்படுத்தியுள்ளனர். இவர்களின் ஓவியங்கள் தனித்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது அத்துடன் சுதந்திரமாக வரைந்துள்ளார் என்பது புலனாகின்றது.

## 46. எகிப்திய கலை (கி. மு. 4500 – 2500)

உலகத்தின் பழைய நாகரீகங்களின் எகிப்திய நாகரீகமும் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. நைல்நதிக்கரையில் ஆரம்பமான இவ் நாகரீகம் **'பாரோ'** மன்னனின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாக இருந்தது. எகிப்பதிய வரலாற்றை மூன்று காலங்களாக பிரித்துள்ளனர்.

1. பழைய இராசதானியுகம்
2. மத்திய இராசதானியுகம்
3. ஏகாதிபத்திய யுகம்

எகிப்தியமக்கள் பலவிதமான கலைகளில் திறமைமிக்கவர்களாக திகழ்ந்தார்கள். அவர்கள் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்காக பெரிய அளவிலான பிரமிட்டுக்களை அமைத்தனர் அப்பிரமிட்டுக்கள் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. அத்துடன் "கானெக்" அபுசிம்பெல் ஆகிய ஆலயங்களும் கட்டப்பட்டுள்ளது.

எகிப்திய கலைஞர்கள் ஆரம்பத்திலிருந்து ஒரே வகையான கலை நுட்பங்களையே பயன்படுத்தியுள்ளார்கள்.

### எகிப்திய சிற்பம்

கி.மு. 3200 ஆண்டளவிலிருந்து எகிப்திய கலைஞர்கள் சிற்பங்களும் சிலைகளும் செதுக்குவதில் திறமை மிக்கவர்களாக காணப்பட்டனர். இச்சிற்பங்களை அமைப்பதற்கு கருங்கல் சுண்ணாம்புக்கல் உலோகம் மரம் ஆகிய ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிற்பங்களை அமைக்கும் போது ஒரேவகையான முறைகளை பயன்படுத்தியுள்ளனர். அம்முறை எச்சந்தர்பத்திலும் வேறுபடவில்லை அரசர்களுடைய உருவங்களையும் அரசிகளின் உருவங்களும் அமைக்கும் போது எகிப்திய குருக்களின் ஆலோசனையின்படி அமைத்தனர். பெண்களின் நிறம் மஞ்சலாகவும் ஆண்களின் நிறம் சிவப்பாகவும் வர்ணம் பூசப்பட்டுள்ளது.

எகிப்திய கலை நுணுக்கங்களுடன் காணப்படும் **"ஸ்கிறைப்"** என்பவரின் உருவம் பிரசித்தி பெற்று விளங்குகின்றது வேறு ஒரு உருவம் மனிதத்தலையும் சிங்கத்தின் உடம்பும் கொண்ட **"ஸ்பீங்ஸ்"** என்னும் சிற்பமும் பாரோ மன்னர்களின் வீரத்தைக் காட்டுகின்ற குறியீடாக அமைந்துள்ளது என கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகிப்திய ஓவியங்கள்

எகிப்தியர்கள் ஓவியங்கள் வரைவதற்கு ஓஸ்டாபா சேமக் கலையையும் தேவாலயங்களில் சுவர்களையும் பயன்படுத்தினர் அவர்களின் ஓவியங்கள் வரைவதற்கு எடுத்துக்கொண்ட விடயங்கள் விவசாயம், வேட்டையாடுதல், ஆபரணங்கள் செய்தல், ஊர்வலங்கள், அறுவடை, குருவி வேட்டையாடுதல் என்பனவாகும் .

இவர்கள் தங்கள் ஓவியங்களுக்கு மஞ்சள் சிவப்பு பச்சை நீலம் கறுப்பு வெள்ளை ஆகிய வர்ணங்கள் பயன்படுத்தியுள்ளனர். அதிக அளவில் நீல நிறம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுடைய ஓவியங்களில் **"படகோட்டும் அதிபதி"** என்னும் சித்திரம் போற்றத்தக்கது இவ் ஓவியம் கி.மு 1900 ஆண்டுக்குரியது **"தக்கு"** என்னும் சேமக்கலையில் காணப்படும் இல்லத்தில் **"உணவுப்பரிமாறல்"** என்னும் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. **"பொருளாயிங்சீன்"** என்னும் ஓவியம் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.



துட்ன்காமென்



ராம்செஸ் II




க.:ரி



கற்செப்சுற் அரிசி



நெபிரிற்றி




ஓவியங்கள்



நொபேட் அரிசி



மம்மி



வாத்துச் செதுக்கல்கள்







கடவுள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படிப்பிரமிட்



ஸ்பினிக்ஸ்





கிசா ஸ்பினிக்ஸ் ஆபரணம்

## 47. கிரேக்கக் கலை


கிரேக்கர்கள் ஓவியக்கலையிலும் சிற்பக்கலையிலும் பிரசித்தி பெற்று விளங்கினர். அத்துடன் நாடகக் கலையிலும் இலக்கியத்திலும் வல்லுனர்களாக திகழ்ந்தனர். கி.மு. 750ல் இருந்து 550 வரைகிரேக்கர்கள் எகிப்தியர்களின் கலை நுனுக்கங்களை பின்பற்றினர் ஆலயங்களை அமைக்கும் போதும் எகிப்தியரின் கட்டடக்கலை பின்பற்றப்பட்டுள்ளதைக் காணலாம் கிரேக்கர்களுக்கு தங்கள் ஆக்கங்களை அமைக்கும் போது அரசர்களின் தலையீடோ அல்லது சமயக்குரவர்களின் தலையீடோ இருக்கவில்லை. எனவே சுதந்திரமாக தங்கள் படைப்புக்களை அமைத்தபடியால் தங்கள் விருப்பத்திற்கே அமைத்துள்ளனர். என்பது புலனாகின்றது எகிப்தியர்களுக்கு இப்படி சுதந்திரம் இருக்கவில்லை.

கிரேக்கநாட்டு சிற்பிகள் சிற்பங்கள் செதுக்கப்படுவதற்கு மரம், சுண்ணாம்புக்கல், உலோகம் சலவைக்கல் போன்ற ஊடகங்களை பயன்படுத்தியுள்ளார் கிரேக்க சிற்பிகள் மனித உருவங்களை ஆக்கும்போது மனித உருவங்களின் தத்ரூபத்தை அப்படியே பிரதிபலிக்கக் கூடியதாக அமைத்துள்ளனர்கள் இவர்கள் விளையாட்டு வீரர்கள் எழுத்தாளர்கள் பெருமைக்குரியவர்கள் அரசியல்வாதிகள் போன்றோரின் உருவங்களை அமைத்துள்ளனர்.


கி.மு 5ம் நூற்றாண்டில் கிரேக்க சிற்பியாகிய மைரன் (Myron) பரிதிவட்டம் எறியும் வீரன் (Discoblos) என்னும் சிற்பத்தை சிறந்த முறையில் அமைத்துள்ளார். கிரேக்கநாட்டின் மகா அலெக்சாண்டரின் காலத்தை கெலநிஸ்ரின் காலம் என அழைத்தனர். (கி.மு. 323 416 ) இக்காலத்துக்குரிய வயோதிப வியாபாரப் பெண்ணின் உருவம் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. "லாவோகுன்" (Laocoon) என்னும் சிற்பத்தில் தந்தையும் இருபிள்ளைகளும் பாம்பினால் கடிபட்டு வேதனையில் இருக்கும் ஃபாவத்தை முகத்தில் திறம்படக் காட்டியுள்ளார்.



செல்கெற்



மைசிரினஸ்




கணக்காளர்/ ஸ்கிறைப்



அமினோதெப III



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கழுகுஇலட்சினை செதுக்கல்



பேரோ



செதுக்கல்




கிளியோபற்றா



கீரி




செதுக்கல்



அபுசிம்பெல் ஆலயம்



செதுக்கல்



தூண்



பப்பிரஸ் செடி




. கைரோகிளிப்ஸ்




கழுகு




ஆபரணவேலைப்பாடு




பிரமிட்



முள்ளம்பன்றி



ஓவியம்



மட்பாண்டங்கள்

## 48. உலகப்பிரசித்தி பெற்ற ஓவியர்கள்

1. லியானாடோ டாவின்சி (1452 - 1519)
2. மைக்கல் அஞ்சலோ (1475 - 1564)
3. ரபாயேல் (1483 - 1520)
4. கயற்றோ (1267 - 1336)
5. ருக்கியோ (1260 - 1320)
6. இரவிவர்மா (1868 - )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயற்றோலின் கலைப்படைப்பு

புனித பிரான்சீசின் கதைக்காட்சிகள் ஓவியம்

ருக்கியோவின் கலைப்படைப்பு

கிருஸ்து கண்ணில்லாதவனுக்கு கண்கொடுக்கும் காட்சி ஓவியம்

இரவிவர்மாவின் கலைப்படைப்பு

வீணை மீட்டும் பெண்



வீனஸ்


ஹேர்மிஸ்



செயுஸ்



அதீனா



மினோவா மதகுரு


கடவுளும் இராட்சதனும் சண்டையிடுதல்


ஓவியங்கள்


மட்பாண்டங்கள்


மினோவான்களின் ஓவியம்


பார்தினன் தேவாலயம்

தூண்வகை


டொறிக்


அயோனிக்


கொறிந்தியன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரப்பாயேல் சென்சியோ

1483ல் ஆண்டில் இத்தாலியில் உள்ள உர்பினோ நகரத்தில் பிறந்தவர் சிறந்த ஓவியராகத் திகழ்ந்த இவர் தன்னுடைய ஓவியக்கலையை பேர்ஜினோ என்னும் ஓவியரிடம் ஓவியம் கற்றுக் கொண்டார்.

ஆரம்பத்தில் இவருடைய ஓவியங்கள் பேர்ஜினோ வுடைய பாணியில் வரையப்பட்டிருப்பதைக் காணக்கூடிய தாக இருக்கின்றது. கி.பி. 1504ல் ஓவியக்கலையைக் கற்பதற்காக புளொறன்ஸ் நகரத்துக்குச் சென்றார். அங்கு மைக்கல் அஞ்சலோவையும், லியானாடோ டாவின்சியையும் சந்தித்தார். புளோறன்ஸ் நகரத்தில் நான்கு வருடங்கள் தங்கியிருந்த காலத்தில் பல ஓவியங்கள் அவரால் வரையப்பட்டது. மடோனா ஓவியம், மடோனா ஒப்த கிறான் டியுக், மடோனா ஒப்த செயார் (கதிரையில் அமர்ந்திருக்கும் மடோனா) போன்ற ஓவியங்கள் இவருடையது.

கி.பி. 1508ல் இருந்த இராண்டாம் பாப்பரசரின் அழைப்பை ஏற்று வத்திக்கான சென்ற இவர் வத்திக்கனில் உள்ள ஸ்ரென்சா ரெலா சிக்கன சூரா என்ற கட்டடத்தின் சுவர்களில் பிராஸ்கோ முறையில் சித்திரங்கள் வரைந்துள்ளார். இங்கு காணப்படும் சித்திரங்களில் (THE SCHOOL OF ATHENS ) இவர் சிறந்த சிற்பியாகவும் விளங்கினார்.



குழந்தையேசுவுடன் மரியாளும் ஜோனும்

## மைக்கல் அஞ்சலோ




இவர் கி.பி. 1475ல் இத்தாலியில் உள்ள புளோரன்ஸ் நகரத்திற்கு அண்மையிலுள்ள காசல் கப்றிஸ் என்னுமிடத்தில் பிறந்தார் இவர் தன் னுடைய ஓவியக்கலையை ஜிர்லாண்டாயோ என்பவரிடம் கற்றார் இவர் சிற்பக்கலையுடன் ஓவியக்கலையிலும் சிறந்து விளங்கினார். சிற்பங்களை அமைப்பதற்கு ஒரு வகையான வெள்ளைப்பால் கற்களை ஊடகமாகப் பயன்படுத்தியுள்ளார். இவருடைய கலைப்படைப்புக்களில் **'பியேற்டா'** டேவிற், மோசஸ். எசக்கியேல் போன்ற சிற்பங்கள் இவரால் செதுக்கப் பட்டவை மனித உருவங்களை நேர்த்தியாகவும், பாவத்தன்மையுடனும் அமைத்துள்ளார் பியேற்றா சிற்பம் யேசுநாதரை தாய் மரியாள் தன்னுடைய மடியில் வளர்த்திமிருக்கும் காட்சியாகும். இவருடைய இறுதி சிற்பமாக றொண்டானி பியேற்றா என்னும் சிற்பம் விளங்குகின்றது.

இரண்டாம் பாப்பாண்டவரின் அழைப்பை ஏற்று ரோமாபுரியில் இருக்கும் **'சிஸ்டயீன்'** தேவாலயத்தில் வரையப்பட்ட ஓவி யங்கள் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. 350 அடி நீளமுள்ள பகுதியை ஒன்பது துண்டுகளாக பிரித்து **'உலகை படைத்தல்'** என்னும் கதையை ஓவியமாக தீட்டியுள்ளார். மனித உருவங்கள் 349 அவ் ஓவியங்களில் காணப்படுகின்றது இவ் ஓவியங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1512ல் முடித்தார் அதற்குப் பின்னரும் இத்தேவாலயத்தின் சுவர்களில் ஓவியம் தீட்டியுள்ளார் இங்கு வரையப்பட்டுள்ள '**இறுதித்தீர்ப்பு**' என்னும் ஓவியம் உலகத்திலுள்ள மிகப்பெரிய பிராஸ்கோ சித்திரமாகும்.

வத்திக்கான நகரில் ஸிஸ்ரையின் தேவாலாயத்தில் பாலில் சித்திரம் வரைவதால் உலகப் புகழ் பெற்ற மைக்கல் ஏஞ்சலோ சிற்பக் கலைஞராவதுடன் கட்டிடக் கலைஞரும் ஆவார். உரோம புரியில் பரிசுத்த பீடத்தின் தேவாலயத்தில் சிறந்த சாலையின் கூரையை நிர்மாணித்ததும் அவரது புகழுக்கு காரணமாகியது.

பின் புகழ்பெற்ற கலைஞனான '**டொனெலெலோ**' வின் மாணவனான '**படல்லோ**' வின் உயர்தரமான சித்திரங்களாலும், சிற்பங்களினாலும் மனித உடலின் உரு அமைப்பு தோற்றம் பற்றிக் கற்பதற்கு இளைஞனான மைக்கல் ஏஞ்சலோ தூண்டப்பட்டார் பிற்காலத்தில் மகிழ்ச்சியையும், துக்கத்தையும் போன்றே வெவ்வேறு எண்ணக்களை அறிவிப்பதற்கு மனித உருவை அடிப்படையாக அமைத்துக் கொள்ள அவர் திறமை பெற்றார்.

அக் காலத்தில் இத்தாலியின் பலம் வாய்ந்தவரான '**லோரென்யோடி மெதிஸி**' இன் குடும்பச் சித்திரக் கலைஞராக இரண்டு வருடமளவு செயலாற்றியவர் உரோமாபுரிக்கு சென்று இரண்டாவது ஜீலியஸ் பாப்பரசரின் கீழ் சேவை செய்தார். அவருக்குப் பெரும் புகழ்ச்சியைப் பெற்றுக் கொடுத்த '**ஸிஸ்டைன்**' தேவாலயத்தின் ஓவியங்கள் வரைந்தது. இக் காலத்திலாகும். இத் தேவலாயத்தில் உலகை படைத்தல், ஆதாமை படைத்தல், ஏவாளை படைத்தல், இறுதித் தீர்ப்பு, புனித பீட்டரை சிலுவையில் அறைதல் போன்ற ஓவியங்கள் காணப்படுகின்றது.

இவருடைய சிற்பகளாக மோஸஸ் பியட்டா, இறக்கும் அடிமை, லாரன்சோ டி மெடிகி. டேவிட் என்வனவற்றை குறிப்பிடலாம். சிற்பங்களில் டேவிட சிற்பம் சலவைக்கல்லில் செதுக்கப்பட்ட புகழ்பெற்ற ஆக்கமாகும்.

## மைக்கல் அஞ்சலோவின் கலைப்படைப்பு

### பியட்டா:-

மைக்கலஞ்சலோ அவர்களின் படைப்பு 5அடி 9 அங்குலம் கொண்ட இவ்வுருவம சலவைக் கல்லால் செதுக்கப்பட்டது. மரித்த யேசுவைத் தாங்கும் மேரியின் மீது உயிர்த்துடிப்பான இச்சிற்பம் நெஞ்சை நெகிழ வைக்கும் ஒன்றாகும். சிலுவையில் நைந்துபோன இயேசுவின் உடலை லாவகமாக ஏந்தும் மேரியின் முகபாவத்தில் கருணை, அன்பு, சோகம் இழையோடி விடுகிறது மேரியின் ஆடைமடிப்புகளும் இயேசுவின் இடுப்பை மறைத்திருக்கும் துண்டின் மடிப்பும் உருவத்திற்கு உயிரோட்டத்தைத் தந்து விடுகின்றன. உடற்கூறுகளை வரைவதில் லியானார்டோ டாவின்சிக்கு இணையானவன் என்பதை நிரூபிக்கும் பொருட்டு செய்த சிற்பமிது. 1496 ரோம் சென்ற மைக்கல் அஞ்சலோ முதல் முதல் உருவாக்கிய சிற்பம் இதுவாகும். இச் சிற்பம் தற்போது உரோமிலுள்ள புனித பிட்டர் தேவாலயத்தில் உள்ளது.

### இறுதித்தீர்ப்பு:-

இவ் ஓவியம் சிஸ்டைன் தேவாலயத்தில் வரையப்பட்டுள்ளது. யேசுவின் கோட்டோவியங்கள் இதுபோல பல வரைந்துள்ளார். யேசுவின் அருகில் தன்னை ஒடுக்கிக் கொள்ளும் கன்னியின் உருவத்தை இதற்கு முன்பு மனிதனின் வீழ்ச்சி என்ற ஓவியத்தில் உள்ள நங்கையோடு பொருத்திப்பார்க்க வேண்டும். இவ் ஓவியத்தில் நாணத்தால் ஒடுங்கிய பாவத்தை இவ் ஓவியத்தில் சிறப்பாக காட்டியுள்ளார்.



இறக்கும் அடிமை



பியட்டா



மோஸஸ்



இறுதித் தீர்ப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித பீற்றரை சிலுவையில் அறைதல்



லாரன்சோ டி மெடிசி




ஸக்காரியஸ்.



இறுதித் தீர்ப்பு (சில பகுதிகள்)



டேவிட்



மடோனா



டெல்பிகா



இறுதித் தீர்ப்பு

### புனித பீற்றறை சிலுவையில் அறைதல்:-

இவ் ஓவியம் பாலின் தேவாலயத்தில் வரையப்பட்டுள்ளது ஈட்டிகளுடன் வரும் வீரர்கள் கூட்டம் இதில் சித்திரிக்கப்பட்டுள்ளது வீரர்களின் அதிகாரி குதிரை மீது அமர்ந்து கொண்டு கருந்தாடி உள்ள வீரனை நோக்கி வினவுகிறான். இவ்வுருவம் கடைசித்தீர்ப்பு ஓவியத்தில் உள்ளது போலவே செய்யப்பட்டுள்ளது அதிகாரியின் வலதுகையின் அமைப்புமுறை மோசஸ் ஓவியத்தினை ஞாபகப்படுத்து வதாக உள்ளது. நீலநிறத்தலைப்பாகையும் தாடியுடன் கூடிய மனிதன் மைக்கலஞ்சலோவின் தன் உருவம் போல் தோன்றுகின்றது. குதிரை வீரனின் உருவம் மிகவும் உயர்ந்த ஓவியமாக கருதப்படுகின்றது சாய்ந்த முகத்துடனும், கட்டளையிடும் பாவத்துடனும் கம்பீரமாக குதிரைமீது உட்கார்ந்திருக்கும் இவ்வுருவத்தின் பேரழகை வர்ணிக்காத விமர்சர்கள் இல்லை இவ்வுருவங்கள் பேசிக்கொள்ளும் மொழி இரைச்சலற்றதாகும். ரகசியமாக ஏதோ சொல்ல விழைவதாகும்.

### டேவிட் சிற்பம்

இச்சிற்பமும் மைக்கலஞ்சலோவின் படைப்பு 1504ல் இச் சிற்பத்தை சலவைக்கல்லினால் செதுக்கினான். வேதாகமத்தில் வீர மகனாகச் சித்திரிக்கப்பட்ட டேவிட்டை அவனுடைய யௌவன பிராயத்தின் உடலமைப்பு தசைத் திரட்சியுடன் செதுக்கியிருந்தான் நிர்வாணமான இச்சிலை 14 அடி 3 அங்குலம் உயரம் கொண்டது.

மேலும் மைக்கலஞ்சலோவின் கலைப்படைப்புக்களாக காட்சி தருவன.

1. மோசேஸ் (சிற்பம்)
2. எசேக்கியேல்
3. திருக்குடும்ப கன்னியர் (ஓவியம்)
4. மனிதனை சிரிஸ்டித்தல் (ஓவியம்) ஆதாமை படைத்தல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலியனாடோ டாவின்சி


1452 இல் டங்கனில் பிறந்த டாவின்சி எப்போதும் ஞாபகத்தில் வைக்க வேண்டிய ஒருவராவார். அவர் சித்திரக் கலைஞராவார். இசை, சிற்பக் கலைஞரும், பொறியியல் ஆராய்ச்சியாளருமாவார். அதே போன்று விஞ்ஞானியுமாவர். தனது தந்தையினதும், பாட்டியினதும் ஆதரவில் வளர்ந்த டாவின்சி சிறுவனாயிருக்கும் போதே புலோரன்சில் சிற்பக்கலைஞரான **"பெருவியேலின்"** மாணவராவார். பெருவியோவினைப் பிரிந்த அவர் 20 வருடங்களில் **"புளோரன்ஸ்டயின்"** சித்திரக்கலைஞருடன் தொடர்புபட்டார். அதிலிருந்து ஐந்து அல்லது ஆறு வருடங்களின் பின் பல உதவியாளர்களுடனான சித்திரக் கூடமொன்றின் உரிமையாளரானார்.

எப்படியாயினும் அவர் சித்திரக் கலையில் மாத்திரம் நிலையாயிருந்தவர் அல்ல. அவரது சித்திரச் சிறு குறிப்புப் புத்தகம் தொழில் முன்னிலை ஆக்கங்களுக்குத் தேவையான வெவ்வேறு சித்திர வடிவங்களாலும் விஞ்ஞான ரீதியானவற்றை நிரூபிக்கக்கூடிய சித்திரங்களாலும் நிறைந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. அவரால் வரையப்பட்ட கற்பனைச் சித்திரங்களுள் படமாகிய **'மகியின் யாத்திரை'** கபில நிறத்தினால் ஆக்கப்பட்டுள்ளது. இதனால் மனதில் இரகசியம் இருப்பதை வெளிக்காட்டக்கூடிய முகத்தையுடைய கூட்டமொன்று தெய்வத்தாயைச் சுற்றிக் கொண்டிருக்கும் முறை காட்டப்பட்டுள்ளது. 1482இல் மிலானின் மதகுருவின் முன் சென்று பல வருடங்கள் பிரசித்த வேலைப் பொறியியலாளராகவும் வேலைப் பணிப்பாளராகவும் சேவை செய்தார். இக்காலத்தில் அவரது புதிய கண்டு பிடிப்புக்கள் பலவற்றை வெளியிட சந்தர்ப்பம் கிடைத்தது. புதிய இசைக்கருவியொன்றும் கண்டு பிடிக்கப்பட்டது. ஆயினும் சித்திரம் வரைவதையும் கைவிடாத அவர் உலகப் புகழ்பெற்ற இறுதி இரா உணவும் (the last supper) மலைப் பிரதேசத்தின் தெய்வத் தாய்மார் (medona of the rocks) எனும் சித்திரத்தையும் வெளியிட்டார்.

மேலும் புளோரன்ஸ் நகரிற்கு வந்த டாவின்சி புதிய பண்பாடுகளையும், முறைகளையும் தேடிக் கொண்டு வாழ்ந்தார். விசேட காயவிடும் முறையைச் செய்து பார்த்தல் மூலம் நகர மண்டபத்தில் யுத்தக் காட்சிகள் பலவற்றை வரைந்த போதிலும் அவை சில வருடங்களில் அழிந்து போய் விட்டன அவரினால் ஆக்கப்பட்ட **'மொனாலிசா'** சிரிக்கும் பெண் எனும் அபூர்வச் சித்திரம் இன்று வரை விஞ்ஞானிகளின் வேறுபட்ட நோக்கங்களுக்குட்படுத்தப்பட்டு உள்ளது. 1551 இல் அல்லது 1516 இல் பிரான்சிற்குச் சென்ற அவர் முதலாவது பிரான்சீஸ் அரசனால் அரசசபை சித்திரக் கலைஞராக நியமித்துக் கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. 1519இல் இறுதி மூச்சுவிடும் வரை அங்கு வாழ்ந்தார். ஓய்வற்ற வாழ்க்கை ஒன்றை வாழ்ந்து கொண்டு மனிதனையும் உலகத்தவரையும் பற்றிய புதியவற்றைத் தேடிக் கொண்டு உழைத்த அவருக்கு அவரது நோக்கங்களை பூரணமாக நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை வான் பயணம் உட்பட்ட பௌதிக நியாயங்கள் பலவற்றைக் கண்டு பிடித்த அவர் 5000 பக்கங்களிலான குறிப்புகளை இன்றைய மனிதருக்காக மீதப்படுத்தியுள்ளார். அவற்றுள் அவரது வெவ்வேறு கல்விக் கொள்ளைகள் சித்திரக் குறிப்புகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இன்று உலகில் உள்ள கலைப்படைப்புக்கள் பலவற்றை நிர்மாணித்தவரான இவர் மனித உடலை கலைச்சார்பாகவும், விஞ்ஞான ரீதியாகவும் பார்வையிட்ட மறு மலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த முக்கிய கலைஞராவார்.



இறுதி இராப்போசனம்



பல்வேறு தலைகள்



தேவதை




பாறைகளில் கன்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மொனாலிசா



பீரங்கி வண்டி

ஹெலிகொப்ரர்



மடோனா



லெடா



தேவதை



அரசரின் தலைப்பகுதி

**றபாயல்**


ஐரோப்பிய இனத்தவரிடம் றபாயல் என்னும் பெயரில் புகழ் பெற்ற றபாயல் **'ஸன்சியே'** இத்தாலியின் மறுமலர்ச்சிக்கால பல சாலிக்கலைஞராகக் கணிக்கப்படுகின்றார். கி. பி 1483இல் **'ஆர்பினோ'** வில் பிறந்த அவர் சிறு வயதிலேயே பெரியவர்களால் பிரபல கலைஞராக இருந்த பெறாஸிதோ என்பவரின் கீழ் சித்திரக்கலைக் கற்பதற்காக பெறாஜியாவிற்கு அனுப்பப்பட்டார்.

கருத்துக்களைக் கொண்ட கலைஞரான இவர் அக்காலப் புகழ்பெற்ற கலைஞர்களது எண்ணங்களை உணர்ந்து கொள்ளும் திறமை பெற்றதினால் கலைஞர்களுடன் சமமாவதற்கு அவற்றை உகந்த முறையில் இணைத்துக் கொள்ளவும் றபாயல திறமை பெற்றார் டாவின்சி என்பவருக்கும் மைகல் ஏன்ஜலோவிற்கும் இளையவராயினும் அவர்களைப் போன்றே கலை உலகில் புகழ் பெற்ற றபாயல் திறமை பெற்றார் 1505இல் இருந்து 1508 வரை பிலோரன்ஸ் நகரில் வாழ்ந்த இவர் **'மெடோனா'** சித்திரங்கள் பலவற்றை நிர்மாணித்தார் அவையே அவரின் புகழுக்கு காரணமாகியது. 1508 இல் பாப்பரசர் மூலம் உரோமபுரிக்கு அழைக்கப்பட்டு அவருக்கு பாப்பரசர் உத்தியோக இல்லத்தை அலங்கரிக்கும் பொறுப்பளிக்கப்பட்டது. 1510 அளவில் அவரால் ஆரம்பிக்கப்பட்ட பாட வகுப்பில் ஒன்றான **'எதன்ஸ் பாடசாலை'** எனும் சித்திரத்தில் கொள்கைகள் பற்றிய கருத்து வெளிப்படுத்துவதாகக் கூறப்படுகிறது. இங்கு புலடோ அரிஸ்டோடல் எனப்படும் கிரேக்க தத்துவ ஞானிகளின் உருவம் அதன் மூலம் பொருளாகக் காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வானம் காட்டும் பிலேடோவின் தெய்வ நம்பிக்கையும் எண்ணங்களுக்குமாகவும் புத்தகமொன்றை கையிலெடுத்த அரிஸ்டோடவை இயற்கை நியதிகளை எடுத்து காட்டுவதற்காக இணைத்துக் கொண்டு இருப்பதாக நம்பப்படுகிறது. இருபக்கக் குழுக்கள் இரண்டு தத்துவம் தொடர்பான விவாதத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் இச் சித்திரத்தால் அக்காலக் கலைஞர்கள் அனுபவித்த துயரங்களைக் காட்டுதல் தொடர்பான வினாக்கள் இருப்பதாகவும் ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர்.





ஸ்கூல் ஓப் அதென்ஸ் ஸ்கூல்ஓப் அதென்சில் காடினல்






மடோனா ஓவியங்கள்

கன்னிமேரி திருமணம்




## போல் ஸெஸான்

இயற்கைப் பொருட்களை கலப்பற்ற நிறங்களைச் சேர்ந்து வரைவதற்கு போல் ஸெலான் ஊக்கப்பட்டது குறிப்புக் கொள்கையாளரின் கொள்கைகளை பின்பற்றியதனாலாகும். பாரிஸ் நகரில் அவர்களுடன் செய்த காட்ச்சிப்படுத்தலின் போது செஸானின் சித்தரம் வர்ணங்களுக்குட்பட்டது. அதனால் கவலைக்குட்பட்டு பாரிஸ் நகரைக் கைவிட்டு எதன்சில் வாழ்வதற்குச் சென்று அக் காலத்தில் வாழ்ந்த நவீன எழுத்தாளரான எம்வி ஸோலாவுடன் அங்கு வாழ்ந்தார். இக்காலத்தில் எம்விசோலா எதிர்பார்ப்பு நிறைவேறாத சித்திரக் கலைஞர் தொடர்பான நாவல் ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார். இக் கதையின் காரணமாக ஸெஸான் தனது நண்பனையும் பிரிந்து தனிமையான வாழ்க்கையை நடத்த முடிவு செய்தார் மனித சமூகத்தைப் பற்றி வெறுப்படைந்த ஸெஸான் உயிரற்ற பொருள்கள் மீது கவனம் செலுத்தத் துவங்கினார். வாழ்க்கை ஒன்று இல்லாத உயிரற்ற பொருட்களை சித்திரத்திற்குட்படுத்துவதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் முழு உலகையும் காணமுடியும் என அவர் நம்பினார். இயற்கையிலும் உயிரற்ற பொருள்களிலும் கேத்திர கணித உருவமைப்பு பற்றி ஞாபகப்படுத்திய செஸான் அவை கோளம், கோணங்கள் சிலிண்டர் போன்ற மாதிரிகள் மூலம் ஆக்கப்பட்டிருப்பதாகக் காட்டினார் இவ்வாறு அநேக உருவமைப்புள்ள பொருள்களின் அமைப்பை ஏற்படுத்தலை முதல் முறையாக சித்திரம் மூலம் காட்டுவதற்கு அவருக்கு முடியுமாயிருந்தது. பிற்காலத்தில் பிகாஸோவினாலும் பிராக்கினாலும் கனவுருவ நுட்பமுறைகளை வெளியிட இச் சித்தாந்தங்களை அவர்கள் சேர்த்துக் கொண்டார்கள்.

இயற்கைப் பொருட்களால் அமைக்கப்பட்ட ஏதாவதொரு காட்சியைப் பார்க்கும் போது உணர்தல் மூலம் அது பற்றிய விளக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்பது செஸான் காட்டித் தந்த இன்னுமொரு மணப்பாங்காகும். உணர்தல் சித்திரத்தின் திட்டமிடுதல் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை அவர் நம்பினார். இவ்வாறான நவீன சித்தாந்தங்கள் சித்திரக்கலையில் வளர்ச்சியடைய உதவியதனால் செஸான் நவீன சித்திரக் கலையின் தந்தையாகக் கணிப்பதற்கு பிற்காலக் கலைஞர்கள் பின்னிற்கவில்லை.

## வின்சன் வான்கோ

ஒல்லாந்தராகிய 'வான்கோ' சித்திரக் கலைஞராக செயலாற்ற பாரிஸிற்கு வரும் போது அவரது வயது 28 ஆகும். முதலாவது குறிப்புக் கொள்கையாளரின் குழுவிற்கு இணைந்த அவர் பின்பு பின்குறிப்பு கொள்கைவாதிகளுடன் சேர்ந்தார். யப்பானிய மரச்சிற்ப அச்சகளுக்கு மதிப்பளிக்க 'வான்கோ' அதில் இருந்த உருவ இயல்புகளை அறிந்து கொண்டார். இதுவரை ஐரோப்பியர் அறிந்து கொள்ளாத ரசிக சித்தாந்தங்களை அகற்றினால் காண முடியும் என்பதைக் கூறிய வான்கோ அவற்றின் முயற்சிக்குட்பட்டார். அதனால் பிறந்த வர்ணத்திட்டத்தினால் புதினப்படக்கூடிய வர்ணக்கலப்புக்களினால் அவரது சித்திரங்கள் அலங்கரிக்கப்பட்டன. ஆயினும் அக்கால சித்தாந்தங்களில் மேம்பட்டுச் சென்ற அவரது சித்திரங்களை மதிப்பிடக்கூடிய எவரும் அக்காலத்தில் இருக்கவில்லை அதனால் அவர் இறந்தபின் இலட்சக்கணக்கிற்கு விற்பனையாகிய போதும் சீவிய காலத்தில் ஒரு சித்திரத்தையாவது விற்பனை செய்ய இயலாது போனதினால் துயரத்துடன் வாழ்க்கையை நடத்தியதாக விளங்குகிறது. இவ்வாறான உள்ளார்ந்த உளவியல் மோதல்களினால் உளச்சுகம் அற்றுப்போனது. அவ்வாழ்க்கை அனுபவங்களின் உண்மை உருவம் அவரது சித்திரங்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக நவீன ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர். இறுக்கமான ஆன்மீகமும், விரக்தியும் ஏக்கமும் அவரது சித்திரங்களுள் உள்ளடக்கப்பட்டிருந்தது என்பது வேறொரு நம்பிக்கையாகும்.

வெறுப்படைந்த தன்மையால் பாரிஸைக் கைவிட்ட அவர் சிறு காலம் பிரான்சில் 'ஆர்லேயில்' வேகோகென் உடன் வாழ்ந்தார். அவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவர் தனது காதை வெட்டிக் கொண்டார். இதனால் அவருக்கு சிறிது காலம் மனநோய் வைத்தியசாலையில் இருக்க வேண்டி ஏற்பட்டது. பின்பு அவர் 1890 இல் தன் உயிரை மாய்த்துக் கொண்டார். மனநோய் வைத்தியசாலையில் கூட அவர் சித்திரக் ஆக்கத்தைக் கைவிடவில்லை. அவரது சித்திர நிர்மாணங்களில் மிக உயர்தரமான ஆக்கங்கள் அக்காலத்தில் பல வெளியிடப்பட்டுள்ளன. அவருக்கே உரித்தான அழகியல் முறையொன்று அவரிடம் இருந்தது. இடத்திற்கிடம் பிளவுபட்ட முறையாலும் வேகமாவும் தீட்டப்பட்ட கலப்படட வர்ணங்கள் அவரது உள்ளார்ந்த மனவேகத்தின் தன்மையைக் காட்டக்கூடிய கண்ணாடி போன்று அவை அமைந்துள்ளது.

ஏதாவதொரு தலைப்பை வெளிப்படுத்தும்போது அவருள் ஏற்படும் அழகியல் திட்டத்திற்கமைய அங்குள்ள வெளி ஒளித் தன்மை அழகிய பொருளாக மாற்றமடையும். அவ்வாறான கலை இயல்புகளை நவீன சித்திரக்கலைஞர்களுக்கு காட்டிக் கொடுத்தவர்களுள் முக்கிய இடம் வான்கோவிற்குக் கிடைக்கும் பிற்காலத்தின் வெளியீட்டுவாத சித்திரக் கலைஞர்கள் குழுவினர் அவரது சித்திரங்களை முதலிடத்தில் வைத்தார்கள்.

## போல்கொகன்

பிரான்சியரான போல்கொகன் முதலில் வியாபாரியாயிருந்தார். சித்திரக் கலையைக் கற்பதற்கு முன்வரும் போது அவரது வயது 35 அளவிலிருக்கும் சுகபோக வாழ்க்கையை வாழ்ந்த அவர் தனது மனைவியையும் நான்கு பிள்ளைகளையும் கைவிட்டு கலைக்காக துறவறம் மேற்கொண்டார். குறிப்புக் கொள்கையாளரைப் பிரிந்து அவருக்கு உகப்பற்ற சமுதாயச் சிக்கல்களாலும் விடுபட்டு தனிமையான வாழ்க்கையை நடத்துவதற்கு நினைத்த கொகான் அவருடன் நட்பு ஏற்படுத்திக் கொண்ட போது பின்பு எதிர்பாராத முறையில் அந்நட்பு முடிவுற்றது. அச் செயலால் முழு நாகரீகமடைந்த மனிதசமூகத்தையும் வெறுத்த அவர் தனது உள்ளார்ந்த தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் 1891 இல் 'தஹிடி' தீவை நோக்கிச் சென்றார். எப்படியாயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு சென்ற பின்பும் அவர் தான் எதிர்பார்த்த சுதந்திர உலகுக்குப் பதிலாக அடிமைத்தனத்தால் தாக்கமடைந்த சமூகத்தைக் கண்டு மேலும் வெறுப்படைந்தார். ஆயினும் அவர் கலைத் திறமைகள் மதிப்புப் பெறவில்லை. **'தஹீடி'** மார்கோஸா தீவுகளில் அவரது தூரிகையினால் ஆக்கப்பட்ட சித்திரங்களால் மனித சமுதாயத்தின் மிக உத்தமமான கதைப்போக்கில் கூறப்பட்டுள்ளதென ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர்.

மத்தியகால ஐரோப்பியக் கலையையும் மேலை நாடுகளின் கலையாலும் திறமைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமாயிற்று. பழமை வாய்ந்த ஐரோப்பியக் கலையில் இருந்து வேறுபட்ட அவரது சித்திரங்கள் தென் கடற்கரையின் அனுபவங்களை நிரம்பப் பெற்றது. இயற்கைப் பொருட்களையும் மனித உருவத்தையும் படத்தில் வரையும் போது அதற்கு முன்பு ஐரோப்பிய கலையில் காணமுடியாத அபூர்வ ஆக்கமாக வெளியிட அவருக்கு முடிந்தது. இதனால் அவரது சித்திரத்தில் காணக்கூடிய விசேட இயல்புகள் சில வருமாறு

(i) நிர்வாணத் தன்மையும் கம்பீரமான தோற்றத்துடன் ஆளுமைத் தன்மையுடையதும்.
(ii) போலினிசிய அலங்காரங்களுடன் கூடிய இருபரிமாண ஆக்கங்கள்
(iii) ஒரே முறையான சாதாரண ஒழுங்கு
(iv) தேவையற்ற துணை இயல்புகள் நீக்கப்படல்
(v) சாதாரண இரேகை முறை
(vi) இயற்கைக்கு மாறுபட்ட சுதந்திர நிற ஒழுங்கு
(vii) மறுமை நிகழ்வுகளை வெளிப்படுத்தக்கூடிய நிறங்களும், நிறந்தீட்டும் சிறப்பான முறைகளும்.

இதன்படி கொகான் நிறங்கள் தொடர்பாகப் புதிய மணப்பாங்குகள் பலவற்றை நவீன சித்திரக் கலைக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

## பாப்லோ பிக்காசோ (1881 – 1972)

இவர் ஸ்பானிய நாட்டில் பிறந்த ஒரு ஓவியர், சிற்பக் கலைஞர். இவரது இயற்பெயர் பார்லோ ரூஸ்பிளாஸ்கோ இருப்பினும் இவர் தனது தாயாரின் பெயரான பிக்காஸோவையே பெரிதும் பயன்படுத்தி வந்தார். இவரது தந்தையார் ஒரு ஓவிய விரிவுரையாளராகவும், ஓவியராகவும் திகழ்ந்தவர். நவீன ஓவிய இயக்கத்தின் முக்கியமான ஓவியரான இவர் 1901ம் ஆண்டு பாரிசிற்கு வந்தார்.

இவர் பல பாணிகளில் வரைந்துள்ளார் ஓவிய வரலாறு பற்றிய நுணுசிகமான அறிவும் ஆதி சிற்பங்கள் மீதான பரிச்சயமும் சிறந்த படம் வரையும் ஆற்றலும் இப்படிப்பல பாணிகளை அடுத்தடுத்து வகுக்க உதவின. இவரது வளர்ச்சியினை பிரித்துக் கூறுவது கடினமெனினும் விவரண வசதி கருதி காலப் பிரிவுகளில் வளர்ச்சியினை விமர்சர்கள் நோக்குவர்.

இவரது ஆரம்ப காலத்தினை நீலக்காலம் என்பர். இது (1901 – 1904) வரை வியாபிக்கிறது. இக்காலத்தில் ஏழைகளின் வாழ்வை அதன் சூழ்நிலைகளை மிகத் துல்லியமான ஓவியங்களாகப் படைத்துள்ளனர்.

(1905 – 1907) வரை **இளஞ்சிவப்புக் காலம்** இக்காலத்திலேயே ஓவியக் கருப்பொருளாக சர்க்கஸ் வீரர்களைக் கொண்ட ஓவியங்கள் வருகின்றன. 1907ம் ஆண்டில் அவிக்னோவின் நங்கையர் என்ற ஓவியத்தை வரைந்தார். இவ்வோவியம் எல்லோராலும் நிராகரிக்கப்பட்டு ஏறக்குறைய 25 வருட காலம் இவரது ஓவியம் கூட மூலையில் சுருட்டி வைக்கப்பட்டுக் கிடந்தது.

1907 லேயே குயூபிசத்தினுள் நுழைந்தார் இதுவே இவரது முக்கியமான சாதனை. 1925 ம் ஆண்டளவில் அகவய யதார்த்த வாதத்தினால் (சூரியலிசம்) சிறிது கவரப்பட்டாரெனினும் அதில் அதிக நாட்டம் கொள்ளவில்லை. வெளிப்பாட்டு வாத ஓவியங்களைப் படைக்கலானார். இதன் உச்சவெளிப்பாடே குவர்னிக்காவாகப் பரிணமித்தது.


2ம் உலக யுத்தத்திற்கு பின் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்த இவர் வார்சோ சென்றார். அங்கு தனது அமைதிப் புறாவைக் கொண்ட புகழ்பெற்ற சுவரொட்டியை வரைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது தந்தையார் புறாக்களை விரும்பி வளர்ந்தவர். அதனாலேயே அவருக்கு புறாக்கள் மீது ஒரு நாட்டம் வளர்ந்தது. அத்துடன் ஸ்பானியாவில் நடைபெறும் காளைச் சண்டைகளை இவர் ஆர்வத்துடன் பார்ப்பார். இப்படிப்பட்ட இளம்பராய நாட்டங்கள் இவரது ஓவியங்களில் நன்கு பிரதிபலித்தது. இவர் பிரான்சில் வசித்து வந்தாலும் அடிப்படையில் ஸ்பானியரது குணாம்சங்களையே கொண்டிருந்தார் என விமர்சகர்கள் கூறுவர்.

1945ம் ஆண்டிற்குப் பின் இவர் படைத்த ஓவியங்கள் அவ்வளவாக சோபிக்கவில்லை. ஒரு முறை சிறுவர் ஓவியம் கண் காட்சிக்குச் சென்றிருந்த பிக்காஸோ நான் இவர்களைப் போல ஓவியம் வரைய எனக்கு ஒரு வாழ்நாள் பிடித்தது எனக் கூறினாராம்.









குவர்ணிக்கா




மாட்டுத்தலை

குவர்ணிக்கா



மாட்டுத்தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49. ஐரோப்பிய கலைக் காலங்களின் குகைச்சித்திரங்கள் காணப்படும் குகைகள்

1. அல்டமீரா குகை
2. செய்ரோ
3. மெரல்லா தெராகுகை
4. டொமிஸ்டிமிஸ் குகை
5. கோகுல் குகை
6. மெகிலின் குகை
7. பெத்மரல் குகை
8. லாஸ்கோ குகை

கிரேக்க கலையின் முதன்மையான சிலை என வர்ணிக்கப்படுவது.

1. எதினா தேவதை சிலையாகும் இதன் உயரம் 40 அடி

## 50. சாஞ்சி தாதுகோபுரம்

இந்தியாவில் போபால் மாகாணத்திலுள்ள சாஞ்சி என்னும் இடத்தில் இத் தாதுகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. பாதிக்கோளவடிவில் அமைக்கப்பட்டுள்ள இத் தாதுகோபத்திற்கு செங்கட்டிகளும் கல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தாதுகோபத்தை சுற்றி பல பிரமாண்டமான கல்லறைகள் காணப்படுகின்றது.

கி.மு முதலாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென கூறப்படுகின்றது. இத்தூபியைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் நான்கு எழில் மிகு தோரணவாயில்கள் கட்டப்பட்டுள்ளன.

நான்கு தோரணங்களும் கருங்கல்லினால் செதுக்கப்பட்டுள்ளது. நிலைகுத்தாக இரண்டு கற்தூண்கள் அமைக்கப்பட்டு அதன் மேற்பகுதியில் மூன்று குறுக்குத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளது. அத்தூண்களில் பௌத்த ஜாதக கதைகள் செதுக்கப்பட்டுள்ளது. இத்தூண்கள் நிலத்திலிருந்து 34 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு காணப்படும். செதுக்கல்களில் ஜாதக கதைகளுடன் புத்தருடைய வரலாறு மற்றும் வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் என்பன புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளது. புத்தருடைய சரித்திரத்தைக் கூறும் செதுக்கல்களில் கிழக்குப் பக்கத் தோரணத்தில் உட்பக்கத்தில் பிம்பிசாரா மன்னன் புத்தபெருமானை சந்திக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது.

வடக்குப்பக்கத் தோரணத்தில் முதலாவது பகுதியில் வெஸ்சந்திர ஜாதக கதையும் அதன் மேற்பகுதியில் சத்தந்த ஜாதக கதையும் தெற்குப்பக்கத் தூணில் மகா கப்பீ (மகாசீல) ஜாதக கதையும் சிறப்பாக செதுக்கப்பட்டது.

வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் என்னும் தலைப்பில் செதுக்கப்பட்டுள்ள தெற்குப் பக்கத் தோரணத்தில் புத்தரின் தாதுப்பொருள் பற்றிய செதுக்கல்களும் கிழக்குத்தோரணத்தின் முற்பகுதியில் அசோகமன்னன் புத்தகாயாவிற்கு வந்ததைப்பற்றியும் (சிறிமாபோதி) வெள்ளரச மரத்தை வணங்குதல் போன்ற காட்சிகளும் காணப்படுகின்றது.

அனேகக் காட்சிகளில் புத்தர் பிரசன்னமாய் இருந்தபோதும் மனித உருவில் காட்டப்படவில்லை. ஆரம்பகாலத்தில் புத்தரை மானிடராய் காட்டாது பலவகையான குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளது. சிறப்பம்சமாக கருதப்படுகின்றது.

சாஞ்சி செதுக்கல்களில் அசோக்க தூண் சிறப்பாகக் காணப்படுகின்றது இத்தூண் தெற்கு வாசலில் அமைக்கப்பட்டுள்ளது. அத்தூணின் நான்கு பக்கங்களிலும் நான்கு சிங்க உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

### சாஞ்சி செதுக்கல் வேலைப்பாடுகள்

முற்பட்ட ஆந்திர காலகட்டத்து செதுக்கல் வேலைப்பாடுகள் கொண்ட சாஞ்சிசேத்தியகிரி என பௌத்த நூல்களில் கூறப்பட்டுள்ளது. இங்குள்ள தூபியின் வேலைகள் அசோக மன்னனால் தொடங்கப்பட்டவை. அசோக மன்னனின் தேவி என்னும் பெயருடைய மனைவி சாஞ்சிக்கு மிக அருகில் உள்ள வீதிசா என்னும் நகரத்தைச் சேர்ந்தவள். மகிந்தன் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் 'தேவி' என்பவளால் தான் பிறந்த பூமியில் கட்டு விக்கப்பட்ட விகாரையில் சிலகாலம் இருந்ததாக குறிப்பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரிபுத்த மொகல்லான, தெகசவ்வன் என்போரது புனித சின்னங்களும், மொக்கலி புத்தி, திஸ்ஸமகா பௌத்த குரு என்போரது புனித சின்னங்களும், மேலும் புத்த சமயத்தை வெளிநாடுகளில் பரப்பச் சென்ற பௌத்த குருமார்களின் புனித சின்னங்களும் பேணப்பட்டு தூபிகள் சில சாஞ்சியில உள்ளன. அசோக மன்னனின் காலந்தொட்டு 11ஆம் நூற்றாண்டு வரை சாஞ்சி முக்கியமாக பௌத்த மத்தியஸ்தானமாக விளங்கியது எனக் கூறலாம்.


சாஞ்சி இடிபாடுகளில் மிக முக்கியமானது முதலாவது தூபியாகும். 120 அடி விட்டமுள்ள இது 54 அடி உயரமானது. நிளத்திலிருந்து 210 அடி உயரத்தில் மேடையும். அதனைச் சுற்றி கல்வேலியும் மேடைக்கு ஏறுவதற்கான கட்டுகளும் உண்டு. சாஞ்சியிலுள்ள தூபிகளில் அசோக மன்னனால் மர அளி வேலியும் மரப் படிக்கட்டுகளும் நிறுவப்பட்டன. பிற் காலத்தில் ஆந்திரர்களால் இவை கல்லால் நிறுவப்பட்டன.




சாஞ்சி தோரணம்

## சாஞ்சியிலுள்ள வாயிற் தோரண செதுக்கல் வேலைப்பாடுகள்

சாஞ்சியிலுள்ள ஸ்தூபிகளில் காணப்படும் வேலியைச் சுற்றி செதுக்கல் வேலைப்பாடுகள் இல்லை. வாயிற் தோரணங்களில் மிக அலங்காரமான செதுக்கல் வேலைப்பாடுகள் உள்ளன. சாஞ்சியிலுள்ள மகா ஸ்தூபியைச் சுற்றி காணப்படும் நான்கு தோரணங்களும் பிரசித்திபெற்ற பௌத்த கலையம்சங்கள் கொண்டு விளங்கும். இங்கு இதே போன்றதொரு சிறிய ஸ்தூபியின் தோரணமும் பிரசித்தி பெற்றது. இவை ஐந்தும் ஒரே தன்மையின் வடிவமைக்கப்பட்டுள்ளன.



கபில வஸ்துவில் மகா பிளில் (சாஞ்சி முகப்பு)



சந்தத்த ஜாதகம் (சாஞ்சி முகப்பு)

இரண்டு பெரிய கற்றூண்களின் மீது விலங்குருவங்கள் காணப்படுகின்றன. அதன் மேற்பகுதியில் மூன்று குறுக்குத் தூண் கள் இடப்பட்டுள்ளன. பெரிய கற்றூண்களின் இரண்டினதும் மேற்பகுதி ஒவ்வொன்றிலும் உள்ள மூன்று சிறு கற்றூண்களின் மீதே இவை பொருந்துமாறு வைக்கப்பட்டுள்ளன. நடுவில் சற்று உயரமான இக்குறுக்கு தூண்களின் அந்தங்களில் சுருளாக்கப்பட்டுள்ள பனை ஓலையின் வடிவு காணப்படும். குத்தாகவுள்ள தூண்களிலும், குறுக்காகவுள்ள தூண்களிலும் இரு பக்கங்களில் அலங்கார செதுக்கல் வேலைப்பாடுகள் உள்ளன. இவ்வாயிற் தோரணத்தின் உச்சியில் நடுவே தருமசக்கரமும் காணப்படுகின்றது. வாய்ப்பாகவுள்ள அதிகமான இடங்களிலும் யானை, சிங்கம் என்பவற்றின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அடியில் காணப்படும் கற் குறுக்குத்தூணை குத்தாகவுள்ள கற்றூணுடன் தொடர்புபடுத்துவதற்கு அரக்கியர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இங்கு குறுக்காகவுள்ள தூண்களின் மீது உள்ள வேலைப்பாடுகள் பின்வரும் 5 நிகழ்வுகளைக் காட்டுகின்றன.

- ✶ ஜாதகக் கதைகள்
- ✶ புத்தரது வாழ்க்கையின் நிகழ்வுகள்
- ✶ ஆதிகாலச் செய்திகள்
- ✶ விலங்குருவங்களும், குறியீடுகளும்
- ✶ அலங்கார வடிவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜாதகக் கதைகள்

* சத்தன்த ஜாதகக்கதை * வெஸ்ஸந்தர ஜாதகக் கதை
* மகாகபி ஜாதகக் கதை * சபா ஜாதகக் கதை
* இசிமிக ஜாதகக் கதை என்பன

## புத்தரது வாழ்கையின் நிகழ்வுகள்

* மாயாதேவியின் கனவு * பௌத்தத்திற்குக் திரும்புதல்
* முற்றுந் துறந்து வெளியேறல்
* கிம்புள்வத் நகரத்திற்கு வருகை தரல்

## ஆதிகால செய்திகள்

* புனித சின்னங்களுக்கான கலகம்
* அசோக மன்னன் போதி மர வழிபாடு செய்தல்
* அசோக மன்னன் தூபி வழிபாடு செய்தல்
* முற்கால குருமாரது போதிகள்

## விலங்குருவங்களும் குறியீடுகளும்

சிங்கம், குதிரை, நாகம், மயில், வாமனம், தருமச்சக்கரம்,

## அலங்கார வடிவங்கள்

பூக்கொடிகள், பழமரங்கள், கேத்திரகணித வடிவங்கள்



## சாஞ்சியிலுள்ள சிறந்த, வேலைப்பாடுகள்

சாஞ்சியின் செதுக்கல் வேலைப்பாடுகளில் வடக்கு வாயிற் தோரணத்தின் கீழ்ப் பக்கம் உள்ள குறுக்குக் கற்றூணின் இரு பக்கத்திலும் செதுக்கப்பட்டுள்ள வேஸ்ஸன்தர ஜாதகக் கதையைக் காட்டும் வேலைப்பாடுகள் சாஞ்சி சிற்பக் கலைஞனின் கலையாற்றலை நன்கு புலப்படுத்தும் நிர்மாணமாகக் காட்சியளிக்கின்றது. யானையின் மீது மக்களின் மத்தியில் காணப்படும் அரச குடும்பத்திற்கு தெரியக்கூடியதாக உள்ள காட்சியில் கதைத்தொடர் வலது பக்கத்தில் இருந்து இடது பக்கம் நோக்கிக் காணப்படும். அரச குடும்பத்தினர் தேரில் செல்லும் காட்சியும், பின் தேர் தானமாகக் கொடுக்கப்பட்டு அது நகரத்திற்கு கொண்டு செல்லும் விதமும் செதுக்கப்பட்டுள்ளது.

பழங்களைப் பிடுங்கும் தேவியைச் சுற்றி விலங்குகள் காணப்படும் விதம் பிராமணனுக்கு தானம் வழங்கலும் அடுத்ததாகக் காட்டப்பட்டுள்ளன. பின்னர் வெஸ்ஸந்தர அரசன் மீண்டும் நகரத்திற்கு அழைத்துச் செல்லும் விதமும் காட்டப்பட்டுள்ளது.

சாஞ்சியின் சிற்பக்கலைஞன் கதைச் செய்திகளை ஒன்றாகத் தொகுத்து பண்பாட்டுக்கமைய காட்டுகின்றான். குறிப்பிட்ட இடமொன்றின் இரு நிகழ்வுகளுக்கிடையிலான காலம், இடப்பெயர் என்பவற்றைக் காட்ட சிற்பக்கலைஞன் முயலவில்லை. பார்போனுக்கு நன்கு தெரிந்த கதையை குறிப்பாக உணர்த்துவதற்காக மிகச் சுருக்கமான வழியைக் கையாண்டுள்ளதை அறியலாம். இன்னும் இதுபோன்று சிறந்த கைவண்ணத்தைக் காட்டும் சந்தத்த ஜாதகக்கதை, மகாகபி ஜாதகக்கதை என்பனவும் உள்ளன.

## புத்தரது வாழ்க்கையின் நிகழ்வுகள்

புத்தரது வாழ்க்கை நிகழ்வுகளில் மயாதேவி கண்ட கனவு, உலக வாழ்விலிருந்து விடுபடல், பௌத்தத்திற்குத் திரும்புதல் போன்ற செதுக்கல் வேலைப்பாடுகளில் புத்தருக்குப் பதிலாக குறியீடுகளே பாவிக்கப்பட்டுள்ளன. கதைத்தொடர் இடது பக்கத்தில் இருந்து வலது பக்கத்திற்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒரு காட்சியில் தேவியின் உள்ளங்களில் கால் வைத்து செல்லும் குதிரையொன்று காணப்படுகின்றது. எனினும் குதிரையின் மீது ஒருவரும் இல்லை. தேவி குதிரையில் உள்ளவரை நோக்கி சாமரை வீசுவதாகவும் அமைந்துள்ளதனால் குதிரையின் மீது புத்தபெருமான் செல்வதாக உணரக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு புத்த பெருமானின் உருவத்திற்குப் பதிலாக பல்வேறு குறிப்புகள் மூலம் அதனை உணர்த்துவதற்கு சாஞ்சியின் சிற்பக் கலைஞன் முற்பட்டுள்ளதை இங்கு விசேடமாகக் குறிப்பிடலாம்.

## ஆதிகாலச் செய்திகள்

சாஞ்சியின் தோரண வாயில்களில் ஆதிகாலச் செய்திகள் சிலவும் அழகிய செதுக்கல் வேலைப்பாடுகளின் மூலம் காட்டப்பட்டுள்ளன. இவற்றில் மலல என்னும் அரசனது புத்திரர்களுக்கும் மற்றொரு அரசனது புத்திரர்களுக்கும் இடையே ஏற்பட்ட புனித சின்னங்கள் பற்றிய கலகம் முக்கியமானது. யுத்த சேனைகள் முற்றுகையிட்டுள்ள விதமும், யுத்தத்தில் ஒன்றுக்கொன்று போர் புரியும் விதமும் நுட்பமாக, திறம்படச் செதுக்கிக் காட்டப்பட்டுள்ளன. மலை அரசனது புத்திரர்கள் புனித சின்னங்களை எடுத்துச் செல்லல், அவற்றை வைத்து தூபியை கட்டியெழுப்பும் விதம் என்பனவும் காட்டப்பட்டுள்ளது. வட்டமான முத்திரைகளில் பரூட்டில் காட்டப்பட்டுள்ள நிகழ்வு செதுக்கல் வேலைப்பாடுகளுக்குப் பதிலாக, சாஞ்சியில் நீண்ட கற்றூண்களில் ஒரு கதை அல்லது நிகழ்வின் பல்வேறு அம்சங்கள் தொடர்ச்சியாகக் காட்ட முடிந்துள்ளதைக் காணலாம். சாஞ்சியின் சிற்பியானவன், கதையொன்றைப் பற்றி கருத்தில் கொள்ளாது முக்கியமான விடயங்களை மட்டுமே எடுத்துக் காட்டுதல் மரபாகக் காணப்படுகின்றது.

கதை நிகழ்வுவகைகளைக் காட்டும்போது பின்னணியின் மரங்கொடிகள், மிருகங்கள் என்பன கண்ணுக்குத் தெரியக்கூடியவாறான அமைப்பில் காட்டப்படவில்லை. மனதில் அது பதியத்தக்கதான சூழ்நிலையை ஏற்படுத்தும் உபாயமாகவே காணப்படுகின்றது. சில செதுக்கல் வேலைப்பாடுகள் மிகுந்தும் குறைந்தும் காணப்படுகின்றன. விலங்குருவங்கள், அரக்கர், அரக்கியர், தேவதைகள் என்பனவும் செதுக்கப்பட்டுள்ளன. தோரணத் தூண்களில் செதுக்கு வேலைப்பாடுகள் செய்ய முடிந்த ஒவ்வொரு அங்குலத்திலும் செதுக்கு வேலைப்பாடுகள் உள்ளன. அசோக மன்னன் போதி வணக்கஞ் செய்யும் விதம் கிழக்கு வாயிற் தோரணத்திலும், தூபி வழிபாடு செய்யும் விதம் தெற்கு வாயிற் தோரணத்திலும் செதுக்கப்பட்டுள்ளது.

## அரக்கியர்களது உருவம்



கற்றூணையும், குறுக்குக் கற்றூணையும் இணைப்பதற்காக அரக்கியர்களது உருவங்கள் மற்ற வேலைப்பாடுகளைவிட நுட்பமாகவும், உயிரோட்ட முள்ளதாகவும் காட்டப்பட்டுள்ளன. கிழக்கு வாயிலில் அரக்கியொருத்தியின் சிற்பம் மரமொன்றின் கிளையை முறிக்கும் விதத்தில் திறம்பட செதுக்கப்பட்டுள்ளது.

இங்கு காட்டப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானிக்கவும். இது மர தேவதை என்னும் ஒரு நம்பிக்கை நிலவுகின்றது. பட்னாவில் மௌரிய செதுக்கு வேலைப்பாடுகளில் வரும் அரக்கியினது உருவத்துடன் இந்த மர தேவதையின் உருவம் ஒத்த தன்மையானதாகக் காணப்படுகின்றது.

## சிற்ப வேலைப்பாடுகளின் பாணி

சாஞ்சியிலுள்ள மேற்படி எல்லா வேலைப்பாடுகளும் மிகவும் நுட்பமாக செதுக்கிக் காட்டப்பட்டுள்ள பாணிகளில், புராணகாலத்து யானைத்தந்த செதுக்கல் வேலைப்பாடுகளில் ஈடுபட்டோரது பாணி காணப்படுகின்றது என்பது பெரும்பாலான விமர்சகர்களது கருத்தாகும். பரூட்டு வேலைப்பாடுகளை விட இவை மிகவும் ஆழமாகக் காட்டப்பட்டுள்ளன. சில காட்சிகளின் மூலம் இதனை தெளிவாக அறியலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாஞ்சியிலுள்ள சிற்ப வேலைப்பாடுகளின் பொதுவான பண்புகள்

* உயிரோட்டமுள்ள தன்மை.
* புத்தருக்குப் பதிலாக குறியீடுகள் பாவிக்கப்படல்
* நுட்பமான வேலைப்பாடுகள் கொண்ட அடக்கமான தோற்றம்
* அசைவோட்டம் காட்டப்பட்டுள்ளமை.
* நேர்த்தியாக அலங்கார வடிவங்கள் காணப்படல்
* நன்கு செப்பனிடப்பட்ட தன்மை

## 51. குகை விகாரைகள்



குகை விகாரைகளை அமைக்கும்பாணி மௌரியர் காலகட்டத்தில் தொடங்கிய ஒரு கட்டிடக் கலையாகும். பெரிய மலைகளில் காணப்படும் கற்பாறைகளைக் குடைந்து இக்குகை விகாரைகள் செய்யப்பட்டன. இந்திய சிற்பிகள் இதற்காக கடினமான கற்களையே தேர்ந்தெடுத்தனர். கதவுகள், யன்னல்கள் என்பவற்றுக்காக கருங்கல் ஏற்றவாறு உளிகளினால் தோண்டப்பட்டுள்ளது.

தூண், ஸ்தூபிகள் என்பவற்றுக்கான இடம் தோண்டாது விடப்பட்டது. பின்னர் இதில் செதுக்கல் வேலைப்பாடுகள் செய்யப்பட்டன.

குகை விகாரைகளில் பொதுவாக மண்டபமொன்றும், தானசாலையொன்றும் வரிசையில் அமைந்த அறைகளும் காணப்பட்டன. சில குகை விகாரைகளில் மேசைகளும், அமருவதற்காக கல் இருக்கைகளும் காணப்பட்டன. இக் கற்குகைகளுக்கு வெளிச்சம் வருவதற்கான குதிரை இலாட வடிவமான பெரிய துவாரம் வாயிற் கதவின் மேல் காணப்படும். அசோக மன்னனால் செய்விக்கப்பட்டதாகக் கருதப்படும். லோமஸ்ருசி என்னும் குகைவிகாரை பிரசித்தி பெற்றது.

## 52. ஹரப்பா, மொகஞ்சதாரோ கலைப்படைப்புகள்

இந்தியாவில் பல்லாண்டுகளுக்கு முன்னரே புகழ்பெற்ற சிறந்த நகரங்கள் இருந்தமை அறியக்கூடியதாக இருக்கின்றது. இந்தியாவின் புராதன நகரங்கள் இருப்பதை சேர் ஜோன் மார்ஷல், சேர் மைக்கோல், சேர் வில்லியம் ஜோன்ஸ், திரு வாட்ஸ், திரு ஸ்ரைன்ட் போன்றவர்கள் அங்கு ஆய்வு செய்து வெளிப்படுத்தியுள்ளனர் இவர்களின் ஆய்வின் பயனாக ஹரப்பா, மொகஞ்சதாரோ போன்ற பழைய நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பஞ்சாப்பிலுல்ல மன்ட்கமரி மாவட்டத்திலுள்ள ஹரப்பாவையும் வர்க்கானா மாவட்டத்திலுள்ள மொகஞ்சதாரோவையும் பற்றி ஆராய்வோம்.

ஹரப்பாவில் 6 மண்மேடுகள் உள்ளன. இது 8 அடுக்குகளையுடைய புராதன நகரம் இன் நகரம் பலமுறை புதுப்பிக்கப்பட்டிருக்கின்றது இங்கு காணப்படும் கட்டிட அமைப்புகள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றது ஹரப்பாவில் மனித உருவம் தீட்டப் பற்றி ஏராளமான இலட்சினைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அத்துடன் கற்சிலைகளும் கிடைத்துள்ளன. இங்கு கிடைத்த 2 கற்சிலைகள் சிறந்தன இவற்றின் கைககள் தனியே செய்து அவை இணைப்பதற்கான துளைகளும் காணப்படுகின்றன இவை மணற்கல்லாலும் பளுப்பு நிறக்கல்லாலும் செய்யப்பட்டுள்ளன. ஹரப்பாவில் கிடைத்த ஓர் இலட்சினை புலி வேட்டையை சித்திரிக்கின்றது. மேலும் ஓர் இலட்சினையில் பெண் உருவத்தின் கருப்பையிலிருந்து செடி ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரப்பாவில் தானியங்கள் சேர்த்து வைப்பதற்கான பிரமாண்டமான கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன ஹரப்பா மக்கள் கலைச்சிறப்புடைய பொருட்களை அளவுத்திட்டத்தில் படைக்க முடியாது போயினும் சிறிதளவில் அவற்றைச் செய்வதில் திறமைபெற்று விளங்கினா் கலைப்படைப்பில் அவர்கள் காட்டிய கைத்திறன் அவர்கள் செய்த இலைச்சினைப் பொறிப்புச் சித்திரங்களிலே காணக்கூடியதாக இருக்கின்றது. நீண்ட தாடி கொண்ட தடித்த தோளுடைய காண்டா மிருகமும் காணப்படுகின்றது.

ஹரப்பா பண்பாட்டிலே கருத்தை மிகக்கவரும் தெய்வ இலைச்சினைகளில் காணப்படும் கொம்புடைய கடவுளின் உருவம் குதிகள் இரண்டும் ஒன்றை ஒன்று தொடுமாறு உடலுக்கு நெருக்கமாக மடக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. அத் தெய்வத்தின் உடல் ஆடையின்றி உள்ளது.

ஹரப்பா மக்கள் விளங்குருவங்களை வியக்கத்தக்கவாறு இயற்கைச் சாயலுடன் செய்தனா் ஊசித்தலைகளாகவும் உருண்டை மணிகளாகவும் பயன்படுத்தப்பட்ட சின்னஞ்சிறு குரங்குகளும் அணில்களும் சிறப்பானவை அம்மக்கள் தம் சிறார்களுக்கு விளையாடுவதற்கென தலையாட்டும் மாடுகளையும் நூலிற் சறுக்கும் மாதிரிக் குரங்குகளையும், சிறுதேர்களையும், குருவி உருவில் அமைத்த ஊதுகுழல்களையும் சுடுமண் கொண்டு செய்தனர். அத்துடன் சுடுமண் கொண்டு பெண் உருவங்களையும் செய்தனா் ஹரப்பா மக்கள் பயன்படுத்திய கத்தி முதலியவற்றின் அலகுகள் தட்டையாகவும் எளிதில் வளைவனவாயும் இருந்தன. அவர்களுடைய மட்பாண்டங்கள் பெரும்பாலும் அலங்காரம் அற்றவையாகவும் காணப்பட்டபோதிலும் நன்கு வனையப்பட்டவை. அவற்றுட் சில நேர்த்தியாக வர்ணம் பூசப்பட்டுள்ளன.

சிந்து நதியின் மேற்கேயுள்ள புராதன நகரமே மொகஞ்சதாரோ ஆகும் இங்கும் கட்டிட முறை சிறந்துள்ளது. கட்டிட சுவர்கள் சுமார் 18 அடி முதல் 25 அடிவரை உயரமுடையதாகக் காணப்படுகின்றது.

இவர்கள் களிமண்ணாலும், மரத்தாலும், செம்பாலும் வெண்கலத்தாலும் சங்கு முதலியவைகளால் வீட்டுப் பொருட்கள் செய்து பயன்படுத்தினார் இங்கு கிடைத்த பொருட்களில் சிவப்பு பூசப்பட்ட பாண்டங்கள் மீது கறுப்பு நிறம் கொண்டு தீட்டப்பட்ட ஓவியங்கள் பல கிடைத்துள்ளன. இதை விட செம்பில் ஓவியம் தீட்டப்பட்ட வளையல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன சிற்பக்கலையிலும் வளர்ச்சி பெற்றிருந்தனர். சுண்ணாம்புக்கல்லில் சிற்பங்கள் சிலைகள் அமைத்தனா் இங்கு நடனமாது, எருமை, குரங்கு, வெள்ளாடு, மனித வடிவங்கள் போன்ற சிற்பங்கள் கிடைத்துள்ளன இங்கு காணப்படும் யோகியின் உருவம் சிறப்பாகக் காணப்படுகின்றது. அவ்வுருவத்தில் கீழ்த்தாடி கோடுகள் போல் மிதப்பாகக் காட்சியளிக்கின்றது. உதடு மிகப்பெரிதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. தலைப்பகுதியில் பட்டி ஒன்று சுற்றிக் கட்டப்பட்டுள்ளது கைகளுக்கும் பட்டி அணியப்பட்டுள்ளது.



யோகியின் உடையில் சித்திரத்தையல் ஆடைகள் காணப்படுகின்றது.

இங்கு வெண்கலத்தாலான ஆடல் மகள் என்னும் உருவம் கவர்ச்சி மிக்கதாகக் காணப்படுகின்றது. ஆடையின்றி கழுத்தில் ஓர் மாலையும் கைநிறைந்த வளையல்களும் கூந்தலை வாரிச்சுருட்டிக் கட்டிய முறையில் காணப்படுகின்றது. ஒரு காலை ஓரளவு மடித்தும் ஒரு கையை இடுப்பில் வைத்தும் நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்புக்கடவுள்



ஒற்றைக்கொம்பு எருது



எருது முத்திரை



முண்டப்படிமை



குரங்கு



எருது



மதகுரு யோகி





## 53. சாரநாத் புத்தர் சிலை



குப்தர் காலத்திற்குரிய பௌத்த கலைகளில் முதன்மை பெறுவது சாரநாத் புத்தர் சிலையாகும். குப்தர் காலத்துக்குரிய புத்தர் சிலைகளில் விசேட தன்மைகள் பல காணப்படுகின்றன. சாந்தம், மென்மை, என்பவற்றை சிறந்தமுறையில் குப்தர் காலத்து சிற்பிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.

பத்மாசன முறையில் அமர்ந்திருக்கும் சாரநாத் புத்தரின் கைகள் தர்மச்சக்கர முத்திரையில் காணப்படுகின்றது. தர்ம சக்கர முத்திரை எனப் படுவது புத்த பெருமான் முதன் முதலில் தர்ம உபதேசம் செய்தல் என்பதை குறிக்கின்றது. புத்தபெருமானின் உடை கழுத்திலிருந்து கால் வரை மூடப் பட்டதாகக் காணப்படுகின்றது. தலைமயிர் சுருள்கள் போன்று அமைக்கப் பட்டுள்ளன. தலையின் பின்பக்கத்தை சுற்றி வட்டவடிவமாக கொடி அலங்காரம் பொறிக்கப்பட்டுள்ளது. அவ்வட்டத்தின் இருபக்கங்கள் தேவர்களின் உருவம் காணப்படுகின்றது. இச் சிலையை அமைப்பதற்கு **"சுனார்"** (வெண் சந்தனக்கல்) என்னும் கல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் உருவம் 5அடி 3 அங்குலம் உயரமுடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 54. அஜந்தா ஓவியம்

இந்தியாவில் உள்ள ஐதிராபாத் என்னும் இடத்தில் அஜந்தா குகைகள் காணப்படுகின்றன செங்குத்தாயுள்ள ஒரு பிரமாண்டமான கற்பாறையில் 29 குகைகள் குடையப்பட்டிருக்கின்றன இக்குகைகள் பலகாலமாக மக்களின் பார்வையிலிருந்து மறைந்து கிடந்தது 1819ம் ஆண்டு முதன் முதலாக ஐரோப்பியரால் கண்டுபிடிக்கப்பட்டன அப்போதே இவை பெரிதும் பழுதுற்றும் ஓவியங்களில் பல அழிந்தும் கிடந்தன அதற்குப் பின்னரும் இவ் ஓவியங்கள் பல காரணங்களால் மென்மேலும் அழிந்து கொண்டே வரலாயின வர்ணங்களும், சுண்ணாம்பும் மேன்மேலும் உதிர்ந்து தரையில் விழலாயின. இன்று எஞ்சியிருப்பவை முன்பு கீழ் நாடுகளில் எங்கும் பரவிச் சிறப்புடன் திகழ்ந்த ஓவியக்கலையின் சொற்ப சின்னங்களே ஆகும். ஆயினும் இச் சின்னங்களே இன்று பண்டைக்கால ஓவியத்தின் பெருமைக்குச் சான்று பகர்வனவாயுள்ளன.

1897 அஜந்தா குகைகளை பரிசீலணை செய்தவர்கள். 29 குகைகளில் 16 குகைகளில் மட்டுமே ஓவியங்கள் இருக்கக் கண்டனர். ஆயினும் ஒரு காலத்தில் குகைகள் எல்லாவற்றிலுமே ஓவியங்கள் வரையப்பட்டிருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர் 1910ல் இவற்றைப் பரிசீலணை செய்தவர்கள் 1;2,9,10,16,17 என்னும் எண்களால் குறிக்கப்பட்ட 6 குகைகளில் மட்டுமே ஓவியங்கள் காணப்படுகின்றன. இக் குகைகளில் உள்ள சுமார் 60 சதுர அடி விஸ்த்தீரணமுள்ள கூடங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சுவர்களிலும், தூண்களிலும் கூரை மேல் விதானங்களிலும் பல ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஆனால் இவை யாவும் ஒரே காலத்தில் வரையப்பட்டனவல்ல இவை பற்பல காலங்களிலும், பற்பல ரீதியிலும் அமைந்துள்ளன. கால ஒழுங்கின் படி இவற்றை 4 வகுப்புகளாக பின்வருமாறு பிரித்திருக்கின்றனர்.

1. 9 - 10 வது எண்களுடைய குடைவுகளில் உள்ள ஓவியங்கள் கி.பி. 100 ஆகும்.
2. 10வது எண்ணுடைய குடையின் தூண்களில் உள்ள ஓவியங்கள் இவற்றின் காலம் கி.பி 350 ஆகும்.
3. 16,17 வது எண்களுடைய குடைவுகளிலுள்ள ஓவியங்கள் இவற்றின் காலம் கி.பி. 500 ஆகும்.
4. 1,2 வது எண்களுடைய குடைவுகளிலுள்ள ஓவியங்கள் இவற்றின் காலம் கி.பி. 626 முதல் 628 வரையில் ஆகும்.

2ம் நூற்றாண்டில் நாகர் வகுப்பைச் சேர்ந்த கலைஞர்களே இவ் ஓவியங்கள் பலவற்றை வரைந்தவர்கள் என்றும் அவர்களுக்குப்பின் 5வது, 6வது நூற்றாண்டுகளில் புத்த பக்சன் என்னும் மன்னன் காலத்தில் பிம்பசாரன் என்னும் கலைஞன் தோன்றி இக் கலைக்கு புத்துயிரளிப்பார் என்றும் கூறப்படுகின்றது.

இவ் ஓவியங்களிற் பெரும்பாலானவை குப்த மன்னர்களின் காலத்தைச் சார்ந்தவை. குப்த மன்னர்கள் வடக்கே ஆக்ஸ்ஸஸ்நதி முதல் தெற்கே இலங்கை வரையில் ஆட்சி செலுத்தினர். அவர்கள் கலைகளைப் பெரிதும் ஆதரித்தனர்.

இக் குகைகளுள் ஓவியம் வரைந்ததன் காரணம் மடத்தின் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட துறவிகளுக்கும், யாத்திரிகர்களுக்கும், புத்தரின் பூர்வ ஜன்மங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக விளக்கவே வரையப்பட்டிருக்கின்றது. இன் நிகழ்ச்சிகள் யாவும் அக் காலத்தில் வழங்கிய ஜாதகக் கதைகளில் இருந்து எடுக்கப்பட்டன சில ஓவியங்களில் துறவறத்திற்கு ஒவ்வாத லௌகீக விசயங்களும் இடம் பெற்றுள்ளன என்பது காணக்கூடியதாக உள்ளது. ஆனால் அவர் புத்தர் நிர்வாணம் அடைய முன் அனுபவித்த வாழ்க்கையை காட்டவே வரையப்பட்டனவாகும். ஆங்காங்கே அக்கால இந்திய வாழ்க்கையைப் பற்றிய சில காட்சிகள் காணப்படுகின்றன.

இங்கு காணப்படும் ஓவியங்கள் பெரிய அளவில் வரையப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு காட்சியிலும் ஒரு பிரதான உருவத்தை சுற்றியே சிறிய உருவங்கள் வரையப்பட்டிருக்கின்றன. பிரதான உருவம் கம்பீர தோற்றத்துடன் பிரமாண்டமான அளவிலும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. பல நுட்பமான வளைவுகளை கொஞ்சும் கூட தடுமாற்றம் இன்றி வரைந்திருக்கின்றனர். சில கோடுகள் சில சாயல்கள் சில வளைவுகள் இவற்றைக்கொண்ட முகத்தோற்றத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் முகபாவத்தையும் காட்டியிருக்கின்றன.

வர்ணங்களைப் பொறுத்த மட்டில் அஜந்தா ஓவியங்கள் உபயோகித்த வர்ணங்களின் செழுமை மிகத்தெளிவாக தெரிகின்றது அவர்கள் பலவிதமான கெட்டியான வர்ணங்களை உபயோகித்து இருக்கின்றனர் கரும் சிவப்பிற்கு எதிராக நீலத்தையும் பச்சையையும் கையாண்டுள்ளனர் உருவங்களின் முகச்சாடையை எடுத்துக்காட்ட கறுப்புப் பின்னணியில் உருவங்களை வரைந்தனர். உடம்பின் நிறத்தைக் காட்ட இளஞ் சிவப்பையும் சாம்பல் நிற வர்ணத்தையும் சேர்த்து வர்ணம் தீட்டியுள்ளனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது குகையின் சுவர்களில் மாறதரிசனம், புத்தர், இந்திரன் சுசி ஆகிய சித்திரங்களும் கூரையில் சில காதல் காட்சிகளும் பாரசீகதூது சிவன் பார்வதிக்கு உபதேசம் செய்தல் ஆகிய ஓவியங்கள் வெகு சிறப்பாக வரையப்பட்டுள்ளது.

இவற்றுள் புத்தரின் ஓவியம் மிகச்சிறந்து விளங்குகின்றது. இது அரண்மனையைத் துறந்து வெளியே போகும் சித்தாத்தனின் சித்திரமாகும் புத்தர் சிறந்த கிரீடத்தை தரித்திருக்கின்றார். அவரது வலது கரத்தில் ஒரு நீலத் தாமரை உள்ளது அவரது முகத்தில் துயரத்தின் சாயலும் ஆழ்ந்த இரக்கத்தின் பாவமும் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.

கூரையில் காணும் சித்திரம் ஒன்றில் 2வது புலகேசி பாரசீக மன்னனின் தூதனை வரவேற்கும் காட்சி காணப்படுகிறது கூரையில் மற்றோர் இடத்தில் பார்வதி சிவன் மடியில் உட்கார்ந்து கொண்டு உபதேசம் கேட்கும் காட்சி வரையப்பட்டுள்ளது. இவ் வுருவங்களுக்கு பின் புறமாக மேகங்கள் காணப்படுகின்றன.

### இரண்டாவது குகை

சிராவஸ்தி மகா அற்புதம் சாந்தி வாதி ஜாதகம் இந்திரலோக காட்சிகள் ஆகியவை இக்குகையில் ஓவியமாக தீட்டப்பட்டுள்ளன.

### 9 – 10வது குகைகள்


மன்னன் பிரதானிகள் சூழ கொலு மண்டபத்தில் வீற்றிருக்கும் காட்சிகளை விபரிக்கும் ஓவியங்கள் காணப்படுகின்றன.

### 16வது குகை


16வது குகையில் முப்புத்தர்கள் மகாத்துறவு, உயிர்த்துறக்கும் தருவாயில் உள்ள இளவரசி ஆகிய பொருள்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

### 17வது குகை


17வது குகையில் 7 புத்தர்கள், காரணச் சக்கரம், மகாஹம்சம், மதி போசகன், சத்தாந்தன் கபி, விசுவாந்தர ஜாதகங்கள் அப்சரஸ்திரிகள் ஆகிய விஷயங்கள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன இவை பெரும்பாலும் புத்தரின் பிறப்பையும் வாழ்க்கை வரலாற்றையும் கதைபோல தொடர்ந்து விளங்குகின்றன. இவற்றில் புத்தர் நிர்வாணம் அடைந்த பின் கபில வஸ்த்துவுக்கு திரும்பிவரும் காட்சி அற்புதமாக அமைந்திருக்கின்றது. புத்தரின் வாலிபத் தோழர்களான சாக்கிய இளவரசர்கள் மலர்களுடன் நகர்ப்புறம் சென்று அவரை வரவேற்கின்றன. ஆனால் எவரும் அவரை அடிபணிந்து வணங்கவில்லை. புத்தர் தெய்வ உருவம் மேற்கொள்ளுகின்றார் அதன்மேல் அனைவரும் தரையில் வீழ்ந்து அவரை வணங்குகின்றனர். அடுத்தநாள் புத்தர் நகரை சுற்றி வந்து பிச்சை எடுக்கின்றார் அவர் அடிச்சுவடுகள் பட்ட இடங்கள் எல்லாம் தாமரைகள் மலர்கின்றன அவரது தலையை சுற்றி ஒரு ஒளி வட்டம் திகழ்கிறது இறுதியில் அரண்மனையின் வாயிலை அடைந்து பிச்சைக் கலயத்தை (பாத்திரத்தை) நீட்டுகின்றார். அப்போது அவரது முகத்தில் ஒரு தெய்வீக ஒளி வீசுகின்றது. அவரது தலைக்கு மேலே வித்தியாதரன் ஒருவன் அந்தரத்தில் அமர்ந்துகொண்டே மலரால் அலங் கரித்த ஒரு குடையை பிடிக்கின்றான். மனைவி யசோதரை மகிழ்ச்சியால் பொங்கி தான் 7 ஆண்டுகளாக ஒதுக்கியிருந்த ஆபரணங்களை எல்லாம் பூண்டு 7 வயது உள்ள தன் மகன் ராகுலனை அழைத்துக் கொண்டு அவர்முன் சென்று மகனை அர்ப்பணம் செய்து வணங்குகின்றாள். ..ாயும் தனயனும் உருக்கமும் சோகமும் உருவெடுத்தால் போல் காட்சி அளிக்கின்றனர் புத்தபிரான் குனிந்து ராகுலனைத் தம் சீடனாக ஏற்றுக்கொள்கிறார்.




போதித்துவ பத்மபாணி



பிச்சையேந்தும் புத்தர்




அமர்ந்திருக்கும் கன்னி



புத்தரை மயக்கமுயலுதல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யானைகள் சண்டையிடுதல்



பாரசீக இளவரசன் வருகை



பெண் உருவம்




சாம்பேஜ ஜாதகம்





மகாஜனக ஜாதகம்




எருதுகள் சண்டையிடுதல்



அப்சரா



அலங்காரம்



மகாஜனக ஜாதகம்



வஜ்ஜிரபாணி போதிசத்துவர்



இறக்கும் இளவரசி



குள்ளர்



அலங்காரம்

## பத்மாபாணி போதிசத்துவ உருவம்



அஜந்தா குகை 1ல் இவ் உருவம் வரையப்பட்டுள்ளது. அஜந்தா குகைகளில் காணப்படும் ஓவியங்களில் மிக உன்னத இடத்தை இவ் ஓவியம் பெற்றுள்ளது இவ் உருவம் சாதாரண மனித உருவத்தைப் பார்க்கிலும் மிகப் பெரிதாக வரையப்பட்டுள்ளது.


உடை அலங்காரம் சாதாரணமாக அஜந்தா குகைகளில் காணப்படும் வரிகளினால் காட்டப்பட்டுள்ளது. கழுத்தில் கறுத்த நிற மணிமாலை ஆபரணமாக அணியப்பட்டுள்ளதைக் காணலாம். பூநூல் தரித்திருப்பதும் காணக் கூடியதாக இருக்கின்றது. வலது கையில் மலர் ஏந்தியவண்ணம் இடது கை கீழ் நோக்கிய படியும் வரையப்பட்டுள்ளது. முகத்தில் யோசனைக்குரிய பாவமும் தலையில் முடியும் தரித்திருப்பது சிறப்பாக காணப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பரிமாண அடிப்படையில் வரையப்பட்டுள்ள இவ் ஓவியத்திற்கு கருமையான மஞ்சள் நிறம் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒளி நிழல் காட்டி முப்பரிமான தன்மையை சிறந்தமுறையில் ஓவியன் வெளிப்படுத்தியுள்ளான்.

இரக்கத்தன்மையை காட்டுவதற்கு ஓவியன் வர்ணத்தையும் கோடுகளையும் சிறந்த முறையில் பயன்படுத்தியுள்ளான். பத்மாபாணி என்ற ஆண் உருவத்தை உயர்ந்த தரத்தில் காட்டுவதற்கு பின்னணியில் வரையப்பட்டுள்ள ஓவியங்களை அளவில் சிறியதாகக் காட்டியுள்ளதும் சிறப்பாகத் தோன்றியுள்ளது.


பாரசீக இளவரசனும் இளவரசியும்
அஜந்தா


19ஆம் குகையின் முகப்புத் தோற்றம்
அஜந்தா குத்தர் காலம்


நாட்டுப்புறக்காட்சி குகையோவியம்
அஜந்தா குத்தர் காலம்

## 55. எல்லோரா குகை ஓவியம்

பீகார்ப் பகுதிகளிலுள்ள எல்லோரா என்ற இடத்தில் மிகப் பெரிய பாறையில் குடையப்பெற்ற கோயில்கள் உள்ளன. எல்ரோராவில் செங்குத்தான பாறையின் முகத்தில் குகைகள் சுமார் ஒரு மைல் நீளத்திற்கும் அதிகமாயுள்ளன. இவை பொதுவாக கி.பி. 4ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 10ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் மூன்று சமயத்தவர்களால் குடையப் பெற்றது. மிகப்பழைய பௌத்த கோயில்களாகவும், இடைப்பட்டவை இந்துக் கோயில்களாகவும், இறுதியில் எழுந்தவை ஜயனக் கோயில் களாகவுமுள்ளன.

எல்லோராவில் 34 குகைகள் உள்ளன. 1 தொடக்கம் 12 வரையுள்ள குகைகள் பௌத்த சமயம் சார்ந்தவை. இவற்றில் 1 தொடக்கம் 5 வரையுள்ள குகைகள் கி.பி. 4ம் நூற்றாண்டு தொடக்கம் 7ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் அமைத்தனர். 2ம், 3ம் குகைகளில் பெரிய புத்தர் சிலைகள் இருக்கின்றது.

6வது குகையின் மூலஸ்த்தானத்தில் வாசலிலே துவார பாலகர்களாக போதிசத்து வரையே செதுக்கியுள்ளனர். 11வது குகையை இரட்டையடுக்கு மாளிகையென்றும் 12வது குகையை மூன்றடுக்கு மாளிகையென்றும் கூறுவர்.

13 தொடக்கம் 28 வரையுள்ள இலக்கமிடப்பட்ட குகைகள் இந்து மதம் சார்ந்தவை. இவற்றில் 16வது குகையே விசேஷ டமானது இராட்டிரவுடை வம்சத்தைச் சார்ந்த முதலாம் கிருஷ்ணன் இங்கு கைலாசநாதர் கோயிலைக் கட்டினான் இக் கோயில் 164 அடி நீளமும் 109 அடி அகலமும் 96 அடி உயரமுடையவை.

இதைச் சுமார் கி.பி. 757 தொடக்கம் கி.பி. 783 வரை காலப்பகுதியில் 3 மாடிகளாக அமைத்தனர். 29வது குகை வைரவர் குகையெனப்படும். இதுவே துமார்லேனா என்னும் குகைக் கோயிலாகும். இக் கோயில் 150 சதுர அடியுடைய பெரிய கூடமாக அமைக்கப்பட்டுள்ளது.


30 தொடக்கம் 34 வரையுள்ள குகைகள் ஜயன சமயத்தவர்களுடையது. திகம் பரராக மாக வீரர் முதலிய பலருடைய சிலைகளும், குபேரன் சிலைகளும், இங்கு பெரியனவாக அமைந்துள்ளன ஜயனக்கோயில்களில் ஒன்றான இந்திரசபை என்னும் கோயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


[illegible] தூண்களும். இவற்றில் காணப்படும் சிறந்த வேலைப்பாடுகளும் நேமி நாதருடைய சாசனத் தேவதையாகிய அம்பிகையின் சிலையும் காணப்படுகின்றது. அம்பிகையின் மடியில் இடப் பக்கத்தில் இவளுடைய இரு புதல்வர்களில் ஒருவன் உடன் சார்ந்து இருக்கின்றான். அம்பிகையின் தலைக்கு மேலாக நேமி நாதருடைய விக்கிரகம் காணப்படுகின்றது. சிங்கமாகிவிட்ட அவருடைய கணவன் அவள் முன்னிலையில் படுத்திருப்பதையும் காணலாம்.



சிவன்



இராவணன் கைலாசமலையைப் பெயர்த்தல்



சிவநடனம்



கைலாசக் கோயில் மசதுக்கல்கள்


கைலாசக் கோயில்


நீரில்விளையாடும் யானைகள்


யானைச் செதுக்கல்கள்


சமணத்தீர்த்தங்காரர்கள்


குகைவாசல்

## 56. பார்க் குகை ஓவியம்



அஜந்தாவிற்கு வடக்கே இந்திய மலையின் தென் சரிவில் உள்ள "பார்க்" என்னும் சிற்றூரின் அருகே இருக்கும் குகைகளில் கி.பி. 5ம் நூற்றாண்டில் வரையப்பட்ட ஓவியங்கள் காணப்படுகின்றன. இங்கு மொத்தம் 9 குகைகள் உள்ளன. 9 குகைகளும் பிக்குமார் வாழ்ந்து வந்த விகாரங்களாகவே காணப்படுகின்றன. இங்குள்ள பெரிய மடங்களில் பள்ளிக்கூடம் சேர்ந்துள்ளது. கற்பக் கிரகங்களில் புத்தர் சிலைக்குப் பதிலாக தூபி உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள கலைப் படைப்புக்களில் பொதுவாகப் புத்தருடைய வாழ்க்கையோடு தொடர்புடைய சம்பவங்களைக் குறிக்கின்றன. 4வது குகைக்கும் 5து குகைக்கும் இடைப்பட்ட வெளித்தாவர உட்சுவரின் மேல் பாகத்தில் சிறந்த ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ் ஓவியங்கள் பெரும் பாலும் லௌகீக முறையைப் பின்பற்றியுள்ளது.

இங்குள்ள சித்திரங்களின் அன்னங்கள், விசித்திர மிருகங்கள் என்பன அழகாகத் தீட்டப்பட்டுள்ளன இங்குள்ள ஓவியங்களில் மிகச் சிறந்த ஓவியமாக **"கவீசலாஸ்லியா"** என்னும் ஓவியம் மிகச் சிறந்த ஓவியமாகச் காணப்படுகின்றது.

## 57. தாஜ் மஹால்

ஷாஜஹான் தன் காதலிக்காக கட்டிய மகாபெரும் மாளிகை தான் தாஜ் மஹால்.



மும்தாஜ் பேகம் பாரத நாட்டு உத்தமப் பெண்களின் வரிசையிலே என்றும் புகழோடு விளங்கும் ஓர் உத்தமி. அவ்வுத்தமியைக் காதலித்த அரசனும் நிகரற்றவனே. அவன் உளக் கோவிலிலே குடிகொண்ட காதல் தெய்வத்தின் இருப்பிடமே தாஜ்மஹால். உலகிலே ஒப்புயர்வற்று விளங்குவதும் பாரத நாட்டின் சிற்பக் கலைக்குச் சிகரமாக விளங்குவது தாஜ்மஹால்.

மொகலாயப் பேரரசு சீரும் சிறப்பும் பெரும் புகழும் அடைந்திருந்த அக்காலத்தில் நாடெங்கும் அமைதி நிலவியது. மொகலாயரின் நிசிச்சாலையில் பொன்னும் வெள்ளியும் குவிந்திருந்தன. அப் பேரரசின் குடிகள் யாவரும் இறந்து போன மகாராணியின் குணநலன்களைப் புகழ்ந்து கண்ணீர் வடித்தனர். ஷாஜஹான் உள்ளத்தில் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கிய காதலுக்கு ஒரு மாளிகை கட்டினால் நாட்டில் வாழ்ந்த மக்கள் யாவரும் அதனை முழுமனத்துடன் ஆதரித்து உதவி புரிவர் என நினைத்தார்.

இஸ்தாத் இஸா என்னும் பெயருடைய புகழ்பெற்ற சிற்பி ஒருவன் கான்ஸ்டாண்டி நோபிலின் இருந்து வயிற்றுப் பிழைப்பிற்காகப் பாரத நாட்டை நாடி வந்தான். இவன் கலவைக் கற்களில் அழகிய கோரிகள் மசூதிகள். மாளிகைகள் முதலியவற்றைச் சிறுவர் விளையாடும் சிறிய அளவில் கூடையில் வைத்து விற்றுப் பிழைத்து வந்தான். ஒரு நாள் அரசன் இவன் செய்த கலவைக் கற்ப துமைகளின் நடுவிலிருந்த கோரி ஒன்றைக் கண்டான். மிகவும் சிறிதாக அமைந்திருந்த அந்தச் சலவைக்கற் கட்டடமே அவர் உள்ளத்தில் நெடுங்காலமாகக் குடிகொண்டு வளர்ந்து வந்த காதலின் படமாக அரசனுக்குத் தோன்றியது. உடனே அரசன் அச் சிற்பியை நோக்கி இதைப் போல் ஒரு பெரிய கட்டிடம் அமைக்க வேண்டிய அளவுத்திட்டங்கள் எல்லாம் வரையறுத்துக் காட்டக் கூடிய ஒரு படம் வரைந்து கொடுக்க இயலுமா எனக் கேட்டான்.

உணர்ச்சி மிகுந்த அச் சிற்பி மறுமொழி ஒன்றும் கூறாமல் கையிலுள்ள தூரிகையால் பர பர என்று தரையிலே பெரியதொரு படத்தை வரைந்து காட்டினான். அதன் ஒவ்வொரு பாகத்தின் அளவையும், அதற்குரிய திட்டங்களையும் குறித்துக் காட்டினான். ஷாஜஹான் பெரும் வியப்புற்று. தமது காதற் கருத்து உருக்கொண்டதென எண்ணி மகிழ்ந்தார். உடனே அச்சிற்பியிடம் மாதிரி கட்டிடம் ஒன்று அமைத்து அக்கட்டிடத்தின் முழுப் படம் ஒன்று வரைந்து கொண்டு வருமாறு ஆணையிட்டார்.

அரசன் குறித்திருந்த நாளில் படமும் மாதிரிக் கட்டிடமும் வந்து சேர்ந்தன. அவற்றைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியுற்ற மன்னன் அச் சிற்பிகளின் மகனான முகமத் இஸா அபண்டி என்பவனைச் சிற்பிகளின் தலைவனாகவும் பாக்காத்திலே இருந்து வந்த முகமது ஹனிப் என்பவனை கொத்தர் தலைவனாகவும் நியமித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்தாத், டில்லி பூட்டான் என்னும் இடங்களிலிருந்து கைதேர்ந்த கொத்தர்கள் பலர் வந்தனர். துருக்கி ஸமர்கந்திலிருந்துப் விமானவேலையில் கைதேர்ந்தவர்கள் வந்தனர். கல்லில் வர்ணவேலை செய்பவர் பாக்த்தாதிலிருந்தும் சித்திர எழுத்துக்களை வெட்டுவதில் சிறந்தவர்கள் ஷிரோஜிலிருந்தும் வந்தனர்.



மும்தாஜ்




ஷாஜஹான்

ஷாஜஹான் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மத்திய ஆசியாவிலிருந்தும் கட்டிடத்திற்குத் தேவையான பல பொருட்களைத் திரட்டிவர ஆட்களை அனுப்பினான். ஜயப்பூரிலிருந்து சலவைக் கற்களும் பஞ்சாபிலிருந்து சூரிய காந்தக் கற்களும் கருநீலக் கற்களும் வந்து சேர்ந்தன. திபெத்திலிருந்து மரகதகற்களும் இலங்கையி லிருந்து வைடூரியமும் இந்திர நீலக்கற்களும் அராபி தேசத் திலிருந்து குருவிந்தக் கற்களும் பவளங்களும் பாரசீகத்திலிருந்து கோமேதகங்களும் செவ்வந்திக் கற்களும் வந்து குவிந்தன. இவற்றைக் கொண்டு இருபதினாயிரம் மனிதர்களின் அரு முயற்சியால் பதினேழு ஆண்டுகளில் உருவடைந்தது. இம் மாளிகை.

## 58. சங்கமித்தையால் வெள்ளரச மரம் கொண்டு வரும் காட்சி

இவ் ஓவியம் புதிய களனி விகாரையில் காணப்படுகின்றது. இலங்கையின் பௌத்த வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்று. இலங்கைக்கு வெள்ளரச மரம் (ஸ்ரீமாபோதி) சங்கமித்தையால் இதற்கென அமைக்கப்பட்ட அலங்காரம் செய்யப்பட்ட படகில் கொண்டு வரப்பட்ட காட்சி, இவ் வெள்ளரசு மரக்கிளையை இரண்டாம் பியதிஸ்ச அரசன் வரவேற்கும் காட்சி.

இவ் ஓவியம் சோலியஸ் மென்டிஸ்சால் வரையப்பட்டது. இதற்கும் மெல்லிய மண்நிறமும், மஞ்சள் நிறமும் சேர்க்கப்பட்டு கறுப்பு நிறத்தால் கோடுகள் வரையப்பட்டுள்ளது. ஒளிநிழல் காட்டப்பட்டு முப்பரிமாணத் தோற்றம் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இவ் ஓவியமும் 1941ம் ஆண்டில் வரையப்பட்டது.



சங்கமித்தையால் வெள்ளரச மரம்
கொண்டு வரும் காட்சி

மேல் கூறப்பட்டுள்ள கலைப்படைப்பை கலை மதிப்பீடு செய்வது எப்படி? எனப் பார்ப்போம். இப்படியான மதிப்பீடு க. பொ. த (சா) தர வினாத்தாளில் இறுதி வினாவாக அமைந்திருக்கும்.

**உதாரணம்:-**

முதலாவது இக் கலைப் படைப்பு எங்குள்ளது? என அறிய எத்தனிக்க வேண்டும். இரண்டாவதாக அக் கலைப்படைப்பை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1. இக் கலைப்படைப்பு எக்காலத்தில் யாரால் எங்கு வரையப்பட்டது?
2. இதன் பொருள் என்ன?
3. ஊடகப் பயன்பாடும் கலை நுட்ப முறையும் என்ன?
4. இப் படத்தின் வெளிப்பாடு என்ன?
5. ஓவியனின் சிறப்பு என்ன என்பதை விபரிக்கப்படல் வேண்டும்?

இவ் உதாரணத்தைப் பார்ப்போம்

1. இவ் ஓவியம் புதிய களனி விகாரையில் சோலியஸ் மென்டிஸ் என்பவரால் 1941ல் வரை வரையப்பட்டது.
2. இதில் காட்டப்பட்டுள்ள விடயம் சங்கமித்தை வெள்ளரசுக் கிளையை கொண்டு வரும் காட்சி.
3. கோடுகள் மூலம் மெல்லிய மண் நிறம், மஞ்சள், சிவப்பு போன்ற வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.
4. இக் காட்சியில் சமயப்பற்றும், சமய உணர்வும் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.
5. ஓவியர் தனது தனித்துவமான முறையில் கோடுகளைப் பயன்படுத்தி ஒளி நிழல் காட்டி முப்பரிமாணத் தோற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.


## 59. அலங்காரச் சித்திரம்

அலங்காரச் சித்திரம் வரையும் போது ஒரு சில வடிவங்களை அடிப்படையாக வைத்து சமச்சீர் அல்லது சமச்சீர் அற்ற முறையிலும் ஒரு ஒழுங்கு முறையில் அலங்காரம் செய்தல் வேண்டும் கீழ்காட்டப்பட்டுள்ள உதாரணங்களைப் பாருங்கள் ஒரு சில இலை வடிவங்கள் மூலம் பல வகையான அலங்காரங்களுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது போன்ற வேறு வடிவங்களைக் கொண்டு பல அலங்காரங்களை செய்ய முயலுங்கள். அலங்காரச் சித்திரங்களின் வர்ணச் சமநிலை பேணப்படல் வேண்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




9




10



11




12



ஒரு வடிவத்தை வரைந்து கொண்டு அவ்வடிவத்தை திசுதாளில் பதிந்து. பரவுருவ அடிப்படையில் அலங்காரம் செய்யலாம். இவ் உதாரணத்தைப் பாருங்கள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 60. சுயாதீனமான இரேகைச் சித்திரமும் வரைதலும் பொருட்களின் வர்ணச்சித்திர ஆக்கமும்

**தரம் 9,10,11;12,13 மாணவர்களுக்கு சித்திரம் பகுதி II பொருட் கூட்டம் பார்த்து வரைதல் முக்கிய பகுதியாகும். சித்திரத்தை மதிப்பிடுகையில் பின்வரும் காரணிகள் கவனத்தில் எடுக்கப்படும்.**


1. உமது சுயாதீனமான சுவட்டுத்தாள் இரேகைச் சித்திரத்தில் ஊடகத்தை கையாள்வதில் நீர்காட்டியுள்ள தேர்ச்சி
2. விகித சமம், புலக்காட்சிக் கோட்பாடுகள் முப்பரிமாண தரம் ஆகியன பற்றிய அறிவு
3. தாளில் தரப்பட்டுள்ள இடத்துக்கேற்ப வடிவங்களை நீர் எவ்வாறு ஒழுங்குபடுத்தியுள்ளீர் என்பது
4. பொருட்தொகுதி வர்ணச் சித்திரத்தில் கலைத்தன்மையுடன் ஆக்கப்பட்டிருத்தல்.
5. வர்ணத் தொழில் நுட்பம் பற்றிய அறிவு.
6. பொருத்தமான பின் புலத்தை (பின்னணி) அமைத்தலிலும் காட்சியுறுப்பமைதலிலும் கொடுக்கப்படுகின்ற அழுத்தம்.

பொருட்கூட்டம் வரையும் முன் மாணவர்கள் பொருட்களை தனித்தனியாக வரைந்து பயிற்சி பெற வேண்டும்.

**கீழ் குறிக்கப்பட்டுள்ள பயிற்சிகளை அவதானியுங்கள்**





கீழ் நோக்கிய பார்வையில்




மேல் நோக்கிய பார்வையில்



சமப் பார்வையில்




ஒரு கண்ணாடி டம்ளரின் வெவ்வேறு தோற்றங்கள்



கீழ் நோக்கிய பார்வை

மேல் நோக்கிய பார்வை






Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Class No ஆசிரியர்/தயாரிப்பாளர் 741
Acc No 302
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புத்தகம் ஒன்றை வரையும் போது கீழ் காட்டப்பட்டுள்ளவாறு வரைவது இலகுவானது.




1.




2.




3.




4.




5.




6.



1.




1.





2.



Arasady Public Library
Municipal Council
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60. களனி விகாரையின் ஓவியங்கள்

களனி விகாரையில் இரு வகையான ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது.


1. முப்பரிமாண நவீன ஓவியங்கள்.
2. இரு பரிமாண பழைய ஓவியங்கள்




சகராஜாவிற்குப் பதவி வழங்குதல்




வெள்ளரசு வருகை



ஹேமமாலா தந்தகுமாரன்



விஜயன் வருகை



சமன் தெய்வம் (சிவன்) கதிர்காமத்தெய்வம்

**முப்பரிமான நவீன ஓவியங்கள்:-**

இவ் ஓவியங்கள் பிரதான புத்தர் சிலை வைக்கப்பட்டிருக்கும் மண்டபத்தின் வாசலின் மேற்பகுதியிலும், சுவரின் இரு பக்கங்களிலும் மகாவம்சம் எனும் நூலின் கூறப்பட்ட சிங்கள இனத்தின் பிறப்பை பற்றி இரு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது.

விஜயன் இலங்கைக்கு வந்த காட்சியும், புத்த சமயத்தை கொண்டு வந்த காட்சியும் மிக அற்புதமாக வரையப்பட்டுள்ளது. இன்னொரு ஓவியத்தில் மகிந்தனின் வருகையின் பின் தேவநம்பிய தீசன் அனுராத புரத்திலுள்ள மகா மேக நந்த வணத்தில் சமய விடயம் சம்பந்தமான காட்சியும் காட்டப்பட்டுள்ளது.

அடுத்த ஓவியத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காட்சியாகிய மாத்தளை அழுவிகாரையின் புத்த சோச பிக்குவினால் மூன்று ஜாதகக் கதைகளின் காட்சிகளும் வரையப்பட்டுள்ளது. வேறு சில காட்சிகளாக அனுராத புரத்தின் மகா விகாரை வாசியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கராச சங்க நாயக்க தேரர்களை வரவேற்க்குதம் காட்சி. சுங்யமித்தை, ஸ்ரீமா போதி (வெள்ளரச மரக்கிளை) மரத்தை கொண்டு வந்த காட்சியும் வரையப்பட்டுள்ளத.

பௌத்த வரலாற்றை எடுத்துக் கூறகின்ற ஓவியமாக சங்க நாயக்க பதவியின் அறிகுறியாக யாளை தந்தங்களைப்பெற்றுக் கொள்ளும் கீர்த்தி ஸ்ரீ என்னும் அரசனால் இலங்கையின் பௌத்த சாசனங்கள் மீணடும் மலரச் செய்யும் விதத்தில் வலிவிட்ட சங்க ராஜ மகா நாயக்க தேரோவிற்கு சங்க நாயக்க பதவி வழங்கும் காட்சியும் வரையப்பட்டுள்ளது.

இவ் ஓவியங்களை வரையும் போது ஆரம்ப வர்ணங்கள் பயன் படுத்தப்படவில்லை. சுதேச வர்ணங்களை தாமாகவே தயாரித்து வர்ணம் தீட்டியுள்ளனர். ஆத்துடன் மிக மெல்லிய கோடுகள் மூலம் மிக நுணுக்கமாக சந்தங்களுடன் வரையப்பட்டிருப்பது விசேட அம்சமாகும்.

தாமரைப் பூ, மாநெல்மலர், ஆகியவற்றை உபயோகித்து கொடி அலங்காரம் வரையப்பட்டுள்ளது. இச் சித்திரங்களை தொலைவில் இருந்து பார்ப்பதை விட மிக அண்மையில் நின்று பார்க்கும் போது அதனுடைய கலை நுட்பம் சிறப்பாக தெரியும்.

இவற்றை வரைந்த ஓவியர் அஜந்தா, சிகிரியா போன்ற இடங்களில் காணப்படும் சித்திரங்களை பின் பற்றி வரையப்படவில்லை ஆனால் அச் சித்திரங்களை நன்றாக அறிந்:து அதன் அடிப்படையில் புதுப் பாணியில் அமைத்துள்ளார். இவ் ஓவியங்களை வரைந்த சோலியஸ் மெண்டிஸ் சிறப்பு பெறுகின்றார்.

## இரு பரிமாண ஓவியங்கள் :-


களனி விகாரையில் சுவரோவியங்கள் 18ம் நூற்றாண்டில் வரையப்பட்டது. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் காலத்தில் இப் பழைய ஓவியங்கள் வரையப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது. இவ் ஓவியங்களில் தென்னிந்திய ஓவியப்பாணியின் சாயல்கள் தென்படுகின்றது. இங்கு பல ஜாதகக் கதைகள் தீட்டப்பட்டுள்ளது. வெஸ்ஸந்தற, தகாம் சொட, மகா சீல, மகா கண்க, தேவதர்ம, தர்மபால. சமாதானம் போன்ற ஓவியங்கள் காணப்படுகின்றது. அதற்கு கீழ்ப் பகுதியில் புத்தறக் பித்த, தர்மறக் பித்த, சங்கரக் பித்த ஆகிய மூவரின் உருவங்கள் வரையப்பட்டுள்ளது.

அதற்குப் பக்கத்தில் உள்ள சுவரில் ஜட்டால திஸ்ஸ, களனி திஸ்ஸ ஆகிய இரு அரசர்களின் உருவங்களும், இடது பக்கத்தில் புத்தரின் சில உருவங்களும், மாறனின் யுத்தமும் ஓவியமாக வரையப்பட்டுள்ளது.

அத்துடன் சமாதி புத்த உருவமும், விஸ்ணு தேவ உருவங்களும், சிவபெருமானின் உருவமும், வாசலின் இரு பக்கங்களிலும் விபுசணனின் உருவமும் வரையப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோலியஸ் மென்டிஸ்

நாகர்களுக்கிடையே நயினாதீவில் ஏற்பட்ட சண்டையை நீக்கி புத்தபெருமான் சமாதானப்படுத்துதல்



சோலியஸ் மென்டிஸ்

புத்தர் களனி விகாரையில் தர்ம உபதேசம் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோலியஸ் மென்டிஸ்

ஹேமமாலா தந்தகுமார அவர்களின் வருகை



சோலியஸ் மென்டிஸ்

சங்கமித்தை வெள்ளரசு மரக்கிளையை இந்தியாவிலிருந்து கொண்டுவந்த காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தபெருமான் அசுரர்களை விரட்டுதல். சோலியஸ் மென்டிஸ்



புத்தபெருமான் சிவனொலிபாத மலைக்குச் செல்லும் காட்சி சோலியஸ் மென்டிஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 61. கோதமி விகாரையின் ஓவியங்கள்


பொரல்லையில் உள்ள கோதமி விகாரையின் முன் பக்க கட்டடத்தில் 4 சுவர்களிலும் தேவ ஆராதனை தொடக்கம் மோட்சம் செல்லும் வரை உள்ள பௌத்த வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் புதுப் பொலிவுடன் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. புத்தரின் பிறப்பு, தேவாராதனை, சித்தார்தர் வில்வித்தை பழகுகுதல், வயோதிபனைக் காணுதல், மாயா தேவியின் கனவு, லும்பினிப் பூங்காவில் புத்தர் இறை போதனையாளர்களை வரவேற்கும் காட்சி, புத்த குமாரன் சமயம் கற்கும் காட்சி, மங்களகரமான காட்சி, பிம்பி சார அரசனை சந்திக்கும் காட்சி, மாரனின் யுத்தம், பரி நிர்வாணமடைதல் போன்ற ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது.

இங்கு காணப்படும் ஓவியங்கள்: ஓவியனின் தனித்துவமான முறையில் ஓவியங்களை வரைந்துள்ளார். கோடுகளுக்க முக்கியத்துவம் கொடுத்து வரைந்திருப்பதனால் அவற்றை வரைந்த ஜோச் கீற் முக்கிய இடத்தைப் பெறுகின்றார்.


மாரனின் யுத்தத்தை வரையும் போது, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாரனின் முகத்தை வெவ்வேறு வடிவங்களில் காட்டியுள்ளார். 13 வகையான மாரனின் முகங்கள் வரையப்பட்டிருக்கின்றது சிங்க முகத்தின் அமைப்பில் சில முகங்களும் வரையப்பட்டுள்ளது. பெண்களின் உருவங்களை சிறந்த முறையில் வரைந்துள்ளார் அவர்கள் அணிந்திருக்கும் சட்டைகளின் கைகள் கட்டையாக வரையப்பட்டுள்ளது கை, கழுத்து என்பவற்றிற்கு ஆபரணங்கள் அணியப்பட்டுள்ளது. பெண்களின் கூந்தல்களுக்கு மலர்களினால் அலங்காரம் செய்யப்பட்டு காணப்படுகிறது. ஆண்களின் உருவங்களுக்கு மேல் உடை அணியப்படவில்லை இருந்த போதிலும் கை, கால், நெஞ்சுப் பகுதிக்கு ஆபரணங்களினால் மறைத்துக் காட்டப்பட்டுள்ளது.



மாயாதேவியின் கனவு



புத்தரின் பிறப்பு




தேவாராதனை



சித்தார்த்தர் வில்வித்தை பழகுதல்




வயோதிபனைக் காணுதல்



பற்றறுக்கும் சிந்தனையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துறவு பூணுதல்



ஜோச் கீற் அவர்களுடைய தனித்துவமான முறையில் வர்ணங்களும், ரேகைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன கோடுகள் மிக லாவண்யமாக அமைக்கப்பட்டுள்ளது சில ஓவியங்களின் வெளிக் கோடுகள் ஓரிடத்தில் தொடங்கி முறிவின்றி முழு உருவத்தையும் காட்டியுள்ளார். அத்துடன் அக் கோடுகள் உயிர்த்துடிப்பு உள்ள ரேகைகள் போல் காட்டப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாக காணப்படுகின்றது.

## 62. கண்டி திருத்துவக் கல்லூரி ஆலயத்தின் ஓவியங்கள்

இங்கு மிகப் பெரிய அளவில் 5 சித்திரங்கள் வரையப்பட்டுள்ளது. இவ் ஓவியங்களை டேவிட் பேண்டர் என்னும் ஓவியர் வரைந்துள்ளார். மேற் கூறப்பட்ட 5 ஓவியங்களில் இரண்டு மண்டபத்தின் வலப் பக்கத்திலும், மற்ற ஓவியம் இடப் பக்கத்திலுள்ள சுவர்களிலும் வரையப்பட்டுள்ளது.

வலது பக்கச் சுவரில் " நல்ல சமாரியன்" என்னும் ஓவியம் வரையப்பட்டுள்ளது. ஓவ்வொரு பகுதியும் 12 x 8 அடி அளவில் ஓவியம் வரையப்பட்டுள்ளது. இவ் ஓவியத்தில் மனித உருவங்கள், ஏழு குதிரை உருவம் ஒன்று காயப்பட்ட ஒருவருக்க நல்ல சமாரியன் உதவி செய்தல், அவரைச் சூழ வேறு மனிதர்களும் காணப்படுகின்றனர். பின்னனியாக மரங்கள், மலைகள் காணப்படுகின்றது. ஒளி நிழல் காட்டி முப்பரிமானத் தோற்றம் சிறப்பாகக் காணப்படுகின்றது.

இடது பக்கச் சுவரில் 12 x 8 அடி அளவில் இயேசு நாதர் அப்போஸ்தலருக்கு கால் கழுவும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலருக்கு நிண்ட உடை அணியப்பட்டுள்ளது. ஒளி நிழல் காட்டப்பட்டுள்ளது வெள்ளை, கருப்பு, பச்சை, நீலம், ஆகிய வர்ணங்கள் பயன் படுத்தப்பட்டுள்ளது.

மற்றும் மூன்று ஓவியங்களில் முதலாவது இயேசு நாதர் சிலுவையில் தொங்கும் காட்சியும் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் இரு கள்வர்களும் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 63. பொரல்ல சகல அர்ச்சிஸ்ரர் ஆலயத்தின் ஓவியங்கள்



இவ்வாலயம் கொழும்பிலுள்ள பொரல்ல என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கோதிக் முறையில அமைக்கப்பட்டுள்ள இவ் ஆலயத்தில் பல ஓவியங்கள் காணப்படுகின்றது. அவ் ஓவியங்கள் அனைத்தும் ஒரு வகையான கண்ணாடியினால் அமைக்கப்பட்டுள்ளது. இதக்குப் பயன்படுத்திய கண்ணாடி ஜேர்மனியிலிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகின்றது: இக் கண்ணாடி "ஸ்டேன்ற் கிளாஸ்" எனக் கூறப்படுகின்றது. இங்கு தேவமாதாவும், குழந்தை இயேசு என்னும் ஓவியம் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இவ் ஓவியத்திற்கு இரு பக்கங்களிலும் இரு சம்மனசுகளும் காணப்படுகின்றது. சிறு சிறு சதுரக் கண்ணாடிகள் மூலம் அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

இவ் உருவங்களுக்கு பக்கத்தில் அலங்கார வடிவங்கள் செய்யப்பட்டுள்ளது. இவ் அலங்காரங்கள் கோடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளது. இவற்றிற்கு கறுப்பு, சிவப்பு, மஞ்சள், ஊதா, மண்நிறம் ஆகிய வர்ணங்கள் பயன் படுத்தப்பட்டுள்ளது.

மண்டபத்தின் இரு பக்கங்களிலும் 10 ஓவியங்கள் காணப்படுகின்னறது. இவற்றில் " வான தூதர்கள் கன்னி மரியாளை யேசுவின் தாயாக அழைத்தல்" என்னும் காட்சியும், "இயேசு நாதர் தனது 12 வயதில் மக்களுக்குப் போதித்தல்" என்னும் காட்சியும், இயேசு நாதருக்கு மரண தண்டனை வழங்கல், பிலாத்துவின் கட்டளை, இயேசு நாதரை சிலுவையில் தொங்கவிடல், இயேசு நாதருக்கு கசை அடி கொடுத்தல் போன்ற காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளது.

# 64. நவீன ஓவியக்கலையின் நிகழ்வுகள்

நவீன ஓவியங்களின் ஆரம்பம் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் என்றும் கூறலாம். கி. பி. 1846ல் நிக்கலஸ் ஐரோப்பிய நாட்டுக்கச் சென்று ஓவியங்கள் கற்று. இலங்கைக்கு வந்து புறக்கோட்டையில் சித்திர அக்கடமி எனனும் சித்திரப் பாடசாலையை நிறுவினார். என்று கூறப்படுகிறது. இக் காலத்தில் புகைப்பட முறை இல்லாத் காரணத்தால் வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளை ஓவியமாகத் தீட்டுவதற்கு ஒல்லாந்தராகிய வன்ரோமா என்னும் ஓவியர் இலங்கைக்கு வந்து நிக்கலஸ்சுடன் சேர்ந்து வரலாற்று முக்கியத்துவம் சாய்ந்த நிகழ்வுகளை ஓவியமாகத் தீட்டினார்.

இக் காலத்தில் இத்தாலியில் ஓவியம் கற்ற ஜோச் கென்றிகஸ் என்பவர் முகத்துவாரத்தில் (கொழும்பு) அமைந்துள்ள சென் ஜேம்ஸ் ஆலயத்திலும், மொறட்டுவையில் உள்ள சென் செபஸ்ரியன் ஆலயத்திலும் ஓவியங்கள் தீட்டியுள்ளார். 1905ம் ஆண்டில் கொழும்பு மருதானையில் அமைக்கப்பட்டிருக்கும் தொழில் நுட்பக் கல்லூரியில் ஓவியக் கலைப் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டது. ஆதற்கு தலைவராக இருந்து செயல் பட்டவர் அல்பிறட் பற்றிக் என்பவர் ஆவார்.

இங்கு கற்றவர்கள் ஒன்று சேர்ந்து ஓவியக் கலைச் சங்கம் என்று ஒரு சங்கத்தை ஆரம்பித்தார்கள் இக் காலப் பகுதியில் இத் தொழில் நுட்பக் கல்லூரியில் கற்ற ஜே ரி எ. பெரெகரா, ஏ. சி. ஜி. அமரசேகர ஆகிய இருவரும் மிகச் சிறந்த ஓவியர்களாகத் திகழ்ந்தனர். ஜே. ரி. எ. பெரெகரா என்னும் ஓவியர் ஆட்டிஸ்ற் என்னும் கலா நிறுவனத்தை அமைத்தார். ஆதற்குப் பின்னர் ஜே. ரி. ஏ. பெரெகரா அவர்களும். ஏ. சி. ஜி. அமரசேகர அவர்களும் ஒன்று சேர்ந்து வேறு சிலருடன் கொழும்பு கலா பவனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து கலா சங்கமொன்றை நிறுவினர். பின் அச்சங்கம் தேசிய கலைச் சங்கம் என்றும், இளைஞர் கலைக் கூட்டம் என்று இருந்த சங்கம் 1958ம் ஆண்டில் தேசிய கலை முன்னணி என்றும் பெயர் இடப்பட்டது.

இலங்கை கலைச் சங்கத்திற்கு வெளியில் 1943ம் ஆண்டு 12பேர் கொண்ட குழுவினர் இலங்கையில் முதல் தடவையாக சித்திரக் கண்காட்சி நடத்தினர். இக் குழுவினரை 43வது குழுவினர் என அழைக்கப்பட்டது. இக் குழுவிற்கு முக்கியஸ்த்தர்களாக லயனல் வென்ரும், கென்றி பீரசும் விளங்கினர். இக் காலப் பகுதியில் எம். சார்ளிஸ் என்னும் ஓவியர் பாரம் பரிய முறையைக் கைவிட்டு மேற்கத்தேய பாணியில் முப் பரிமாணத் தோற்றத்தில் பௌத்த சித்திரங்களை வரைய ஆரம்பித்தார்.

புத்தருடைய வரலாற்றைக் கூறும் பல ஜாதகக் கதைகள் இம் முப்பரிமாண அடிப்படையில் தீட்டப்பட்டு அச் சித்திரங்களை ஜேர்மனிக்கு அனுப்பி அச்சடித்துக் குறைந்த விலையில் விற்பனை செய்தார். இச் சித்திரங்களை பலர் சுவர் அலங்காரங்களுக்கு பயன் படுத்தினர். ஆதனால் சார்ளிஸ் சிறந்த ஓவியராகக் கணிக்கப்பட்டார்.

நவீன ஓவியங்கள் இலங்கையில் பல இடங்களில் காணப்படுகின்றது. அவற்றில் களனி விகாரை ஓவியங்களும், கோதமி விகாரை ஓவியங்களும்,

## 65. கம்பளைகால மரச் செதுக்கல்கள்

கம்பளைக் காலத்துக்குரிய மரச் செதுக்கல்களுள் முக்கிய இடம் பெறுவது அலுதெனிய விகாரையிலுள்ள மரத்தலான கதவுச் சட்டமும். அம்பெக்கே தேவாலயத்தின் மரச்செதுக்கலுமாகும். இவற்றுக்கு வேங்கை, முதிரை, சமண்டலை போன்ற மரவகைகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

அலுதெனிய விகாரையில் ரம்பாவ என அழைக்கப்படும் மரத்தாலாக்கப்பட்ட கதவுச் சட்டத்தில் அழகிய மரச் செதுக்கல்கள் பலவற்றைக் காணலாம். அக்கதவுச்சட்டத்தின் உச்சியில் செதுக்கப்பட்ட இரு வரிகள் உண்டு முதல் வரியில் தாமரைப்பூ. கொடியலங்காரங்கள் அன்ன உருவங்களை நினைவுபடுத்தும் செதுக்கலொன்றுள்ளது. இரண்டாவது வரியில் கஜ லக்ஷ்மியின் உருவத்தின் இரு புறங்களிலும் கைத்தாளம் போட்டவாறும். ஊதிக்கொண்டும். ஆடிக்கொண்டும் போகும் உருவவரிசையொன்று காணப்படுகின்றன. இரு அந்தங்களிலும் கைத்தாளமொன்றை கையிலேந்திக் கொண்டு ஆடிக்கொண்டு போகும் கயந்தவ உருவங்கள் இரண்டு உள்ளன கஜலஷ்மி உருவத்துக்கு கைகள் உண்டு அவளின் இரு பக்கங்களிலும் 2 யானைகள் இருக்கின்றன அவை கைகளில் உள்ள தாமரைப் பூக்களுக்கு நீரூற்றுகின்றன. மற்றைய கையில் அபயமுத்திரை காணப்படுகின்றது தாமரை, அசோக கொடிகள் அன்னம் போன்ற உருவங்களைக் கொண்டதாக முதல் வரியும். நாட்டியக் காரரைக் காட்டும் ஒருவரியும் தொடர்ச்சியாக கீழ்ப்பகுதி நோக்கி செதுக்கப்பட்டுள்ளது.

கதவுச் சட்டத்தின் கீழ் இரு பகுதிகளிலும் அரசபரம்பரை சோடியொன்றும். பிரபுச் சோடியொன்றும் செதுக்கப்பட்டுள்ளது. மெல்லிய இடுப்புகளைக் கொண்ட இளவரசிகள் ஆபரணங்களை உடுத்திக்கொண்டு பூசிக்கும் பொருட்களையும் வைத்துக் கொண்டு இருக்கின்றனர். பிரபுக்கள் இருவினதும் கைகளிலும் ஏதோ ஒன்று காணப்படுகின்றது. இருவரும் காதுகளில் ஆபரணங்களை அணிந்துள்ளனர் பெண்ணின் தலைமயிர் மிகவும் தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளது.

பிரபுச் சோடியுடன் காணப்படும் செதுக்கலில் வீணையொன்றை கையிலேந்திய பெண்ணொருத்தியும் காணப்படுகிறாள். இவளின் உடைகளில் சீலைச்சுருக்கு காணப்படுகின்றது. இதில் மயில் பீலியொன்றை கையிலேந்திய பெண்ணொருத்தியையும் செதுக்கியுள்ளனர்.


பூக்கொடிகள், கொடிகள் என்பவற்றின் அந்தங்களில் இரு சிங்க உருவங்கள் உள்ளன சிங்கங்கள் கொடிகள் வரிசையின் காவலாக இருக்கின்றன. காரையின் அந்தங்கள் அனைத்தும் தாமரை இதழ்கள் பூவிதழ்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இதிலுள்ள செதுக்கல்கள் செம்மையான முறையில் இருப்பதோடு மிகவும் சாதாரணமானவையாகவும் உள்ளன கூடுதலான செதுக்கல்களையும். காணலாம். உருவங்களின் முகபாவனை சிறப்பானது. தெளிவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் செதுக்கல்களில் திராவிட இயல்புகளைக் கண்டு கொள்வது சிரமமானது. இச்செதுக்கல்கள் இந்தியாவின் குப்த காலத்துக்குரிய தேவகிரி. தேவாலயத்தின் செதுக்கலுக்கு சமனான வகையில் காணப்படுவதாக நந்தகோண முதியன்சே என்பர் கருதுகிறார். கம்பளை கால மரச்செதுக்கள்களின் மாதிரிகள் கீழே காட்டப்பட்டுள்ளது.



எம்பக்க தேவாலயம் மரச்சிற்பம்.



யாளியின் உருவம்



சிங்கராஜ உருவம்




குதிரை வீரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மல்யுத்த வீரன்



அன்னப்பட்சி வடிவம்



பாலூட்டும் தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பெக்கே மரச் செதுக்கல்கள் :-



அம்பகே தேவாலயத்துக்கண்மையிலுள்ள அரண்மனை வாயிலில் பத்து மரத்தூண்களும் பிரதான கட்டிடத்தில் மேல் மண்டலத்திலுள்ள முப்பத்திரண்டு மரத்தூண்களும் அலங்கார செதுக்கல்களாக அலங்கரிக் கப்பட்டுள்ளன.

மேல் மண்டபம் அல்லது நீள் மனையில் அலங்கரிக்கப்பட்ட பல மரச் செதுக்கல்களைக் காணலாம். அவை முப்பத்திரண்டு தூண்களைக் கொண்டவை. அத்தூண்களின் ஆரம்பமும் முடிவும் சதுரவடிவானவை அவற்றின் மத்தியிலுள்ள சதுரவடிவப் பகுதியில் அலங்கார செதுக்கல்கள் காணப்படுகின்றது.

யானை, அன்னம், தாமரை, எருது, குஞ்சரம், நாட்டியக்காரி, மல்யுத்தம், குதிரைக்காரன், போர்வீரன், யானை, ஊடற்பறவை, கிந்துரன், யானை, அம்பாரி, கழுகு, பேருண்டபட்சி, பூச்செடி, முதலைமுகம், போன்ற செதுக்கல்கள் அலங்கரிக்கா்ட்டுள்ளன. தூண்களின் எண்கோணப்பாகம் நாகத்தின் கட்டு அல்லது படிக்கட்டு மர அலங்காரத்தினாலும். ஊச்சி முத்துக்களைக் கொண்ட அலங்காரத்தினாலும். தூணின் அடிப்பாகம் செதுக்கல்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

தூணின் உச்சியில் நாற்பக்கமும் கீழ் நோக்கி தொங்கும் முகட்டு வலையில் ஆளினயின் முகம் காணப்படுகின்றது. முகட்டுவளையின் அடிப்பாகம் இணை அன்னங்களினாலும். நாட்டியக் காரிகளாலும் செதுக்கப்பட்டுள்ளது. அகன்ற பகுதியில் உள்ள தூண்களில். முகட்டு வளையும். மற்றைய பகுதியிலுள்ள தூண்களில் நான்கு உள்ளன. முகட்டு வளை மேல் காணப்படும் குறுக்கு வளையின் மத்தியில் செதுக்கல்கள் காணப்படுகின்றன.

குறுக்கு வளையினதும் பலகணகயினதும் துணையுடன் கட்டியெழுப்பப்பட்டுள்ள குறுக்குவளையின் விட்ட உச்சியில், கூரையானது அடிப்பலகையால் பொருத்தப்பட்டுள்ளது. இதன் முன்பக்கத்தில் நீள்பக்கமாகவுதம், கலப்பக்கமாகவும் பல தூண்கள் உள்ளன. அத்தூண்களின் அடிப்பலகை கூரையுடன் இணைக்கப்பட்டுள்ளதால் அதற்கு குறுக்குவளை விட்டம் என்று கூறுவர். (மடொல் குருபாவ) இது குடை கம்பியைப்போல் பயன்படுத்திருப்பதற்க்கு சமமாகக் காணப்படுகின்றது. தேவாலயத்தார் பிரவேசிக்கும் இடத்தில் அரண்மனைவாயில் என்ற கட்டிடம் உள்ளது. அதில் பத்து அலங்காரத்தூண்கள் காணப்படுகின்றன. மேள மண்டபத்தில் உள்ள தூண்களில் பாம்பு பற்றினைப் போல் ஒன்றோடொன்று வேறுபட்ட செதுக்கல்கள் காணப்படுகின்றன. அதன் சதுரப் பகுதியில் மர அலங்காரங்கள். தாயும் சேயும். பூவிதழ்கள், சிங்கம் போன்ற அலங்கார செதுக்கல்கள் காணப் படுகின்றன.

இச் செதுக்கல்கள். அலுதெனிய. ரம்பாவ செதுக்கல்கள் போல் எளிமையான மென்மையான. தெளிவான தன்மையைக் கொண்டு காணப்பட வில்லை செதுக்கல்களில் கரடுமுரடான தன்மை காணப்படுகின்றது. விளக்கங்கள் அதிகமாக உள்ளன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எம்பக்கே தேவாலயத்தின் மரச் செதுக்குகள்

அம்பெக்கே மரச் செதுக்கல்கள் தென்னிந்திய எல்லோரா தூண்களிலுள்ள செதுக்கல்களும் சமனானவையாக இருப்பதால் இச்செதுக்கல்களில் தென்னிந்தியச் செல்வாக்கு காணப்படுகின்றன என நந்தசேன முதியன்சே என்பவர் கூறுகிறார்.

| | | |
|---|---|---|
| ஹைம்சபூட்டுவ | – | அன்னப்பிணையல் |
| நாரிலதா | – | பெண்ணைப்போன்ற உருவமுடைய கற்பனைப்பூ |
| பேருண்டப்பறவை | – | இருதலைப்பட்சி |
| எத்ஹொந்தலிகினிய | – | குஞ்சரப்பட்சி |
| பாலூட்டும்தாய் | – | தாயன்பைப்பிரதிபலிக்கும் சிற்பம். |
| உசம்ப குஞ்சரம் | – | யானையும் மாடும் சேர்ந்த வடிவம் |
| குதிரைவீரன் | – | சவுக்குடன் குதிரையில் செல்லும் மனிதனைக் கொண்ட சிற்பம். |
| ஹைம்சம் | – | அன்னப்பட்சி. |
| சாரீய அன்னப்பட்சி | – | அன்னத்தின் ஒருவகை. |
| பின்னறமல | – | நான்கு இதழ்களுடைய சதுரவடிவமுடைய பூ. |




மல்யுத்தவீரர்



குதிரைவீரன்



கின்னரப்பெண்



நடனமாது




றபானா அடித்தல்




பேருண்டபக்ஷய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹம்சபூட்டுவ




நாரிலதாவெல



போர்வீரன்

## 66. அவுக்கன புத்தர் சிலை



அவுக்கன விகாரை கலாவெவ குளத்திலிருந்து மேற்குத்திசையில் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது இங்கு தான் இலங்கையில் மிகப் பெரிதான புத்த பெருமானின் சிலை செங்குத்தான ஒரு மலைப்பாறையிலே ஒரே கல்லில் அங்க இலட்சணங்களுடன் செதுக்கப்பட்டிருக்கின்றன. இச்சிலை சுமார் 39அடி உயரமுடையது தாமரையின். மேல் அமைக்கப்பட்டிருக்கின்றபடியால் தாமரையுடன் 46அடி உயரம் என்றும் கூறலாம்.

இச்சிலை தாதுசேனனால் செய்விக்கப்பட்டதெனச் சிலர் கூறுகின்றனர். இச் சிற்பம் அமராவதி சிற்பமுறையை பிரதிபலிக்கின்றது என்றும் அங்க அமைப்பு உடை அமைப்பில் உள்ள நுண்ணிய வேலைப்பாடுகள் சிற்பியின் கைத்திறமையும் சிற்ப சாத்திரம் அடைந்திருந்த முன்னேற்றத்தையும் தெளிவாக எடுத்துக்காட்டுகினறது.

இப்புத்தர் சிலையின் தலையில் உச்சிக் குடும்பி அமைக்கப்பட்டி ருக்கிள்றது. இவ் உச்சிக் குடும்பி (சிரஸ்பத) பின்னர் அமைக்கப்பட்டதாகத் கூறப்படுகின்றது. சிலர் தீச்சுடர் என்றும் கூறுகின்றனர் வலது கை அபய நிலையில் அமைந்துள்ளது அங்கிவரிகள் நெருங்கிய வரியமைப்புடையது. இடது கை ஒரு பகுதி அங்கியை தாங்கிய வண்ணம் அமைந்துள்ளது மதுரை சிற்பமுறையில் அமைக்கப்பட்டுள்ளது எனக் கருதுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 67. புத்தரின் சமாதி நிலை தொலுவில அனுராதபுரம்



புத்தரின் இருந்த திருவடிவங்கள் பல அனுராத புரத்திலும், பொலநறுவையிலும் காணப்படுகின்றது அனுராத புரம் தொலுவிலவிலுள்ள புத்தவடிபவம் இலங்கையிலுள்ள புத்தர் வடிவங்களில் மிகச் சிறந்ததெனக் கூறலாம். தியான நிலையில் காணப்படும் இவ்வுருவம் யோக நிலைக்குரிய முகபாவம் காணப்படுகின்றது.

சாந்த சொரூபியான புத்தர் தியானத்தில் அமர்ந்து கண்கள் மூக்கு நுனியைப் பார்த்த வண்ணம் அமைந்துள்ளது இப்புத்த வடிவம் 4ம் 5ம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட வடிவமாகும். கைகள் தியான முத்திரையில் காணப்படுகின்றது அமராவதி சிற்ப முறையில் செதுக்கப்பட்டுள்ளது ஒருவகை பாற்கல்லினால் செதுக்கப்பட்டுள்ளது. தற்போது கொழும்பு நூதன சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## 68. சமாதி புத்தர் அனுராதபுரம்




சமாதி புத்தர் அனுராதபுரம்

இச் சிலை அனுராதபுரத்திலுள்ள மகாமேவன என்னும் பூங்காவில் அமைந்துள்ளது. கருங்கல்லினால் செதுக்கப்பட்டுள்ள இச்சிற்பம் கி. பி 4 அல்லது 5ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. குப்த முறையில் செதுக்கப்பட்டுள்ளது 7 ½ அடி உயரமுடையது தியான முத்திரையில் காணப்படும் இச்சிற்பம் சிறந்ததாகக் காணப்பட்ட போதும் தற்போது சிற்பத்தின் மூக்கு நுனி உடைந்து திருத்தப்பட்டுள்ளதால் அதனுடைய கலைப்பண்பு குறைந்துள்ளது.

## 69. மிகந்தலை கந்தக சைத்திய அனுராதபுரம்

மிகச் சிற்ப வேலைப்பாடுடைய தாகபமாகும். இத்தாபகத்தை கட்டிய அரசன் பெயர் அறியக்கூடியதாய் இல்லை. கி. மு. 59 - 50 இருந்த வஞ்சதீசன் சில திருத்தங்களை செய்தான் என்று கூறப்படுகின்றது. இங்குள்ள வாகல்கடங்கள் சிறந்த சிற்ப அமைப்புக்கள் உடையன இதன் நான்கு பக்கங்களிலும் நான்கு வாகல் கடங்கள் இருக்கின்றன. இந்தியாவிலுள்ள சாஞ்சிதாது கோபங்களைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. போன்று தென்படுகிறது.




கந்தகசைத்திய தாதுகோபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகல் கடங்கள் யாவும் கருங்கற் திருப்பணிகளாக அமைக்கப்பட்டுள்ளது தாபகத்தின் விமானப்பகுதி செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளன இங்குள்ள சிற்பங்கள் ஆந்திர பல்லவ குப்த சிற்ப முறையை பின்பற்றி செய்யப்பட்டவையாகும். இங்கு இத்தாகபவின் விமானம் உடைந்த நிலையிற் காணப்படுகின்றது.

## 70. மகர தோரணம்



இரு மகரங்கள் அலங்காரம் செய்யப்பட்டு மகரத்தின் உச்சியில் கிம்பிகி முகம் (யாளிமுகம்) அமைக்கப்பட்டிருக்கின்றது மகரத்தின் சொண்டு யானையின் துதிக்கை போலவும் அதனுடைய வாய் முதலையின் வாயைப் போலவும் அதனுடைய கண்கள் குரங்கின் கண்களைப் போலவும் அதனுடைய காதுகள் பன்றியின் காதுகளைப் போலவும் அதனுடைய உடம்பு மீனினுடைய உடம்பைப் போலவும் அதனுடைய வால் திரிங்கு தலய வடிவத்தில் காணப்படுகின்றது ஆரம்ப காலத்தில் மகரத்தின் வால் மீனின் வாலின் வடிவத்தில் அமைக்கப்பட்டது கி பி 6ம் நூற்றாண்டில் அலங்காரம் செய்யப்பட்ட வால் காணப்படுகிறது.

தெய்வீக தன்மையைக் காட்டுவதற்க்கு சூரியன், சந்திரன், ஆகிய உருவங்கள் காணப்படுகின்றது பௌத்த, இந்து சமயத்தோடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது. ஆரம்ப காலத்தில் மகர தோரணம் புத்தர் வைக்கப்பட்டிருக்கும் இடத்தின் பின் பக்கத்தில் அமைக்கப்பட்டது பிற்காலத்தில் புத்தருடைய சிலை வைக்க பட்டிருக்கும் அறையின் வாசலின் மேற்பகுதியில் வைக்கப்பட்டிருக்கின்றது. சில விகாரைகளின் நுழைவாயிலில் அமைக்கப் பட்டிருக்கின்றது.

மகர தோரணத்தை அமைப்பதற்கு கருங்கல், மரம், சுதை, போன்ற ஊடகங்கள் பயன் படுத்தப்பட்டிருக்கின்றது, இலங்கையில் காணப்படும் மகர தோரணம் அதிக அளவில் கண்டி காலத்திற்குரிய விகாரைகளிலும் இந்து ஆலயங்களிலும் அதிக அளவில் காணப்படுகின்றது. கருங்கல்லினால் செதுக்கப்பட்ட சிறந்த மகர தோரணம் கண்டியில் உள்ள தெகல் தொறுவ என்னும் விகாரையில் காணப்படுகின்றது. கண்டிகாலத்தில் சில ஆலயங்களில் மகர தோரணத்தை அமைக்கும் பொழுது சில பகுதி கருங்கல்லினாலும் சில பகுதி ஒருவகை சாந்தினாலும் அமைக்கப்பட்டிருக்கின்றது. கண்டிகாலத்திற்குரிய தம்புள்ள விகாரையில் காணப்படும் சுண்ணாம்பினால் அமைக்கப்பட்டுள்ள மகரதோரணம் மிகச் சிறப்பாக காணப்படுகிறது இங்கு காணப்படும் மகரத்தின் வடிவ அமைப்பு ஏனைய மகர தோரணத்தை விட சற்று வித்தியாசமாகக் காணப்படுகிறது, மகரத்தின் வாய் சிங்கத்தின் வாயின் அமைப்பில் காணப்படுகிறது சில ஆலயங்களில் மகரத்தின்வாயிலிருந்து பாம்பு பாயும் போல் அமைக்கப்பட்டிருக்கின்றது. கண்டியில் விஷ்னு ஆலயத்திலும் பல்கும்புற களனி போன்ற இடங்களில் கண்டிக் காலத்திற்குரிய மகர தோரணம் காணப்படுகிறது.

பொலநறுவைக்காலத்திற்குரிய மகர தோரணம் கருங்கல்லினால் செதுக்கப்பட்டு காணப்படுகிறது. கல்விகாரையில் கல்லினால் செதுக்கப்பட்ட மகர தோரணம் இரண்டு காணப்படுகிறது அதில் ஒன்று லேன் விகாரையின் புத்தர் சிலைக்கு பின்னால் அமைக்கப்பட்டிருக்கின்றது. அடுத்த மகரதோரணம் இருந்த நிலையில் காணப்படும் புத்தர் சிலையின் பின்னால் அமைக்கப்பட்டிருக்கின்றது அதனுடைய அமைப்பு சற்று சாஞ்சி தோரணத்தின் அமைப்பில் காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 71. கல்விகாரை பொலன்நறுவை

பெரிய கற்பாறை ஒன்றில் மூன்று நிலைகளிலும் (துயில் நிலை, நின்ற, இருந்தசிலை) காணப்படும் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றது இவ்விகாரை கி. பி. 12 ஆம் நூற்றாண்டுக்குரியது இவ்விகாரை பராக்கிரமபாகுவினால் கட்டப்பட்டது எனக் கூறப்படுகிறது: இங்கு சயன நிலையில் காணப்படும் புத்தர் சிலை 46 அடி நீளம் கொண்டது. உடை அமைப்பு வரிகள் மூலம் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. பக்கவாட்டாக படுத்திருக்கும் புத்தர் சிலை கல்லினால் செதுக்கப்பட்டுள்ள தலையணையின் மேல் தலை வைக்கப்பட்டு வலது கை உடம்போடு நீட்டியதாகவும் இடது கை மடக்கி தலையுடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது.


## நின்ற புத்தர் திருவடிவம்

இச்சிலை வித்தியாதார குகைக்குப்பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. 22 அடி 9 அங்குலம் உயரம் கொண்ட இச்சிலை விரிந்த தாமரையின் மேல் அமைக்கப்பட்டிருக்கின்றது. இச்சிலையை சிலர் ஆனந்த பிக்கு என்றும் கூறுகின்றனர். இரண்டு கைகளும் நெஞ்சோடு சேர்ந்து அமைக்கப்பட்டிருக்கின்றது. இக்கை முத்திரையை பரதுக்க துக்பித்த என்றழைக்கப்படுகின்றது இம்முத்திரையின் கருத்து மற்றவர்களின் துக்கத்தில் தானும் இணைவதாகக் காட்டப்பட்டுள்ளது இச்சிலையைச் செதுக்குவதற்கு 23 அடி உயரமுடைய கற்பாறை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.



## இருந்த புத்தர் திருவடிவங்கள்






அமர்ந்தசிலை II


இங்கு இரண்டு இருந்த புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. 1 விந்தியாதாரக் குகையில் அமைக்கப்பட்டிருக்கும் இப்புத்தர் சிலை பத்மாசனத்தில் அமைக்கப்பட்டு கைகள் ஒன்றின்மேல் ஒன்று வைக்கப்பட்டு தியான முத்திரையில் வைக்கப்பட்டுள்ளது. முகத்தில் சாந்த சொரூபி போல் காட்சியளிக்கின்றது. இருக்கம் பீடத்தின் கீழ்ப்பகுதியில் சிங்கத்தின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றது. புத்தர் சிலைக்கு இரு பக்கங்களிலும் இரண்டு காவற் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றது. சிலையின் பின் பக்கத்தில் தோரணம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அத்தோரணம் சாஞ்சி தோரணத்தின் சாயலில் காணப்படுகின்றது 2வது சிலை வித்தியாதாரக்குகையின் வலப்பக்கத்தில் அமைக்கப்பட்டிருகின்றது இச்சிலைக்குப்பின்னாலும் தோரணம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இச்சிலை அமைக்கப்பட்டிருக்கும் பீடத்திலும் சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 72. கொரவக்கல் (கை பிடிகல்)





விகாரைகளுக்கு ஏறும் வாசல்படிகளின் இருக்பகங்களிலும் இரு கை பிடி அமைப்பான கல்லைக் காணலாம். விகாரைக்கு ஏறும்போதும் இறங்கும் போதும் இலகுவாக இருப்பதற்கு இக்கல் அமைக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரக்காலத்திலும் பொலநறுவைக்காலத்திலும் மிக அலங்காரமான முறையில் இக்கைபிடி அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்து ஆலயங்களிலும் அரசமாளிகைகளிலும் இவற்றைக் காணலாம் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட இவ்வடிவம் சிறந்த சிற்ப வேலைப்பாடுடையதாகக். காணப்படுகிறது இக்கல்லை அலங்காரம் செய்வதற்க்கு மகரத்தின் உருவம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அனுராதபுரக்காலத்திலும். பொலநறுவைக் காலத்திலும் மகரத்தின் உருவம் அமைக்கப்பட்டிருப்பது போல கண்டிகாலத்திலும் கஜசிங்கத்தின் உருவம் அமைக்கப்பட்டிருக்கின்றது. கண்டி தலதா மாளிகை வாசலில் அமைக்கப்பட்டிருக்கும் கைபிடி கல்லில் மகரத்தின் உருவம் அமைக்கப்பட்டிருப்பதை காணலாம்.

இக்கைபிடி அமைப்பு சில இடங்களில் மிக எளிமையாகவும் சில இடங்களில் மிக அலங்காரமாகவும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம் இரத்தினபிரசாத காவற்சிலைக்கு பக்கத்திலும் கொலுவில புத்தர் சிலைக்கு ஏறும் இடத்திலும் மிகச்சிறந்த கைபிடி கல்லைக்காணலாம். களனி விகாரையில் கஜசிங்க வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. மகரத்தின் வடிவத்தை திரு. பரணவிதான அவர்கள் மகரம் ஒன்று யானை விழுங்கியது போன்ற அமைப்பு என்று கூறுகின்றார்.

## 73. பொலநறுவைக் காலம்

**திவங்க புத்தர் சிலை:-**

பொலநறுவைக்காலத்திற்குரிய திவங்க புத்தர் சிலை செங்கற்களினாலும் சுண்ணாம்பினாலும் ஆக்கப்பட்டவை இதன் உயரம் 18 அடி இலங்கையில் காணப்படும் புத்தர் சிலைகளில் சிறந்ததெனக்கருதப்படும் புத்தர் சிலைகளில் இதுவும் ஒன்று கழுத்தடியில் கொஞ்சம் வளைந்துள்ளதால் திவங்க என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. தாமரை இதழ்களின் மேல் இருப்பது போல் அமைக்கப்பட்டிருக்கின்றது. இச்சிலை சோழர் காலச் சிற்ப முறையைத் தழுவியுள்ளது.

**பராக்கிரம பாகுவின்**




பொலநறுவைக்காலத்திற்குரிய இச்சிலை கி. பி. 12ம் நூற்றாண்டுக் குரியது. "தோபா" என்னும் குளத்திற்கு அண்மையில் இச்சிலை அமைக்கப் பட்டிருக்கின்றது. கருங்கல்லினால் செதுக்கப்பட்டுள்ள இச்சிலை சிறந்த கலை நுட்பம் உடையதாகக் காணப்படுகின்றது கையில் ஏடுகளைத்தாங்கிய வண்ணம் யோசனையில் ஆழ்ந்துள்ளது. போன்ற முகபாவம் தென்படுகின்றது. நீளமான காதுகளும் நீண்ட தாடியும் காணப்படுகின்றது இடுப்பில் சால்வை சுற்றியது போலவும் மேல் பகுதியில் அங்கி அற்றதாக காணப்படுகின்றது. இச்சிலையை சிலர் அகத்திய முனிவரின் சிலை என்று கூறுகின்றனர். இச்சிலை சோழசிற்ப முறையில் அமைக்கப்பட்ட சிலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சிவன் கோவில் பொலநறுவை



இதனை இரண்டாம் சிவாலயம் என்றும் அழைக்கின்றனர் இவ்வாலயம் 1ம் இராஜராஜ சோழனால் கட்டுவிக்கப்பட்டதாகும் இதன் பெயர் வானவன் மாதேவி ஈசுர முடையார் எனவும் அழைப்பர் இங்குள்ள சிற்பங்கள் யாவும் சோழசிற்ப முறையில் அமைக்கப்பட்டதாகும் இவை முழுவதும் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது மிகப்பழைய சோழர் கட்டிடம் இதுவேயாகும்.

இது 11ம் நுற்றாண்டின் முற்பகுதியில் கட்டப் பட்டதாகும் இவ்வாலயம் இராசராசனின் மகன் 1ம் இராசேந் திரனால் முற்றுவிக்கப்பட்டது இவ்விரு இராசேந்திரனும் ஆதி இராசேந்திரனதும் வரலாற்று சாசனம் பொறிக்கப்பட் டுள்ளது.இதன் காலம் 1020-1042 வரை யாகும். இதை இந்துமத கோவில் அமைப்பு முறையில் அமைத்தனர்.

## 74. புத்தரின் முத்திரைகள்



தானியமுத்திரை
(தியான முத்திரை)



விதர்க்க முத்திரை




கட்டக்கஹஸ்த
முத்திரை




ஆசீர்வாத
முத்திரை



அபயமுத்திரை



பூமிபரிச முத்திரை



வரத முத்திரை



பரதுக்க துக்கித்த
முத்திரை



தர்மச்சக்கர முத்திரை



அஞ்சலி முத்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தருடைய சிலைகளில் பலவிதமான முத்திரைகள் காணப்படுகின்றன அம்முத்திரைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்துக்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது இங்கு காட்டப்பட்டுள்ளது. பத்துவகையான முத்திரைகளும் சிறப்புடன் காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் காணப்படும் அதிகமான புத்தர் சிலைகளில் தியான (தான்னிய) முத்திரைகள் காணப்படுகின்றது. இலங்கையில் காணப்படும் மிகச்சிறந்த சமாதி புத்தர் சிலையும் தியான (தான்னிய) முத்திரையில் அமைக்காப்பட்டிருக்கின்றது. அவுக்கன புத்தர் சிலையில் அபய முத்திரையும் கல்விகாரையில் நின்ற புத்தர் சிலையில் பரதுக்க துக்வித்த முத்திரை காணப்படுகின்றது இந்தியாவில் காணப்படும் சாரணாத் புத்தர் சிலையில் தர்மச்சக்கர முத்திரை காணப்படுகின்றது ஏனைய முத்திரைகள் இந்தியா, கொறியா, யப்பான், மலேசியா, பர்மா போன்ற நாடுகளில் உள்ள புத்தர் சிலைகளில் காணப்படுகின்றது.

## 75. இந்துமத திருக்கோயிலின் கருப்பக்கிரக அமைப்பு

இந்துமத கருப்பக்கிருக கட்டடங்களை மூன்றுவகையாக அமைக்கின்றனர் அவையாவன

1. உத்தரமட்டவேலை
2. இரட்டைப்பஞ்சாங்க வேலை
3. முகபத்திர வேலை

மேற்கூறிய மூன்றுவகை அமைப்பினையும் உடைய கர்ப்பக்கிருக கட்டிடங்களையும் ஆறு பெரும் பிரிவுகளில் அடக்கலாம்

1. உபபீடம்
2. அதிர்ஷ்டானம்
3. பாதவர்க்கம்
4. பிரஸ்தளம்
5. சிகரம்
6. தூபி

விமான அமைப்பை மூலமூர்த்திகளுக்குத் தக்கவாறு மூன்றுவடிவங்களில் அமைக்கின்றனர் அவை யாவன.

1. நாகரம் (சதுரம்)
2. திராவிடம் (எண்கோணம்)
3. வேஸரம் (வட்டம்)

என்பன.

சிற்பிகள் கருப்பக்கிருக அமைப்பின் போது கருங்கல், சுண்ணாம்புக்கல் செங்கல் சாந்து சீமெந்து மணல் உலோகம் இவற்றை ஊடகங்கலாக உபயோகிக்கின்றனர்.

## 76. இந்து ஆலய கோபுரம்


கோபுரம் ஆண்டவன் உறையும் கோயிலின் திருப்பாதங்களாக அமைக்கப்படுதலால் கோபுர வணக்கம் பெருமானின் திருவடிவுகளை வணங்குவதை ஒப்பதாகும். கோபுர வணக்கத்தின் பயன் ஆன்மா மல நீக்கம் பெற்று சிவத்தன்மைபெறுதலாகும் இதனாலன்றோ சிற்பி நெடுந்தொலைவில் தெரியக்கூடியதாய் கோபுரம் அமைக்கின்றனர் இதனால் இறைவனின் நினைவு எந்நேரமும் இருக்கும் என்று கூறுகின்றார்.

இதனை தூலலிங்கம் எனவும் அரசகோபுரம் எனவும் அழைப்பர் இதில் ஆதாரம் நிராதாரம், நிதானம் முதலிய நிலைகளையும் அண்டங்களின் அடுக்குகளையும் அண்டங்களின் புவணங்களையும் அண்ட புவன நாயக நாயகிகளையும் அமைத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளனர். வாயில்கள் ஒன்றென்மேல் ஒன்றாக ஒற்றப்படையாகவும் இருக்கின்றது வாயில்கள் மூன்றாகவும் ஐந்தாகவும் ஏழாகவும் அமைத்தனர் எத்தனை வாயில்கள் இருந்தாலும் ஆண்டவனிடம் செல்வது கோபுரவாயில் வழியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீஸ்வரம்



இவ்வாலயம் முதலாம் இராசராச காலத்தில் அழகு பெறக் கட்டப்பட்டது. இது தேவாரப்பாடல் பெற்ற சிறந்த தலமாகும். அக்காலத்தில் இங்குள்ள சிற்பங்கள் யாவும் பல விதமான சிற்பச் சிறப்புக்களுடன் விளங்கின. இதற்கு அங்கு கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள் சான்று பகருகின்றன. இதன் சிறப்புக்கள் பற்றி சரித்திரங்கள் கூறுகின்றன இடைக்காலத்தில் இவை சிதைந்த நிலையிலிருந்தன தற்போது அழகிய சிற்பவேலைப்பாடுகளுடன் புதுப்பித்தமைக்கப்பட்டதாகும். இத்திருப்பணிச் சிற்பங்கள் யாவும் கருங்கல்லிற் செதுக்கப்பட்டவைகளாகும். மிகப்பழைய காலத்தில் சிற்பத்தில் வல்ல ஸ்தபதிகளுக்கு இத்தேவாலைய தோட்டம் உறைவிடமாயிருந்திருக்கின்றன தென்றும் 12ஆம் நூற்றாண்டில் பாண்டிய சிற்பமுறையில் இவ்வாலயம் கட்டப்பட்டதென்றும் அறியக்கிடக்கின்றது.

## நல்லூர்க் கந்தசாமி கோயில்

இவ்வாலயம் நல்லூர்ப்பதியில் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்னும் பெயருடன் செண்பகப்பெருமாள் என்பவன் யாழ்ப்பாணத்தை கி.பி.1461 க்குப் பின் 17 வருடங்கள் ஆட்சி செய்தான். அக்காலத்தில் இவனே இவ்வாலயத்தை கட்டிவித்தான் இதன் பின்னர் 1478ல் சிங்கைப் பரராசசேகரன் என்பவன் அரசனானான் இவன் நல்லூர்திருப்பதியை சைவ ஆலயங்களுக்கும் மாடமாளிகைகளுக்கும் நிறைந்த நகரமாக்கினான். இவன் இந்நகரின் வடபாலில் சட்டநாதர் கோவிலையும் கிழக்கில் வெயிலுகந்தப்பிள்ளையார் ஆலயத்தையும் தென்பால் கைலாசநாதர் கோயிலையும் மேற்கில் வீரமாகாளியம்மன் திருப்பதியையும் அழகுறக் காட்டுவித்தான் கந்தசாமி கோவிலுக்கருகில் ஒரு திருக்குளம் அமைத்து அதற்கு யமுனாரி என்னும் பெயரிட்டான்.

இவ்வாலயங்கள் யாவும் போர்த்துக்கேயரால் தகர்க்கப்பட்டதால் இவ்வாலயங்களின் சிற்பச் சிறப்புக்கள் பற்றி நாம் அறியக்கூடியதாயில்லை. தற்போதுள்ள சிற்பங்கள் யாவும் பிற்காலத்தில் செய்யப்பட்டவையாகும். ஆக்காலத்தில் தமிழ் நாட்டில் சிறப்பெய்திருந்த சிற்பமுறை விஜய நகரச் சிற்ப முறையாகும். எனவே சட்டநாதர் கோவிலின் திருவடிவங்கள் யாவும் இம்முறையைச் சார்ந்தன என்றும் கருதுகின்றனர் நல்லைநகர்ச் சிற்பங்களும் சட்டநாதர் கோவில் வடிசங்களை ஒத்தவையாகும்.

வல்லிபுரத்திலும் கந்தரோடையிலும் நாகர்கோவிலிலும் நல்லூரின் ஏனைய பகுதிகளிலுமுள்ள சிற்பங்கள் இக்காலத்தவையாக இருக்கலாமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர் தற்போது இவ்வாலயத்தில் காணப்படும் மஞ்சம் கைலாய வாகனம் சிறந்த அழகிய மரவேலைப்பாடுகளையுடையவை பழைய சிற்பங்கள் கருங்கற் சிற்பங்களாகும். பிற்காலத்தில் உலோகம் மரம் சீமேந்து சாந்து இவைகளால் அழகிய வேலைப்பாடுகள் நிகழ்ந்துள்ளன முருகனின் திருவடிவம் உலோக வேலைப்பாடுடைய அழகிய வார்ப்பு முறைச் சிற்பமாகும் இதனால் இத்தலம் பக்தகோடிகள் நிறைந்த அழகிய தலமாகக் காட்சி தருகின்றது.


## மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்

எட்டாம் நூற்றாண்டில் கலிங்கதேசத்து அரசனாகிய உக்கிரசிங்கன் என்பவன் நாகதீபத்திற்கு அரசனானான் இவன் சோழ இராச குமாரியை மணந்திருந்தான் இவனின் மனைவியான மாருதப் புரகுவல்லியின் விருப்பத்திற்கிணங்க இக்கோவிலைக் கட்டுவித்தான் இது கீரிமலைத் தீர்த்த நன்னீர் ஊற்றுக்கு அணித்தாயுள்ள மாவிட்டபுரத்தில் கட்டப்பட்ட ஆலயமாகும் இவ்வாலயத்தின் வாயிற் கோபுரம் மிகவுயர்ந்த அழகிய திருப்பணியாகக் காட்சி தருகின்றது இக்கோபுரத்தை இராஜகோபுரம் என்று அழைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணேசர் ஆலயம் (திருகோணமலை)



இவ்வாலயம் கருங்கற்களால் குளக்கோட்டன் என்னும் அரசனால் கட்டுவிக்கப்பட்டது. திருகோணமலையிற் கண்டெடுத்த வடிவங்களின் சிற்ப அமைப்பில் இருந்து இவ்வாலயம் பாண்டியர் காலத்துச் சிற்ப முறையை பின்பற்றி அமைக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். கோணேசர் ஆலயத்திற்கு இராவணனுடன் தொடர்புள்ள கதைகள் கூறப்படுகின்றன. இவ்வாலயம் பற்றிய தேவாரப்பாடல்களைக் கொண்டு 7ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இவ்வாலயம் சிறப்புசிறப்புடன் விளங்கியமை தெரியவருகின்றது. இதுவும் ஒரு சைவ ஆலயமாகும். இன்றும் இவ்வாலயம் பிரசித்தி பெற்ற தலமாக விளங்குகின்றது ஜடவர்மன் வீரப்பாண்டியன் காலத்தில் கோணேசர் ஆலயம் மிகச் சிறப்புடன் விளங்கியது பின்னர் இக்கோவிலை இடித்து எடுத்த கற்களாலேயே திருககோணமலை கோட்டை கட்டப்பட்டது. கோட்டை வாசலின் இருமருங்கிலுமுள்ள கற்களில் இச்சித்திரங்கள் இன்றும் காணப்படுகின்றன.

## நாகபூஷணியம்மன் கோயில் (நயினாதீவு)

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குத் தென்மேற்கிலுள்ள **"சப்த"** தீவுகளுள் நயினாதீவும் ஒன்றாகும். இத்தீவுகளுடன் ஆதியில் தமிழ் நாட்டவர் வாணிபம் செய்து வந்தனர் இங்குள்ள தீவுகளுள் வரலாற்று சிறப்பு மிக்கது நயினாதீவு ஆகும் இங்கு ஆதியில் வாழ்ந்த நாகர் எனும் இனத்தவரால் இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டதெனக் கருதுகின்றனர். ஈழத் தலங்களுள் இதுவும் சிறப்புடன் விளங்கிய தென்பதற்கு பல சான்றுகள் உள. தமிழ் நாட்டவர் யாத்திரை மேற்கொண்ட தலங்களுள் இதுவும் ஒன்றாகும் இவ்வாலயம் பறங்கியரால் அழிக்கப்பட்டு மீண்டும் ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

தற்பொழுது இவ்வாலயம் பாண்டிநாட்டுச் சிற்பமுறையைப் பின்பற்றி கர்ப்பக் கிரகமும் விமாணமும் மண்டபங்களுப் வாயிற் கோபுரமும் சிற்பத் தூண்களும் அமைக்கப் பெற்றுள்ளன. இவை யாவும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடனமைந்துள்ளது இக்கட்டட சிற்பங்கள் யாவும் காரைக்குடி சிற்ப வல்லுனர் திரு எம். செல்லக்கண்ணு ஸ்தபதியாரல் அமைக்க பெற்றதாகும்.

ஈழத்துச் சிறந்த சிற்பலங்கார வேலைப்பாடுடைய மரச் செதுக்கு தேர்களுள் இங்குள்ள தேரும் ஒன்றாகும்: இத்தேர் சிறந்த சிற்பம்சம் பொருந்தியது இது தமிழ் நாட்டு நாகர் கோவிலைச் சேர்ந்த சிற்ப்ப வல்லுனர் திரு. எஸ் குமாரசாமி ஆசாரியார் அவர்களால் அமைக்கப்பெற்றதாகும் அத்தேரில் நாகம் பூவுடன் வந்து நாகேஸ்வரியைப் பூசித்த கதையை இச்சிற்பி வியத்தகு முறையிற் திறம்பட செதுக்கியமைத்துள்ளார். இங்கு சைவத் தமிழர்களும் பௌத்த சிங்களர்களும் பெருமளவில் வழிபட்டுச் செல்லுகின்றனர்.

## பொன்னம்பலவாணேஸ்வரம்- கொழும்பு

இவ்வாலயம் சிறந்த கருங்கற் திருப்பணியாக அமைந்துள்ளது: சிறந்த சிற்பவேலைப்பாடுகள் காணப்படுகின்றது. இது 20ம் நூற்றாண்டில் தென் இந்திய சிற்பமுறையில் அமைக்கப்பட்டது: இதன் சுற்றுப்பிரகாரம் முழுவதும் கருங்கல்லினால் வேயப்பட்ட மண்டபமாக அமைந்துள்ளது: இங்குள்ள தரிசன மண்டபம் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் அழகுற அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 77. நடராஜ வடிவம்

இவ்வடிவம் முதன் முதலில் சோழர் காலத்தில் சிலையாக வடிக்கப்பட்டது. இந்து சமயத்துக்குரிய இச்சிலை சிறந்த கலை அம்சத்துடன் காணப்படுகின்றது நடனக்கலையின் தெய்வமாக கருதப்படும் நடராஜ வடிவம் நடனத்தின் ஒன்பது வகையான நாட்டிய நிலையை எடுத்துக்காட்டுகின்றது. நான்கு கரங்களைக்கொண்ட இவ்வடிவம் வலது பின்கரத்தில் உடுக்கு ஏந்திய வண்ணமும் இடது பின்கரம் அக்கின் ஏந்திய வண்ணமும் இடது முன்கரம் வீசித்தொங்கும் அமைப்பிலும் வலது முன் அபய முத்திரை வடிவத்திலும்காணப்படுகின்றது.

வலது காலை உயர்த்தியப்படியும் இடது காலை முயலகன் மீது வைத்தப்படி காணப்படுகின்றது. முகத் தோற்றம் சாந்தமாகவும் புன்சிரிப்புடையதாகவும் காணப் படுகின்றது.

ஐந்தொழிலைக் குறிப்பதாக இந்துமக்கள் கருது கின்றனர். உடுக்கு படைத்தல் என்பதையும் தீ ஏந்திய கை அழித்தல் என்பதையும் அபயகரம் காத்தல் என்பதையும் ஊன்றிய திருப்பாதம் மறைத்தல் என்பதையும். தூக்கிய திருப்பாதம் அருளல் என்பதையும் காட்டி நிற்கின்றது.

நடராஜ வடிவத்தை சுற்றி திருவாசி சுடர்கள் காணப்படுகின்றது.



நடராஜ வடிவம்

## 78. கிராமியக் கைத்தொழில்

**முகமூடி செய்தல்:-**



கிராமிய கலையாகக் காணப்படும் முகமூடி செய்தல் இலங்கையில் அம்பலாங்கொடையில் "வத்துகெதர" என்னும் இடம் பிரசித்தி பெற்று விளங்குகின்றது இவற்றை அமைப்பதற்கு மிக இலகுவாகவும். செதுக்ககூடிய மரங்கள் பயன்படுத்தப்படுகின்றது. "தியகதுறு" என்னும் மரம் பயன்படுத்தப்பதுகின்றது செதுக்குவதற்கு இலகுவாகவும். நீண்ட காலம் பாவிக்ககூடியதும். உடையாமல் இருப்பதற்கும் இம்மரம் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. விகாரமான உருவங்கள் அமைத்துள்ளனர். நாகராச முகமூடி அதிகமாகக் காணப்படுகின்றது.

**மட்பாண்டம்:-**

வரலாற்றுக்காலம் தொடக்கம் மட்பாண்டம் மக்கள் மத்தியில் பிரசித்திபெற்று விளங்குகின்றது. இவற்றிற்குச் சான்றாக அனுராதபுரம் பொலநறுவை போன்ற இடங்களில் அகழ்தெடுக்கப்பட்ட மட்பாண்டங்களில் இருந்து காணக்கூடியதாக இருக்கிறது. தற்போது பல வடிவங்களில் மட்பாண்டம் செய்யப்படுகின்றது. சட்டி, பானை, பூந்தாளி, உண்டியல், பூச்சாடிகள், ஓடு என்பன சிறப்பாக கூறலாம். இவற்றை செய்வதற்கு ஒருவகை களிமண் பயனபடுத்தப்படுகின்றது. இவற்றை களனி, வெலிகம, கண்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல்பாவில என்ற இடங்களில் சிறப்பாகச் செய்கின்றனர் இவற்றிற்கு அலங்காரம் செய்யப்படுகின்றது. பாரம்ரிய அலங்காரங்கள் பயன்படுத்தப்படுகின்றது. கோடுகள் மூலம் காட்டப்பட்டுள்ள வடிவங்கள் அன்னாசி மலர், தாமரை, கொடி அலங்காரம், அரச இலை சீப்பு, கேதுவடிவம் சவடி என்பன கூறலாம் பூந்தாளி போன்றவற்றிற்கு வர்ணம் பூசப்பட்டுள்ளது இவற்றிற்கு எண்ணைவர்ணம் பயன்படுத்தப்படுகின்றது.

**துணியில் பற்றிக்:-**

இலங்கையில் பற்றிக்துணி அமைக்கும் தொழில் பல ஆண்டுகளுக்கு முன் இருந்து காணப்படுகின்றது. பாரம்பரிய அலங்காரங்களும் நவீன அலங்காரங்களும் காணப்படுகின்றது. துணியை தெரிவு செய்யும் போது பற்றிக் செய்வதற்கு உகந்த துணிகளை கொற்றொயில் தெரிவு செய்து கொள்ள வேண்டும் பப்பிளீன், டெற்றோன் கொற்றொயில் போன்ற துணிகள் சிறந்தது.

கடதாசிமிலும் பற்றிக் அலங்காரம் செய்யலாம் கடதாசியில் அலங்காரம் செய்வதற்கு நீர்வர்ணம் மெழுகு என்பன பயன்படுத்தப்படுகின்றது.

## அரக்கு வேலை

அரக்கு வேலை இந்தியா, இலங்கை, சீனா, யப்பான், பர்மா, இந்துனேசியா, மாலைதீவு, முதலிய கீழைத்தேச நாடுகளில் பண்டு தொட்டு நடைபெற்று வரும் குடிசைத் தொழிலாகும் முற்காலத்து இந்திய மக்கள் அரக்குத் திரவத்தைத் துணிகளை சாயமூட்டப் பயன்படுத்தினர்.

தேவநம்பியதீசன் காலத்தில் (கி. மு. 288 ல்) அசோக்க சக்கரவர்த்தி மகாபோதியின் கிளையை (அரசமரக்கிளை) இலங்கைக்கு அனுப்பும்போது அவ்வைபவத்தை நிலை நாட்டும் வண்ணம் அரக்குத் தொழிலாளிகளையும் அனுப்பினான் என்றும் அதற்குப்பின் இவ்வேலை அழியாமல் நிலை பெற்றுள்ளது என்றும் கன்ன பரம்பரையான கதைமூலம் விளங்குகின்றது இதனை மகாவம்சமும் உறுதிப்படுத்துகின்றது: இவ்வாறு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் நம்நாட்டிற்கு வந்த அரக்கு வேலை தேசிய அலங்கரிப்புகளில் வளர்ச்சி பெற்று தேசிய தொழிலாக மாறியுள்ளது.

இலங்கையில் மாத்தளையில் கப்புவித என்ற இடமும் மாத்தறையில் அங்குலுமடு என்ற இடமும் கண்டிப்பகுதியில் குரீக்கடவை என்ற இடமும் அரக்கு வேலைக்குப் பெயர் பெற்ற இடங்களாகும் பலன்கொட பல்லேகந்த அகல்மடுவ போன்ற இடங்களிலும் நடைப்பெறுகின்றது.

**நகத்தினால் அரக்கிடுதல் (நியபொத்துவெட)**

கையினால் அரக்குச்சாயம் பூசுதலும் மினுக்குதலும் அரக்குச் சாயம் பூசுதல் எனப்படும். அரக்குப் பூசப்பட்ட பொருளில் அரக்கு நூலினால் அலங்காரச் சித்திரக் காட்டுருக்களையமைத்தல் நலத்தாவரக்கிடுதல் எனப்படும் அரக்குப் பூசப்பட்ட பாண்டத்தை எடுத்து அரக்கடுப்பில் சிறிதளவு சூடாக்கி விரும்பிய காட்டுரு அமையுமாறு அதில் அரக்கு நூலை ஒட்டவேண்டும். இவ்வாறு ஒட்டும்போது மிஞ்சிய நூலை அறுத்துக்கொள்ளலாம். நகத்தினால் ஒட்டும் அரக்கு நூல் கழன்றுபோகும் ஆகையால் பனை ஓலையினால் நன்றாக இறுக்குதல் வேண்டும்.

அரக்குத்தொழிலில் கோட்டுச் சித்திரங்கள் மட்டுமே அமைக்க முடியும்.

## 79. இலங்கை ஓவியர்கள்

**திரு. சோலியஸ் மெண்டிஸ்:-** இவர் அம்பலாந்தோட்ட என்னும். இடத்திற்கு அண்மையிலுல்ல கஹவ என்னும் இடத்தில் பிறந்தார். சிறுவயதில் இருந்தே ஓவியம் வரைவது இவரது இயல்பாக இருந்தது. ஆரம்பத்தில் மெனோலிஸ் சில்வா என்பவரிடம் ஓவியம் கற்றுக் கொண்டார் ஆரம்பத்தில் ரணஸ்கல்ல, மத்தேபொல ஆகிய இடங்களில் காணப்படும் விகாரையிலும் ஓவியம் தீட்டினார். இவருடைய ஓவியங்களை பார்வையிட்ட களனி விகாரையின் நிர்வாகசபையினர் மிகத் திருப்தி கொண்டு களனி விகாரையிலும் ஓவியம் தீட்டுவதற்கு சோலியஸ். மெண்டிஸ் அவர்களுக்கு அழைப்பு விடுத்து அவரை இந்தியாவிற்கு அனுப்பி இந்திய சித்திர ஆசிரியரான நந்தலால் போஸ் அவர்களிடம் மேலும் ஓவியம் வரைய கற்பித்து சிறந்த ஓவியங்கள் வரைய வழிவகுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலியஸ் மெண்டிஸ் களனி விகாரையில் ஓவியங்கள் தீட்டியுள்ளார். அவருடைய இவ் ஓவியங்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவை கோடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் அத்துடன் ஒளி நிழல் காட்டி முப்பரிமானத் தோற்றத்தை சிறப்புடன் காட்டியுள்ளதுடன் மிக மெல்லிய தூரிகைகள் பயன் படுத்தியுள்ளார் என்பது அவரின் ஓவியங்களில் தென்படுகின்றது. களனி விகாரையில் காணப்படும் இவரின் ஓவியங்கள் சில.

1. புத்தபெருமான் களனிக்கும் நயினாதீவுக்கு வந்த காட்சி
2. மையங்கனயில் பேய்களை விரட்டுதல்
3. மகிந்தனின் பயணம்
4. கீர்த்திசிறி இராஜசிங்கனின் அரச பதவி ஏற்றல்
5. கேமமாலா தந்ததாது கொண்டுவருதல்



இவ்ஓவியங்கள் அனைத்திற்கும் பயன் படுத்தப்பட்டுள்ள வர்ணங்கள் இலங்கையிலுள்ள தாவரங்கள் வேர்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி பெறப்பட்ட வர்ணங்கள் எனக் கூறப்படுகின்றது.

## திரு. எஸ். பீ. சாள்ஸ்

பழைய விகாரைகளின் ஓவியங்களை பிரதிப்பண்ணும் ஓவியர்கள் இருவர் அவர்களில் எஸ். பீ. சாள்ஸ் ஓவியரும் ஒருவர் மற்றவர் திரு. மஞ்சுசிறி ஆவார்.

வெளிகம, பல்லேகம என்னும் இடத்தில் பிறந்த சாள்ஸ் H. A. P. தர்மவர்தன என்பவரிடம் ஓவியம் பயின்றார் 1939ம் ஆண்டு இரத்மலான வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1944ம் ஆண்டு ஒருவருட விடுமுறையில் தொழில் நுட்பக்கல்லூரிக்குச் சென்று பின் திரும்பவும் அப்பாடசாலைக்கு வந்தபோது அப்போது அங்கு அதிபராக இருந்த J. D. A. பெரேரா அவர்கள் மேலும் உயர் கல்வியை கற்பதற்கு ஒழுங்குகள் செய்து கொடுத்தார். அதன் காரணமாக சாள்ஸ் அவரின் புகழ் ஓங்கியது.

ஓவியத்துறைக்கு பெரும் சேவையாற்றிய சாள்ஸ் அவர்கள் பல நூல்களை எழுதியுள்ளார் அத்துடன் இலங்கை சுதந்திரம் பெற்றபின் முதலாவது பாராளுமன்றத்திற்கு "செங்கோல்" அமைத்துக் கொடுத்துள்ளார். பிரித்தானியா தொல்பொருள் நிலையத்தில் காணப்படும் முதலாவது ஓவியம் இவருடையது எனக் கூறலாம்.

## கலாயோகி. ஆனந்தகுமாரசாமி

கலாயோகி. ஆனந்த குமாரசாமி அவர்கள் ஓவியராக இல்லாத போதும் ஓவியத்துறைக்கு அவர் ஆற்றிய சேவை அளப்பரியது என்று கூறலாம் 1877-08-22 பிறந்த ஆனந்த குமாரசாமி அவர்கள் இலங்கையில் பிறந்தாலும் அவருடைய கல்வி வாழ்க்கை இங்கிலாந்தில் நடைப்பெற்றது. விஞ்ஞான பட்டதாரியான இவர் இலங்கைக்கு வந்து தன் நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகள் அறிந்து அவர்களின் கலைப்படைப்புகள் விகாரை ஓவியங்கள், சிற்பங்கள் என்பவற்றை ஆராய்ந்து ஆங்கில, தமிழ் நூல்களை எழுதியுள்ளார். இலங்கையின் சிற்ப வளர்ச்சி, மத்தியகால சிங்களகலை ஆகிய நூல்கலை எழுதியுள்ளார் இவருடைய இந்த நூல்கள் தற்போதும் ஓவிய சிற்ப வல்லுனர்களுக்கு பேருதவியாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1996 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 1996

சித்திரக்கலை I — ஒரு மணித்தியாலம் / *One hour* — 51 S I

**Art I**


எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

வினாக்கள் 1 தொடக்கம் 5 வரை கீழே தரப்பட்டுள்ள படங்களை இனங்கண்டபின் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான படத்தைத் தெரிவுசெய்து அதை குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


(A)


(B)


(C)


(D)


(E)

1. இது இந்துநதிப் பள்ளத்தாக்கிலிருந்து கிடைக்கப் பெற்ற ஓர் இலச்சனையாகும். (......)
2. இது பண்டை எகிப்திய பாரோக்களின் ஆடம்பரத்தையும் அதிகாரத்தையும் குறிக்கும் ஓர் சின்னமாகும். (......)
3. இது வரலாற்றுக்கு முற்பட்டகாலக் குகை ஓவியம் ஒன்றிலிருந்து பெற்ற ஒரு படமாகும். (......)
4. இது குறித்த ஒரு சகாப்த காலத்தில் வடிவமைக்கப்பட்டு கற் கைபிடிச்சுவர்களில் செதுக்கப்பட்டது. (......)
5. இது பௌத்த இந்துக் கோவில்களில் பயன்படுத்தப்பட்ட அலங்கார அமைப்பொன்றின் ஒரு பகுதியாகும் (......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினாக்கள் 6 தொடக்கம் 12 வரை பொருத்தமான சொற்களை வைத்து வெற்றிடங்களை நிரப்புக.**

6. கொழும்புப் பிரதேசத்திலுள்ள ஒரு மாதா கோயில் சாய மூட்டிய ஆடி (கண்ணாடி) மீதான சித்திரக் கலைப் படைப்பிற்குப் பிரசித்திபெற்றதாகும். இது .................................................................. தேவாலயம் என அழைக்கப்படுகிறது.
7. பதிக்கப்படும் மட்பாண்டத் துண்டுகள், ஓரளவு விலையுயர்ந்த கற்கள் என்பவற்றைக் கொண்டு நிறைவேற்றப்பெற்றப்பட்ட கலை ஆக்கங்கள் .................................................................. படைப்புகளாக அழைக்கப்படுகின்றன.
8. இந்து, பௌத்த கோவில்களில் வாமன (குள்ள) வடிவங்கள் வாயிற் படிகளின் நிலைக்குத்தான முகத்தில் மேற்பரப்பிலிருந்து புடைத்து நிற்கும் வகையில் செதுக்கப்பட்டுள்ளன. எனவே அவை .................................................................. புடைப்பங்கள் என அழைக்கப்படுகின்றன.
9. பண்டைக் காலச் சித்திரம் கலைஞர்கள் தமது சுவரோவியங்களைத் தீட்டியதன் பின்னர் அவற்றின் பாதுகாப்பிற்காக .................................................................. என அழைக்கப்பட்ட வாணிசு மேற்□ச்சொன்றினை அவற்றின் மீது இட்டார்.
10. ஆலவட்ட கைப்பிடிகள், புல்லாங்குழல்கள், செதுக்கியமரப்பிடிகள், நடை பிரம்புகள் என்பவற்றின் மீது .................................................................. என அழைக்கப்படுகின்ற. அரக்கில் அமைந்த நுண்வேலைப்பாட்டு அலங்காரத்தினைக் காணலாம்.
11. வெளிநாட்டு உதவியுடன் கட்டப்பட்ட சிறப்பான நூதனசாலையொன்றைக்கொண்ட. அம்பலாங்கொட நகர் .................................................................. ஆக்கத்தின் பிறப்பிடமாகக் கருதப்படுகிறது.
12. மகரம் எனப்படுவது ஆறு விலங்குகளின் உருவமைப்பைக் கொண்டு படைக்கப்பட்டதாகும். மகரத்தின் பற்கள் தோற்றத்தில் .................................................................. பற்களை ஒத்தது.

➢ **வினாக்கள் 13 தொடக்கம் 16 வரை**

வினாக்கள் **ஒவ்வொன்றிலும் இடம்பெறும் கூற்றுகள் சரியாயின் ( √ ) எனும் அடையாளத்தையும் பிழையாயின் ( × ) எனும் அடையாளத்தையும் புள்ளிக்கோட்டின் மீது இடுக.**

13. சாதிலிங்கச் சிவப்பு (vermillion Red) நிறத்தை மரகதப் பச்சையுடன் (emerald green) கலக்கும்பொழுது பளபளப்பான நிறமொன்று பெற்றுக் கொள்ளப்படலாம். (......)
14. ஊதா நிறச் சேலையை அணிந்துள்ள ஒரு பெண்ணுக்கு கிறிம்ஸன் சிவப்பு (Crimson Red) நிற இரவிக்கை நன்கு பொருத்தமுடையதாக அமையும். (......)
15. தூறல் மழை உள்ளபோது. வானவில்லில் தோன்றும் மஞ்சள் நிறம் தண்ணிறமாகக் காட்சியளிக்கும் (......)
16. உமது நண்பர்களுக்கு அனுப்புவதற்கென ஒரே வகையான வாழ்த்துமடல்கள் பலவற்றைத் தயாரிப்பதற்கு மிகப்பொருத்தமான ஊடகம் **'கொலாஜ்'** என அழைக்கப்படும் ஒட்டுவேலைச் சித்திரமாகும். (......)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வினாக்கள் 17 தொடக்கம் 21 வரை பின்வரும் படங்களின் உதவியுடன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




(A)




(B)



(C)



(D)



(E)

17. A- நின்ற நிலைப் புத்தர் சிலையிற் காணப்படும் முத்திரைக்கு வழங்கும் பெயர் யாது?

..............................................................................................................................................

18. B- விஷ்ணுவின் இவ்வெண்கலச் சிலை எங்கிருந்து அகழ்தெடுக்கப்பட்டதாகும்?

..............................................................................................................................................

19. C- இந்நினைவுச் சின்னத்தின் தோற்றத்தில் எச்சமயத்தின் இலட்சணங்களைக் காணலாம் ?

..............................................................................................................................................

20. D- இப்பெண் உருவங்கள் எவ்விடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவையாகும் ?

..............................................................................................................................................


21. E- மறுமலர்ச்சிக் காலத்தில் **'ஆதாமின் படைப்பு'** எனும் உட்புறக்கூறை ஓவியத்தைத் தீட்டியவர் யார்?


..............................................................................................................................................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


➢ 22 தொடக்கம் 26 வரை உள்ள வினாக்கள் A, B, C, D, E எனக் குறிக்கப்பட்டுள்ள பின்வரும் ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றிலிருந்து ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள படத்துடன் சம்பந்தப்பட்ட படத்தைத் தெரிவுசெய்து அதைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.


(A)



(B)



(C)


(D)


(E)

22. 
(......)

23. 
(......)

24. 
(......)

25.  (......)

26.  (......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **27 தொடக்கம் 31 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியானதைக் தெரிவுசெய்து அதைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**27.** பொலன்னறுவையிலுள்ள திவங்க பிளிமகேயிலும் அஜாந்தாவின் 1 ஆம் இலக்கக் குகையிலும் வரையப்பட்டுள்ள கையில் மலரொன்றைத் தாங்கி நிற்கும் வடிவத்திற்கு வழங்கும் பெயர்.

(i) தெய்வம் சிவன் (ii) விஷ்ணு (iii) பத்மபாணி போதிசத்துவ (iv) குபேரன் (.......)

**28.** புத்தர் சிலைகளை அமைக்கும் பொழுது சரியான சமங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பண்டைக் கலைஞர்கள் பயன்படுத்திய கருவி இது

(i) வனைவோன் சில்லு (ஸக்கபோறுவ) (ii) லம்ப தற்றுவ

(iii) யற்றி போறுவ (iv) சோதனை மூலைமட்டம் (மட்டம் லால்ல) (..........)

**29.** மாரன் கையில் துவக்குடன் சித்தரிக்கப்பட்டுள்ள உட்கூரை ஓவியம் எது ?

(i) கங்காராம ஓவியம் (ii) லங்காதிலக

(iii) தெகல்தொறுவ ஓவியம் (iv) களனிப் பழையகோவில் ஓவியம் (..........)

**30.** ஓவியத்தில் ஒட்டுவேலைச் (கொலாஜ்) செயல்நுட்பத்தை முதன் முதலாகக் கையாண்டார் .

(i) பப்ளோ பிக்காஸோ (ii) மைக்கல் ஆஞ்சலோ

(iii) ஜோர்ஜ் பிராக் (iv) டேவிட் பெயின்ரர் (..........)

**31.** தெய்வங்களைச் சித்தரிப்பதற்கு மனித உருவத்திற்கு இரு இறகுகளையும் பரிவட்டத்தையும் பயன்படுத்தி அலங்கரித்தவர்கள்:

(i) குகை ஓவியக் கலைஞர்கள் (ii) எகிப்தியர்

(iii) கிரேக்கர் (iv) இந்தியர் (..........)

➢ **வினாக்கள் 32 தொடக்கம் 35 வரை பின்வரும் வினாக்களுக்கான விடைகளை உரிய புள்ளிக்கோடுகளில் எழுதுக.**

**32.** பிசாசு நடனகாரரின் மகளை எண்ணெயில் வரைந்த சித்திர கலைஞரின் பெயரைத் தருக. இந்த ஓவியம் இப்பொழுது கொழும்பிலுள்ள தேசிய கலைக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

..........................................................................................................................................

**33.** தம்புள்ள பாறைக் கோவிலில் தனது கைகளிலொன்றில் கொடியைத் தாங்கியப்படி நிற்கும் கதிர்காமத் தெய்வத்தைச் சித்திரிக்கும் ஓர் ஓவியம் உண்டு. இத்தெய்வத்தின் கொடியிற் காணப்படுகின்ற சின்னம் யாது ?

..........................................................................................................................................

**34.** அலங்காரக் கொடிகள், □க்காட்டுருக்கள் என்பவற்றைக் கொண்டு தெய்வங்களின் வடிவங்களுடன் அலங்கரிக்கப்பட்டிருக்கும் பரிவட்டத்தைக் கொண்ட சாரநாத் புத்தர் சிலையிற் காணப்படும் முத்திரையின் பெயரைத் தருக.

..........................................................................................................................................


**35.** இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்தில் '**பாறைகளின் கன்னி**' (The Virgin of the Rocks) எனும் படத்தை ஓவியமாகத் தீட்டியவர் யார் ?

..........................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ வினாக்கள் 36-40 கீழே தரப்பட்டுள்ள கலைப்படைப்பினை இனங்கண்டு கலைப்பண்புகள் தொடர்பான ஒரு மதிப்பீட்டை ஐந்து வாக்கியங்களில் எழுதுக.



36. ..........................................................................................................

37. ..........................................................................................................

38. ..........................................................................................................

39. ..........................................................................................................

40. ..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. (சா/ தரப்) பரீட்சை – 1996

சித்திரக்கலை – II | நேரம் :- 1 மணித்தியாலம்

### விடைகள்

1. – B
2. – C
3. – A
4. – D
5. – E
6. – சகல அர்ச்சிஸ்டர்கள் தேவாலயம்
7. – மொசேக்
8. – அரைப்புடைப்பு.
9. – தொரண எண்ணெய் / தொரணதெல்
10. – நகவேலை / நியபொத்தவெட
11. – முகமூடி/ வெஸ்முகுன
12. – முதலை
13. – X
14. – ✓
15. – X
16. – X
17. – பறதுக்க துக்கித்த.
18. – பொலநறுவை இரண்டாம் சிவஆலயம்
19. – இஸ்லாம்
20. – அஜந்தா.
21. – மைக்கல் அஞ்சலோ
22. – B
23. – C
24. – A
25. – E
26. – D
27. – 3 பத்மபாணி போதிசத்துவ
28. – 2 வம்ப தற்றுவ
29. – 3 தெகல் தொறுவ ஓவியம்
30. – 1 பப்லோ பிக்காஸோ
31. – 3 கிரேக்கர்
32. – A, C, G ,S அமரசேகரா
33. – சேவல்
34. – தர்மசக்கர முத்திரை
35. – லியானோ டாவின்சி
36. – பொலநறுவை நிஸ்ஸங்கலதா மண்டபம்
37. – இங்குள்ள தூண்கள் தாமரைக் தண்டின் வடிவில் அமைந்துள்ளது.
38. – தூணின் தலைப்பில் அரைவாசி விரித்த தாமரை வடிவம் காணப்படுகின்றது.
39. – நிஸ்ஸங்கமல்லன் பிரித் கேட்பதன் பொருட்டு நிர்மாணிக்கப்பட்ட மண்டபம்.
40. – இக்கட்டடத்திற்கு கல்வேலியினால் பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரக்கலை I
Art I

ஒரு மணித்தியாலம் / *One hour*

51
S I

➢ **வினாக்கள் 1 - 5 ஒவ்வொரு வினாவெண்ணிற்கும் எதிரே தரப்பட்டுள்ள கூற்றுடன் மிகப் பொருத்தமானதாக அமையும் வடிவம் A,B,C,D,E எனத் தரப்பட்டுள்ள வடிவங்களுள் எதுவென இனங்கண்டு அதனைக் குறித்து நிற்கும் எழுத்தைப் பொருத்தமான கூற்றுக்கு எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**


(A)


(B)


(C)


(D)


(E)

1. இது கம்பளைக் காலத்தைச் சேர்ந்த ஒரு மரச்செதுக்கல் வேலைப்பாட்டிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்டதாகும். (..........)
2. மலைநாட்டில் இருந்த கண்டிய யுக ஓவிய இலட்சணங்களைக் காட்டுவது இது. (..........)
3. பொலன்னறுவைக் காலத்தில் சீகிரிய ஓவிய மரபு நிலவியமைக்குத் தெளிவான சான்றினைக் கொண்டுள்ளது. (..........)
4. அனுராதபுர காலத்தைச் சேர்ந்தவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட கலைத்திறன் வாய்ந்த ஒரு படைப்பாகும். (..........)
5. இலங்கையின் சுதேசக் கலைமரபினுள் மேலைத்தேயக் கலைப் பண்புகள் புகுந்தமையைக் காட்டுவது (..........)

➢ **வினாக்கள் 6 தொடக்கம் 10 வரை சரியான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

6. இலங்கையின் மரபுவழிவந்த ஓவியர்கள் சாதிலிங்கத்தைப் பயன்படுத்திப் பெற்றுக்கொண்ட வர்ணம் ........................................................ ஆகும்.
7. பௌத்தத்தின் வருகையின் பின்னர் இலங்கையிற் கட்டப்பட்ட முதலாவது தூபியாகக் (தாதுகோபம்) கருதப்படுகின்ற தூபாராமம் ........................................................ வடிவத்தில் அமைந்துள்ளது.
8. பொலன்னறுவை வட்டதாகேயின் நான்கு வாயில்களையும் நோக்கியபடி உள்ள புத்தர் சிலைகள் இலங்கையின் சாதாரணமான புத்தர் சிலைகளிலிருந்து கேசம் ........................................................ அமைந்திருப்பதால் வேறுபட்டவையாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இந்துநதிப் பள்ளத்தாக்கின் முத்திரைகளுள் ஒன்றிலே காணப்படுகின்ற, காட்டு விலங்குகளால் சூழப்பட்டுள்ள யோகாசன நிலையில் அமர்ந்திருக்கும் தெய்வம் ................................................................ ஒரு மாதிரி வடிவமாக கருதப்படுகிறது.

10. சாஞ்சியிலுள்ள இந்திய தூபியில் காணப்படும் தோரணத்திற்குப் பதில் இலங்கைத் தூபிகளிற் காணக்கூடிய சிறப்பான அம்சம் ................................................................ஆகும்.

➢ **வினாக்கள் 11 தொடக்கம் 15 வரை தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ( √ ) எனும் அடையாளத்தையும் பிழையாயின் ( × ) எனும் அடையாளத்தையும் கூற்றுக்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் குறிக்கவும்.**

11. மஞ்சளுக்கு எதிர்வர்ணமாக அமையும் நிறம் ஊதா ஆகும். (.........)

12. ஊடுகாட்டும் நீர் வர்ணத்தில் உயர் வெள்ளை நிறப்பொருளைப் பிரயோகித்து உயர் ஒளி பெற்றுக்கொள்ளப்படும். (.........)

13. வடிவமைப்பதில் (modelling) வடிவம் அளிக்கப்படுவது தேவையற்ற பகுதிகளை வெட்டி அகற்றுவதன் மூலமாகும். (.........)

14. அவதானிப்பவரின் இடத்திலிருந்தான தூரத்திற்கு அமைய பொருள்கள் சிறிதாகத் தோற்றுதல் நிறத் தூரதரிசனம் எனப்படும். (.........)

15. பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற தத்துவஞானிகளின் ஒருங்கிணைவைச் சித்திரிக்கும் அதென்ஸ் பாடசாலை ஓவியம், மறுமலர்ச்சிக் காலக் கலைஞர் றபாயல் சான்சியோ அவர்கள் வரைந்த தலைசிறந்த ஓவியப்படைப்பாகும். (.........)

➢ **வினாக்கள் 16 தொடக்கம் 20 வரை சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

16. பறவைகள் வேட்டையாடப்படுதலைச் சித்திரிக்கும் பிரசித்தி வாய்ந்த ஓவியம் காணப்படுவது
(1) கண்டியிலுள்ள கங்காராம ரஜமகா விகாரையில் (2) உரோமிலுள்ள சிஸ்ரைன் தேவாலயத்தில்
(3) அஜந்தாவிலுள்ள 10 ஆம் இலக்கக் குகையில் (4) எகிப்திலுள்ள ஒரு பிரமிட்டில்

17. கண்டி தெகல்தொறுவ ரஜமகாவிகாரையிலும் குருணாகல் றிதி விகாரையிலும் பௌத்த கதைகளைச் சித்திரிக்கும் சுவர் ஓவியங்களைத் தீட்டியவர்
(1) தெரகும்பொல சில்வத்தன் (2) ஜோர்ஜ் கீற் (3) ஸோலியஸ் மென்டிஸ் (4) எம். ஸார்லிஸ்

18. வெண்கல வார்ப்பில், வார்க்கப்படவேண்டிய மாதிரியுரு தொடக்கத்திற் செய்யப்படுவது:
(1) சீமெந்துச் சாந்தில் (2) பரிசுச் சாந்தில் (3) மெழுகில் (4) களிமண்ணில்


19. தூய ஊதா நிறத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பிறசியன் நீலத்துடன் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய நிறம்
(1) கிறிம்சன் லேக் (2) வேர்மில்லியன் சிவப்பு (3) இளஞ் சிவப்பு (4) கார்மைன் சிவப்பு

20. சுவரொட்டியொன்றை வடிவமைக்கும் பொழுது மிக முக்கியமானதாகக் கருதப்படவேண்டியது
(1) வடிவங்களின் இயற்கையான வகைக்குறிப்பீடு (2) செய்தியை மனத்தில் ஆழமாகப் பதியச் செய்யும் பாங்கு
(3) அதன் நிறங்களை முதன்மையான நிறங்களுக்கு மட்டுப்படுத்துதல் (4) எழுத்துக்களின் அலங்காரப் பண்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ வினாக்கள் 21 தொடக்கம் 25 வரை ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே தரப்பட்டுள்ள படத்துடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ள வடிவத்தை A,B,C,D,E எனத் தரப்பட்டுள்ள வடிவங்களிலிருந்து தெரிவுசெய்து அதைக் குறித்து நிற்கும் எழுத்தை வினாவின் பொருத்தமான வடிவத்திற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.


21.  (..........)


(A)

22.  (..........)



(B)

23.  (..........)


(C)



24.  (..........)


(D)

25.  (..........)


(E)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **வினாக்கள் 26 தொடக்கம் 35 வரை சுருக்கமான விடைகள் தருக.**

26. மாரனுடனான யுத்தத்தைச் சித்திரிக்கும் ஓவியங்களில் புத்தரின் கரங்கள் காட்டும் முத்திரை அல்லது குறியீடு யாது?

..........................................................................................

27. இந்துக் கோயிலொன்றின் பிரதான வாயிலின் விதானத்திலுள்ள அலங்காரக் கட்டட சிற்ப அமைப்புக்கு வழங்கும் பெயர் யாது? ..........................................................................................

28. சிஸ்ரைன் தேவாலயத்திற் காணப்படும் **'இறுதித் தீர்ப்பு'** என்னும் ஓவியம் எவரது படைப்பாகும்.

..........................................................................................

29. இலங்கையில் குழந்தைச் சித்திரக்கலையில் ஆர்வங்கொண்டோர்க்கும் ஆசிரியர்களுக்கும் அறிவொளியினை ஊட்டுவதற்குப் பொறுப்பாகவிருந்த 43 ஆவது குழுவின் முன்னோடி உறுப்பினராக இருந்த கலைஞரின் பெயரைத் தருக.

..........................................................................................

30. சாரநாத்திலுள்ள பிரசித்தி வாய்ந்த அமர்ந்த புத்தர் சிலையில் தனது அதியுயர்ந்த வளர்ச்சிக் கட்டத்தைக் காண்பிக்கும் கலைமரபின் பெயர் குறிப்பிடுக. ..........................................................................................

31. சித்திரக்கலையில் அச்சிடும் செயன்முறையை முதன்முதலின் அறிமுகப்படுத்திய தேசம் எது?

..........................................................................................

32. அஜாந்தாக் குகை இலக்கம் 1 இல் சித்திரிக்கப்பட்டுள்ள மகா போதிசத்துவ பத்மபாணியின் எந்த உடற் சிறப்பியல்பு யானையினது தும்பிக்கையின் அழகினை நினைவுபடுத்துகிறது? ..........................................................................................

33. பிரசித்தி வாய்ந்த தென்னிந்திய வெண்கல நடராஜர் சிலையின் கரமொன்றிலுள்ள எப்பொருள் அழித்தற்றொழிலைக் குறித்து நிற்கிறது?

34. எம். சாளிஸ் என்பார் கண்டிச்சுவரோவிய மரபிலிருந்து விலகிச்செல்வதில் செல்வாக்குச் செலுத்திய பௌத்த கலை வடிவம் எது? ..........................................................................................

35. கோதமி விகாரையில் ஜோர்ஜ் கீற் அவர்கள் வரைந்த எந்த, ஓவியம் கலைஞர் நவீன வடிவங்களைக் கையாண்ட விதத்தில் உணர்வு ரீதியில் வளம் மிக்கதாகக் காணப்படுகிறது? ..........................................................................................

➢ **வினா 36 தொடக்கம் 40 வரை கீழே காட்டப்பட்டுள்ள கலைப் படைப்பினை இனங்கண்டு அதனை மதிப்பிடும் ஐந்து வாக்கியங்களை எழுதுக.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. ......................................................................................................................

37. ......................................................................................................................

38. ......................................................................................................................

39. ......................................................................................................................

40. ......................................................................................................................

## க.பொ.த. (சா/ தரப்) பரீட்சை – 1997

சித்திரக்கலை – II

நேரம் :- 1 மணித்தியாலம்

### விடைகள்

1 – E
2 – A
3 – B
4 – C
5 – D
6 – சிவப்பு
7 – தானியக்குவியல் / நெற்குவியல்
8 – தட்டையாக / தலைமயிர் இல்லாமல்
9 – சிவன் / பசுபதி
10 – வாகல்கடம்
11 – சரி
12 – பிழை
13 – பிழை
14 – பிழை
15 – சரி
16 – 4 – எகிப்திலுள்ள ஒரு பி[illegible]ட்டில்
17 – 1 தேவரகம் பொல சில்வர்த்தன
18 – 3 மெழுகில்
19 – 1 கிறிம்சன் லேக்
20 – 2 செய்தியை மனதில் ஆழமாகப் பதியச்செய்யும் பாங்கு
21 – C
22 – D
23 – B
24 – E
25 – A
26 – பூமிபரிச முத்திரை
27 – கோபுரம் / இராஜகோபுரம்
28 – மைக்கல் அஞ்சலோ
29 – W.J.G பிலிங் / ஜெப்ரி
30 – மதுரா மரபு / குப்த மரபு
31 – சீனா
32 – கை / உறதள
33 – தீச்சுடர் / கினிதள்ள
34 – மேல்நாட்டுக்கலை / ஐரோப்பியகலை
35 – மாரனின் யுத்தம்
36 – இசுறுமுனிய விகாரையில் காணப்படும் சிற்பம்
37 – அரசகுடும்பம் அல்லது துட்டகைமுனுவும் சாலிய குமாரனும்
38 – கருங்கல் புடைப்புச்சிற்பம்
39 – 4ம் அல்லது 5ம் நூற்றாண்டுக்குரியது
40 – குப்த மரபு அல்லது பல்லவ மரபு அனுராதபுரக்கலைச்சிற்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1998 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 1998


சித்திரக்கலை I
Art I

ஒரு மணித்தியாலம் / *One hour*


51 S I


எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

➢ வினாக்கள் 1 தொடக்கம் 5 வரை ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள விவரணத்திற்கு மிகப் பொருத்தமான வடிவம் A,B,C,D,E எனத் தரப்பட்டுள்ள வடிவங்களுள் எதுவென இனங்கண்டு அதனைக் குறித்து நிற்கும் எழுத்தைப் பொருத்தமான கூற்றிற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.


(A)


(B)


(C)


(D)


(E)

1. சணல் தாவரத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நாரைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஒரு கலையம்சம் வாய்ந்த கைப்பணி (......)
2. மட் பாண்டங்களுக்குப் பிரயோகிக்கப்படும் ஓர் அலங்காரக் காட்டுரு (......)
3. இலங்கையில் 18 ஆம் நூற்றாண்டில் நிலவிய சித்திரக் கலை மரபினை நினைவூட்டுவது (......)
4. தலைசிறந்த உள்ளுணர்வினைப் பிரதிபலிக்கும் ஓர் கலை ஆக்கம் (......)
5. மாணவர்களிடையே சித்திரம் வரையும் திறன்களை விருத்திசெய்வதற்கான ஒரு பயிற்சியாக மட்டுமன்றிஅரிதாக அலங்கார நோக்கத்திற்காகவும் பிரயோகிக்கப்படும் ஒரு படவாக்கம். (......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **வினாக்கள் 6 தொடக்கம் 10 வரை வெற்றிடங்களைச் சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக.**

6. உண்ணாட்டுக் கட்டட சிற்பக் கலைஞரின் சுயாதீனமான ஒரு படைப்பாகக் கருதப்படுகின்ற ..........................................
ஆனது தூபிக்கு அழகினை ஊட்டுவதுடன் அமையாது அதன் பலத்தையும் உறுதிப்படுத்துகின்றது.

7. பொலன்னறுவை கல்விகாரையில், கி.பி. 12 ஆம் நூற்றாண்டிற் செதுக்கப்பட்டதாகக் கருதப்படும் நின்ற நிலையிலுள்ள புத்தர் சிலையில் அவரது கரங்கள் காண்பிக்கும் முத்திரை .................................................... ஆக இனங் காணப்படுகின்றது.

8. சிங்கள அலங்காரக் கலை வடிவங்களில் .................................................... ஆகிய இரு குறியீடுகளும் தெய்வீக அம்சம் கொண்டனவையாகக் கருதப்படுகின்றன.

9. நிறங்களை வகைப்படுத்தும்பொழுது செவ்தா நிறமானது .................................................... வர்ணங்கள் எனும் வகையைச் சேர்ந்ததாகும்.

10. எண்ணெய்ச் சித்திரங்களைத் தீட்டுதல் கைதேர்ந்த ஓவியராக மட்டுமன்றி அரசாங்க நுண்கலைக் கல்லூரியின் நாபகராகவும் பெயர் பெற்றவர் .................................................... ஆவார்.

➢ **வினாக்கள் 11 தொடக்கம் 15 வரை சரியான விடைகளின் கீழ்க் கோடிடுக.**

11. பின்வருவனவற்றுள் எதனைப் பயன்படுத்தி சிந்துவெளி நாகரிகத்தைச் சேர்ந்த கலை ஆக்கங்கள் சில வடிவமைக்கப்பட்டன?
(1) கருங்கல் (2) மரமும் கருங்கல்லும் (3) செம்மணற்கல் (4) செங்கல்

12. மனித உருவத்தைப் படைப்பதில் கிரேக்க சிற்பிகளின் பிரதான கருத்தாக இருந்தது.
(1) முகத்தின் பக்கப் பார்வையையும் கண்களின் முன்பக்கத் தோற்றத்தையும் காண்பித்தல்
(2) பலத்தையும் வெற்றிலையும் வெளிப்படுத்தல்
(3) திரிபடைந்த வடிவங்களைப் பயன்படுத்துதல்
(4) இலட்சியமான, மனிதர் - அழகினையும் தேகபலத்தையும் வெளிப்படுத்துதல்

13. சித்திர ஆக்கத்தில் எளிமையான வடிவங்களைச் சுலபமாக அமைக்க உதவும் ஊடகம்.
(1) உலோகம் (2) அச்சிடல் (3) கோட்டுரு (4) ஒட்டுவேலைச் சித்திரம் (கொலாஜ்)

14. ஆன்மீக வசீகரம், உள உரன், உறுதிப்பாடு, நுட்பமான கையாட்நகை எனும் பாங்குகளில் குப்தர் காலப் படைப்புத்திறனின் சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்கும் புத்தர்சிலை அமைந்துள்ள இடம்
(1) அவுகனை (2) தொலுவில (3) பொலன்னறுவை கல்விஹாரை (4) கம்பளை லங்காதிலக

15. எகிப்திய ஓவியத்தின் ஒரு முனைப்பான சிறப்பியல்பு
(1) தூரதரிசன தத்துவங்களை அனுசரித்தல் (2) முப்பரிமாணப் பாங்கில் நிழற்றுதல்
(3) கோடுகள் சார் வரைவிலக்கணம் (4) ஒருங்கமைவைப் புறக்கணித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **வினாக்கள் 16 தொடக்கம் 20 வரை தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ( √ ) எனும் அடையாளத்தையும் பிழையாயின் ( × ) எனும் அடையாளத்தையும் கூற்றிற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது இடுக.**

**16.** இலங்கையின் பண்டைய சிற்பக் கலையில் சிங்கமானது செல்வச் செழிப்பு, வளம் என்பவற்றின் குறியீடாகக் கருதப்பட்டது. (..........)


**17.** பொருள்கள் மீது படும் சூரிய ஒளியின் வேறுபட்ட தாக்கங்களை உணர்ந்தமையின் நேரடியான விளைவே தத்ரூப நிழலுருக் காட்சியிலலாளர்களின் நிறப் பிரயோக முறையாகும். (..........)

**18.** இயற்கையை ஓவியமாகத் தீட்டுவதில் கைதேர்ந்திருந்த சீன ஓவியர்கள், சீனாவுக்கு பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின், பௌத்த கருப்பொருள்களை ஓவியமாகத் தீட்டுவதில் ஆர்வம் காட்டினர் (..........)

**19.** உரோமபுரி சிஸ்ரைன் தேவாலயத்தின் உட்கூரை ஓவியங்களைத் தீட்டியர் லியனாடோ டாவின்சி ஆவார். (..........)

**20.** ஏதேனுமொரு வர்ணத்தில் அடங்கும் ஒளியின் அளவு கூடுதல் அல்லது குறைதல் காரணமாக ஏற்படும் வித்தியாசம் வர்ணத்தின் சக்தி (பெறுமானம்) எனப்படும். (..........)

➢ **வினாக்கள் 21 தொடக்கம் 25 வரை ஒவ்வொரு வினாவிலும் இலக்கத்திற்கு எதிரே தரப்பட்டுள்ள வடிவத்துடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ள வடிவத்தை A,B,C,D,E எனத் தரப்பட்டுள்ள வடிவங்களிலிருந்து தெரிவு செய்து அதைக் குறித்து நிற்கும் எழுத்தை வினாவின் பொருத்தமான வடிவத் திற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.**

**21.**  (..........)



(A)


**22.**  (..........)




(B)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23.  (.........) 

(C)

24.  (..........) 

(D)

25.  (..........) 

(E)

➢ **வினாக்கள் 26 தொடக்கம் 30 வரை பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான சரியான விடையை வினாவுக்கு எதிரே தரப்பட்டிருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

26. சாஞ்சியின் கிழக்கு வாயிலில் **'உன்னத புறப்பாடு'** எனும் புடைப்புச் செதுக்கலில் இளவரசர் போதிசத்துவரின் பிரசன்னத்தைக் காட்டும் குறியீடு எது? (.........................................)

27. கூர்ந்து செவிமடுத்தலைப் புலப்படுத்துகின்ற அமர்ந்திருக்கும் நிலையிலுள்ள எகிப்திய சிலை எதுவெனக் குறிப்பிடுக. (.........................................)

28. அவுக்கன புத்தர் சிலையில இந்தியாவின் எக்கலைமரபு நேரடியான தனது செல்வாக்கைக் காட்டுகின்றது (.........................................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. அல்ட்டாமீராவிலுள்ள வரலாற்றுக்கு முற்பட்டகாலக் குகை வசிப்பிடங்களின் சுவர்களிற் காணப்படும் விலங்குச் சித்திரங்கள் இயற்கையான தோற்றத்தின் வெளிப்பாடுகளாகவா அன்றேல் எண்ணக்கரு சார்ந்தவையாகவா உள்ளன? (..............................................)

30. நாகமன்னர்களைத் திரிபங்க நிலையிற் காட்டுபவையாக இலங்கையில் எஞ்சியுள்ள காவற்கற்களுள் கலைச்சிறப்பு மிக்கதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எது? (..............................................)

➢ **வினாக்கள் 31 தொடக்கம் 35 வரை வெற்றிடங்களைச் சரியான விடைகளைக் கொண்டு நிரப்பிப் பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

31. நுண்ணியகோடுகளை வரைவதற்குக் கண்டியர் காலத்தைச் சேர்ந்த மரபுவழி ஓவியர்கள் பயன்படுத்திய தாவரப் பொருள் ................................................................................ ஆகும்.

32. பித்தளை, வெள்ளிப் பாண்டங்கள் இரு வகுதிகளைச் சேர்ந்தவை. அவற்றுள் ஒன்று அடித்துத் தகடாக்கப்பட்டவை மற்றது ................................................................................ ஆகும்.

33. பொலன்னறுவை இந்துக் கோவில்களிற் காணப்பெற்ற வெண்கலச் சிலைகள். தென் இந்தியாவின் ................................................................................ கலைமரபின் நேரடியான செல்வாக்கினை வெளிக் காட்டுகின்றன.

34. 16 ஆம் இலக்க அஜந்தாக் குகையின் ஓவியங்களில் ஆழ்ந்த உணர்வுகளை வெளிப்படுத்துவதாக உள்ள ஓவியம் ........................................ ஆகும்.

35. ரபாயல் சான்சியோ அவர்களின், தூரதரிசனக் கலைநுட்ப உயர் ஞானத்தை வெளிப்படுத்தி நிற்கும் தலைசிறந்த படைப்பு ................................................................................ ஓவியமாகும்.

➢ **வினாக்கள் 36 தொடக்கம் 40 வரை கீழே தரப்பட்டுள்ள கலைப்படைப்பினை இனங்கண்டு அதனை மதிப்பீடும் ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36 ..............................................................................................

37. ..............................................................................................

38. ..............................................................................................

39. ..............................................................................................

40. ..............................................................................................

## க.பொ. த. (சா/தரம்) பரீட்சை – 1998

### சித்திரக்கலை II

### விடைகள்

1 – E
2 – B
3 – C
4 – A
5 – D
6 – வாகல்கடம்
7 – பறதுக்க துக்கித்த (பிறருக்காக வருந்துதல்)
8 – சூரியன் - சந்திரன்
9 – துணை வர்ணம்
10 – J.D.A பெரேரா
11 – 3 செம்மணற்கல்
12 – 4 இலட்சியமான மனிதர் - அழகினையும் தேகபலத்தையும்
13 – 4 ஒட்டுவேலைச்சித்திரம் (கொலாஜ்)
14 – 2 தொலுவில
15 – 3 கோடுகள் சரி வரைவிலக்கணம்
16 – பிழை
17 – சரி
18 – சரி
19 – பிழை
20 – சரி
21 – D
22 – C
23 – E
24 – B
25 – A
26 – குடை (ஷத்திரய)
27 – ஸ்கிரைப்ஸ், எழுத்தாளன்)
28 – அமராவதி, ஆந்திர
29 – இயற்கை
30 – இரத்தின பிரசா காவற்சிலை
31 – தெலிந்தன
32 – வார்த்தல்
33 – சோழ
34 – மரண வாயில் இருக்கும் அரசகுமாரி
35 – அதன்ஸ் பாடசாலை, அதன்ஸ் குருகுலம்
36 – களனி விகாரையில் (புதிய) சுவரில் காணப்படும் ஓவியம்
37 – சோழியஸ் மெண்டிஸ் என்னும் ஓவியரால் வரையப்பட்டது
38 – இலங்கைக்கு வெள்ளரசு மரம் கொண்டு வரும் காட்சி
39 – இரேகைகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது
40 – இவ் ஓவியத்திற்கு தேசிய வர்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண )தரப் பரீட்சை, 1999 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 1999


சித்திரக்கலை I
Art I

ஒரு மணித்தியாலம் / *One hour*

51 S I

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக

வினாக்கள் 1 தொடக்கம் 5 வரை ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள விவரணத்திற்கு மிகப் பொருத்தமான வடிவம் A, B,C ,D, E எனத் தரப்பட்டுள்ள வடிவங்களுள் எதுவென இனங்கண்டு அதனைக் குறித்து நிற்கும் எழுத்தைப் பொருத்தமான கூற்றிற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.


A


B


C


D


E

1. இந்த ஓவியம் ஈரச் சாந்தின் மேல் வர்ணந் தீட்டும் நுட்பத்தைக் குறிக்கிறது. (......)

2. கி. பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவர் ஓவியம் ஒன்றின் ஒரு பகுதியாகும் (......)

3. இலங்கையில் விகாரை ஓவியங்களின் புதிய பாணியினைக் குறிக்கிறது. (......)

4. இக்கலை ஆக்கத்தில் விரிவானதும் . ஒத்திசைவுமானதுமான வர்ணங்களின் பயன்பாடு ஆதிக்கம் செலுத்துகிறது. இலங்கையில் உள்ள பௌத்த விகாரையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. (......)

5. தொடர்ச்சியான கதை விவாரணத்தையும் அலங்காரப் பாணியையும் குறிக்கிறது. (......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **வினாக்கள் 6 தொடக்கம் 10 வரை வெற்றிடங்களைச் சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக.**

6. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் நெற்குவியல் வடிவமைப்பில் (தான்யகார) கட்டப்பட்ட ..................................................... இலங்கையின் முதல் தூபி எனத் தொல்பொருளியலாளர்களால் இனங்காட்டப் பட்டுள்ளது.

7. மரபு வழி அலங்கார நோக்குருவான அரிம்புவா (Arimbuwa) ..................................................... வகையைச் சேர்ந்ததாகும்

8. ..................................................... எனத் தலைப்பு இடப்பட்ட எகிப்திய சிற்பம் எஜமானர் கூறுவதை கூர்ந்து செவிமடுத்தலை வெளிப்படுத்துகிறது.

9. சிவப்பு, செம்மஞ்சள், செவ்வூதா வர்ணங்கள் ஒன்றுக்கொன்று ..................................................... உடையவை.

10. செங்கற்களாலும், சுண்ணாம்புக் கலவையாலும் கட்டப்பட்ட இலங்காதிலக விகாரை ..................................................... காலப் பகுதியைச் சேர்ந்ததாகும்.

➢ **வினாக்கள் 11 தொடக்கம் 15 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் ( √ ) என்ற அடையாளத்தையும் பிழையாயின் ( × ) என்ற அடையாளத்தையும் கூற்றிற்கு எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது இடுக.**

11. மரபு வழி மட்பாண்டக் கலைஞர்கள் அடிப்படை மாதிரியுருக்களை வனைசில்லின் (சக்கப்போறுவ) உதவியுடன் தயாரித்தனர். (........)

12. புகழ்பெற்ற அவுக்கண புத்தர் சிலையின் சிரஸ்பத (Siraspatha) அதனைச் செய்த சிற்பியினால் சேர்க்கப்பட்ட ஒரு விசேட அம்சமாகும். (........)

13. நிலத்தோற்றங்களை வரைவதிலும், உருவவரைபுக் கலைஞருமான புகழ்பெற்ற ஜஸ்டின் தெரணியகலையே கண்டியிலுள்ள ட்ரினிற்றித் தேவாலய சுவர் ஓவியங்களைப் படைத்த சிறப்பையும் பெறுகிறார். (........)

14. புத்தர் உருவச்சிலையின பூமி ஸ்பர்ச முத்திரை (நிலத்தைத் தொடும் சாடை) புத்தர் பெருமான் ஞானம் பெற்றதைக் குறிக்கிறது. (........)

15. அனுராதபுரத்தில் உள்ள இராணி மாளிகையின் (பிஸோ மாளிகை) முன்புறக் காவற்கல்லில் நாக அரசனைக் குறிக்கும் குறைப் புடைப்புச் சிற்பமானது அவ் வகைச் சிற்பங்களுள் மிகச் சிறந்ததெனக் கருதப்படுகிறது (........)

➢ **வினாக்கள் 16 தொடக்கம் 20 வரை பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

16. மால்லபுரத்தின் சிற்பக்கலையை நினைவுபடுத்துவது

(1) திவங்க உருவ வீடு
(2) அம்பக்கே தேவாலயம்
(3) நாலந்த கெடிகே
(4) இலங்காதிலக விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சிவனின் நடனத் தோற்றமான நடராஜர் சிலையால் வெளிப்படுத்தப்படுவது

(1) உலகின் தோற்றமும் அழிவும்  (2) பிரபஞ்ச நடனம்
(3) மனித உடலின் லயத்துடனான அசைவு  (4) அறியாமையை அழித்தல்

18. பெண் வடிவத்தின் உடல் வனப்பை எடுத்துகாட்டும் கிரேக்கச் சிலை

(1) நெஃபேர்நிரி இராணி  (2) தியோடோரா இராணி
(3) நோஃபெரட் இராணி  (4) வீனஸ் தெய்வம்



19. மொஹெஞ்சதாரோவில் அகழ்தெடுக்கப்பட்ட நடனப் பெண் எனக் கருதப்படும் சிலையானது செய்யப்பட்டது


(1) கல்லினால்  (2) வெண்கலத்தால்  (3) செம்மனாற் கல்லினால்  (4) சுண்ணாம்புக் கல்லினால்


20. **"பிசாசு நடனக்காரனின் மகள்"** என்பதை வரைந்த ஓவியர் உரு வரைபு ஓவியங்களை வரைவதிலும் புகழ்பெற்றவர் அவர் பெயர்

(1) ஸ்ரான்லி அபேசிங்க  (2) லயனல் வென்ற்  (3) A.C.G.S .அமரசேகர  (4) J, G பேய்லிங்

➢ **வினாக்கள் 21 தொடக்கம் 25 வரை ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள வடிவத்துடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ள வடிவத்தை A, B, C, D, E. எனத் தரப்பட்டுள்ள வடிவங்களிருந்து தெரிவு செய்து அதனை குறித்து நிற்கும் எழுத்தை வினாவின் பொருத்தமான வடிவத்திற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**



21.  ..............................................  A



22.  ..............................................  B

23.  ..............................................  C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24.  ........................................  D

25.  ........................................  E

➢ **வினாக்கள் 26 தொடக்கம் 30 வரை வெற்றிடங்களைச் சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக.**

26. கனவடிவ ஓவியப்பாணி (cubistic) இயக்கத்தின் முன்னோடி உறுப்பினரும் (கொலாஜ்) ஒட்டுச்சித்திர நுட்பத்தைப் பரிசோதனை செய்தவரும் ஸ்பானிய ஓவியரான ..............................................................ஆவார்.

27. பொலநறுவைச் சிற்பக் கலையில்..............................................................இந்தியப் பாணியின் செல்வாக்கை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

28. .............................................................. என தலைப்பு இடப்பட்ட இல. 17 குகையில் காணப்படும் அஜந்தா ஓவியம் இலங்கையின் வரலாற்று நிகழ்சி ஒன்றினை வெளிப்படுத்துகிறது

29. ஜப்பானிய ஓவியரான ஹொகுசாய் (Hokusai) இனால் தீட்டப்பட்ட .............................................................. என தலைப்பு இடப்பட்ட ஓவியத்தில் சடல் அலைகளின் லய அசைவானது ரேகை, நுரை என்பவை மூலம் உயிர்ப்புடையதாகக் காட்டப்படுகிறது.

30. அம்பேக்க தேவாலயத்தில் செதுக்கப்பட்டுள்ள சமூக வாழ்வு பற்றிய விடயங்களுள் .............................................................. புடைப்புச் சிற்பமானது ஒரு தாயின் ஆழ்ந்த அன்பைக் குறிக்கிறது.

➢ **வினாக்கள் 31 தொடக்கம் 35 வரை கீழே தரப்பட்டுள்ள வற்றை அறிமுகப்படுத்தும் வகையில் ஒரு வாக்கியம் எழுதுக.**

31. முற்குறுக்கம் (Fore shortening)

..............................................................................................................................

32. பிரஸ்கோ சீக்கோ

..............................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. கலாநிதி L, T, P. மஞ்சுசிறி

..............................................................................................................................................

34. தூண்களின் மேல் ஆலயம் (டம்பிட்ட விஹார)

..............................................................................................................................................

35. நக வேலை (Niyapothu Veda)

..............................................................................................................................................

**வினாக்கள் 36 தொடக்கம் 40 வரை பின்வரும் கலை ஆக்கத்தை இனங்கண்டு இதனை மதிப்பிடும் வகையில் ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**



36. ..............................................................................................................................................

37. ..............................................................................................................................................

38. ..............................................................................................................................................

39. ..............................................................................................................................................

40. ..............................................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. பொ. த. (சா/தரப்) பரீட்சை-1999.

### விடைகள்

1. – E
2. – C
3. – E
4. – D
5. – A
6. – தூபராம
7. – நிர் ஜீவி, உயிரற்றவை
8. – ஸ்கிறைப், எழுது, வினைஞன்
9. – அன்மித்த, அயல், ஒத்த.
10. – கம்பளை, பொலநறுவை
11. – ✓
12. – ×
13. – ×
14. – ✓
15. – ×
16. – 3 நாலந்த கெடிகே.
17. – 1
18. – 4 வீனஸ் தெய்வம்
19. – 2 வெண்கலத்தால்
20. – 3 A, C,G,S. அமரசேகரா
21. – E
22. – D
23. – A
24. – C
25. – B
26. – பவ்லோ பிக்காசோ
27. – பல்லவ, தென்இந்திய
28. – விஜயன் இலங்கைக்கு வருதல்
29. – பூஜியாம எரிமலை, பூஜிகுந்த
30. – குழந்தைக்குப் பாலூட்டும் தாய்
31. – முன்னால் நேராக காட்டும் பொழுது குட்டையான தோற்றத்தை அளிக்கும் தன்மை
32. – ஈரலிப்பான கதையின் மீது ஓவியம் வரைதல்
33. – கண்டிக்கால பௌத்த சித்திரங்களை பிரதி எடுத்துள்ளார் 43வது குழுவில் அங்கத்தவர்
34. – மரம், கல், தூண்களின் மேல் நிர்மாணிக்கப்படும் விகாரை. உலகின் தோற்றமும் அழிவும்
35. – அரக்கு தொழிலில் கையாளப்படும் நுட்பமுறை
36. – இச் சித்திரம் எம். சார்விஸ் என்னும் ஓவியரால் வரையப்பட்டது.
37. – இச்சித்திரத்தில் சித்தார்த்தரின் பிறப்பு சித்தரிக்கப்பட்டுள்ளது.
38. – இச் சித்திரம் ஒளி நிழல் வெளிக்காணப்படும் வகையில் உருவங்கள் பிரகாசமான வர்ணங்களால் தீட்டப்பட்டுள்ளன
39. – முப்பரிமாண தன்மை சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது.
40. – மனித மெய் நிலைகளும் தூரதரிசனமும் சிறப்பாகக் காட்டியுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2000 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2000**


| | | |
|---|---|---|
| **சித்திரக்கலை I**<br>**Art I** | ஒரு மணித்தியாலம் / ***One hour*** | **51**<br>**S I** |

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.**

➤ **வினாக்கள் 1 முதல் 5 வரை ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள விவரணத்திற்கு மிகப் பொருத்தமான வடிவம் A,B,C,E,E எனத் தரப்பட்டுள்ள வடிவங்களுள் எதுவென இனங்கண்டு அதனைக் குறித்து நிற்கும் எழுத்தைப் பொருத்தமான கூற்றிற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**




A



B



C



D



E

1. கண்டிக் காலகட்டத்தில் முறையிலிருந்து கலை வேலைப்பாடுகளில அநேகமாகப் பயன்படுத்தப்பட்ட ஓர் அலங்கார நோக்குரு இதுவாகும். (......)
2. களிமண்ணினால் (Clay) உருவாக்கப்பட்ட ஓர் ஆக்கப்□ர்வமான அலங்காரம். (......)
3. கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குரியதான உள்நாட்டுக் கலைச்சிற்ப உருவாக்கத் திறமையை நிரூபிப்பதாக இச்சித்திர வேலை நம்பப்படுகிறது. (......)
4. குருணாகலை ரிதி விகாரையில கண்டெடுக்கப்பட்ட இச் சித்தர வேலைப்பாட்டில், உள்நாட்டுக் கலைச்சிற்ப, நுட்ப வினைத் திறன் மிகச் சிறப்பாகப் பிரதிபலிக்கின்றது. (......)
5. இலங்கையின் மத்திய காலகட்டத்தினைச் சேர்ந்த கலைச் சிற்பிகளினால் ஒரு தூண் அலங்காரமாக இந்த நோக்குரு பயன்படுத்தப்பட்டது. (......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **வினாக்கள் 6 முதல் 10 வரையானவற்றிற்கு மேலுள்ள உருவங்கள் A,B,C,D,E ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தி சரியான விடைகளைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

6. கற்களை மட்டுமன்றி ............................................ ஊடகத்தினையும் கையாள்வதில் உள்நாட்டுக் கலைச் சிற்பிகள் கைதேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதற்கு உருவம் A ஆதாரமாகக் காணப்படுகிறது.

7. எழுத்து B மூலம் சுட்டிக்காட்டப்படும் அலங்கார நோக்குரு **"நியந்த"** நாரிழைப் பாவனை ஈடுபாட்டினைக் கொண்ட ஒரு கலைச் சிற்பத்துடன் இணைந்ததாகக் காணப்படும் ............................................ பிரதேசமாகும்.

8. எழுத்து D யினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள சதுரம் ஒன்றில், மிக அழகாக அமைக்கப்பட்டுள்ள ☐வலங்கார நோக்குரு, ............................................ வகைக்கு உரியதாகும்.

9. எழுத்து C யினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள அலங்காரங்கள் அநேகமாக கண்டியர் கால சிற்பிகளால் ............................................ கூரை நிர்மாணத்தில் பயன்படுத்தப்படுபவையாகும்.

10. எழுத்து E யினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள யானைத்தந்த செதுக்கு வேலைப்பாடு ............................................ என அழைக்கப்படும்.

➢ **வினாக்கள் 11 முதல் 15 வரையுள்ள ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள வடிவத்துடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ள வடிவத்தை F,G,H,I,J எனத் தரப்பட்டுள்ள வடிவங்களிலிருந்து தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் எழுத்தை வினாவின் பொருத்தமான வடிவத்திற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

11.  (......)  F

12.  (......)  G

13.  (......)  H

14.  (......)  I

15.  (......)  J



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **வினாக்கள் 16 முதல் 20 வரையுள்ள வெற்றிடங்களைச் சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக.**

16. பௌத்த மதகுருமார்களால் அவர்களது தர்ம போதனையின் போது பயன்படுத்தப்படும் ........................................ என்பது புடவை மீது செய்யப்பட்ட ஒரு வகைச் சுருள்ச் சித்திரமாகும்.

17. அனுராதபுரத்தின் மகாமேகவன நந்தவனத்திலுள்ள **"சமாதி புத்தரின்"** கை அபிநயமானது **"தியான முத்திரை"** யாகும். புத்தர் இங்கு ........................................ எனும் நிலையில் அமர்ந்துள்ளார்.

18. ........................................ என்பது பாரம்பரிய நிர்மாண நிபுணர்களால் மகரதோரண வடிவிலுருவாக்கப்பட்டதும், பயத்தினையும் அதேவேளை பக்தியினையும் உருவாகும் காட்டுருவாகவும் காணப்படும் ஒரு நோக்குருவாகும்.

19. கம்பளைக் காலக்கட்டத்துக்குரியதான, கடலாதெனியாவில் காணப்படும் புனித ஸ்தலம் ........................................ என்பவரால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

20. ........................................ கட்டிட நிர்மாணத்தில் வெங்காய வடிவிலான குவிந்த கூரைத் தோற்றமானது பொதுவானதாகக் காணப்படும்.

➢ **வினாக்கள் 21 முதல் 25 வரை தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ( √ ) என்ற அடையாளத்தையும் பிழையாயின் ( × ) என்ற அடையாளத்தையும் கூற்றிற்கு எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது இடுக.**

21. புத்தரின் பல்வேறுபட்ட மனோபாவங்களைக் காட்டுவதற்காக சிற்பிகள் பல்வேறுபட்ட கை அபிநயங்களைச் சிற்பத்தில் அமைத்துக் கொள்வார்கள். அவர்கள் அவ்வாறு புத்தரது ஞானத்தை எடுத்துக்காட்டுவதற்காக அமைத்துக் கொண்ட அபிநயம் **'அபய முத்திரை'** என்பதாகும். (......)

22. 'குழு 43' குறிப்பிடுவது நாற்பத்தி மூன்று கலைஞர்களையாகும்.

23. மிலானிலுள்ள சாந்த மரியா டெலா கிரேசியாவின் (Santha Maria Della Grazia) போசனசாலைக்குரிய, மிகவும் புகழ்பெற்ற சாதனைப் படைப்பான **"கடைசி இராப்போசனம்"** லியானாடோ டாவின்சியினால் உருவாக்கப்பட்டதாகும். (......)

24. **'அபு சிம்பல்'** கோவிலின் முன்பாக கட்டியெழுப்பப்பட்ட மிகப் பெரும் அந்தஸ்து வாய்ந்த பெரோஸ் (Phareas) ஆனது, ஆளும் வர்க்கத்தின் மாட்சிமைச் சக்தியையும், பயபக்தியையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது. (......)

25. **"துண்தன்வேலை"** என்பது **"ஆலவட்டக்"** கைத்தடி மற்றும் விசிறிக் கைப்பிடி என்பவற்றின் அலங்காரத்துடன் தொடர்பட்டதான ஒரு கலைச் சொல்லாகும். (......)

➢ **வினாக்கள் 26 முதல் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

26. இசுறுமுனியிலுள்ள ஒரு மனிதனும் குதிரைத் தலையும் எனும் கற்சிற்பம் நினைவுறுத்தும் கலை மரபுக்குரியவர்கள்
(1) சோழர்கள் (2) குப்தர்கள் (3) பல்லவர்கள் (4) பாண்டியர்கள்

27. மைக்கல் அஞ்சலோவினால் உருவாக்கப்பட்ட **"பியாட்டா"** செய்யப்பட்டது
(1) சிவப்பு மணற் கல்லினானல் (2) சலவைக் கல்லினால்
(3) கருங்கல்லினால் (4) சுண்ணக் கல்லினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. **"மரக் கூட்டம் ஒன்றினை"** கொலாஜ் முறையில் வரையும்போது ஒரு சிறந்த தொழில்நுட்ப முறையாக அமைவது
(1) படத்தை வரைந்து அதன்பின் உரிய நிறங்களுக்கான கடதாசிகளை ஒட்டுவதாகும்
(2) ஊடகத்தின் தன்மைக்கேற்ப உரிய விடயத்தின் இயல்பினை உணர்ந்து கொண்டபின் ஒட்டுவதாகும்.
(3) இயல்பான வர்ணத்தைத் தெரிந்து ஒட்டுவதாகும்.
(4) மரங்களின் உருவத்தைத் தனியாக வெட்டி எடுத்து ஒட்டுவதாகும்.

29. மாடக் குழிகளைக் கொண்ட சுவர்களும், எண்கோண வடிவில் குவிந்த அமைப்பினைக் கொண்ட கூரைகளும் காணப்படுபவை
(1) அனுராதபுரத்திலுள்ள பௌத்த மாளிகைகளாகும்.
(2) புராதன கண்டியக் கோயில்களாகும்
(3) கத்தோலிக்க தேவாலயங்களாகும்.
(4) இந்துக் கோவில்களாகும்

30. வர்ணப் பெறுமதி (Colour Value) என்பதன் பொருள் யாது?
(1) இரண்டு வர்ணங்களின் கலவை
(2) ஒரு வர்ணத்துடன் கூடிய கறுப்பைக் கலப்பதன் மூலம் பெறப்படும் ஓர் இருள் நிறம்
(3) ஒரு வர்ணத்தின் பல்வேறு அளவுகளிலான கடுமையும், மெதுமையும்
(4) ஒரு வர்ணத்துடன் கூடிய வெண்மையின் மூலம் பெறப்படும் ஒரு இள வர்ணம்

➢ **வினாக்கள் 31 முதல் 35 வரையுள்ள வெற்றிடங்களைச் சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக.**

31. "..........................................................................." என்பது போரின் கொடுமைகளை மிக உணர்ச்சிகரமாகவும், மனதில் பதியத்தக்கவிதத்திலும், மிகச் சிறந்த ஓவியரான பப்லோ பிக்காஸோ அவர்களால் உருவாக்கப்பட்டதாகும்.

32. பொலனறுவையிலுள்ள சிவதேவாலயம் இல 2 ஆனது ........................................................................... கட்டிட நிர்மாணப் பாணியில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

33. கிரேக்கத்திலுள்ள அதேனா தெய்வத்துக்கு அர்ப்பணிக்கப்பட்ட **"பாளொான்"** (Parthenon) தேவாலயத் தூண்கள் வடிவமைக்கப்பட்டது ........................................................................... எனும் ஒழுங்குமுறையிலாகும்.

34. இத்தாலிய மறுமலர்ச்சிக்குரியதான, புகழ்பெற்ற சாதனைப் படைப்பான **"எதென்ஸின் கலைக்கூடம்"** (School of Athens) என்பது ........................................................................... என்பவரால் உருவாக்கப்பட்டதாகும்.

35. விகாரைகள், சைத்தியச் சாலைகளை உள்ளடக்கிய 29 வளைவுகளுடன் கூடிய ........................................................................... என்பது கீழைத்தேய முற்காலக் கலைகளுள் ஒன்றாகும்.

➢ **வினாக்கள் 36 தொடக்கம் 40 வரை பின்வரும் கலை வேலைப்பாடுகளில் நீங்கள் அவதானித்த, இக் கலைதிறன்களை மதிப்பீடு செய்யக்கூடியதான ஐந்து வசனங்கள் எழுதுக.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. ..................................................................................................................

37. ..................................................................................................................

38. ..................................................................................................................

39. ..................................................................................................................

40. ..................................................................................................................

## க.பொ.த. (சா/தரம்) 2000 பகுதி – I

### விடைகள்

1. – B
3. – C
4. – E
5. – D
6. – உலோகம், பித்தளை
7. – தும்பறை
8. – தாவரம், விருட்சம், உத்பித
9. – வடிம்பு
10. – பஞ்சநாரிகட்ட, பஞ்சநாரிமுட்டி
11. – G
12. – J
13. – I
14. – H
15. – F
16. – பெத்திகட, துணிச்சித்திரம்
17. – வீராசனம்
18. – கிம்பிகி முகம் கிம்பிகிமூண, மகரம்
19. – கனேஸ்வர ஆச்சாரியார்
20. – இஸ்லாம்
21. – பிழை
22. – பிழை
23. – சரி
24. – சரி
25. – பிழை
26. – 3 பல்லவ கலைமரபுக்கு ஏற்ப நிர்மாணிக்கப்பட்டது
27. – 2 சலவைக் கல்லில் பொழியப்பட்டது.
28. – 2 ஊடகத்தின் தன்மைக்கு
29. – இந்து கோவில்களாகும்
30. – 3 ஒரு வர்ணத்தின் பல்வேறு அளவுகளிலான கடுமையும் மெதுமையும்
31. – குவர்ணிகா
32. – சோழர்
33. – டொறிக்
34. – றபாயல் சென்சியோ
35. – அஜந்தா
36. – இங்கு காணப்படுவது கண்டிக் காலத்து தாழ் நாட்டு சித்திரம்
37. – இச் சித்திரம் கதழுவ விகாரையில் காணப்படுகின்றது
38. – சுத்த சோம ஜாதகக் கதையின் ஒரு நிகழ்வு
39. – இருபரிமாணப் பண்புகள் ஊடாக முப்பரிமாணத் இயல்பினை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
40. – பாரம்பரிய வர்ணப் பாவனை முறைகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சை, 2001 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2001

சித்திரக்கலை I
Art I


ஒரு மணித்தியாலம் / *One hour*

51 S I

➢ 1 – 5 வரையுள்ள ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள விவரணத்திற்கு மிகப் பொருத்தமான வடிவம் A,B,C,D,E எனத் தரப்பட்டுள்ள வடிவங்களுள் எதுவென இனங்கண்டு அதனைக் குறித்து நிற்கும் கூற்றிற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.


A


B


C


D


E

1. விலங்கு வகுதிக்கு உரிய ஆக்கக் காட்டுரு (..........)
2. நிலையான இயற்கையையும் தெய்வீகத் தன்மையும் வெளிப்படுத்தும் குறியீடு (..........)
3. நீருக்கு அதிபதி என்ற கருத்தில் நீர் உள்ள இடங்களைக் காட்டும் குறியீடு (..........)
4. விகாரையின் கூரைகளின் உட்புறத்தில் ஓவியம் தீட்டுவதற்கான அடிப்படை அலகாகப் பயன்படுத்தப்படுவது (..........)
5. புராதன சித்திரக்கலையைக் கற்கும் போது இரேகை சித்திரங்களில் மேம்பாடடைய பயன்படுத்தப்பட்ட இரண்டாம் நிலைக்கற்றல் (..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤ 6 – 10 வரையுள்ள வினாக்களுக்குரிய திருத்தமான விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

6. (Devil Dancer's Daughter) **"பேய் நடனக்காரரின் மகள்"** யாருடைய ஆக்கம்? ..........................................

7. இலங்கையில் முகமூடிக் கைத்தொழிலுக்கு மிகவும் புகழ்பெற்ற பிரதேசம் எது? ..........................................

8. உலர் கதை முறைவழி வரைதலில் பயன்படுத்தப்படும் நுட்பத்தின் பெயர் என்ன? ..........................................

9. ரத்த வத்த அலங்காரம் எந்த கிராமியக் கலையுடன் தொடர்புடையது? ..........................................



10. இலங்கையில் கட்டப்பட்ட முதல் சைத்தியகர எது? ..........................................


➤ **11 – 15 வரையுள்ள வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள வடிவத்துடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ள வடிவத்தை F, F, H, I. J எனத் தரப்பட்டுள்ள வடிவங்களிலிருந்து தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தை வினாவின் பொருத்தமான வடிவத்துக்கு எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

11.  (..........)  F

12.  (..........)  G

13.  (..........)  H

14.  (..........)  I

15.  (..........)  J



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤ **16 – 20 வரையுள்ள வினாக்களுக்குரிய திருத்தமான விடைகளை வெற்றிடங்களில் எழுதுக.**

16. இன்று அழிந்து போகும் நிலையிலுள்ள சங்கஸ்ஸ புரத்துக்கு தங்க ஏணியில் வரும் காட்சி என்ற ஓவியத்தைப் பொலன்னறுவையில் ............................................................ கர்ப்பக் கிருகத்தின் இடப்பக்கச் சுவரில் காணக் கூடியதாயுள்ளது.

17. இயேசுக்கிறீஸ்துவின் நடத்தையை வெளிப்படுத்தும் கண்டியிலுள்ள ப்ரினிற்றி தேவாலயத்தில் காணப்படும் எண்ணெய் வர்ண ஓவியம் மிகப்புகழ்பெற்ற ஓவியரான ............................................................ இன் ஆக்கமாகும்.

18. மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த ............................................................ மென்மை பொருந்திய குழந்தையுடன் கூடிய மடோனோ ஓவியங்களின் பெரும்பாலான ஆக்கங்களை உருவாக்கினர்.

19. சிவபெருமானின் மனைவியென கருதப்படும் ............................................................ இன் சிற்பம் பெண்ணின் உடல் வனப்பை எடுத்துக் காட்டுவதுடன் தலையணி அலங்காரமும் கொண்டு விளங்குகிறது.

20. இரண்டாம் வர்ணம் எனக் கருதப்படும் பச்சை வர்ணத்திற்கு எதிர்வர்ணம் எனப்படும் ............................................................ மூலவர்ணங்களில் ஒன்றாகும்.

➤ **21 – 25 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் ( √ ) அடையாளத்தையும் பிழையாயின் ( X ) அடையாளத்தையும் கூற்றிற்கு எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

21. கம்பளைக் காலத்திற்கு உரிய ஆக்கமான கடலாதெனிய விகாரை தென்னிந்திய விஜய நகர கட்டிடக் கலைத் தொழினுட்பத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டதாகும். (..........)

22. மொஹஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட பூசாரி உருவம் அக்கால சிற்பியின் வார்ப்புக்கலை நுட்பத்தின் உயர்தரமான ஆக்கமாகும். (..........)

23. நக வேலை (நியபொத்துவட) எனப்படும் அரக்குவேலை (லாக்ஷா) கைத்தொழிலுடன் தொடர்புடைய காட்டுரு முறையை அமைத்தல் பட்டறை மூலம் செய்யப்படுகிறது. (..........)

24. எம்பக்க தேவாலயத்தின் மரச்செதுக்கல் ஆக்கத்தை நிர்மாணித்த பெருமை தெல்மட முலாசாரினுக்கே உரியதாகும். (..........)

25. அவிக்னோனின் மகளிர் எனும் சித்திரம் பப்லோ பிக்காசோவின் கலை வாழ்க்கையில் கனவடிவக் கொள்கைக்குப் பெயர்கின்ற காலமாக இனம் காணப்பட முடியும். (..........)

➤ **26 – 30 வரையுள்ள கூற்றுகளைப் பூரணப்படுத்துவதற்கு மிகத் திருத்தமான வாக்கியப் பகுதியைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**

26. உலகப் புகழ்பெற்ற சாரநாத் புத்தர் சிலை உணர்த்துவது
   (1) யமனைத் தோற்கடித்த பின்னர் ஞானமடைந்த நிகழ்வு
   (2) பஸ்வகவுசர்களுக்கு தர்மோபதேசம் செய்யும் நிகழ்வு
   (3) தாய்க் கடவுளுக்கு தர்ம அறிவுரை கூறும் நிகழ்வு
   (4) கருத்துள்ள மனித வடிவங்களை உபயோகித்தல்

27. சுவரொட்டிச் சித்திரத்தின் மிக முக்கியமான இயல்பு
   (1) விரைவாகவும் தெளிவாகவும் செய்திகளைத் தருதல்
   (2) வர்ணங்களின் ஒத்திசைவைக் காட்டுதல்
   (3) சுலோகங்களைத் தெளிவாகக் காட்டுதல்
   (4) கருத்துள்ள மனித வடிவங்களை உபயோகித்தல்.

28. பொலன்னறுவைப் புத்தர் சிலைகளில் காணக்கூடிய விசேட இயல்பு
   (1) நெளிவரி மடிப்புகள்
   (2) நீரலை மடிப்புகளின்மை
   (3) சோடியான இரேகை மடிப்புகள்
   (4) மடிப்புகளின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. கண்டியுகத்திற்குரிய தெகல்தொருவ விகாரையில் உள்ள யமனை வெற்றிகொள்ளல் எனப் பெயர் பெறும் ஓவியத்தின் விசேட அம்சம்

(1) பூமித்தாயின் உருவம் காட்டப்பட்டிருத்தல்.
(2) யமனின் புத்திரிகள் உருவம் காட்டப்பட்டிருத்தல்
(3) வாளைக் கையில் கொண்ட யமனின் உருவம் காட்டப்பட்டிருத்தல்
(4) துப்பாக்கியை கையில் கொண்ட யமனின் உருவம் காட்டப்பட்டிருத்தல்

30. மீடமின் வாத்துகள் என்ற ஓவியம்

(1) கிரேக்கர்களின் ஆக்கம் (2) எகிப்தியர்களின் ஆக்கம்
(3) ஜப்பானியர்களின் ஆக்கம் (4) இந்தியர்களின் ஆக்கம்

➢ **31 – 35 வரையுள்ள கூற்றுகளிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.**

31. எம்பக்க தேவாலயத்தின் கூரையில் காணப்படும் ............................................ கம்பளைக் கால கட்டடக்கலையின் விசேட அம்சமாகும்.

32. சிகிரியா ஓவியங்களில் வெளிப்படுத்தப்படுவது மேகலதா விஜ்ஜுலதா என ............................................ இனால் வெளிப்படுத்தப்பட்ட எண்ணக்கரு சிகிரியா பற்றிப் பரந்த பிரசாரத்தைத் தருகிறது.

33. இந்திய அமராவதி மரபை வெளிப்டுத்தும் ............................................ சிலை அனுராதபுர காலத்தில் தாதுசேன மன்னனால் கட்டப்பட்டதாகும்.

34. காளைகளின் குகை எனப் பெயர் பெற்ற வரலாற்றுக்கு முந்திய காலத்து ஓவியம் காணப்படும் குகை ............................................ குகை என்ற பெயரால் இனம் காணப்படுகிறது.

35. விகாரைச் சுவர்நிரைகளின் மத்தியில் ............................................ மரபில் மிக எளிமையாகக் வெற்றி கண்டுள்ளன.

➢ **36-40 வரையுள்ள வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள கலையாக்கத்தில் நீங்கள் அவதானித்த கலைத் திறன்களை மதிப்பீடு செய்யக்கூடியதான ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. ..........................................................................................

37. ..........................................................................................

38. ..........................................................................................

39. ..........................................................................................

40. ..........................................................................................

## க.பொ. த (சா/தரம்) 2001 பகுதி – I

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | – | B | 21. | – | சரி |
| 2. | – | B | 22. | – | பிழை |
| 3. | – | A | 23. | – | பிழை |
| 4. | – | D | 24. | – | சரி |
| 5. | – | C | 25. | – | சரி |
| 6. | – | A.C.G.S அமரசேகர | 26. | – | 2 பஸ்வகதவுசர்களுக்கு தர்மோபதேசம் செய்யும் நிகழ்வு |
| 7. | – | அம்பலாங்கொடை | 27. | – | 1 விரைவாகவும் தெளிவாகவும் செய்திகளைத் தகுதல் |
| 8. | – | பிரெஸ்கோ ஸிகோ – டெம்பறா | 28. | – | 3 சோடியான இரேகை மடிப்புகள் |
| 9. | – | தும்பறைப்பாய் | 29. | – | 4 துப்பாக்கியை கையில் கொண்ட யமனின் உருவம் |
| 10. | – | தூபாராம | 30. | – | 2 எகிப்தியர்களின் ஆக்கம் |
| 11. | – | G | 31. | – | மடொல் குறுபாவ |
| 12. | – | I | 32. | – | செனரத் பரண விதான |
| 13. | – | J | 33. | – | அவுக்கன புத்தர் |
| 14. | – | F | 34. | – | லாஸ்கோ |
| 15. | – | 4 | 35. | – | தொடர் சித்திரம |
| 16. | – | திவங்க நிலைவீடு (திவங்க பிலிமகே) திவங்க ஆலயம் | 36. | – | இவ் ஓவியம் ஜோஜ்கீட் ஓவியரால் வரையப்பட்டது. |
| | | | 37. | – | இவ் ஓவியம் தாயும் சேயும் என்ற தொனிப்பொருளில் அன்பை வெளிப்படுத்தியுள்ளார் |
| 17. | – | டேவிட் பேன்டர் | 38. | – | மனித உருவங்களை தனக்கே உரித்தான பாணியில் வரைந்துள்ளனர் |
| 18. | – | றபாயஸ் லெஸ்சியோ | 39. | – | இரேகைகளுக்கு முக்கிய இடம் கொடுத்துள்ளார். |
| 19. | – | பார்வதி (உமையாள், உமாதேவி, சக்தி) | 40. | – | பல்வேறு முறிவு இரேகைகளை பயன்படுத்தியுள்ளார். |
| 20. | – | சிவப்பு நிறம் | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சை, 2002 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2002

சித்திரக்கலை I
Art I

ஒரு மணித்தியாலம் / *One hour*

51 S I


எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக


➢ 1 தொடக்கம் 5 வரையுள்ள ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள விவரணத்திற்கு மிகப் பொருத்தமான வடிவம் A,B,C,D,E, எனத் தரப்பட்டுள்ள வடிவங்களுள் எதுவென இனங்கண்டு அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தை உரிய கூற்றிற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.


A


B


C


D


E

1. உட்பதித்தல், தட்டியுயர்த்தல் நுட்பமுறையைப் பயன்படுத்தி அலங்காரஞ் செய்யப்படும் கைவினைத் தொழிலாகும். (......)
2. அரிமரப் பொருள்கள் மீது சூடாக்கப்பட்ட வர்ணத்தைப் பூசி அலங்காரம் செய்யப்படும் மரபுவழிக் கலைக் கைவினைத் தொழிலாகும் (......)
3. இந்தச் சிக்கலான கைவினை கலைஞரின் திறனிலும் பொறுமையிலும் தங்கியுள்ளது. (......)
4. இக்குறிப்பான கைவினைக்கு களனி பிரசித்தமானது இங்கு அலங்கார நோக்குருக்கள் மரத்தாலான சிறு கருவிகள் அச்சுகளின் உதவியுடன் ஆக்கப்படும். (......)
5. இம்மரபுவழிக் கிராமியக் கலை ஆற்றுகைக் கலைகளுள் ஒன்றாகவும் உள்ளது. (......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையைப் புள்ளின் மீது எழுதுக.**

6. கம்பளைக் காலத்தில் விசேட நிருமாணிப்பான கடலாதெனிய விகாரை இக்கட்டடக் கலைஞனின் ஆக்கமாகும்.

.........................................................................

7. புத்தர் பெருமானின் ஞானத்தைப் பிரதிபலிப்பதாக புத்தரின் சிலைகளில் பெரும்பாலும் அமைந்திருப்பது இம்முத்திரையாகும்

.........................................................................

8. தமிழ் மக்களின் தேசிய விழாக்களிலும் நிலத்தை அழகுபடுத்தப் பயன்படுத்தப்படும் அலங்கார முறை

.........................................................................

9. ஐந்து பெண்களின் உருவங்கள் ஒரு பானையின் வடிவத்தில்யொன்று பார்த்தபடி ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் அலங்கார நோக்குருவாகும். இதன் பெயர் குறிப்பிடுக. .........................................................................

10. புகழ் பெற்ற சுவரோவியமான **"வெள்ளையானையைப் பரிசளித்தல்"** (அலி அதன் தன்தீம) இவ்விகாரையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. .........................................................................

➢ **11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள வரி வடிவத்துடன் மிகவும் தொடர்புபட்டுள்ள வடிவத்தை F,G,H,I,J எனத் தரப்பட்டுள்ள வடிவங்களிலிருந்து தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தை வினாவின் பொருத்தமான வடிவத்துக்கு எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

11.  (......)  F

12.  (......)  G

13.  (......)  H

14.  (......)  I

15.  (......)  J



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **16 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையை வெற்றிடங்களில் எழுதுக**

16. பிரசியன் (Prussian) நீலத்துடன் ........................................................ வர்ணத்தைக் கலப்பதால் தூய்மையான ஊதா நிறத்தைப் பெறமுடியும்.

17. மெதவல விகாரை ........................................................ எனப்படும் விகாரைத் தொகுதிக்கு உரியது

18. இந்து சமய பக்தர்களால் வணக்கத்துக்குரியதென இனங்காணப்படும் திமிலை உடைய காளை .............................................. எனப் பெயர் பெறும்

19. பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய தொனிப்பொருளைக் கொண்டு..............................................இல் தீட்டப்பட்ட மைக்கல் ஏஞ்சலோவின் தொடர் ஓவியங்கள் இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்தில் ஆக்கப்பட்ட மிக உன்னதமான கலையாக்கமாகக் கருதப்படுகின்றன

20. புராதான எகிப்த்திய (pharohs) பேரோ இன் பாரிய உருவங்கள் வாயிலில் செதுக்கப்பட்ட புகழ்பெற்ற பாறைக் கோவில் ............................................. என அழைக்கப்படும்

➢ **21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களின் கூற்றைப் பூரணப்படுத்துவதற்குரிய சொற்றொடர்களை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.**

21. சமயஞ் சார்ந்ததும் சாராததுமான தொனிப்பொருள்களைச் சித்தரிப்பதில் திறமை பெற்றிருக்கும் இக்கலஞரின் ரேகைகளில் அலங்காரப் பண்பினைக் காணக்கூடியதாயுள்ளது.
(1) ஏ.சீ.ஜீ. அமரசேகர (2) ஸ்ரான்லி அபேசிங்க (3) ஜோர்ஜ் கீற் (4) டேவிட் பெயின்டர்

22. இலங்கையின் புராதன அரசமரத்தைச் சுற்றிய மண்டப (போதிகர) ங்களுள் இதுவரை காலமும் பேணிப் பாதுகாக்கப்பட்ட அமைப்பைக் கொண்டிருப்பது
(1) நில்லக்கம (2) மகாமேவ வனம் (3) யாப்பகுவா (4) சிகிரி உத்தியானம்

23. சாஞ்சி தூபியின் "**ஹர்மிகா**" இற்குப் பதிலாக இலங்கைத் தூபிகளில் சேர்க்கப்பட்டது.
(1) பேசாவளலு (2) கொத்ஹறல்லா (3) சதுரக்கோட்டம் (4) தேவகோட்டம்

24. பல்வேறு ஊடகங்களை வெட்டுதல் மூலம் நிர்மாணிக்கும் சித்திர முறை பெறும் பெயர்
(1) கொலாஜ் (2) தம்பிளேற் (3) தம்பெரா (4) மொசயிக்

25. எகிப்திய இளவரசி ஒருத்தியின் வடிவ அழகினைப் பிரதிபலிக்கம் மிக முக்கிளமான சிலை
(1) நோவ்ரட் (2) நெபர்ரிரி (3) ரேரொப் (4) ரானோவர்

**26 தொடக்கம் 30 வரையள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் ( √ ) அடையாளத்தையும் பிழையாயின் ( × ) அடையாளத்தையும் அடைப்புக்குறியினுள் இடுக.**

26. மரபு வழியாகச் சித்தரிக்கப்பற்றவற்றை விட திரிகிற்றி தேவாலயத்தில் டேவிட் பெயின்டரால் தீட்டப்பட்ட கிறிஸ்த்து சமய சம்மந்தமான ஓவியங்கள் இலங்கையரின் அம்சங்கலை நெருக்கமாகக் கொண்டுள்ளன. (......)

27. மனித உருவங்களை ஆக்குவதில் சிந்து வெளிக் கலைஞர்கள் கொண்டிருந்த ஆக்கத்திறன் அவர்களால் செதுக்கப்பட்ட பூசாரியின் சிலையில் வெளிப்படுத்தப்படவில்லை. (......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. பார்வதியின் வெண்கலச் சிலை சோழர் கலைப்பாணியை ஒத்துள்ளது. (……)

29. புத்தர் பெருமான் ஐந்து துறவிகளுக்குப் போதிப்பதைச் சித்தரிக்கும் சாரநாத் புத்தர் சிலை காந்தாரக் கலை மரபினை எடுத்துக்காட்டுகின்றது. (……)

30. மகர எண்ணக்கருவை நினைவுபடுத்தும் படிக்கட்டுகளின் இருபக்கங்களிலும் அமைக்கப்படும் கைப்பிடிகள் பௌத்த கட்டட நிர்மாணத்தின் அழகுக்கு மெருகூட்டுகிறது. (……)

**31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களின் கருத்துப் புலப்படுமாறு தனித்தனி வாக்கியங்களை அமைத்துப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31. வர்ணத் தூரநோக்கு ……………………………………………………………………

32. குந்திரிக்கம் ……………………………………………………………………

33. வாலிச்சி ……………………………………………………………………

34. மினாரற் ……………………………………………………………………

35. உயர்படைப்பு ……………………………………………………………………

**36 தொடக்கம் 40 வரை தரப்பட்டுள்ள ஓவியப் பாணியை அடையாளங்கண்டு இதன் கலைப் பண்பினை மதிப்பீடும் வகையில் ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**

35. ……………………………………………………………………

36. ……………………………………………………………………

37. ……………………………………………………………………

38. ……………………………………………………………………

39. ……………………………………………………………………

40. ……………………………………………………………………





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

302

Class No: 741
Acc No 302
Arasady Public Library
Municipal Council
Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவின்கலைகளில்

# சித்திரக் கலை



ISBN:955-8621-56-0

இனிய தென்றல்

PRICE : Rs. 350/-

வெளியீடு

**இனிய தென்றல் பப்ளிக்கேஷன்,**

135, கனல் பாங் வீதி, கொழும்பு-06

தொலைபேசி : 0112-360239, 072-2875625

PBD
201020991
Rs. 350.00
SITTHIRAKKALAI G- 7-11
10 Sep 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org